ஆறு மாத இஸ்லாமிய கல்வி

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு

ஆசிரியர்: அஷ்ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

Table of Contents

Compiled by Dr M.K. Mohamed Ismail

அறிமுகம் - விபரங்கள் மற்றும் விதிமுறைகள்

بسم الله الرحمن الرحيم

கண்ணியமிக்க இஸ்லாமிய சகோதரர்கள் மற்றும் சகோதரிகளே!

அஸ்ஸலாமு அலைகும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு

வீட்டில் இருந்தே சிறந்த உலமாக்கள் மூலமாக இஸ்லாமிய கல்வியை பெறுவதற்கான வாய்ப்பை அல்லாஹ் உங்களுக்கு ஏற்படுத்தி தந்துள்ளான். இதனை பயன்படுத்தி கொள்வது உங்கள் மீதான கடமை.

6 மாத இஸ்லாமிய கல்வி வகுப்பு - விபரங்கள் மற்றும் விதிமுறைகள்

மொழி: தமிழ்

காலம்: ஜூன் 2020 முதல் நவம்பர் 2020 வரை

கட்டணம்: ரூ 500 (ஆகஸ்ட் மாதம் செலுத்த வேண்டும்; அனைவர் மீது கட்டாயமில்லை; விவரங்கள் பிறகு அறிவிக்கப்படும்)

பாடங்களின் விவரங்கள்:

1. அகீதா (இஸ்லாமிய கொள்கை)

ஈமானின் அடிப்படைகள் : (அல்லாஹ் மீது ஈமான், மலக்குமார்கள் மீது ஈமான், இறை வேதங்கள் மீது ஈமான், இறைத்தூதர்கள் மீது ஈமான், இறுதி நாள் மீது ஈமான் மற்றும் விதியின் மீது ஈமான்) & (சூனியம் தொடர்பான இஸ்லாமிய நிலைப்பாடு, அன்றும் இன்றும் வழி தவறிய கூட்டங்களில் சில)

2. ஃபிக்ஹு சட்டங்கள்

(தூய்மை சட்டங்கள், தொழுகை, ஜகாத், நோன்பு மற்றும் ஹஜ் சட்டங்கள்)

3. ஹதீஸ்

(ஹதீஸ் கலையின் அடிப்படைகள், இமாம் நவவியின் நாற்பது ஹதீஸ்களின் விளக்கம்)

4. ஸீரா (நபி [ஸல்] வாழ்க்கை வரலாறு)

5. ஆதாப் (இஸ்லாமிய ஒழுக்கங்கள் & நற்பண்புகள்)

பாடங்களின் கால அட்டவணை:

(மாணவர்கள் ஒரு பாடத்தை நன்றாக கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக மாதம் முழுவதும் ஒரு பாடம் மட்டுமே நடத்தப்படும்)

ஜூன்: அகீதா

ஜூலை: பிக்ஹு

ஆகஸ்ட்: 40 ஹதீஸ்கள்

செப்டம்பர் & அக்டோபர்: ஸீரா

நவம்பர்: ஆதாப்

நவம்பர்: இறுதி தேர்வு

ஒரு வாரத்தில் எத்தனை வகுப்புகள்?

ஒரு வாரத்தில் ஆறு அரை மணி நேர பாடங்கள் ஆடியோக்களாக அனுப்பப்படும். மாணவர்கள் தினமும் அதனை கேட்டு நோட்டுப்புத்தகத்தில் குறித்துக் கொள்ளவேண்டும்.

பாடங்களை எவ்வாறு படிப்பது?

தினம் அரை மணி நேரம் பாடங்களுக்கு ஒதுக்க வேண்டும். பாடங்களை கேட்டு பாட இறுதியில் தரப்பட்டுள்ள கேள்விகள் மற்றும் இதர வேலையை ஹோம்வர்க் நோட்டுப்புத்தகத்தில் எழத வேண்டும். ஒரு செயலை அது சிரியதாயினும் தொடர்ந்து செய்வதையே அல்லாஹ் நேசிக்கின்றான் என்று நபி (ஸல்) அவர்கள் தெரிவித்துள்ளார்கள். (முஸ்னத் அஹ்மத்).

கேள்வி பதில் எழுத தனி நோட்டுப்புத்தகம் வைப்பது சிறந்தது.

கேள்வி பதில் நிகழ்ச்சி

ஒவ்வொரு நாளும் (அகீதா/ஃபிக்ஹ் மட்டும்) அல்லது ஒவ்வொரு வாரம் நடத்தப்படும் வகுப்பிலிருந்து கேள்விகள் கூகுள் லிங்க் மூலமாக கேள்விகள் அனுப்பப்படும்.அதில் பங்கேற்று

தொடர்ச்சியாக சரியாக பதிலளிக்கும் பத்து நபர்களுக்கு ஒவ்வொரு பாடத்தின் இறுதியில் பரிசுகள் வழங்கப்படும்.

பரிசு விவரம்

- முதல் பரிசு ₹500
- இரண்டாம் பரிசு ₹250
- மூன்றாம் பரிசு ₹200
- நான்கு ~ பத்து வரை பரிசு ₹100

தேர்ந்தெடுக்கும் முறை

ஒவ்வொரு பாடம் அல்லது மாத இறுதியில் அந்தந்த பாட கேள்வி பதில்களில் தொடர்ச்சியாக சரியாக பதிலளிக்கும் பத்து நபர்களுக்கு வழங்கப்படும் இன் ஷா அல்லாஹ்.

படிப்பு முடிந்த பின் சான்றிதழ் கிடைக்குமா?

இறுதித் தேர்வில் வெற்றி பெற்ற பின் வழங்கப்படும்.

நாம் அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆ கொள்கையை பின்பற்றும் மன்ஹஜை சார்ந்தவர்கள். தௌஹீதையும் சுன்னாவையும் பற்றிப்பிடிப்பவர்கள், ஃபிக்ஹை ஆதரிப்பவர்கள். நம்மிடம் தாங்கள் பயிலும்போது இதனை உணர்வீர்கள். பாடங்கள் அனைத்தும் மதீனா பல்கலைக் கழக வழிமுறைக்கேற்ப நடத்தப்படும்.

(குறிப்பு: இந்த பாடத்திட்டம் இஸ்லாமிய கல்லூரிகளுக்கு சென்று படிக்க முடியாதவர்களை கருத்தில்கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. எல்லோரும் எளிதாக புரியும் வகையில் பாடங்கள் நடத்தப்படும். ஆகவே, இஸ்லாமை ஆழமாக பயில விரும்பும் சகோதரர்கள் மதரஸாக்கள் மற்றும் உலமாக்கள் மூலமாக நேரடியாக பயில்வதே சிறந்த வழி. அவர்கள் அரபி மொழியையும் கற்று கொள்ள வேண்டும்.)

பாடங்கள் ஆடியோக்களாக அனுப்பப்படும். இதனை கேட்டு குறிப்புகள எழதிக்கொள்வது மாணவர்கள் மீது கடமை. பாடம் சம்பந்தமான வீடியோக்கள் மற்றும் புத்தகங்கள் இருக்குமானால் குரூப்பில் அனுப்பி வைக்கப்படும்.

பாடக்குறிப்புகள் (notes) பாடம் முடியும் போது (pdf) ஆக கொடுக்கப்படும்.

தேவைப்படும்போது கேள்வி பதில் எழதிய பக்கங்களை படம்பிடித்து குரூப் அட்மின்களுக்கு அனுப்ப வேண்டும்.

இப்பாடதிட்டத்தில் சேர்ந்துள்ள அனைவரும் இடையில் விட்டு போகாமல், இறுதி வரை பொறுமையோடு பயிலும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

கல்விப்பாதையில் செல்பவர்களுக்காக அல்லாஹ் சுவனப்பாதையை எளிதாக்குகின்றான் என்பதையும் அல்லாஹ் பொறுமையாளர்களோடு இருக்கின்றான் என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது.

அல்லாஹ் சுப்ஹானஹுதஆலா நம் அனைவரையும் மார்க்க கல்வியை கற்று அமல் செய்யும் நன்மக்களில் ஆக்கி அருள் புரிவானாக. ஆமீன்.

கல்வி கற்பவர்கள் பேணவேண்டிய பண்புகள்

இமாம் முஹம்மது பின் ஸாலிஹ் அல் உஸைமின் ரஹிமஹுல்லாஹ் அறிவுரை

பாகம் – 1

مراقبه النفس

1) தன்னுடைய ஆத்மாவை தானே கண்காணிப்பது

பிறரை கண்காணிப்பதை நிறுத்திவிட்டு நம்மை நாமே கண்காணித்துக்கொள்ளுதல் ஒவ்வொரு முஸ்லிமின் வாழ்விலும் அவசியமான ஒன்றாக இருக்கிறது

2) நம்மை பரிசோதிக்க வேண்டிய விஷயங்கள்:

நம்மிடம் خشية الله இறையச்சம் இருக்கிறதா என்று நாம் சோதித்து பார்க்க வேண்டும்.

நம்முடைய عمل அமல்களை சரியான முறையில் செய்து வருகிறோமா என்று பரிசோதிக்க வேண்டும்.

3) போதும் என்ற தன்மை (القناعة)

நபி (ஸல்) – செல்வம் என்பது போதும் என்ற தன்மையே கல்விக்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கும் விஷயம் போதும் என்ற தன்மையில்லாமல் பிறருடன் நம்மை நாம் உலகவிஷயங்களில் ஒப்பிடுவதே.

4) நாம் அதிகமாக கல்விகற்றவரைப்போல காண்பித்துக்கொள்ளக்கூடாது. தெரியாத விஷயங்களை தெரியாது என்று கூறும் தைரியம் வேண்டும்.

உமர் (ரலி) – தன்னிடம் இல்லாததை உள்ளது போல காண்பிப்பவனுக்கு அல்லாஹ் போதுமானவன்(புரியவைப்பான்)

இமாம் மாலிக் (ரஹ்) அவர்களிடம் கேட்கப்படும் பெரும்பாலான கேள்விகளுக்கு "எனக்கு விடை தெரியாது" என்று பதிலளித்தவராவார். அவர் தம்முடைய மரணத்தருவாயில் "நான் அளித்த தீர்ப்புக்களில் எனது சொந்தக்கருத்தை மிகைப்படுத்தி எங்கேனும் கூறிவிட்டேனோ" என்று அஞ்சி கூறினார்கள்...

ازهد في الدنيا يحبك الله، وازهد فيما عند الناس يحبك الناس

சஹல் இப்னு சஹத் அஸ் ஸாஹிதீ (ரலி) – நபி (ஸல்) – உலக விஷயத்தில் பற்றின்றி இருங்கள் அல்லாஹ் உங்களை நேசிப்பான். மக்கள் மத்தியிலுள்ள பொருட்கள் மீது ஆசை கொள்ளாமலிருந்தால் மக்கள் உங்களை நேசிப்பார்கள்.(இப்னு மாஜா – ஹஸன்)

இப்னு ஒதைமீன் (ரஹ்) – உபகாரத்தை அடிப்படையில் தண்ணீர் தந்தாலும் அதை பெறக்கூடாது அதற்கு பதிலாக தயம்மும் செய்து கொள்ளலாம். பணம் கொடுத்து தண்ணீர் வாங்கி உளூ செய்வதே மேலானதாகும்

ஸூரத்துஜ்ஜுமர் (கூட்டங்கள்) 39:9

هَلْ يَسْتَوِى الَّذِيْنَ يَعْلَمُوْنَ وَالَّذِيْنَ لَا يَعْلَمُوْنَ‌ؕ

··· அறிந்தோரும், அறியாதோரும் சமமாவார்களா? ...

ஸூரத்துல் முஜாதலா (தர்க்கித்தல்) 58:11

يَرْفَعِ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا مِنْكُمْ‌ ۙ وَالَّذِيْنَ اُوْتُوا الْعِلْمَ دَرَجٰتٍ‌ؕ

···உங்களில் ஈமான் கொண்டவர்களுக்கும்; கல்வி ஞானம் அளிக்கப்பட்டவர்களுக்கும் அல்லாஹ் பதவிகளை உயர்த்துவான் ...

مَنْ يُرِدِ اللَّهُ بِهِ خَيْرًا يُفَقِّهْهُ فِي الدِّينِ

முஆவியா (ரலி) – நபி (ஸல்) – யாருக்கு அல்லாஹ் நன்மையை நாடுகிறானோ அவருக்கு மார்க்கத்தில் தெளிவைக்கொடுக்கிறான் (புஹாரி, முஸ்லீம்)

நாம் அதிகமதிகமாக கல்வியை தேடும்போதும், புத்தகங்களை வாசிக்கும்போதும், புத்தகம் வாசிப்பவர்களுடன் பழங்கும்போதும் தான்; நமக்கு முன் சென்ற அறிஞர் பெருமக்களின் மிகப்பெரும் பணிகளை நம்மால் விளங்கிக்கொள்ள முடியும்.

இமாம் ஷாஃபீ (ரஹ்) நீங்கள் எந்த ஒரு மார்க்கக்கல்வியை கேட்டாலும் எழுதுங்கள் எழுத வசதி இல்லையேல் பக்கத்தில் உள்ள சுவற்றிலாவது எழுதுங்கள் என வலியுறுத்தினார்கள்.

முன் சென்ற அறிஞர்கள் எழுதும் அடிக்குறிப்புகள் கூட பிறருக்கு புரியும் விதத்தில் இருந்தது. அவர்களது அடிக்குறிப்புக்களால் முக்கிய குறிப்புக்கு எந்த பாதிப்பும் இல்லாதவாறு இரண்டையும் பிரித்து சீராக எழுதும் வழக்கமுடையவர்களாக இருந்தார்கள்...

5) வீணான காரியங்களை விட்டும் தவிர்த்திருக்க வேண்டும்

ஸூரத்துல் முஃமினூன் (விசுவாசிகள்) 23:3

وَالَّذِيْنَ هُمْ عَنِ اللَّغْوِ مُعْرِضُوْنَۙ

இன்னும், அவர்கள் வீணான (பேச்சு, செயல் ஆகிய)வற்றை விட்டு விலகியிருப்பார்கள்.

அதனால் நேரம் அதிகமாக கிடைக்கும்.

6) மிருதுவான குணம்

إن الله رفيق يحب الرفق ويعطى على الرفق ما لا يعطي على العنف وما لا يعطي على ما سواه

ஆயிஷா (ரலி) – நபி (ஸல்) :

அல்லாஹ் மிருதுவானவன் அவன் மிருதுவானதை விரும்புகிறான்.

அல்லாஹ் மூஸா அலை அவர்களிடம் ஃபிரௌனிடம் சொல்லச்சொன்னது

ஸூரத்து தாஹா 20:44

فَقُوْلَا لَهٗ قَوْلًا لَّيِّنًا لَّعَلَّهٗ يَتَذَكَّرُ اَوْ يَخْشٰى

"நீங்கள் இருவரும் அவனிடம் (சாந்தமாக) மென்மையான சொல்லால் சொல்லுங்கள்; அதனால், அவன் நல்லுபதேசம் பெறலாம்; அல்லது அச்சம் கொள்ளலாம்."

7) சமயோசித புத்தியோடு அமைதியாக சிந்தித்தல் (التامل)

العجلةمن الشيطان و التاني من الله

நபி (ஸல்): வேகமாக செயல்படுவது ஷைத்தானின் தன்மையும் நிதானமாக செயல்படுவது அல்லாஹ் விரும்பும் தன்மையும் ஆகும்.

وَمَنْ كَانَ يُؤْمِنُ بِاللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ فَلْيَقُلْ خَيْرًا أَوْ لِيَصْمُتْ

நபி (ஸல்): யார் அல்லாவையும் மறுமையையும் நம்புகிறாரோ அவர் நல்லதை பேசட்டும் இல்லையேல் மௌனமாக இருக்கட்டும் .

8) الثبات والتثبت எந்த ஒரு செய்தியும் ஆதரத்தன்மையை ஆராய வேண்டும்

احب الاعمال الى الله ادومها وان قل

நபி (ஸல்): அல்லாஹ்விற்கு மிகப்பிடித்தமான அமல் தொடர்ந்து செய்யும் அமல்களே.

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு – முன்னுரை - ஹதீஸ் 1

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

இப்பாடத்தில் சிறு ஹதீது தொகுப்புகளைக் காண்போம். ஹதீதுக் கலை வல்லுநர்கள் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் ஹதீதுகளைப் பல்வேறு விதமாகத் தொகுத்துள்ளார்கள். உதாரணமாக, அபு ஹுரையாராஹ் ரழியல்லாஹு அன்ஹு அறிவித்த ஹதீதுத் தொகுப்பு, அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் ஹதீதுத் தொகுப்பு இப்படி தொகுத்துள்ளார்கள். இவற்றை முஸ்னத் என்பார்கள். சிலர் ஸஹீஹான ஹதீதுகளின் தொகுப்புகளைக் கொடுத்துள்ளனர். இமாம் புஹாரி ரஹ்மத்துல்லாஹி அலைஹி தொகுத்தது இதற்கு உதாரணம் ஆகும். இது போல இமாம் யஹ்யா இப்னு ஸரஃப் அந் நவவி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தொகுத்த 40 ஹதீதுகளை இங்கு காண்போம். இது போல அப்துல்லாஹ் இப்னு முபாரக் ரஹ்மத்துல்லாஹி அலைஹி போன்ற வேறு பல அறிஞர்களும் 40 ஹதீதுகளை தொகுத்துள்ளார்கள்., இவர்களின் ஹதீது மிகவும் பிரபலமானது. 40 ஹதீதுகள் என்ற எண்ணிக்கைக்குக் காரணம், “எவர் ஒருவர் எனது உம்மத்துக்காக 40 ஹதீதுகளைத் தொகுத்து அளிப்பாரோ, அவருக்கு அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா ஷஹீது நன்மையை அளிப்பான்” என்ற ஹதீது தான். மற்றொரு அறிவிப்புகளின்படி அறிஞராக எழுப்புவான் என்று கூறப்பட்டுள்ளது. எனினும் அனைத்தும் பலவீனமானவை. இந்தத் தொகுப்பு உம்மத்துக்குப் பயன்தரும் முக்கியமான ஹதீதுகளைக் கொண்டுள்ளது. இதில் 42 ஹதீதுகள் உள்ளன.

இமாம் யஹ்யா இப்னு ஸரஃப் அந் நவவி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் தந்தையின் பெயர் ஸரஃப் ஆகும். இமாம் நவவியில் பிறந்தவர் ஆவார். சிறு வயதிலிருந்தே மார்க்கக் கல்வியில் ஆர்வம் கொண்டுள்ளார். விளையாட அழைக்கப்பட்டாலும், அவ்வாறு செல்லாமல் குர்ஆன் மனனம் செய்வதில் ஈடுபடுவார்கள். அவரது இந்த நிலையைக் கண்டு அவரை மார்க்க கல்விக்காக வெளியூர் அழைத்துச் செல்லுமாறு அவரின் தந்தைக்கு அறிவுறுத்தினார்கள். எனவே அவர்கள் நவவியை விட்டு திமிஷ்கை (டமாஸ்கஸ்) சென்றார்கள். தம் வாழ்நாள் முழுவதும் மார்க்கத்திற்காக செலவிட்ட அவர் 46 வயதில் மரணம் அடைந்து விட்டார்கள். அக்குறுகிய காலத்தில் அவர்கள் பல நூல்கள் எழுதியுள்ளார்கள். முஸ்லிம் முஸ்னத்திற்கு சிறந்த விளக்க நூலை இவர் எழுதியுள்ளார். மேலும் ரியாதுஸ் ஸாலிஹீன் என்ற நற்குணம் பற்றிய பிரபல நூலையும், அல் அத்கார் என்னும் நூலையும் எழுதியுள்ளார். அல்லாஹ் அவர்களின் முயற்சிக்கு நற்கூலி அளிப்பானாக! நாமும் அதனால் பயன்பெறும் பாக்கியத்தை அல்லாஹ் அருள் புரிவானாக!

ஹதீத் 1.

عَنْ أَمِيرِ الْمُؤْمِنِينَ أَبِي حَفْصٍ عُمَرَ بْنِ الْخَطَّابِ ﷺ قَالَ: سَمِعْت رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: " إنَّمَا الْأَعْمَالُ بِالنِّيَّاتِ، وَإِنَّمَا لِكُلِّ امْرِئٍ مَا نَوَى، فَمَنْ كَانَتْ هِجْرَتُهُ إلَى اللَّهِ وَرَسُولِهِ فَهِجْرَتُهُ إلَى اللَّهِ وَرَسُولِهِ، وَمَنْ كَانَتْ هِجْرَتُهُ لِدُنْيَا يُصِيبُهَا أَوْ امْرَأَةٍ يَنْكِحُهَا فَهِجْرَتُهُ إلَى مَا هَاجَرَ إلَيْهِ . "

رَوَاهُ إِمَامَا الْمُحَدِّثِينَ أَبُو عَبْدِ اللهِ مُحَمَّدُ بنُ إِسْمَاعِيل بن إِبْرَاهِيم بن الْمُغِيرَة بن بَرْدِزبَه الْبُخَارِيُّ الْجُعْفِيُّ [وَأَبُو الْحُسَيْنِ مُسْلِمٌ بنُ الْحَجَّاج بن مُسْلِم الْقُشَيْرِيُّ النَّيْسَابُورِيُّ [رَضِيَ اللهُ عَنْهُمَا فِي "صَحِيحَيْهِمَا" اللذِين هُمَا أَصَحُّ الْكُتُبِ الْمُصَنَّفَة.

ஹதீஸ்-1:

'செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொருத்தே அமைகின்றன. ஒவ்வொருவருக்கும் அவர் எண்ணியதே கிடைக்கிறது. ஒருவரின் ஹிஜ்ரத் (பிறந்த நாட்டை துறந்து செல்லல்) உலகத்தைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தால் அதையே அவர் அடைவார். ஒரு பெண்ணை நோக்கமாகக் கொண்டால் அவளை மணப்பார். எனவே, ஒருவரின் ஹிஜ்ரத் எதை நோக்கமாகக் கொண்டிருக்கிறதோ அது வாகவே அமையும்' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: அறிவிப்பவர் உமர் இப்னு கத்தாப்(ரலி) (நூல்: புகாரி)

இந்த ஹதீதை அறிவித்த உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் நபித்துவம் அருளப்பட்ட ஆறாம் வருடம் இஸ்லாத்தில் இணைந்தார்கள். இவர்கள் இஸ்லாத்தை ஏற்ற பிறகு முஸ்லிம்களுக்கு தைரியம் வந்துள்ளது. உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் இஸ்லாத்தைத் தழுவிய பிறகுதான் தங்கள் கண்ணியம் பெற்றதாக இப்னு மஸ்வூது ரழியல்லாஹு அன்ஹு கூறியுள்ளார்கள். அவர்கள் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் துஆவின் பொருட்டால் இஸ்லாத்தில் இணைந்தார்கள். இவர்கள் அத்தனை போர்களிலும் கலந்து கொண்டார்கள். உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களை ஒரு வீதியில் கண்டுவிட்டால் ஷைத்தான் வேறு வீதி வழியாகச் சென்று விடுவான் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள்.

உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறிய பல யோசனைகளுக்குத் தக்கவாறு அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா குர்ஆன் வசனங்களை இறக்கியுள்ளான். ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்குப் பிறகு சிறந்த நபராகக் கருதப்பட்டவர்கள் அபு பக்ரு ரழியல்லாஹு அன்ஹு ஆவார்கள். அதற்குப் பிறகு இரண்டாவதாக உமர் ரழியல்லாஹு அன்ஹு சிறந்தவராகக் கருதப்பட்டார்கள். இரண்டாவது கலீஃபாவாக சுமார் பத்தரை ஆண்டுகள் இருந்தார்கள். இவர்கள் காலத்தில் இஸ்லாம் பல வெற்றிகளைக் கொண்டது. அரபுலகத்தைத் தாண்டி இஸ்லாம் வளர்ந்தது. அபு லுக் லுக் என்பவரால் அவர்கள் கத்தியால் குத்தப்பட்டு இரண்டு நாட்கள் கழித்து ஷஹீதாக மரணமடைந்தார்கள்.

இந்த ஹதீது மிக முக்கியமான ஒன்றாகும். பல ஹதீது கருத்துக்களைத் தம்மிடத்தில் இது கொண்டுள்ளது. இஸ்லாத்தின் அடிப்படை சட்டங்களைப் போதிக்கும் ஹதீதுகளில் இதுவும் ஒன்றாகும். அறிஞர்களின் கருத்துப்படி, கல்வியின் மூன்றில் ஒரு பகுதி இந்த ஹதீது ஆகும். ஒரு அடியான் உள்ளத்தால், நாவினால் மற்றும் உடலால் செய்யக் கூடிய அமல்கள் என மூன்றாகப் பிரிக்கலாம். இந்த மூன்றில் உள்ளம் சம்பத்தப்பட்ட காரியம் குறித்துப் பேசுவதால் இது மூன்றில் ஒரு பகுதி எனக் கூறப்பட்டது.

ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் இந்த ஹதீது மூலமாகக் கூறுவது எண்ணங்களைப் பொறுத்தே அமல்கள் அமைகின்றன என்பதாகும். எந்த நற்செயலாக இருந்தாலும், அனைத்தும் எண்ணத்தின் பொறுத்தே அமைகின்றன. உதாரணமாக, அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவையும், அவனது தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களையும் நேசிப்பது. இது உள்ளத்தால் செய்யக்கூடிய அமல் ஆகும். எந்த எண்ணத்தில் நேசிக்கப்படுகிறது என்பதை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நோக்குகிறான். அமல் ஏற்றுக்கொள்ளப்படுமா என்பது அதன்படி அமையும். குர்ஆன் ஓதுவது, திக்று செய்வது, மக்களை நன்மையின்பால் அழைப்பது போன்ற நாவால் செய்யும் அமல்கள் எந்த எண்ணத்தில் செய்யப்படுகிறது என்பதை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நோக்குகிறான். அது போல தொழுகை, ஹஜ் உம்ரா போன்ற உடலால் செய்யும் அமல்களும் எந்த எண்ணத்தில் செய்யப்படுகிறது என்பதை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நோக்குகிறான்.

எனவேதான் இந்த ஹதீதின்படி நம் எண்ணத்தை சீராக, உளத் தூய்மையோடு (இக்லாஸ்) வைத்துக் கொள்வது கட்டாயமாக ஆகிவிடுகிறது. எல்லா நற்செயலகளும் அல்லாஹ் வின் பொருத்தத்திற்காக, மார்கத்திற்காக, சுவனம் அடைய, நரகிலிருந்து ஈடேற்றம் பெற என்பன போன்ற நல்ல எண்ணங்களில் இருக்க வேண்டும் என இந்த ஹதீது வலியுறுத்துகிறது.

ஒருவர் தொழும்போது அல்லாஹ் தமக்கு கடமையாக்கினான் என்ற எண்ணத்துடன் தொழுகிறார். இரண்டாமவர் அவரைப் போலத்தான் செய்கையில் ஒரே மாதிரி தொழுகிறார். ஆனால் இவரது என்னாமோ மற்றவர்கள் தாம் தொழாதவராகக் காணக்கூடாது என்ற பயத்தில் அல்லது தாம் தொழுகையாளி என்று காட்டும் எண்ணத்தில் தொழுகிறார். தமக்கு இது கடமை, தொழாவிட்டால் குற்றமாக விசாரிக்கப் படுவோம் என்ற பயம் ஏதும் இல்லாமல் தொழுகிறார் என்றால் அவரது தொழுகைக்குக் கூலி எவ்வாறு கிடைக்கும்? அத்தொழுகை மறுக்கப்பட்டு பாவமாகக் கருதப்படலாம்.

எந்த ஒரு எண்ணமும் இல்லாமல் ஒரு காரியத்தை செய்யச் சொன்னால் அவ்வாறு செய்ய முடியுமா? காரியம் ஏதேனும் செய்தால், தானாகவே ஏதாவது ஒரு எண்ணம் வந்து விடும். எண்ணம் நல்லதாக அல்லது கெட்டதாக இருக்கும். எண்ணம் மனத்தால் எழுவதால், வாயால் சொல்வது நிய்யத் ஆகாது. எனவேதான் எந்த செயலுக்கும் நிய்யத் வாய்வழி சொல் அல்ல.

இந்த ஹதீதில் கூறப்பட்ட அடுத்த செய்தி, ஒவ்வொருவருக்கும் அவர் நாடியது கிடைக்கும். நன்மையை நாடினால் நற்கூலி கிடைக்கும். தீய எண்ணத்தில் செய்தால் தீமையே விளையும். எந்த எண்ணமும் இல்லாமல் செய்வது, வீணில் முடியும். எனவே எண்ணத்தின்படியே செயல்கள் ஏற்றுக் கொள்ளப்படும் அல்லது மறுக்கப்படும்.

அத்தியாயம் பைய்யினா 5

وَمَا أُمِرُوا إِلَّا لِيَعْبُدُوا اللَّـهَ مُخْلِصِينَ لَهُ الدِّينَ حُنَفَاءَ وَيُقِيمُوا الصَّلَاةَ وَيُؤْتُوا الزَّكَاةَ ۚ وَذَٰلِكَ دِينُ الْقَيِّمَةِ ﴿٥﴾

“அல்லாஹ்வுக்கு வணக்கத்தை தூய்மையாக்கியவர்களாக (தவறான வழியிலிருந்து விலகி சரியான வழியில்) பிடிப்புள்ளவர்களாக அல்லாஹ்வை அவர்கள் வணங்க வேண்டும்; மேலும் தொழுகையை அவர்கள் நிலைநாட்டவேண்டும்; மேலும் ஜகாத்தை அவர்கள் வழங்க வேண்டும் என்பதைத் தவிர (வேறெதுவும்) அவர்களுக்குக் கட்டளையிடப்படவில்லை. இதுதான் நேரான மார்க்கமாகும்.”

அத் தவ்பா 120

إِنَّ اللَّـهَ لَا يُضِيعُ أَجْرَ الْمُحْسِنِينَ ﴿١٢٠﴾

நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்வோரின் கூலியை வீணாக்க மாட்டான்.

எனவே உளத் தூய்மையோடு செய்யும் நற்செயல்கள் ஏற்றுக் கொள்ளப்படும். ஆனால் ஹஜ், ஜிஹாத் போன்ற சிறந்த அமல்களும் தூய எண்ணத்தில் செய்யாமல் இருந்தால், அவை பாவமாகவும் ஆகிவிடலாம்.

திர்மிதி ஹதீதில் வந்துள்ளதாவது: மூன்று நபர்களைக் கொண்டு நரக நெருப்பு மூட்டப்படும். மார்க்க அறிஞர், செல்வந்தர் மற்றும் உயிர் தியாகி. தாம் கல்வியாளர் எனப் போற்றவேண்டும், வள்ளல் எனப் புகழ வேண்டும், ஷஹீத் என அறியப்பட வேண்டும் என்ற எண்ணங்களைக் கொண்டு அவர்கள் அமல் செய்வதால் வந்த வினை அது.

நமது அமல் கடமையானதாக இருந்தாலும், ஸுன்னாஹ்வாக இருந்தாலும், நம் எண்ணப்படியே நிறைவேறும். ஒருவர் கடமையான தொழுகை என்ற நிய்யத்தில் தொழுதால் அவ்வாறே நிறைவேறும். அதே நேரத்தில் அவர் அத்தொழுகை ஸுன்னாஹ்வாக நிய்யத் செய்து தொழுது, அந்த நேரத்திய கடமையான தொழுகையைத் தொழாமல் விட்டிருந்தால், அந்த கடமை நிறைவேறாத ஒன்றாகவே இருக்கும். முந்தைய தொழுகை ஸுன்னாஹ்வாகத்தான் கணக்கிடப்படும். முன்னவர் கடமையை நிறைவேற்றியவராகக் கணக்கிடப்படுவார்.

அதுபோல், செய்கைகளின் கூலியும் எண்ணத்தின் அடிப்படையில்தான் கிடைக்கும். எனவே சிற்சில அமல்களும் நல்ல எண்ணத்தின் காரணமாக பெரிய அளவில் நன்மையைக்

கொடுத்துவிடும். அது போல பெரிய அமல்களும் எண்ணத்தின் குறை காரணமாக பலன் குறைந்து போய்விடலாம். தீமையாகவும் மாறலாம்.

அபு தாவூத் அறிவிப்பின்படி ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள்: ஒருவர் தொழுவார், ஆனால் அவருக்கு பாதி நன்மைதான் கிடைக்கும். ஒருவர் தொழுவார், ஆனால் அவருக்கு மூன்றில் ஒரு பங்கு நன்மைதான் கிடைக்கும். மற்றதை இழந்து விடுவார். ஒருவர் தொழுவார், ஆனால் அவருக்கு நான்கில் ஒரு பங்கு நன்மைதான் கிடைக்கும்.. மற்றதை இழந்து விடுவார். . ஒருவர் தொழுவார், ஆனால் அவருக்கு ஐந்தில் ஒரு பங்கு நன்மைதான் கிடைக்கும். மற்றதை இழந்து விடுவார். ஒருவர் தொழுவார், ஆனால் அவருக்கு பத்தில் ஒரு பங்கு நன்மைதான் கிடைக்கும். மற்றதை இழந்து விடுவார்."

எல்லாமே எண்ணத்தின் அடிப்படையில் இவ்வாறு அமைந்து விடும். முஸ்லிம் அறிவிப்பின்படி ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள்: அடியான் ஒரு நன்மையைச் செய்ய நாடினால், அவன் நாடியதன் காரணமாக அவருக்கு ஒரு நன்மை எழுதப்படும். அந்த காரியத்தைச் செய்தால் பத்திலிருந்து எழுநூறு நன்மைகள் எழுதப்படும். அல்லாஹ் நாடினால் அதனைவிட அதிகமாகக் கொடுப்பான்." எனவே நிய்யத்தின் அளவின்படி நன்மைகள் வேறு விதமாக எழுதப்படும்.

திர்மிதி அறிவிப்பின்படி ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள்: உலகில் நான்கு வகையான மக்கள் உள்ளனர். ஒருவருக்கு அல்லாஹ் கல்வியையும், செல்வத்தையும் கொடுத்திருக்கிறான். அவர்கள் அதனை அல்லாஹ் வின் பாதையில் பயன்படுத்துகிறார்கள். அவர்களுக்கு அல்லாஹ் மகத்தான கூலியைக் கொடுக்கிறான். இன்னொருவர் இருக்கிறார். அவருக்கு அல்லாஹ் கல்வியையோ, செல்வத்தையோ கொடுக்கவில்லை. தமக்கும் அவ்வாறுக் கொடுக்கப்பட்டிருந்தால், தாமும் அவ்வாறே அல்லாஹ் வின் பாதையில் பயன்படுத்தியிருப்போம் என்று நினைக்கிறார். முதலில் சொன்னவர்களுக்கு கொடுத்ததைப் போல அல்லாஹ் மகத்தான கூலியைக் கொடுக்கிறான். மூன்றாமவருக்கு ஒருவருக்கு அல்லாஹ் கல்வியையும், செல்வத்தையும் கொடுத்திருக்கிறான். ஆனால் அவர் தவறான வழியில் அதனைப் பயன்படுத்துகிறார்கள். எனவே அவர்கள் தீமைக்குத் தகுந்தவாறு கூலி அளிக்கப்படும். நான்காவது நபருக்கு அல்லாஹ் கல்வியையோ, செல்வத்தையோ கொடுக்கவில்லை. எனினும் தமக்கு அவ்வாறு கொடுக்கப்பட்டால், மூன்றாம் நபரைப் போல வசதியுடன் தம் விருப்பபடி வாழ்ந்திருப்பேன் என நினைக்கிறார். அவரும் மூன்றாவது நபரைப் போல கூலி பெறுவார். இவ்வாறு எண்ணங்களின் காரணமாகவே நன்மை, தீமைகளைப் பெறுவார்கள். எனவே தீமையான எண்ணங்களை விட்டு நாம் விலகி இருக்கவேண்டும்.

புஹாரி அறிவிப்பின்படி ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள்: கொலை செய்தவனும், கொலை செய்யப்பட்டவனும் நரகில் போவார்கள். கொல்பவன் நரகத்திற்குப் போவது சரிதான், அனால் கொள்ள்ளப்பட்டவன் ஏன் நரகத்திற்குப் போக வேண்டும் என வினவப்பட்டபோது ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள்: அவனும் தன சகோதரனைக் கொல்ல நினைத்தான். ஆனால் வாய்ப்புக் கிடைக்கவில்லை. எண்ணத்தின் அடிப்படையில் அவனும் பாவிதான்.

இந்த எண்ணத்தின் காரணமாகத்தான் நாம் நினைத்த காரியத்தைச் செய்திருக்காவிட்டாலும் நமக்கு நன்மை எழுதப்படும். ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் போருக்கு ஒரு தடவை புறப்பட்டபோது, நோயின் காரணமாக சிலர் அவர்களுடன் செல்லவில்லை. தகுந்த காரணத்தால் அவர்கள் வரவில்லை என்பதால், அவர்களுக்கும் போர் நன்மையை வழங்குவான் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள்.

எனவே நம் எண்ணங்களை சுத்தப்படுத்துவோமானால் நமக்கு நன்மையை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா வாரி வழங்குவான். பள்ளிவாசல் செல்லும் ஒருவருக்கு ஒரு

காலடிக்கும் நன்மையை அல்லாஹ் வழங்குவான். ஒரு தீமையை நீக்கிவிடுவான். எனவே தொழுகை எண்ணத்தில் அவர் நடப்பதும் நன்மையைக் கொடுக்கும். அது போல் நாம் உண்பதும், எல்லாவித தினசரி வாழ்கையின் காரியங்கள் அனைத்தும் நம் எண்ணத்தின் பொருட்டு நன்மையாக மாறிவிடும். எனவே நாம் எப்போதும் நல்ல எண்ணங்களையே எடுத்துக் கொள்ளவேண்டும். முகஸ்துதி, நயவஞ்சக என்ன்னம் போன்ற தவறான எண்ணங்களை விட்டும் நமது நஃஸுக்கு எதிராக ஜிஹாத் செய்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். “இறைவா! நயவஞ்சகத்தனத்திலிருந்து என்னைப் பாதுகாத்து விடுவாயாக! செயல்களை முகஸ்துதியிலிருந்து பாதுகாத்து விடுவாயாக! எனது நாவை பொய்யிலிருந்து பாதுகாத்து விடுவாயாக!” என்று அவர்கள் கெட்ட துஆவை நாமும் கேட்டு பலனடையும் பாக்கியத்தை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா அளிப்பானாக!

The Forty Hadith of Imam Nawawi - Hadith 2: Part 1

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 2 : பாகம் 1

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

حَدَّثَنِي أَبِي عُمَرُ بْنُ الْخَطَّابِ قَالَ

ذَاتَ يَوْمٍ ﷺ بَيْنَمَا نَحْنُ جُلُوسٌ عِنْدَ رَسُولِ اللَّهِ

إذْ طَلَعَ عَلَيْنَا رَجُلٌ شَدِيدُ بَيَاضِ الثِّيَابِ، شَدِيدُ سَوَادِ الشَّعْرِ، لَا يُرَى عَلَيْهِ أَثَرُ السَّفَرِ، وَلَا يَعْرِفُهُ مِنَّا أَحَدٌ. حَتَّى جَلَسَ إلَى النَّبِيِّ ﷺ . فَأَسْنَدَ رُكْبَتَيْهِ إلَى رُكْبَتَيْهِ، وَوَضَعَ كَفَّيْهِ عَلَى فَخِذَيْهِ، وَقَالَ: يَا مُحَمَّدُ أَخْبِرْنِي عَنْ الْإِسْلَامِ. فَقَالَ رَسُولُ اللَّهِ ﷺ الْإِسْلَامُ أَنْ تَشْهَدَ أَنْ لَا إلَهَ إلَّا اللَّهُ وَأَنَّ مُحَمَّدًا رَسُولُ اللَّهِ، وَتُقِيمَ الصَّلَاةَ، وَتُؤْتِيَ الزَّكَاةَ، وَتَصُومَ رَمَضَانَ، وَتَحُجَّ الْبَيْتَ إنْ اسْتَطَعْت إلَيْهِ سَبِيلًا. قَالَ: صَدَقْت . فَعَجِبْنَا لَهُ يَسْأَلُهُ وَيُصَدِّقُهُ! قَالَ: فَأَخْبِرْنِي عَنْ الْإِيمَانِ. قَالَ: أَنْ تُؤْمِنَ بِاَللَّهِ وَمَلَائِكَتِهِ وَكُتُبِهِ وَرُسُلِهِ وَالْيَوْمِ الْآخِرِ، وَتُؤْمِنَ بِالْقَدَرِ خَيْرِهِ وَشَرِّهِ. قَالَ: صَدَقْت. قَالَ: فَأَخْبِرْنِي عَنْ الْإِحْسَانِ. قَالَ: أَنْ تَعْبُدَ اللَّهَ كَأَنَّك تَرَاهُ، فَإِنْ لَمْ تَكُنْ تَرَاهُ فَإِنَّهُ يَرَاك. قَالَ: فَأَخْبِرْنِي عَنْ السَّاعَةِ. قَالَ: مَا الْمَسْئُولُ عَنْهَا بِأَعْلَمَ مِنْ السَّائِلِ. قَالَ: فَأَخْبِرْنِي عَنْ أَمَارَاتِهَا؟ قَالَ: أَنْ تَلِدَ الْأَمَةُ رَبَّتَهَا، وَأَنْ تَرَى الْحُفَاةَ الْعُرَاةَ الْعَالَةَ رِعَاءَ الشَّاءِ يَتَطَاوَلُونَ فِي الْبُنْيَانِ. ثُمَّ انْطَلَقَ، فَلَبِثْنَا مَلِيًّا، ثُمَّ قَالَ: يَا عُمَرُ أَتَدْرِي مَنْ السَّائِلُ؟. قُلْتُ: اللَّهُ وَرَسُولُهُ أَعْلَمُ. قَالَ: فَإِنَّهُ جِبْرِيلُ أَتَاكُمْ يُعَلِّمُكُمْ دِينَكُمْ ". رَوَاهُ مُسْلِمٌ

என் தந்தை உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் என்னிடம் தெரிவித்தார்கள்: நாங்கள் ஒரு நாள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் அருகில் இருந்தபோது தூய வெண்ணிற ஆடை அணிந்த, அடர்ந்த கறுப்பு நிறத்தில் தலைமுடி உடைய ஒரு மனிதர் வந்தார். பயணத்தில் வந்த எந்த அடையாளமும் அவரிடம் காணப்படவில்லை. எங்களில் எவருக்கும் அவரை (யார் என)த் தெரிய வில்லை. அவர் நபி (ஸல்) அவர்களின் அருகில் (வந்து), தம் முழங்கால்களை நபியவர்களின் முழங்கால்களோடு இணைத்துக்கொண்டு தம் கைகளைத் தம் தொடைகள்மீது வைத்(துக் கொண்டு அமர்ந்)தார். பிறகு முஹம்மதே! இஸ்லாம் என்றால் என்னவென்று எனக்குத் தெரிவியுங்கள்" என்று கேட்டார். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், இஸ்லாம் என்பது அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்றும் முஹம்மத் (ஆகிய நான்) அல்லாஹ்வின் தூதர் என்றும் நீங்கள் உறுதி கூறுவதாகும். மேலும்,தொழுகையைக் கடைப்பிடிப்பதும், ஸகாத்தை வழங்கி வருவதும், ரமளான் மாதத்தில் நோன்பு நோற்பதும், சென்றுவர இயலுமானால் இறையில்லம் கஅபாவில் ஹஜ் செய்வதும் ஆகும் என்று பதிலளித்தார்கள். அதற்கு அந்த மனிதர் "நீங்கள் உண்மை சொன்னீர்கள்" என்றார். அவர் இவ்வாறு கூறியதைக் கேட்டு, அவரே கேள்வியும் கேட்டுவிட்டு அவரே பதிலையும் உறுதிப்படுத்துகிறாரே என்று நாங்கள் வியப்படைந்தோம்.

அடுத்து அவர், "ஈமான் பற்றி எனக்குத் தெரிவியுங்கள்" என்று கூறினார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், அல்லாஹ் வையும் அவனுடைய வானவர்களையும் அவனுடைய வேதங்களையும் அவனுடைய தூதர்களையும் இறுதி நாளையும் நீங்கள் நம்புவதாகும். நன்மை, தீமை அனைத்தும் விதியின்படியே நடக்கின்றன என்றும் நீங்கள் நம்புவதுமாகும்" என்று கூறினார்கள். அதற்கும் அம்மனிதர் நீங்கள் உண்மை சொன்னீர்கள் என்றார்.

அடுத்து அம்மனிதர், இஹ்சான் பற்றி எனக்குத் தெரிவியுங் கள் என்றார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், (இஹ்சான் என்பது) அல்லாஹ்வை நீங்கள் பார்த்துக் கொண்டிருப் பதைப் போன்ற உணர்வுடன் வணங்கு வதாகும். நீங்கள் அவனை பார்க்கவில்லை என்றாலும், அவன் உங்களைப் பார்க்கின்றான் என்று பதிலளித்தார்கள்.

அம்மனிதர், மறுமை (உலக அழிவு) நாளைப் பற்றி (அது எப்போது வரும் என) எனக்குத் தெரிவியுங்கள்" என்று கேட்க. நபி (ஸல்) அவர்கள், கேள்வி கேட்கப்படுபவர் கேட்ப வரைவிட (அதாவது உங்களைவிட நான்) அதிகம் அறிந்தவர் அல்லர். (இது பற்றி எனக்கும் தெரியாது, உங்களுக்கும் தெரியாது.) என்று கூறினார்கள். அம் மனிதர், மறுமை நாளின் அடையாளங்களைப் பற்றி எனக்குத் தெரிவியுங்கள்! என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், ஓர் அடிமைப் பெண் தன் எசமானியைப் பெற்றெடுப்பதும், காலில் செருப்பில்லாத, அரைகுறை ஆடைகளை அணிந்துள்ள ஏழைகளான ஆடு மேய்க்கும் இடையர்கள் போட்டி போட்டுக்கொண்டு உயரமான கட்டடங்கள் கட்டுவதை நீங்கள் காண்பதும் ஆகும்" என்று கூறினார்கள்.

பிறகு அம்மனிதர் சென்றுவிட்டார். நீண்ட நேரம் நான் (அங்கேயே) இருந்தேன். பின்னர் என்னிடம் நபி (ஸல்) அவர்கள், உமரே! கேள்வி கேட்ட அந்த நபர் யார் என்று உங்களுக்குத் தெரியுமா? என்று கேட்டார்கள். நான், அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே நன்கு அறிந்தவர்கள் என்று சொன்னேன். நபி (ஸல்) அவர்கள், அவர்தாம் (வானவர்) ஜிப்ரீல். உங்களுக்கு உங்களது மார்க்கத்தைக் கற்றுத் தருவதற்காக உங்களிடம் அவர் வந்தார் என்று சொன்னார்கள். அறிவிப்பவர்: இப்னு உமர்(ரலி) நூல்:முஸ்லிம்

இந்த ஹதீதை உமர் ரழியல்லாஹு அன்ஹு தம்மிடம் கூறியதாக அவர்களின் மகனார் அப்துல்லாஹ் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள். உமர் ரழியல்லாஹு அன்ஹு தாங்கள் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுடன் அமர்ந்து இருந்ததாகக் கூறியுள்ளார்கள். ஸஹாபா பெருமக்கள் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுடன் அமர்ந்து கல்வி பெற்றதை இது குறிக்கிறது. ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் ஜும்மா உரையானது ஐந்து அல்லது பத்து நிமிடங்கள் தாம் இருக்கும். அவர்கள் ஜும்மா உரையில் மார்கத்தை மக்களுக்குப் போதிக்கவில்லை. மாறாக ஏற்கனவே சொன்னவற்றை நினைவூட்டலாகச் சொல்வார்கள். மார்க்க விஷயங்களை அவர்கள் மஜ்லிஸில் அனைவருடனும் அமர்ந்து ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் சொல்லிக் கொடுப்பார்கள். ஆனால் இக்காலத்தில், மார்க்கம் அறிவதற்காக நாம் நேரம் ஒதுக்காத காரணத்தினால் ஜும்மா உரை அதிக நேரம் பேச வேண்டிய தேவையாகிறது.

அத்தகைய மஜ்லிஸில்தான் ஒரு நாள் கருத்த முடியுடைய, வெண்ணிற ஆடை தரித்த ஒருவர் அங்கு வந்தார். தூரத்திலிருந்து வந்ததற்கான களைப்போ அல்லது கசங்கிய உடையோ அவரிடம் காணவில்லை. மேலும் அவர் தெரிந்த நபராகவும் இல்லை. வந்து அவர்களின் முழங்கால் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் முழங்கால்களுடன் இணையும் அளவிற்கு நெருங்கி அமர்ந்தார். தம் கைகளை அவர்களின் தொடையில் வைத்தார்.

கல்வி கற்கும் மாணவர் ஆசிரியரை நெருங்கி இருக்க வேண்டும் இன்ற வழிமுறையை இதிலிருந்து அறியலாம்.

ஸஹாபா பெருமக்கள் என்றும் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களைப் பெயர் சொல்லி அழைக்க மாட்டார்கள். ஆனால் வந்தவரோ, அவர்களைப் பெயர் சொல்லி அழைத்தார். வெளியூரிலிருந்து வந்தவர்கள் தாம் அவ்வாறு பெயர் சொல்லி அழைப்பார்கள். எனவே ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் பெயர் சொல்லி அழைக்காமல் நபி என்றே அழைக்க வேண்டும்.

மேலும் இஸ்லாத்தின் ஐந்து அடிப்படைகளான கலிமா, தொழுகை, நோன்பு, ஜகாத் மற்றும் ஹஜ் ஆகியன பற்றி ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் குறிப்பிடுகிறார்கள். எனவே இவற்றைச் செய்பவர்கள் இஸ்லாத்தில் உள்ளவராக, முஸ்லிமாகக் கருதப்படுவார். எனவே அவர் முஸ்லிம்களுக்குரிய எல்லா தகுதிகளையும், உரிமையையும் பெற்று விடுவார். அவர் உண்மையிலேயே கலிமா சொன்னாரா என்று விசாரிக்க வேண்டிய அவசியம் நமக்கில்லை. ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் காலத்தில், நயவஞ்சகர்கள் கலிமாவைக் கூறி தாங்களும் முஸ்லிம் என்று பள்ளிவாசலுக்கு வருவார்கள். அவர்களை யாரும் சோதித்துப் பார்த்து பள்ளிவாசலுக்கு அனுமதி கொடுப்பதில்லை. போரிலும் அவர்கள் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டார்கள்.

ஒரு போரில் உஸாமா இப்னு ஜைத் உமர் ரழியல்லாஹு அன்ஹு ஒரு காஃபிரைக் கொல்வதற்காக தமது வாளை உயர்த்தியபோது, அவர் கலிமா ஷஹாதாவைக் கூறிவிடுகிறார். எனினும் அதனை பொருட்படுத்தாமல் அவரைக் கொன்று விடுகிறார். அச்செய்தி கேட்டு ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கோபமடைந்து, அவரை உஸாமா இப்னு ஜைத் உமர் ரழியல்லாஹு அன்ஹு ஏன் கொன்றார் என வினவினார்கள். உயிருக்குப் பயந்துதான் அவர் கலிமா ஷஹாதாவைக் கூறினார் என்பதால் தாம் கொன்றுவிட்டதாகக் கூறினார். “அவர் உண்மையில் கூறினாரா அல்லது பயத்தில் கூறினாரா என்பதை நீர் அவரது உள்ளத்தைப் பிளந்து பார்த்தீரா?” ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவரிடம் வினவினார்கள். அவர் கொல்லப்படாமல் விட்டிருக்க வேண்டும் எனவும், அவரை நாம் முஸ்லிமாகத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் விருப்பமாக இருந்தது.

ஈமான் குறித்துக் கேட்ட ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஆறு நம்பிக்கைகளைக் கூறினார்கள். இதனை விசுவாசம் கொள்வது இரண்டாவது கடமையாகும். இவ்வாறு ஏற்றவர் முஃமின் - விசுவாசியாக ஆகி விடுகிறார். இஸ்லாம் என்ற வெளிப்படையான செயலுடன், ஈமான் என்ற உள்ளம் ஏற்றுக்கொள்வதும் மறுமையின் வெற்றிக்கு அவசியமாகிறது. அத்தகைய ஈமான் கடுகளவு இருந்தாலும் வெற்றி நிச்சயம்.

புஹாரி 7510 ஒரு பகுதியாகிறது..

ثُمَّ أَخِرُّ لَهُ سَاجِدًا فَيُقَالُ يَا مُحَمَّدُ ارْفَعْ رَأْسَكَ، وَقُلْ يُسْمَعْ لَكَ، وَسَلْ تُعْطَ، وَاشْفَعْ تُشَفَّعْ. فَأَقُولُ يَا رَبِّ أُمَّتِي أُمَّتِي. فَيَقُولُ انْطَلِقْ فَأَخْرِجْ مَنْ كَانَ فِي قَلْبِهِ أَدْنَى أَدْنَى أَدْنَى مِثْقَالِ حَبَّةِ خَرْدَلٍ مِنْ إِيمَانٍ، فَأَخْرِجْهُ مِنَ النَّارِ. فَأَنْطَلِقُ فَأَفْعَلُ

....மீண்டும் திரும்பி வந்து அதே புகழ்மாலைகளைக் கூறி அவனைப் போற்றிப் புகழ்வேன். பிறகு அவனுக்காக ஸஜ்தாவில் விழுவேன். அப்போதும், 'முஹம்மதே! உங்கள் தலையை உயர்த்துங்கள்; சொல்லுங்கள்; உங்கள் சொல் செவியேற்கப்படும். கேளுங்கள்; தரப்படும். பரிந்துரை செய்யுங்கள்; உங்கள் பரிந்துரை ஏற்கப்படும்' என்று (இறைவனின் தரப்பிலிருந்து) சொல்லப்படும். அப்போது நான், 'என் இறைவா! என் சமுதாயம்; என் சமுதாயம்' என்பேன். அதற்கு அவன், 'செல்லுங்கள்: எவருடைய உள்ளத்தில் கடுகு மணியை விட மிக மிகச் சிறிய அளவில் இறைநம்பிக்கை இருக்கிறதோ அவரை நரகத்திலிருந்து வெளியேற்றுங்கள்' என்று

சொல்வான். அவ்வாறே நான் சென்று அ(த்தகைய)வரை நரகத்திலிருந்து வெளியேற்றுவேன் (என்று ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள்

எனவே நம் உள்ளத்தின் ஈமான் மறுமை வெற்றிக்கு வழி வகுக்கும். இந்த ஆறு அடிப்படைகளையும் நாம் விசுவாசம் முழுமையாக கொள்ள வேண்டும். உதாரணமாக, எல்லா நபிமார்களையும் விசுவாசங்கொண்டு, ஒருவரை மற்றும் ஏற்க முடியாது என்றால் அது பூரணமான ஈமான் இல்லை. மறுமை வெற்றி கிடைக்காது. யூதர்கள் மற்றும் கிருத்துவர்கள் பல நபிமார்களை, வேதங்களை, இறுதி நாளை நம்புகிறார்கள். எனினும் அவர்கள் ஒரு நபியை, ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களை, ஒரு வேதத்தை, குர்ஆனை ஏற்றுக் கொள்ளாததனால், அவர்கள் காஃபிராகத்தான் இருக்க முடியும்.

எந்த ஒரு யூதரும், எந்த கிருத்துவரும், எந்த ஒரு மஜூஸியும் என்னை ஏற்காமல் இருந்தால் அவர் காஃபிராகத்தான் அறியப்படுவார். அவருக்கு மறுமை வெற்றி இல்லை என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள்.

இஹ்ஸான் என்பதற்கு, அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவை நாம் பார்ப்பது போல வணங்க வேண்டும் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவை நாம் பார்க்காவிட்டாலும், அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நம்மைப் பார்க்கிறான் என்ற எண்ணத்தில் வணங்க வேண்டும். இது மார்க்கத்தின் மூன்றாவது படித்தரம் ஆகும். இஸ்லாம் என்பது செயல் அளவில் உள்ள முதல் படித்தரமாகும். அத்துடன் பூரண ஈமான் கொள்வது இஸ்லாத்தின் இரண்டாவது படித்தரமாகும். இறையச்சத்துடன் இஹ்ஸானுடன் அமல் செய்வது மார்க்கத்தின் மூன்றாவது படித்தரம் ஆகும். இது தான் தக்வா எனும் பயபக்தி ஆகும். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நம்மைப் பார்ப்பது போல் வணங்க வேண்டும். நாம் பார்க்காவிட்டாலும் அல்லாஹ் ஸுப்ஹானஹு வதஆலா நம்மைப் பார்க்கிறான். இந்த நிலையை அடைந்தால், அல்லாஹ் ஸுப்ஹானஹு வதஆலா எப்போதும் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற நிலையை அடைந்து விடுவார்கள்.

இஸ்லாத்தின் இந்த படித்தரத்தை அடைந்தால், தம்மை அல்லாஹ் ஸுப்ஹானஹு வதஆலா எப்போதும் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்று நினைப்பதால், தமது கடமையை ஒழுங்காகச் செய்வார். பாவத்தைப் புரிய அஞ்சுவார். தீமையின் பக்கம் நெருங்க மாட்டார். அல்லாஹ்வின் நல்லடியார்க்கள், ஸஹாபாக்கள், நபிமார்கள் அடங்குவார்கள். நமக்கும் அந்தப் படித்தரத்தை அடையும் பாக்கியத்தை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா அளிப்பானாக!

ஒரு அடியார் தொழும்போது, அவர் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவுடன் பேசுவதாக ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள்.

"புகழுக்குரிய மேலான அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா கூறுகிறான்,

'நான் தொழுகையை எனக்கும், எனது அடியானுக்கும் இடையில் சமமாகப் பிரித்துள்ளேன். எனது அடியான் கேட்பது ஏற்றுக் கொள்ளப்படும். எனவே எனது அடியான்,

الْحَمْدُ لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ

'எல்லாப் புகழும், அகிலத்தின் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கே உரியதாகும்' என்று கூறும்போது, அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா கூறுகிறான்,

قَالَ اللَّهُ تَعَالَى حَمِدَنِي عَبْدِي

'என் அடியான் என்னைப் புகழ்ந்துவிட்டான்'

மேலும் அவர்,

الرَّحْمَنِ الرَّحِيمِ

'(அளவற்ற) அருளான், (நிகரற்ற) அன்புடையோன்' என்று கூறும்போது,

அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா கூறுகிறான்:

قَالَ اللَّهُ تَعَالَى أَثْنَى عَلَيَّ عَبْدِي

'என் அடியான் என்னை மிகவும் மேன்மை படுத்திவிட்டான்.'

மேலும் அவர்,

مَالِكِ يَوْمِ الدِّينِ

'நியாயத் தீர்ப்பு நாளின் அதிபதி' என்று கூறும்போது,

அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா கூறுகிறான்:

قَالَ مَجَّدَنِي عَبْدِي - وَقَالَ مَرَّةً فَوَّضَ إِلَيَّ عَبْدِي

'என் அடியான் உயர்வாக புகழ்படுத்திவிட்டான்.'

மேலும் அவர்,

إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ

'உன்னையே நாங்கள் வணங்குகிறோம். இன்னும் உன்னிடத்திலேயே உதவியும் கோருகிறோம்' என்று கூறும்போது,

அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா கூறுகிறான்:

قَالَ هَذَا بَيْنِي وَبَيْنَ عَبْدِي وَلِعَبْدِي مَا سَأَلَ

‘இது எனக்கும், எனது அடியானுக்கும் இடையில் உள்ளது. என்னுடைய அடியான் தாம் வேண்டியதைப் பெறுவார்.’

மேலும் அவர்,

اهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلاَ الضَّالِّينَ

‘நீ எங்களை நேரான வழியில் நடத்துவாயாக. எவர்களின் மீது நீ அருள் புரிந்தாயோ அத்தகையோரின் வழி(யாகும்). (அது உன்) கோபத்திற்கு உள்ளானவர்க(ளான யூதர்களின் வழிய)ல்ல. அன்றி வழிகேடர்க(ளான கிருத்துவர்க)ளின் வழியுமல்ல’ என்று கூறும்போது,

அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா கூறுகிறான்,

قَالَ هَذَا لِعَبْدِي وَلِعَبْدِي مَا سَأَلَ

‘எனது அடியான் கேட்டதை அவர் பெற்றுக் கொள்வார்’

எனவே நாம் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவைப் பார்த்துக் கொண்டிருப்பது போல அமல்கலைச் செய்ய வேண்டும். ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கால்கள் வீங்கும் அளவிற்கு நீண்ட நேரம் தொழுவார்கள். தாங்கள் நன்றிவுள்ள அடியாராக இருக்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு தொழுவதாகக் கூறினார்கள்.

அப்பாஸ் இப்னு பிஸ்ர் இரவு நேரத் தொழுகை தொழுது கொண்டிருந்தார். அவர் போருக்கான இரவு கண்காணிப்பு வேலையைக் செய்து கொண்டிருக்கும் வேளையில், நேரத்தை வீணாக்கக் கூடாது என அவர் தொழுது கொண்டிருந்தார். அவர் அவ்வாறு மிகவும் லயித்துக் கொண்டு தொழுகையில் இருந்தபோது, எதிரிகள் அவர் மீது அம்பு எய்தனர். அதில் ஒரு அம்பு அவரைத் தாக்கியது. எனினும் அவர் அது அறியாது தொடந்து தொழுதார். இவ்வாறு மூன்று அம்புகள் தைத்தும், அதனைப் பொருட்படுத்தாது அவர் தொழுகையை முடித்தார். பின்னர்தான் அவர் மற்றவர்களை எழுப்பினார். தொழுகையை இடையில் நிறுத்திவிட அவர் விரும்பவில்லை. அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவுடன் நேரடியாக உரையாடுகிறோம் என்ற எண்ணத்தில் அவ்வாறு தொடர்ந்து தொழுதார். இதுதான் இஹ்ஸான் ஆகும்.

இது போலத்தான் பாவம் செய்ய மணம் தூண்டும்போதும் நம்மை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற எண்ணம் வர வேண்டும். ஒரு தடவை இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு ஒரு இடையரைக் கண்டார். அந்த இடையரிடம் அவரிடம் உள்ள ஆடுகளில் ஒன்றைத் தமக்குத் தருமாறு கூறினார். தம் எஜமான் அனுமதி இல்லாமல் தாம் எவ்வாறு அவருக்கு ஆடு தர முடியும் என அந்த இடையர் கேட்டார். அத்தனை ஆடுகளில் ஒரு ஆட்டினைக் கொடுப்பதால் எஜமானருக்குத் தெரிய வாய்ப்பில்லை என்பதால் அவர் கொடுக்கலாம் என இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு கூறினார். அவர் அறிந்தாலும் ஆடு காணாமல் போய் விட்டது என்றோ அல்லது ஓநாய் கொன்று விட்டதோ என்றோ கூறி விடலாம் என அவர் கூறினார். தம் எஜமானருக்குத் தெரியாது என்றாலும், தங்களைப் படைத்த இறைவன் பார்த்துக் கொண்டிருக்கிறான் அல்லவா என அந்த இடையர் பதில் கூறினார். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நம்மை எப்போதும் கண்காணித்துக் கொண்டிருப்பதாக அவர் கூறினார். அவருடைய இறை அச்சத்தைக் கண்டு இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு மிக்க மகிழ்ச்சி அடைந்தார். இதுதான் இஹ்ஸான் என்ற நிலையாகும். இது சிறந்த நிலையாகும்.

நான்காவதாக கியாம நாள் எப்போது வரும் என்ற கேள்விக்கு, தங்கள் இருவருக்கும் அது குறித்த ஞானம் இல்லை என்று ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள். மறைவான விஷயம் குறித்து அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவே மிக அறிந்தவன்.

அத்தியாயம் லுக்மான் 34

إِنَّ اللَّـهَ عِندَهُ عِلْمُ السَّاعَةِ وَيُنَزِّلُ الْغَيْثَ وَيَعْلَمُ مَا فِي الْأَرْحَامِ ۖ وَمَا تَدْرِي نَفْسٌ مَّاذَا تَكْسِبُ غَدًا ۖ وَمَا تَدْرِي نَفْسٌ بِأَيِّ أَرْضٍ تَمُوتُ ۚ إِنَّ اللَّـهَ عَلِيمٌ خَبِيرٌ ﴿٣٤﴾

நிச்சயமாக அந்த (கியாம) நேரம் பற்றிய ஞானம் அல்லாஹ்விடமே இருக்கிறது; அவனே மழையையும் இறக்குகிறான்; இன்னும் அவன் கர்ப்பங்களில் உள்ளவற்றையும் அறிகிறான். நாளை தினம் தாம் (செய்வது) சம்பாதிப்பது எது என்பதை எவரும் அறிவதில்லை; தான் எந்த பூமியில் இறப்போம் என்பதையும் எவரும் அறிவதில்லை. நிச்சயமாக அல்லாஹ்தான் நன்கறிபவன்; நுட்பம் மிக்கவன்.

எனவே கியாம நாள் எப்போது வரும் என்ற விவரம் யாருக்கும் சொல்லப்படவில்லை. மறைவானவற்றின் ஞானம் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவிடம் தான் உள்ளது. அவன் எதனை அறிவித்துக் கொடுத்தானோ அதனை மட்டும்தான் அறிவார்கள். எனவே அதனை வைத்துக் கொண்டு அவர்களுக்கு மறைவான விஷயங்கள் தெரியும் எனக் கூற முடியாது. ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் தஜ்ஜால் வருவது, யஃஜுஜ் மஃஜுஜ் கூட்டம் என நமக்குப் பல மறைவான விஷயங்களைக் கூறியுள்ளார்கள் என்பதால் அவர்களுக்கு எல்லா மறைவான விஷயங்களும் தெரியும் என நாம் முடிவு செய்யக்கூடாது. அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா அவர்களிடம் அறிவித்தவைகளை அவரகள் கூறினார்கள் என்றே எடுத்து கொள்ளவேண்டும். அது போல் தான் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா அறிவித்திருந்தால் கியாம நாள் எப்போது வரும் என்று கூறியிருப்பார்கள்.

அத்தியாயம் அன் ஆம் 50

قُل لَّا أَقُولُ لَكُمْ عِندِي خَزَائِنُ اللَّـهِ وَلَا أَعْلَمُ الْغَيْبَ وَلَا أَقُولُ لَكُمْ إِنِّي مَلَكٌ ۖ إِنْ أَتَّبِعُ إِلَّا مَا يُوحَىٰ إِلَيَّ ۚ قُلْ هَلْ يَسْتَوِي الْأَعْمَىٰ وَالْبَصِيرُ ۚ أَفَلَا تَتَفَكَّرُونَ ﴿٥٠﴾

(நபியே!) நீர் கூறும்: "என்னிடத்தில் அல்லாஹ்வின் பொக்கிஷங்கள் இருக்கின்றன என்று நான் உங்களிடம் கூறவில்லை. மறைவானவற்றை நான் அறியமாட்டேன்; நிச்சயமாக நான் ஒரு மலக்காக இருக்கின்றேன் என்றும் நான் உங்களிடம் சொல்லவில்லை; எனக்கு (வஹீயாக) அறிவிக்கப்பட்டதைத் தவிர (வேறு எதையும்) நான் பின்பற்றவில்லை." இன்னும் நீர் கூறும்: "குருடனும் பார்வையுடையவனும் சமமாவாரா? நீங்கள் சிந்திக்க வேண்டாமா?"

அத்தியாயம் ஹுது ஆம் 49

تِلْكَ مِنْ أَنبَاءِ الْغَيْبِ نُوحِيهَا إِلَيْكَ ۖ مَا كُنتَ تَعْلَمُهَا أَنتَ وَلَا قَوْمُكَ مِن قَبْلِ هَـٰذَا ۖ فَاصْبِرْ ۖ إِنَّ الْعَاقِبَةَ لِلْمُتَّقِينَ ﴿٤٩﴾

(நபியே! உமக்கு) இது மறைவான நிகழ்ச்சிகளில் உள்ளதாகும்; நாம் இதனை உமக்கு (வஹீ மூலம்) அறிவித்தோம், நீரோ அல்லது உம்முடைய கூட்டத்தினரோ இதற்கு முன் இதனை அறிந்திருக்கவில்லை; நீரும் பொறுமையைக் கைக் கொள்வீராக! நிச்சயமாக இறுதியில் (நல்ல) முடிவு பயபக்தி உடையவர்களுக்குத் தான் (கிட்டும்).

ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் தங்களுக்குத் தெரியாத ஒன்றை இவ்வாறு வெளிப்படையாகக் கூறியதிலும் நமக்குப் படிப்பினை உள்ளது. மார்க்க விஷயத்தில் நமக்குத் தெரியாத ஒன்றை எவ்வித தயக்கமும் இல்லாமல் கூறி விட வேண்டும். அவ்வாறான அறிவில்லாமல், யூகமாகச் சரியாகச் சொன்னாலும் தவறுதான். ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களை விடச் சிறந்தவர்கள் யாருமில்லை. அவர்களே தெரியாத ஒன்றைக் குறித்து அவ்வாறே கூறியுள்ளார்கள்.

அபு பக்ரு ரழியல்லாஹு அன்ஹு அவர்களும், அத்தியாய அபஸா 30 வசனத்தில் وَفَاكِهَةً وَأَبًّا ﴿٣١﴾ உள்ள وَأَبًّا என்பதற்குப் பொருள் பற்றிக் கேட்டதற்கு, தங்களுக்குத் தெரியாததைப் பற்றி (தவறாகக்) கூறினால் எந்த வானமும், எந்த பூமியும் தாங்கள் உயிர் வாழ இடம்

கொடுக்கும் என்று கூறினார்கள். எனவே தாங்கள் தவறாகச் சொல்லிவிட்டால் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா வின் வேதனை வந்து விடுமோ எனப் பயந்தார்கள்.

அஹ்மத் இப்னு ஹன்பல் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களும் தங்களுக்குத் தெரியாத பல மஸாயில்களுக்கு 'லா அத்ரி' - எனக்குத் தெரியாது, பிறரிடத்தில் கேளுங்கள் என்று கூறியிருக்கிறார்கள். இமாம் மாலிக் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களும் வெகு தூரத்திலிருந்து வந்த ஒருவர் கேட்ட ஃபத்வாக்களில் சில தங்களுக்குத் தெரியாது எனக் கூறியுள்ளார்கள். அந்த நபர், தாம் ஊர் திரும்பியாதும், இத்தனை கேள்விகளுக்கு இமாம் மாலிக் ரஹ்மத்துல்லாஹி அலைஹி பதில் கொடுகவில்லைய என மக்கள் கேட்டால் என்ன சொல்வது என்ற போது, இமாம் மாலிக் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களுக்குத் தெரியவில்லை என்றே சொல்லி விடுங்கள் என்றார்கள். இவ்வாறு தெரியாத ஒன்றைத் தெரியாது என்றே கூற வேண்டும். தவறாகக் கூறினால் அது பாவமான ஒன்றாகும்.

மேலும் கியாம நாள் எப்போது வரும் என்று அறிவது முக்கியமல்ல. மாறாக, அதற்கு நாம் என்ன தயார் செய்து வைத்திருக்கிறோம் என்பதுதான் முக்கியம். பலர் தேவையில்லாத விஷயங்கள் குறித்து கேள்வி கேட்கிறார்கள். அவற்றைத் தவிர்த்து விட்டு, பயனுள்ளவற்றை அறியவும், அதன்படி நடக்கவும் முயல வேண்டும்.

ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது, ஒரு கிராமவாசி இடை மறித்துக் கேட்டார், "அந்த (கியாம) நாள் எப்போது வரும்?" தங்களின் பேச்சை முடித்த பிறகு, ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் வினவ்னார்கள், "கியாம நாள் குறித்துக் கேட்ட அந்த ஒருவர் எங்கே?" அந்த மனிதர், "இதோ நான்" என்றார். "அதற்காக என்ன தயார் செய்து வைத்துள்ளீர்கள்" என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் வினவினார்கள்.

எனவே நாம் இவ்வாறு தேவையில்லாத கேள்விகளைத் தவிர்க்க வேண்டும்.

ஐந்தாவதாக கியாம நாள் அறிகுறி பற்றி கேட்டபோது,

"ஒரு அடிமைப் பெண் தனது எஜமானியைப் பெற்றெடுப்பதும், காலில் செருப்பில்லாமல், அரைகுறை ஆடைகளை அணிந்ததிருக்கும் ஏழைகளான ஆட்டு இடையர்கள் போட்டிபோட்டுக் கொண்டு உயரமாக கட்டிடங்களைக் கட்டுவதை நீங்கள் காண்பதும் ஆகும்."

என்று கூறினார்கள். இவை கியாம நாளில் அறிகுறிகள் ஆகும்.

கியாம நாளில் அறிகுறிகளாக ஆரம்பத்தில் பல சிறிய அறிகுறிகளும், இறுதியில் பத்து பெரிய அறிகுறிகளும் தோன்றும்.

பெரிய அறிகுறிகள்,

முஸ்லிம் 5558

قَالَ " إِنَّهَا لَنْ تَقُومَ حَتَّى تَرَوْنَ قَبْلَهَا عَشْرَ آيَاتٍ " . فَذَكَرَ الدُّخَانَ وَالدَّجَّالَ وَالدَّابَّةَ وَطُلُوعَ الشَّمْسِ مِنْ مَغْرِبِهَا وَنُزُولَ عِيسَى ابْنِ مَرْيَمَ صلى الله عليه وسلم وَيَأْجُوجَ وَمَأْجُوجَ وَثَلاَثَةَ خُسُوفٍ خَسْفٌ بِالْمَشْرِقِ وَخَسْفٌ بِالْمَغْرِبِ وَخَسْفٌ بِجَزِيرَةِ الْعَرَبِ وَآخِرُ ذَلِكَ نَارٌ تَخْرُجُ مِنَ الْيَمَنِ تَطْرُدُ النَّاسَ إِلَى مَحْشَرِهِمْ .

1. புகை, 2. தஜ்ஜால், 3. (பேசும்) பிராணி, 4. மேற்கிலிருந்து சூரியன் உதிப்பது, 5. மர்யமின் குமாரர் ஈஸா عَلَيْهِ السَّلَامُ அவர்கள் இறங்குவது, 6. யஃஜூஜ் மற்றும் மஃஜூஜ், - 7. ஒன்று கிழக்கிலும், 8. ஒன்று மேற்கிலும், 9. மற்றொன்று அரபு தீபகற்பத்திலும் மொத்தம் மூன்று நில நடுக்கங்கள் இறுதியாக 10. யமன் தேசத்திலிருந்து ஒரு நெருப்பு கிளம்பி மக்களை விரட்டிக் கொண்டு ஓரிடத்தில் ஒன்று கூட்டும்."

இறுதித் தூதராக ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் வந்ததே இறுதி நாளின் ஒரு அடையாளம் தான். அதிலிருந்து பல அடையாளங்களாக வந்து

கொண்டிருக்கிறது. (மஸ்ஜித் அக்ஸா வெற்றி கொண்டது போல)சில நடந்து முடிந்த சில அறிகுறிகள், (அமானிதம் பாழடிபபது போன்ற)நடந்து கொண்டிருக்கும் அறிகுறிகள், நடக்க இருக்கும் அறிகுறிகள் என சிலர் எனவும் கூறுவார்கள்.

அடிமை எஜமானனைப் பெறுவார் என்பது குறித்து பல்வேறு விளக்கங்கள் உள்ளன. அடிமைப் பெண் தவறான வழியில் சுதத்திரமானவருக்குப் குழந்தை பெற்றெடுப்பார்கள். மற்றொரு விளக்கம், பெண் பிள்ளைகள் தங்களின் தாயார்களை அடிமை போல நடத்துவார்கள். அந்தத் தாய்மார்கள் இந்த அடிமை எஜமானரைப் பெற்றெடுத்தவர்களாக ஆகிவிடுகிறார்கள்.

ஏழைகளாக, இடையர்களாக இருந்தவர்கள் இப்போது உயர் கட்டிடங்களைக் கட்டுவது இப்போது நாம் பார்க்கக் கூடியதாகும். அந்த இடையகளை அரபு மக்கள் என கூறியிருந்தார்கள். அரபு நாடுகளில் இப்போது போட்டிப் போட்டுக் கொண்டு கட்டிடங்கள் எழுவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

இவ்வாறு கேள்வி கெட்ட அந்த நபர் யார் என்று உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் வினவியபோது, அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவும் அவனது தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களும்தான் அறிந்தவர்கள் என அவர்கள் கூறினார்கள். இவ்வாறு தெரியாத விஷயத்தில் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா அறிந்தவன் என்றே கூற வேண்டும்.

வந்தவர் ஜிப்ரயீல் அலைஹிஸ் ஸலாம் எனவும், அவகளுக்கு மார்க்கம் குறித்துக் கற்றுக் கொடுக்க வந்ததாக ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள். இந்த ஹதீதின் மூலம் வானவர்கள் தங்கள் தோற்றத்தை மாற்றிக் கொள்ள முடியும் எனவும், மனிதர் உருவத்தில் வருவார்கள் எனவும் அறியலாம்.

நாம் ஹதீதுகளை விளங்கி அதன்படி நடக்க அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா அருள்பாளிப்பனாக!

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 3

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி

الحديث الثالث

عَنْ أَبِي عَبْدِ الرَّحْمَنِ عَبْدِ اللَّهِ بْنِ عُمَرَ بْنِ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُمَا قَالَ: سَمِعْت رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: " بُنِيَ الْإِسْلَامُ عَلَى خَمْسٍ: شَهَادَةِ أَنْ لَا إلَهَ إلَّا اللَّهُ وَأَنَّ مُحَمَّدًا رَسُولُ اللَّهِ، وَإِقَامِ الصَّلَاةِ، وَإِيتَاءِ الزَّكَاةِ، وَحَجِّ الْبَيْتِ، وَصَوْمِ رَمَضَانَ". رَوَاهُ الْبُخَارِيُّ، وَمُسْلِمٌ .]

ஹதீஸ்-3:

'வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை என்றும் முஹம்மத் அவர்கள் இறைத்தூதர் என்றும் உறுதியாக நம்புதல், தொழுகையை நிலை நிறுத்துதல், ஸகாத்து வழங்குதல், ஹஜ் செய்தல், ரமலானில் நோன்பு நோற்றல், ஆகிய ஐந்து காரியங்களின் மீது இஸ்லாம் நிறுவப்பட்டுள்ளது' என்று இறைத் தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அறிவிப்பவர்: இப்னு உமர்(ரலி) நூல்: புகாரி முஸ்லிம்

இந்த ஹதீதை அறிவித்தவர் அப்துல்லாஹ் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு ஆவார். அவர் இந்த உம்மத்தின் இரண்டாவது சிறந்த மனிதராகிய உமர் ரழியல்லாஹு அன்ஹு தம்மிடம் கூறியதாக அவர்களின் மகனார் ஆவார். ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் மறைந்த சமயத்தில் வாலிபராக இருந்தவர். எனினும் சிறந்த அறிஞராக, அதிக ஹதீதுகளை அறிவித்துள்ளார்.

இந்த ஹதீதில் குறிப்பிட்டுள்ளதை ஃபிக்ஹ் பாடத்தில் நாம் படித்தோம். இந்த ஐந்து தூண்களின் முக்கியத்துவம் பற்றி காண்போம். ஷஹாதாவானத்து நாவால் சொல்லப்படும் வணக்கமாகும். தொழுகையானது உடலால் செய்யப்படும் வணக்கமாகும். ஜகாத் பொருளால் செய்யப்படும் வணக்கமாகும். நோன்பில் நாம் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா தவிர்க்கச் சொன்னதைத் தவிர்க்கும் வணக்கமாகும். ஹஜ்ஜும் பொருளாலும், உடலாலும், நாவாலும் கலந்து செய்யப்படும் வணக்கமாகும். ஒவ்வொன்றும் அது அதற்கான வழிமுறை வணக்கங்களின் தலையாய வணக்கமாக இருக்கின்றன.

ஷஹாதாவின் சிறப்பானது, நாம் உளத் தூய்மையோடு உறுதியான நம்பிக்கையோடு யார் சொல்லவில்லையோ அவருக்கு சுவனமே கிடையாது. அவ்வாறு சொல்வது ஒரு மனிதருக்குக் கிடைத்த மிகப் பெரிய பாக்கியமாகும்.

திர்மதி 2639

فَتَخْرُجُ بِطَاقَةٌ فِيهَا أَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ فَيَقُولُ احْضُرْ وَزْنَكَ فَيَقُولُ يَا رَبِّ مَا هَذِهِ الْبِطَاقَةُ مَعَ هَذِهِ السِّجِلاَّتِ فَقَالَ إِنَّكَ لاَ تُظْلَمُ ‏.‏ قَالَ فَتُوضَعُ السِّجِلاَّتُ فِي كِفَّةٍ وَالْبِطَاقَةُ فِي كِفَّةٍ فَطَاشَتِ السِّجِلاَّتُ وَثَقُلَتِ الْبِطَاقَةُ فَلاَ يَثْقُلُ مَعَ اسْمِ اللَّهِ شَيْءٌ "

மறுமையில் அமைல்களை நிறுக்கும்போது, ஒரு மனிதர் கூறிய ஷஹாதா கலிமா தட்டு மற்ற எல்லாவற்றையும் விடக் கனத்துக் காணப்படும். எனவேதான் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள், “லா இலாஹ இல்லல்லாஹ் சொல்லுங்கள், வெற்றி பெறுங்கள்”

ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்த ஒரு யூதச் சிறுவன் நோயின் காரணமாக படுத்த போது, அவனைக் காண அவர்கள் சென்றார்கள். மரணத் தருவாயில் இருந்த அவனிடம் ஷஹாதா கலிமா கூறுமாறு

ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள். ஏகத்துவத்தை ஏற்றுக் கொள்ளுமாறு அவனை வற்புறுத்த, அச்சிறுவன் தன் தந்தையை நோக்கினான். அவரம் அபுல் காஸிம் (ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம்) கூறுவதைக் கேட்குமாறு சொல்ல, அச்சிறுவன் ஷாஹாதா கலிமா கூறியவாறு இறந்தான். அது கண்டு ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களும் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவுக்கே எல்லாப் புகழும் என்றார்கள்.

ஷஹாதா கலிமாவுக்குப் பிறகு முக்கியமானது தொழுகையாகும். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா முதல்முதலாகத் தொழுகையைக் குறித்து விசாரணை செய்வான் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் என கூறியுள்ளார்கள். உங்களின் வீட்டில் அருகில் ஒரு ஆறு ஓடும் நிலைலயில், ஒருவர் அதில் ஒருநாளில் ஐந்து முறை குளித்தால் அவர் மீது அசுத்தம் இருக்குமா என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கேட்டார்கள். அதற்கு ஸஹாபாக்கள் இருக்காது என்று கூற, அவ்வாறு தான் ஒருவர் ஒரு நாளைக்கு ஐந்து தடவைகள் தொழுதால் அவரிடம் பாவம் இருக்காது என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள். அத்தொழுகையை உரிய நேரத்தில் பேணித் தொழும் மக்களாக நாம் இருக்க வேண்டும். இந்த கவலையுடன் தான் தங்களின் இறுதி நேரத்திலும், 'அஸ் ஸலாஹ்.. அஸ் ஸலாஹ்' என்று தொழுகையை நாம் நிலை நிறுத்த வேண்டும் என்ற கவலையில் இருந்தார்கள். அவகளின் கடைசி அறிவுரை தொழுகைப் பற்றிதான் இருந்தது. 'நமக்கும், காஃபிருக்கும் இடையில் உள்ள வித்தியாசம் தொழுகைதான். யார் அதனை விட்டாரோ அவர் காஃபிராகி விடுகிறார்' என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். எனவே கடமையான தொழுகை ஒன்றை வேண்டுமென்றே விட்ட ஒருவர் காஃபிராகி விடுவார் என அறிஞர்கள் கூறியுள்ளனர். எனவே தொழுகை விஷயத்தில் ஒருபோதும் அலட்சியம் செய்யக் கூடாது. ஒரு தொழுகைக்குப் பத்து நிமிடம் என்றாலும், ஒரு நாளில் நாம் ஐம்பது நிமிடங்கல்தாம் தொழுகைக்குச் செலவிட வேண்டியதிருக்கும். தொழாவிட்டால் நாம் படைக்கப்பட்ட நோக்கத்தையே நாம் சிதைத்தவர்களாக ஆகிவிடுவோம்.

அடுத்ததாக, ஜகாத் பற்றி கூறும்போது, அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவுடைய பாதையில் செலவு செய்வதற்கான உதாரணம் , ஒரு தானியத்திலிருந்து எழுநூறு தானியத்தைப் படைப்பது போல ஆகும். ஒரு ரூபாய் செலவு செய்தால் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா எழுநூறு மடங்காக, அவன் நாடினால் அதனையும் விட அதிகமாகச் செலவு செய்த நன்மையை அளிப்பான். தான தர்மங்களை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா மிக விரும்புகிறான். நரக நெருப்பிலிருந்து இது நம்மைக் காப்பாற்ற வல்லது. எனவேதான் ஒரு பேரித்தப் பழத்தைக் கொண்டாவது நீங்கள் நரக நெருப்பிலிருந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். எனவே அதிகம் அதிகம் தான தர்மங்களைக் கொடுக்க வேண்டும். எவர்கள் கடமையான ஜகாத்தைக் கொடுக்காமல் சேர்த்து வைகிறார்களோ அந்த செல்வத்தை நாளை மறுமை நாளில் நெருப்பு வளையமாக மாற்றி அவர்ககின் தோல் புஜங்களிலும், நெற்றியிலும் சூடு வைக்கப்படும் என அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நம்மை எச்சரிக்கை செய்கிறான். எனவே செலவு செய்யாமல் சேர்த்தால் நெருப்பாகத்தான் மாறும். மாறாக நல்ல வழியில் செலவு செய்யும் பணமே நமக்குப் பயன் தரும் ஒன்றாக மாறும் அன்றி சேர்த்து வைப்பது பயன் தராது. எதனை நாம் உண்டு கழித்தோமோ அவை தான் நம் செல்வம் எனவும், எதனை நாம் ஆடையாக உடுத்துக் கிழித்தோமோ அவை தான் நம் செல்வம். அது போல எதனை செலவளித்தோமோ அவை தான் நம் செல்வம் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள்.

நான்காவதாக நோன்பு. எனினும் இந்த ஹதீதில் ஹஜ்ஜை நான்காவதாக அறிவிப்பாளர் குறிப்பிட்டுள்ளார். ஒப்புக் கொள்ளப்பட்ட ஹதீதுக்கும் சுவனத்தைப் தவிர வேறு கூலி இல்லை என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். மேலும் ஒருவர

ஹஜ் செய்து, அதில் எந்த வித தவறானதை சொல்லவோ அல்லது செய்யவோ இலையோ, அவர் தம் தான் அன்று தான் பெற்றெடுத்தது போல (பாவம் ஏதும் இல்லாதவாராகத்) திரும்புவார் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். இது ஹஜ்ஜுடைய சிறப்பாகும். மூன்று அமல்கள் ஒரு அடியான் முன் செய்த பாவங்களையும் அழிக்கக் கூடியதாகும். ஒன்றாவது இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வது, இன்றாவது ஹிஜ்ரத் மற்றும் மூன்றாவது ஒப்புக் கொள்ளப்பட்ட ஹஜ் ஆகும்.

ஐந்தாவதாக நோன்பு, ரமழான் மாதத்தில் கடமையாக்கப்பட்டது. யார் ரமழானில் நோன்பு நோற்கிறாரோ, அவரது பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படும் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். இதற்கான கூலி குறித்து ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியதாவது, "அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா கூறுகிறான்: ஏன் அடியான் செய்யும் நன்மைகளுக்குக் கூலியை எழுதுங்கள், நோன்பைத் தவிர. நோன்புக்கு நானே கூலியாகிவிடுகிறேன்." ஒவ்வொரு நன்மைக்கு இத்தனை கூலி என இருக்கும்போது நோன்பிற்கு கணக்கில்லாத நன்மையை அருள்வான். மறுமை நாளில் நமக்காக சிபாரிசு செய்யும் என என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள்.

எனவே அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா கூறுகிறான் ஒவ்வொரு முஸ்லிம்களின் மீதும் இந்த ஐந்தையும் கடமையாக்கி உள்ளான். இந்த கடமைகளை நிறைவேற்றி அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா மற்றும் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் ஆகியோரின் கட்டளைகளைக் கீழ்ப்படிந்து நடக்கும் பாக்கியத்தை நம் அனைவருக்கும் அளிப்பானாக!

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 4

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

الحديث الرابع

عَنْ أَبِي عَبْدِ الرَّحْمَنِ عَبْدِ اللَّهِ بْنِ مَسْعُودٍ ﷺ قَالَ: حَدَّثَنَا رَسُولُ اللَّهِ ﷺ –وَهُوَ الصَّادِقُ الْمَصْدُوقُ–: "إنَّ أَحَدَكُمْ يُجْمَعُ خَلْقُهُ فِي بَطْنِ أُمِّهِ أَرْبَعِينَ يَوْمًا نُطْفَةً، ثُمَّ يَكُونُ عَلَقَةً مِثْلَ ذَلِكَ، ثُمَّ يَكُونُ مُضْغَةً مِثْلَ ذَلِكَ، ثُمَّ يُرْسَلُ إلَيْهِ الْمَلَكُ فَيَنْفُخُ فِيهِ الرُّوحَ، وَيُؤْمَرُ بِأَرْبَعِ كَلِمَاتٍ: بِكَتْبِ رِزْقِهِ، وَأَجَلِهِ، وَعَمَلِهِ، وَشَقِيٍّ أَمْ سَعِيدٍ؛ فَوَاَللَّهِ الَّذِي لَا إلَهَ غَيْرُهُ إنَّ أَحَدَكُمْ لَيَعْمَلُ بِعَمَلِ أَهْلِ الْجَنَّةِ حَتَّى مَا يَكُونُ بَيْنَهُ وَبَيْنَهَا إلَّا ذِرَاعٌ فَيَسْبِقُ عَلَيْهِ الْكِتَابُ فَيَعْمَلُ بِعَمَلِ أَهْلِ النَّارِ فَيَدْخُلُهَا. وَإِنَّ أَحَدَكُمْ لَيَعْمَلُ بِعَمَلِ أَهْلِ النَّارِ حَتَّى مَا يَكُونُ بَيْنَهُ وَبَيْنَهَا إلَّا ذِرَاعٌ فَيَسْبِقُ عَلَيْهِ الْكِتَابُ فَيَعْمَلُ بِعَمَلِ أَهْلِ الْجَنَّةِ فَيَدْخُلُهَا ."رَوَاهُ الْبُخَارِيُّ وَمُسْلِمٌ]

இந்த ஹதீதை அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள். ஆரம்பத்தில் அவர் இஸ்லாத்தில் இணைந்த முன்னவர்கள் என்று குர்ஆன் போற்றும் மக்களில் ஒருவர் ஆவார். அவர் இஸ்லாத்திற்காக இரண்டு தடவை ஹிஜ்ரத் செய்துள்ளார். முதலில் மக்காவிலிருந்து அபிஸீனியாவுக்கும், பின்னர் மதீனாவுக்கும் ஹிஜ்ரத் செய்துள்ளார். தம் இளைய பருவத்திலேயே ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுடன் இருந்து, அவர்கள் கலந்து கொண்ட அனைத்து போர்களிலும் பங்கு கொண்டு, அவர்களிடம் மார்க்க கல்வியைப் பெற்றுள்ளார். அதிகமான ஹதீதுகளை அறிவிதவர்களுள் இவரும் ஒருவர். அறிவிப்பாளர் அப்துல்லாஹ் என்று வந்தால் இவரைத்தான் குறிக்கும். குர்ஆனை அழகாக ஓதுவதில் திறமை பெற்றுள்ளார். ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அவரை தங்களுக்காகக் குர்ஆன் ஓதுமாறு கேட்டுக் கொள்வார்கள். இந்த உம்மத்திற்கு மார்க்கச் சட்டங்களை அறிவிக்கும் ஒருவராகத் திகழ்ந்துள்ளார். அவர் மேலுள்ள இந்த ஹதீதை அறிவித்துள்ளார். அவ்வாறு அறிவிக்கும்போது ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் இரண்டு பண்புகளையும் அறிவிக்கிறார்கள். உண்மையே பேசுகிறவர்கள் என்றும் உண்மையே அறிவிக்கப்பட்டவர்கள் என்றும் கூறப்பட்டவை அவை. தாங்கள் சுயமாகப் பேசினாலும் உண்மையையே பேசுவார்கள். அறிவிக்கப்பட்டதையும் அவ்வாறே அறிவிப்பார்கள்.

இவ்வாறு அப்பண்புகளைக் கூறும் காரணம் அந்த ஹதீதில் மறைவான செய்தி உள்ளது. எனவே இதனை அறிவிக்கும் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் உண்மையானவர்கள் என்பதால், அதனை நாம் எவ்வித சந்தேகமும் இல்லாத வகையில் ஏற்றுக் கொள்ள வேண்டும். ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் சொல்லி விட்டால், அது தங்கள் அறிவிற்கு புரிந்து கொள்ள இயலாவிட்டாலும் ஸஹாபாக்கள் மனதார நம்பிக்கை கொள்வார்கள். ஹதீதுகளைத் தங்கள் அறிவு கொண்டு விளங்க முற்பட மாட்டார்கள்.

புஹாரி 3471

عَنْ أَبِي هُرَيْرَةَ ـ رضى الله عنه ـ قَالَ صَلَّى رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم صَلاَةَ الصُّبْحِ، ثُمَّ أَقْبَلَ عَلَى النَّاسِ، فَقَالَ " بَيْنَا رَجُلٌ يَسُوقُ بَقَرَةً إِذْ رَكِبَهَا فَضَرَبَهَا فَقَالَتْ إِنَّا لَمْ نُخْلَقْ لِهَذَا، إِنَّمَا خُلِقْنَا لِلْحَرْثِ ". فَقَالَ النَّاسُ سُبْحَانَ اللَّهِ بَقَرَةٌ تَكَلَّمُ. فَقَالَ " فَإِنِّي أُومِنُ بِهَذَا أَنَا وَأَبُو بَكْرٍ وَعُمَرُ ـ

ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியதாவது, "ஒரு மனிதர் மாட்டை ஒட்டிக் கொண்டிருக்கையில், திடீரென்று அதன் மீது சவாரி செய்து அதனை அடித்தார். அப்போது அந்த மாடு கூறியது, 'நாங்கள் இதற்காகப் படைக்கப்படவில்லை. நாங்கள் உழுவதற்கத்தான் படைக்கப்பட்டோம்.' அப்போது மக்கள் மாடு பேசியது குறித்து ஆச்சரியப்பட்டு கூறினார்கள், ' அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். ஒரு மாடு பேசுகிறது.' ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியதாவது, "நான் இதனை நம்புகிறேன். அபு பக்ரு ரழியல்லாஹு அன்ஹு ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் நம்புகிறார்கள். உமர் அவர்களும் நம்புகிறார்கள்."

இதுதான் உண்மையான் ஈமான் ஆகும். இவ்வாறு தான் இந்த ஹதீதும். சிலர் தங்கள் அறிவுக்கு எட்டாதது என மறுக்கத் தலைப்பட்டார்கள்.

ஹதீஸ்-4:

அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் (ரலி) அறிவித்தார். உண்மையே பேசியவரும் உண்மையே அறிவிக்கப் பட்டவருமான இறைத்தூதர்(ஸல்) அவர்கள் எங்களிடம் கூறினார்கள். உங்கள் படைப்பு உங்கள் தாயின் வயிற்றில் நாற்பது நாள்களில் ஒருங்கிணைக்கப்படுகிறது. பிறகு அதே போன்ற காலத்தில் (40 நாள்களில் அட்டை - போன்று) ஒரு கருக்கட்டியாக மாறுகிறது. பிறகு, அதே போன்ற காலத்தில் (மெல்லப்பட்ட சக்கை போன்ற) சதைப் பிண்டமாக மாறுகிறது. பிறகு அல்லாஹ் ஒரு வானவரை (அதனிடம்) அனுப்புகிறான். அந்த வானவருக்கு நான்கு கட்டளைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

1. அதன் (கருவாக இருக்கும் அந்த மனிதனின்) செயலையும்
2. (அவனுடைய செயல்கள் எப்படியிருக்கும் என்பதையும்)
3. அதன் வாழ்வாதாரத்தையும் (அவனுக்க என்னென்ன எந்த அளவு கிடைக்கும் என்பதையும்)
4. அதன் வாழ்நாளையும் (அவன் எவ்வளவு நாள் வாழ்வான் எப்போது இறப்பான் என்பதையும்) அது (இறுதிக் கட்டத்தில்) துர்பாக்கியசாலியா, நற்பேறுடையதா என்ப தையும் (நான் விதித்தபடி) எழுது" என்று அந்த வான வருக்குக் கட்டளையிடப்படும். பிறகு அதனுள் உயிர் ஊதப்படும்.

இதனால் தான், உங்களில் ஒருவர் (நற்) செயல் புரிந்து கொண்டே செல்வார். எந்த அளவிற்கென்றால் அவருக்கும் சொர்க்கத்திற்கு மிடையே ஒரு முழம் (தூரம்) தான் இருக்கும். அதற்குள் அவரின் விதி அவரை முந்திக் கொள்ளும். அவர் நரகவாசிகளின் செயலைச் செய்து விடுவார். (அதன் விளைவாக, நரகம் புகுந்து விடுவார்) ஒருவர் (தீய) செயல் புரிந்து கொண்டே செல்வார். எந்த அளவிற்கென்றால் அவருக்கும் நரகத்திற்குமிடையே ஒரேயொரு முழம் (தூரம்) தான் இருக்கும். அதற்குள் விதி அவரை முந்திக் கொள்ளும். அதனால் அவர் செர்க்கவாசிகளின் செயலைச் செய்வார். (அதன் காரணத்தால் சொர்க்கம் புகுவார்)

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத்(ரலி) நூல்: புகாரி முஸ்லிம்

கரு எவ்வாறு நாற்பது நாற்பது நாட்களாக வளருகிறது என்று இங்கு கூறப்பட்டுள்ளது.

அத்தியாயம் முஃமினூன் 14

ثُمَّ خَلَقْنَا النُّطْفَةَ عَلَقَةً فَخَلَقْنَا الْعَلَقَةَ مُضْغَةً فَخَلَقْنَا الْمُضْغَةَ عِظَامًا فَكَسَوْنَا الْعِظَامَ لَحْمًا ثُمَّ أَنشَأْنَاهُ خَلْقًا آخَرَ ۚ فَتَبَارَكَ اللَّـهُ أَحْسَنُ الْخَالِقِينَ ﴿١٤﴾

பின்னர் அந்த இந்திரியத் துளியை அலக் என்ற நிலையில் ஆக்கினோம்; பின்னர் அந்த அலக்கை ஒரு தசைப் பிண்டமாக்கினோம்; பின்னர் அத்தசைப்பிண்டத்தை எலும்புகளாகவும்

ஆக்கினோம்; பின்னர், அவ்வெலும்புகளுக்கு மாமிசத்தை அணிவித்தோம்; பின்னர் நாம் அதனை வேறு ஒரு படைப்பாக (மனிதனாகச்) செய்தோம். (இவ்வாறு படைத்தவனான) அல்லாஹ் பெரும் பாக்கியமுடையவன் - (படைப்பாளர்களில் எல்லாம்) மிக அழகான படைப்பாளன்.

ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் இறைத்தூதர் என்பதை இந்த ஹதீது நிரூபிக்கிறது. இந்த நூற்றாண்டில்தான் அறிவியல் உலகம் இவற்றை உறுதி படுத்துகிறது.

120 நாட்களுக்குப் பிறகுதான் உயிர் கொடுக்கப்படுகிறது. எனவே அப்போதுதான் அக்கருவை மனிதன் எனக் கூறலாம். எனவே மருத்துவக் காரணங்களுக்காக கருக்கலைப்பு செய்வதென்றால் அதற்கு முன்பாக செய்து விடலாம். அதற்குப் பிறகு அது குறித்து அறிஞர்களிடம் கேட்டு அதன்படி நடக்க வேண்டும். 120 நாட்களுக்குப் பிறகு கரு கலைந்தால், அதற்கு ஜனாஸா தொழுகை தொழலாம் என்ற சட்டமும் இதன்படி உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்பு என்றால் அதனை மையத் எனக் கூற முடியாது.

பின்னர் முன்னர் கூறப்பட்டது போல செயல், வாழ்வாதாரம், நிலைப்பாடு, வாழ்நாள் போன்றவை முடிவு செய்யப்படுவதால் அது குறித்து நாம் கவலைப்பட அவசியமில்லை. பின்னர் ஒருவரின் சுவனம் மற்றும் நரக அமல்கள் குறித்தும், அவரது விதியின் பொருட்டால், அவர் சுவனவாசி அல்லது நரகவாசி என்பது முடிவு செய்யப்படும் எனவும் கூறுகிறார்கள்.

ஒன்று புரிந்து கொள்ள வேண்டும். எல்லாம் எழுதப்பட்டுவிட்டது என்பதால் நாம் ஏன் தொழ வேண்டும், நல்ல அமல் செய்ய வேண்டும் என நாம் இருந்து விட முடியாது. ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் இது குறித்துக் கேட்கப்பட்ட போது, நிலைமை தீர்மானிக்கப்பட்டாலும், அமல் செய்வது நமது கடமையாகும் என்று கூறினார்கள். நமக்குத் தவறான எண்ணம் வந்தால் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் கூற்றை எடுத்துக் கொண்டு அதனை விட்டும் நீங்கி விட வேண்டும். சிலர் தங்களை தொழ அழைத்தால், அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவின் நாட்டப்படி வருவேன் என்று விதி மீது பழி போடுவார்கள். அப்படிப் பட்டவர்கள் பசித்தால் சாப்பிடுவார்களா? அல்லது அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நாடினால் ஏன் பசி போகட்டுமே என விட்டுவிடுவார்களா? கிடையாது, சாப்பிடுவார்கள். அது போல முயற்சி நம்முடையது. ஆனால் முடிவு அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவின் நாட்டமாகும்.

இப்னு ஹுஸைனி ரஹ்மத்துல்லாஹி அலைஹி இந்த ஹதீது குறித்து விளக்கும்போது, மற்றுமொரு ஹதீதில் கூடுதலான செய்தியைக் கூறுகிறார். அதில், மக்களில் பார்வையில் சிலர் சுவனம் செல்லக்கூடிய அமலகளைச் செய்து கொண்டிருப்பார்கள். அவர்களின் மீது நரகம் விதியாயிருந்தால், அவர்கள் நரகத்திற்கான அமல்களை இறுதியில் செய்து நரகம் செல்வார்கள். அது போல சிலர் நரகம் செல்லக்கூடிய அமலகளைச் செய்து கொண்டிருப்பார்கள். அவர்களின் மீது சுவனம் விதியாயிருந்தால், அவர்கள் சுவனத்திற்கான அமல்களை இறுதியில் செய்து சுவனம் செல்வார்கள். இவ்வாறு மக்கள் நினைக்குமாறு அமலகளைச் செய்து கொண்டிருப்பார்கள். மக்களுடைய பார்வையில் அவ்வாறு நடப்பார்கள் எனப் பொருளாகும். உண்மையாக அமல் செய்பவர்களின் அமல்களை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா வீணாக்க மாட்டான். உளத் தூய்மையோடு செயல் பட வேண்டும் என்ற படிப்பினையை இது கூறுகிறது. அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நமக்கு அதிக நற்செயல்களைச் செய்யும் பாக்கியத்தை அளிப்பானாக!

The Forty Hadith of Imam Nawawi - Hadith 5

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 5

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

الحديث الخامس

عَنْ أُمِّ الْمُؤْمِنِينَ أُمِّ عَبْدِ اللَّهِ عَائِشَةَ رَضِيَ اللَّهُ عَنْهَا، قَالَتْ: قَالَ: رَسُولُ اللَّهِ ﷺ" مَنْ أَحْدَثَ فِي أَمْرِنَا هَذَا مَا لَيْسَ مِنْهُ فَهُوَ رَدٌّ". رَوَاهُ الْبُخَارِيُّ وَمُسْلِمٌ

وَفِي رِوَايَةٍ لِمُسْلِمٍ:"مَنْ عَمِلَ عَمَلًا لَيْسَ عَلَيْهِ أَمْرُنَا فَهُوَ رَدٌّ . "

ஹதீஸ்- ந:

நம்முடைய இந்த (மார்க்க) விவகாரத்தில் அதில் இல்லாததைப் புதிதாக எவன் உண்டாக்குகிறானோ அவனுடைய அந்தப் புதுமை நிராகரிக்கப்பட்டதாகும் என இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்; ஆயிஷா(ரலி) (நூல்,முஸ்லிம்)

முஸ்லிமில் வரக்கூடிய இன்னுமொரு அறிவிப்பில்

நம்முடைய கட்டளை இல்லாத ஒரு செயலை (அமலை) எவர் செய்கிறாரோ அது நிராகரிக்கப்பட்டதாகும்என இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி)

இந்த ஹதீதை அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அறிவித்திருக்கிறார்கள். அபு பக்ரு ரழியல்லாஹு அன்ஹு அவகளின் மகளாவார்கள். ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்குப் பிரியமான மனைவியாவார்கள். ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் தங்களுக்குப் பிரியமானவர்கள் யார் எனக் கேட்க அவர்கள் உடனே ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா எனக் கூறினார்கள். ஆண்களில் யார் எனக் கேட்டபோது, அவர்களின் தந்தை அபு பக்ரு ரழியல்லாஹு அன்ஹு எனக் கூறினார்கள். நயவஞ்சகர்கள் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களைப்பற்றி அவதூறு கூறியபோது, அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா வசனங்களை இறக்கி அவர்களின் தூய்மையை நிலை நிறுத்தினான். தாங்கள் தூய்மையானவர்கள் என்பதை ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா தெரிவிப்பான் என நம்பியதாகக் கூறிய ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா, அதற்காகக் குர்ஆன் வசனங்கள் இறங்கும் என நினைக்கவில்லை என்றார்கள்.

ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா இந்த சமுதாயத்திற்கு ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் ஹதீதுகளை அதிகமாக அறிவித்தவர்களுள் ஒருவர். பெண்களில் ஹதீதுகளை அதிகமாக அறிவித்தவர்கள் அவர்கள்தாம். பெண்களுக்கு மார்க்கக்கல்வியைப் போதிக்கும் ஆசிரியராகத் திகழ்ந்தவர்கள். மூத்த ஸஹாபாக்கள் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களிடம் வந்து மார்க்க சம்பந்தமானவற்றைக் கேட்ப்பார்கள் என அல்கமா என்பவர் குறிப்பிடுகிறார்.

மேற்கூறிய ஹதீதின்படி மார்க்கத்தில் புதினம் எல்லாம் ரத்து செய்யப்படும் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் மக்களுக்குத் தேவையான அனைத்து விஷயங்களையும் முழுமையாக சொல்லிவிட்டுச் சென்றுள்ளார்கள். எதனையும் விட்டுச் செல்லவில்லை. தங்கள்

செயல்களினாலும், சொற்களினாலும் அவர்கள் எல்லாவற்றையும் காட்டிவிட்டார்கள். அவையே நமக்குப் போதுமானதாக இருக்கும்.

ஒரு தடவை ஸஹாபி ஒருவர் நீண்ட நேரம் வெயிலில் நின்று கொண்டிருந்தார்கள். அது குறித்து ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் வினவ, தாம் அவ்வாறு வெயிலில் நிற்பதற்காக நேர்ச்சை செய்துள்ளதாகக் கூறினார். அவறை நிழலுக்குப் போகுமாறு ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அறிவுறுத்தி, அவரின் நோன்பை மட்டும் பூர்த்தி செய்யுமாறுக் கூறினார்கள். ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் நமக்காக, கடமையான மற்றும் உபரியான தொழுகைகளையும், நோன்புகளையும் கற்றுக் கொடுத்து விட்டார்கள். எவற்றை அவர்கள் சொல்லாமல் விட்டு விட்டார்களோ அவை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவின் பார்வையில் தேவை இல்லாதவைகளாகும்.

ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களை உண்மையாகப் பின்பற்றுபவர், அவர்கள் சொன்னவற்றை செய்து, தடுத்தவற்றை விடுபவரே ஆவார். மற்றவை அவருக்குத் தேவை இல்லாதவையாகும். அவர்கள் சொல்லாததைச் செய்ய விழைபவர்கள் அவர்களை உண்மையாக நேசித்தவர்களாக எவ்வாறு ஆக முடியும்?

ஒருமுறை இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு தம் தோழருடன் பள்ளிவாசளுக்கு நுழைகிறார். அப்போது அங்குள்ள முஅத்தின் ‘அஸ் ஸலாஹ்.. அஸ் ஸலாஹ்’ (தொழுகை...தொழுகை) என்று கூறினார். உடனே இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு தம் தோழரிடம் இப்பள்ளிவாசலில் பித்அத் இருக்கிறது எனக் கூறி வெளியேறி விட்டார். இவ்வாறு தொழுகைக்கு அழைப்பது ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் சொல்லாத புதிய முறை - பித்அத் - ஆகும். எனவே அதனை இப்னு உமர் ரழியல்லாஹு தவிர்த்து விட்டார்கள். தொழுகைக்குப் பாங்கு என ஒன்று உள்ளது. ஃபஜ்ரில் ‘தூக்கத்தை விட தொழுகை மேலானது’ என்ற அதிகப்படியான சொற்கள் உள்ளன. அது போல், இடர் நேரங்களில் ‘உங்கள் வீட்டில் தொழுது கொள்ளுங்கள்’ (ஸல்லூ பி ரிஹாலிக்கும்) என்று சொல்ல கற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. இவற்றைத் தவிர வேறு ஏதும் சொல்லிக் கொடுக்கப்படவில்லை. இன்றும் சில பள்ளிகளில் ‘அஸ் ஸலாஹ்.. அஸ் ஸலாஹ்’ (தொழுகை...தொழுகை) என்று கூறும் பித்அத் வழிமுறை இருக்கிறது. இதை இப்னு உமர் ரழியல்லாஹு பித்அத் வழிமுறை என சென்று விட்டார்கள்.

பித்அத்தின் வெளித்தோற்றத்தைப் பார்த்து, அது நல்லது தானே என்று நாம் ஏமார்ந்து விடக்கூடாது. அதற்கான காரணங்களையும் கண்டு நாம் மயங்கி விடக்கூடாது.அதன் மூலம் நாம் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவை நெருங்க முடியாது. அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவிடத்தில் ஏற்றுக் கொள்ளப்படாமல் ரத்து செய்யப்படும் என்பது தான் இந்த ஹதீதின் செய்தியாகும். அது பாவமாகவும் கருதப்படும். ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் வழிமுறைக்கு மாற்றமாக நடந்ததாகக் கருதப்படும்.

ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் ஒவ்வொரு ஜும்மா குத்பாவிலும் இவ்வாறு ஓதுவார்கள். (குத்பத்துல் ஹாஜாஹ்)

إِنَّ الْحَمْدَ لِلَّهِ نَحْمَدُهُ وَنَسْتَعِيْنُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُوْرِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا، مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلَّ لَهُ وَمَنْ يُضْلِلْهُ فَلاَ هَادِيَ لَهُ.
وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ.

பிற பின்னர்;

إِنَّ أَصْدَقَ الْحَدِيثِ كِتَابُ اللهِ وَأَحْسَنَ الْهَدْيِ هَدْيُ مُحَمَّدٍ وَشَرَّ الأُمُورِ مُحْدَثَاتُهَا وَكُلَّ مُحْدَثَةٍ بِدْعَةٌ وَكُلَّ بِدْعَةٍ ضَلاَلَةٌ وَكُلَّ ضَلاَلَةٍ فِي النَّارِ

நிச்சயமாக அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் வேதம்தான் உண்மையான செய்தியாகும். சிறப்பான செய்தி முஹம்மது صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் ஹதீது தான், காரியங்களில் கெட்டது புதினமாகும். ஒவ்வொரு புதினமும் பித்அத் ஆகும். ஒவ்வொரு பித்அத்தும் வழி கேடாகும், ஒவ்வொரு வழிகேடும் நரக நெருப்பில் (சேர்க்கும்.)

எனவே காரியங்களில் கேட்டது புதினமாகும். அது வழிகேட்டில் சென்று இறுதியில் நரகத்தின்பால் அழைத்துச் செல்லும். எனவே ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் சொல்லித்தந்த வழிமுறைகளே போதுமானதாகும். அவர்களின் ஆதாரப்பூர்வமான ஹதீதுகலிலிருந்து நாம் வழிமுறைகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

பித்அத் விஷயத்தில் யார் நேரான வழியில் உள்ளார்கள் என்பதனைத் தெரிந்து கொள்ளும் மற்றொரு வழியாவது, ஸஹாபாக்களை உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். இமாம் மாலிக் ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறுவதாவது, “இந்த உலகத்தில் பிற்காலத்தில் வரும் மக்கள் சீராக எந்த செயலையும் செய்ய முடியாது. எனினும் முன்னால் வந்த ஸஹாபாக்களைக் கொண்டு அவர்கள் தங்களைச் சீராக்கிக் கொள்ளலாம். எவற்றைக் கொண்டு ஸஹாபாக்கள் நேரான வழியை அடைந்தார்களோ, எவற்றைக் கொண்டு அவர்கள் தங்களைச் சீராக்கிக் கொண்டார்களோ அவற்றைக் கொண்டு நல்வழியைப் பெறலாம்.”

திர்மிதி 2686

" أُوصِيكُمْ بِتَقْوَى اللَّهِ وَالسَّمْعِ وَالطَّاعَةِ وَإِنْ عَبْدٌ حَبَشِيٌّ فَإِنَّهُ مَنْ يَعِشْ مِنْكُمْ يَرَى اخْتِلاَفًا كَثِيرًا وَإِيَّاكُمْ وَمُحْدَثَاتِ الأُمُورِ فَإِنَّهَا ضَلاَلَةٌ فَمَنْ أَدْرَكَ ذَلِكَ مِنْكُمْ فَعَلَيْهِ بِسُنَّتِي وَسُنَّةِ الْخُلَفَاءِ الرَّاشِدِينَ الْمَهْدِيِّينَ عَضُّوا عَلَيْهَا بِالنَّوَاجِذِ " .

ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் கூறியதாவது, “இறையச்சத்தைக் கொண்டு நான் உங்களுக்கு உபதேசம் செய்கிறேன். ஹபஸியைச் சேர்ந்த ஒரு அடிமை (உங்களுக்குத் தலைவராக இருந்தாலும்) அவருக்கு செவி சாய்த்து, அடி பணியுங்கள். (எனக்குப்) பின்னால் வாழ்பவர்கள், அதிகமான கருத்து வேறுபாடுகளைக் காண்பீர்கள். பித்அத்தைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள். அவை எல்லாம் வழிகேடுகளே. அவற்றை நீங்கள் கண்ணுற்றால், அப்போது எனது ஸுன்னத்தையும், நேர்வழி பெற்ற நான்கு கலி.:பாக்களின் ஸுன்னத்தையும் கடைவாய்ப்ப பற்களால் (உறுதியாகப் பிடிப்பது போல்) பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்.”

எனவே ஹதீதுகளில் உள்ளவை, ஸஹாபாக்கள் நடைமுறைகள் ஆகியவற்றைப் பின்பற்றுவது நம்மை நேர்வழியில் இருக்கச் செய்யும். ஆதாரப்பூர்வமான செய்திகளைப் பின்பற்றி நாம் நேர்வழி பெறவேண்டும். அப்படிப்பட்ட நேர்வழியை, அனைத்துப் பித்அத்திலிருந்தும் விடுபட்ட வழியை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நமக்கு அளிப்பானாக!

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 6

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

الحديث السادس

عَنْ أَبِي عَبْدِ اللَّهِ النُّعْمَانِ بْنِ بَشِيرٍ رَضِيَ اللَّهُ عَنْهُمَا، قَالَ: سَمِعْت رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: "إنَّ الْحَلَالَ بَيِّنٌ، وَإِنَّ الْحَرَامَ بَيِّنٌ، وَبَيْنَهُمَا أُمُورٌ مُشْتَبِهَاتٌ لَا يَعْلَمُهُنَّ كَثِيرٌ مِنْ النَّاسِ، فَمَنْ اتَّقَى الشُّبُهَاتِ فَقْد اسْتَبْرَأَ لِدِينِهِ وَعِرْضِهِ، وَمَنْ وَقَعَ فِي الشُّبُهَاتِ وَقَعَ فِي الْحَرَامِ، كَالرَّاعِي يَرْعَى حَوْلَ الْحِمَى يُوشِكُ أَنْ يَرْتَعَ فِيهِ، أَلَا وَإِنَّ لِكُلِّ مَلِكٍ حِمًى، أَلَّا وَإِنَّ حِمَى اللَّهِ مَحَارِمُهُ، أَلَّا وَإِنَّ فِي الْجَسَدِ مُضْغَةً إذَا صَلَحَتْ صَلَحَ الْجَسَدُ كُلُّهُ، وَإِذَا فَسَدَتْ فَسَدَ الْجَسَدُ كُلُّهُ، أَلَا وَهِيَ الْقَلْبُ". رَوَاهُ الْبُخَارِيُّ ، وَمُسْلِمٌ .

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: (ஆகுமாக்கப்பட்டவை) ஹலால் தெளிவானது, (தடை செய்யப்பட்டவை) ஹராம்தெளிவானது. இவ்விரண்டுக்கும் இடையில் சந்தேகத்திற்கிட மானவையும் (முஷ்தபிஹாத்) இருக்கின்றன. மக்களில் பெரும்பாலோர் அவற்றை அறியமாட்டார்கள்.

எனவே, யார் சந்தேகத்திற்கிடமானவற்றைத் தவிர்த்துக் கொள்கிறாரோ அவர் தமது மார்க்கத்தையும் தமது மானத்தையும் காப்பாற்றிக்கொள்கிறார். யார் சந்தேகத்திற் கிடமானவற்றில் வீழ்ந்து விடுகிறாரோ அவர் ஹராமில் (தடைசெய்யப்பட்டவற்றில்) வீழ்ந்து விடுகிறார். அனுமதிக்கப்படாத மேய்ச்சல் நிலத்தின் அருகில் தனது கால் நடைகளை மேய்த்துக் கொண்டிருக்கயில் அவை தடுக்கப் பட்ட அம்மேய்ச்சல் நிலத்தில் சென்று மேய்ந்து விடுமோ எனும் அச்சத்திற்கு ஆளாகும் ஒரு இடையனின் நிலையைப் போன்றே இவரது நிலை இருக்கின்றது. அறிந்து கொள்ளுங்கள். சொந்தமான மேய்ச்சல் நிலம் (எல்லை) உண்டு. அல்லாஹ்வுக்கு சொந்தமான மேய்ச்சல் நிலம் (எல்லை) அவன் அனுமதிக்காத (ஹராமான) காரியங்களாகும். அறிந்து கொள்ளுங்கள்! உடலில் ஒரு சதைத் துண்டு இருக்கிறது. அது சீரடைந்துவிட்டால் உடல் முழுவதும் சீரடைந்துவிடும். அது கெட்டு விட்டால் முழு உடலும் கெட்டு விடும். அறிந்து கொள்ளுங்கள்! அதுவே இதயம். இதை நுஅமான் பின் பஷீர் (ரலி) அவர்கள் அறி விக்கிறார்கள். இதை அவர்கள் அறிவிக்கும்போது தம்மிரு காதுகளை நோக்கி இரு விரல்களால் சைகை செய்து (இந்தக் காதுகளால்) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (மேற்கண்டவாறு) கூறியதைக் கேட்டேன் என்றார்கள். நூல்: புகாரி முஸ்லிம்.

இந்த ஹதீதை அறிவித்தவர் நுஃமான் இப்னு பஷீர் ரழியல்லாஹுஅன்ஹு ஆகும். ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹுஅலைஹி வ ஸல்லம் அவர்கள் ஹிஜ்ரத் செய்து மதினா வந்த பிறகு அன்ஸாரி மக்களில் பிறந்த முதல் குழந்தை நுஃமான் இப்னு பஷீர் ரழியல்லாஹு அன்ஹு ஆகும். அப்துல்லாஹ் இப்னு ஜுபைர் ரழியல்லாஹு அன்ஹு முஹாஜிர் மக்களில் பிறந்த முதல் குழந்தை ஆவார். சிறு வயதிலேயே அவர் நூற்றுக்கும் மேற்பட்ட ஹதீதுகளை அறிவித்துள்ளார்கள். அவருக்கு மார்க்கக் கல்வியை கற்பதற்கான ஆர்வத்தை இதிலிருந்து அறியலாம். அவர்கள் தாங்கள் நேரடியாக இந்த ஹதீதைக் கேட்டதாக சொல்லும் நோக்கில்தான் தமது இரு விரல்களைக் காது நோக்கி சைகை செய்து கூறியுள்ளார். ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடமிருந்து நேரடியாகக் கேட்ட, மற்றும் உமர் ரழியல்லாஹு அன்ஹு, அன்னை ஆயிஷா அவர்களிடமிருந்து கேட்ட ஹதீதுகளை அறிவித்துள்ளார்.

இஸ்லாத்தைக் குறித்து மூன்று அடிப்படைகளில் ஒன்றை இந்த ஹதீது குறிப்பிடுகிறது என அறிஞர்கள் கூறியுள்ளார்கள். முக்கியமான மூன்று ஹதீதுகளில் இது ஒன்று எனவும் சில என

அறிஞர்கள் கூறியுள்ளார்கள். மற்ற இரண்டு ஹதீதுகள்: செயல்கள் எண்ணங்களைப் பொருத்து என்ற முதல் ஹதீது, மற்றும் வீணானவற்றிலிருந்து தவிர்த்துக் கொள்வது நல்ல முஸ்லிமின் அடையாளம் என்ற ஹதீது ஆகும்.

ஹலால் மற்றும் ஹலால் தெளிவானது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அனுமதிக்கப்பட்ட பல விஷயங்கள் தெளிவாக உள்ளன. உதாரணத்திற்கு, காய்கறிகள் சாப்பிடுவது ஹலால் ஆகும். தெளிவான சந்தேகமில்லாத ஒன்று. அது போல ஆடு மட்டும் மாட்டிறைச்சி ஆகிய ஹலால் என்பது தெளிவானவையாகும். அது போல மது அருந்துவது, பன்றி இறைச்சி சாப்பிடுவது, விபச்சாரம் செய்வது போன்றவை ஹராம் என்பதில் எவ்வத சந்தேகமும் இல்லை. இவ்வாறு பல ஹலால் மற்றும் ஹராமான விஷயங்கள் உள்ளன. இவற்றிற்கு இடையில் சந்தேகமான பல விஷயங்களும் உள்ளன. மக்களில் பெரும்பாலோர் அவற்றை அறியமாட்டார்கள் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். எனினும் மார்க்கக் கல்வியாளர்கள் அவற்றை அறிவார்கள். உலமாக்கள் அவற்றைக் கற்றுக்கொண்டு அறிவார்கள். அப்படிப்பட்ட விஷயங்கள் குறித்து அறிஞர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

அறியாத நிலையில், நமக்குச் சந்தேகம் வந்த விஷயங்களை விட்டு விட வேண்டும் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். உதாரணமாக வலைத் தளம் (online)மூலமாக பணம் ஈட்டுவது பற்றிய விவரங்கள். உதாரணமாகஒரு போட்டியில் பங்கு கொள்ள அனைவரயும் குறிப்பிட்ட தொகையைக் கட்டச் சொல்லி, வெற்றி பெற்றவருக்கு மட்டும் பரிசுத் தொகை ஒன்றைக் கொடுப்பது. இது சூதாட்டத்தின் ஒரு வகைதான். இது ஹலாலா, ஹராமா என்ற குழப்பம் வரலாம். எனினும் இஸ்லாத்தில் சூதாட்டம் தடுக்கப்பட்டுள்ளதால், அவை எந்த உருவத்தில் வந்தாலும் ஹராம்தான் என அறிஞர்கள் கூறுவார்கள். அவர்களுக்கு அதில் சந்தேகம் இருக்காது. எனவே நமக்கு அது நமக்கு ஹலாலா, ஹராமா என்று தெரியாத நிலைலயில், அதனைத் தவிர்க்க வேண்டும் என்பதே இந்த ஹதீதின் செய்தியாகும்.

மற்றொரு உதாரணம்: பன்னிலை சந்தை (Multi-level marketing)நாம் ஒரு பொருளை வாங்க வேண்டும். பின்னர் நாம் அந்த நிறுவனத்திருக்கு பத்து வாடிக்கையாளர்களை சேர்க்க வேண்டும். பொருள் வாங்கிய அவர்கள் ஒவ்வொருவரும் பத்து பத்து வாடிக்கையாளர்களை சேர்க்க வேண்டும். இதற்காக முதலில் ஆரம்பித்த நபருக்கு நிறுவனம் ஒரு தொகையை அளிக்கும். இது சரிதானே எனத் தோன்றினாலும் ஹலால் அல்ல என அறிஞர்கள் கருத்து கூறியுள்ளார்கள். அவர்கள் கூறும் காரணம், இதற்காக நாம் முதலீடு செய்யவும் இலை. உழைக்கவும் இல்லை. எவ்வித முயற்சியும் இல்லாமல் வரும் வருமானம் என்று கூறுகிறார்கள். நமக்கு இக்கருத்து குறித்து சந்தேகமும், அந்த வருமானம் ஹலால்தான என்ற சந்தேகமும் இருந்தால், தவிர்ப்பதே சரியான ஒன்றாகும். குத்தகைக்கு வீட்டில் இருப்பது, (ஒரு தொகையைக் கொடுத்து விட்டு வாடகை கொடுக்காமல் வீட்டில் தங்குவது) ஹலாலா என்ற சந்தேகம் எழும்போது, அதனை தவிர்ப்பது சரியானதாகும்.

அதுபோல குறிப்பிட்ட உணவகத்தில் பரிமாறப்படும் உணவு ஹலாலா என்பதில் சந்தேகம் எடுந்தால் அதனை தவிர்ப்பதுதான் சரியானதாகும். சந்தேகமானதை தவிர்த்தால், அது ஹராமாக இருந்தால் அவர் தம் மார்க்கத்தைப் பாதுகாத்தவராக இருப்பார். அதுபோல், மற்றர்களின் பார்வையில் ஹராமாக இருந்து, நாம் அதனைத் தவிர்த்தால், மற்றவர்கள் நம்மைக் குறித்து கெட்ட எண்ணம் ஏற்படாதவாறு தவிர்த்துக் கொள்ளலாம். இதனைத் தான் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் நமக்குக் கற்றுக் கொடுத்துள்ளார்கள். அதற்கான உதாரணத்தை இடையரைக் கொண்டு நமக்கு அறிவிக்கிறார்கள். தடுக்கப்பட்ட மேய்ச்சல் பகுதிக்கு அருகில் தம் கால்நடைகளை மேய்ச்சலுக்கு விட்டால், அவை வரம்பு மீறி தடை செய்யப்பட பகுதிக்குச் சென்று தங்களின் உணவைத் தேடக்கூடும். அது போல் தான் ஹலாலா ஹராமா என்று அறியாத நிலையில், தவிற்காமல் நாம் எடுத்துக் கொண்டால்,

ஹராம் என்றிருந்தால் நாம் தவறு செய்தவர்களாக ஆகிவிடுவோம். எனவே அப்படிப்பட்டவற்றைத் தவிர்பதுதான் சரியான ஒன்றாகும். அவ்வாறு தவிர்கவில்லை என்றால் ஒரு நிலையில் ஹராமையும் துணிச்சலாகச் செய்யும் மனநிலை வரலாம். இவ்வாறு தவிர்ப்பது தான் இறையச்சம் ஆகும்.

இவற்றை விட முக்கியமான விஷயம் அகீதா என்ற கொள்கை குறித்த நிலையாகும். எனவே கொள்கை விஷயத்தில் ஏதும் சந்தேகம் இருந்தால் நாம் அது குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

உடலில் ஒரு சதைத் துண்டு சீராக இருந்தால் உடல் முழுவதும் சீராகி விடும். அது கெட்டுப் போனால், உடல் முழுவதும் கெட்டுப் போய்விடும் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். அது உள்ளம் என அவர்கள் கூறினார்கள். எனவே உள்ளத்தில் இறையச்சம் இருந்தால் எல்லாம் சரியாகிவிடும்.

அஹ்மத் இப்னு ஹன்பல் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களிடம் ஒரு பெண்மணி தாம் நெசவாளி எனவும், நெய்யும் துணியின் ஒரு பக்கத்தைப் பகலிலும், மற்றொரு பக்கத்தை இரவிலும் நெய்வதால், இரவுப் பகுதியில் குறைய இருக்கும் வாய்ப்புள்ளதால், அதனை விற்கும்போது அவ்வாறு சொல்லித்தான் விற்க வேண்டுமா என வினவினார். அந்தப் பெண்மணி குறித்து ஆச்சரியப்பட்டவாறு அவர் குடும்பம் குறித்து வினவினார்கள்.

இப்னு ஹுஸைம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறியதாவது, நாம் முகத்தை அழகாக வைத்துக் கொள்வதற்கு அடிக்கடி கழுவிக் கொள்வோம். ஆனால் அகத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ள அதிகமான கவலை கொள்ள வேண்டும்.

இதற்காக நாம் குர்ஆனை அதிகம் அதிகம் ஓத வேண்டும். இறைவனிடம் இறையச்சம் வேண்டி துஆ கேட்க வேண்டும். பயனற்ற கல்வி, அஞ்சாத உள்ளம் குறித்து பாதுகாப்பு வேண்டி ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் துஆ செய்வார்கள். நல்லடியார்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும். நல்லடியார்கள் வாழ்க்கை வரலாறுகளைப் படிக்க வேண்டும். நல்ல பண்புகளும், இறையச்சமும் நமக்குக் கிடைக்கும்.

நற்பண்புகளும், இறையச்சமும் கொண்ட நன்மக்களாக அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நம்மையும் ஆக்குவானாக!

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 7

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

الحديث السابع

عَنْ أَبِي رُقَيَّةَ تَمِيمِ بْنِ أَوْسٍ الدَّارِيِّ ﷺ أَنَّ النَّبِيَّ ﷺ قَالَ: "الدِّينُ النَّصِيحَةُ. قُلْنَا: لِمَنْ؟ قَالَ لِلَّهِ، وَلِكِتَابِهِ، وَلِرَسُولِهِ، وَلِأَئِمَّةِ الْمُسْلِمِينَ وَعَامَّتِهِمْ" . رَوَاهُ مُسْلِمٌ .

ஹதீஸ்- எ:

"மார்க்கம் (தீன்) என்பதே 'நலம் நாடுவது' தான் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார் கள்.நாங்கள், யாருக்கு? (நலம் நாடுவது)" என்று கேட்டோம். "அல்லாஹ்வுக் கும், அவனது வேதத்துக்கும், அவனது தூதருக்கும், முஸ்லிம் தலைவர்களுக்கும், அவர்களில் பொது மக்களுக்கும்" என்று நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள். அறிவிப்பவர்:தமீமுத் தாரீ (ரலி) - நூல்: முஸ்லிம்.

இந்த ஹதீதை அறிவிப்பவர் தமீமுத் தாரி ரழியல்லாஹுˢ அன்ஹுˢ ஆகும். இவர்கள் பலஸ்தீனைச் சேர்ந்தவர். ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹுˢ அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் வந்து இஸ்லாத்தை என்றார். இவர் அதிகமாக குர்ஆன் ஓதுபவராக, வணக்க வழிபாடுகளில் ஈடுபடக்கூடியவராக இருந்தார். அவரது தனிப்பட்ட சிறப்பு, ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹுˢ அலைஹி வ ஸல்லம் அறிவித்ததாக இவர் கூறிய செய்தி வந்துள்ளது. வேறு யாருக்கும் இந்த சிறப்பு இல்லை. வழக்கமாக ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹுˢ அலைஹி வ ஸல்லம் கூறியதாக, ஸஹாபாக்கள் அறிவித்தார்கள் என வரும். அச் செய்தி, தஜ்ஜாலை ஒரு தீவில் இவர் பார்த்தபோது , ஜஸ்ஸாஸா என்பரிடம் இவர் பேசியது குறித்த செய்தியை ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹுˢ அலைஹி வ ஸல்லம் அறிவிக்கிறார்கள். அந்த செய்தியை ஜுˢம்மாவில் ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹுˢ அலைஹி வ ஸல்லம் மக்களுக்கு அறிவிக்கிறார்கள்.

மார்க்கம் என்றால் நலம் நாடுவது என்பதாகும். النَّصِيحَةُ என்ற சொல்லுக்குப் பல பொருட்கள் உள்ளன. உதாரணமாக, உபதேசம், உளத் தூய்மை போன்றவை. தேனை சுத்தப்படுத்துதல் என்று சொல்லும்போது இந்த சொல்லைத்தான் பயன்படுத்துவார்கள். நலம் நாடுவது, நன்றி உள்ளவராக இருப்பது என்ற பொருளும் உண்டு. . நலம் நாடுவது என்ற பொருளை அறிஞர்கள் எடுத்துக் கொள்வார்கள்.

மார்க்கம் என்றாலே நலம் நாடுவதுதான் என அழுத்தம் திருத்தமாக ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹுˢ அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். சில அறிவிப்புகளில் இதனை மூன்று தடவை, திரும்பத் திரும்பக் கூறியதாக உள்ளது.

ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹுˢ அலைஹி வ ஸல்லம் கூறியது குறித்து ஸஹாபாக்கள் யாருக்கு நலம் நாடுவது என உடனே வினவினார்கள். மார்க்கக் கல்வி பயிலும் மாணவர்கள் இவ்வாறு தான் உடனுக்குடன் கேட்டு தெளிவு பெற வேண்டும். அதன் மூலம் நாம் கல்வி பயின்று அதன்படி நடக்கும் பாக்கியம் நமக்குக் கிடைக்கும். வீணான கேள்விகளை தவிர்க்க வேண்டும். ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹுˢ அலைஹி வ ஸல்லம் கூறியதாவது, "ஒரு காலம் வரும். அப்போது முஸ்லிம்கள் கொல்லப்படுவார்கள். மிகவும் பசியாக இருப்பவர்கள் எவ்வாறு உணவைப் பாய்ந்து உண்பார்களோ, அதுபோல எல்லா சமூகத்தினரும் முஸ்லிம்களைக் கொல்ல விளைவார்கள்." அப்போது முஸ்லிம்கள் எண்ணிக்கையில் குறைவாக இருப்பார்களா? என ஸஹாபாக்கள் வினவ, ஆனால் அவர்கள் அதிகமாக இருப்பார்கள்

எனவும் அவர்களின் உள்ளத்தில் உலக ஆசை புகுந்து விடும் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள்.

நாம் நலம் நாட வேண்டியது, முதலாவது அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவுக்காக நலம் நாட வேண்டும். அவ்வாறு நாடுவது உண்மையில் நமக்காக நலம் நாடுவதாகத்தான் இருக்கும். வெளிப்படையில் நலம் நாடுவது அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவுக்காக என்றாலும் அது நமக்குத்தான். அந்த நாட்டமானது ஏகத்துவத்தைப் புரிந்து கொண்டு, உயிர் பிரியும்வரை அதில் நிலைத்து இருப்பதாகும். நமக்கு அருள்பாலித்து, நமக்கு உணவு வாழ்வாதாரம் அனைத்தையும் அளித்த அவனை வணங்கி, ஏகத்துவத்தை மற்றவர்களுக்கும் எடுத்துச் சொல்வது அதன் செயலாலாகும்.

இரண்டாவது அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவின் வேதத்தின் மீது நலம் நாடுவது என்பது, அதன் மீது ஈமான் கொள்வது, அதில் சொல்லப்பட்ட அனைத்தையும் நம்புவது, அதனை ஓதும் விதத்தில் ஓதி, புரிந்து உணர்வது ஆகியனவாகும்.

அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவின் தூதரின் மீதுள்ள நலம் நாடுவது என்பதாவது, அவர்களின் மீது நம்பிக்கை கொள்வது, அவர்களுக்கு அருளப்பட்ட வேதம், நமது சிற்றறிவுக்கு உடன்படவில்லை என்று தள்ளி விடாமல் ஹதீதுகளை உறுதியாக நம்புவது, அவர்களின் வழிமுறைகளை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்வது, அவர்கள் தடுத்தவற்றிலிருந்து விலகி இருப்பது, அவர்களைக் கண்ணியப்படுத்துவது, அதிகம் அதிகமாக ஸலவாத்து சொல்வது போன்றவை ஆகும். எவை அனைத்தும் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு நலம் நாடுவது என்று கூறப்பட்டாலும், அவை அனைத்தும் நமது நலனில்தான் இருக்கும். ஏனெனில் நாம் ஒருமுறை ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு ஸலவாத்து சொன்னால், வானவர்கள் நமக்காக பத்து முறை ஸலவாத்து (துஆ) செய்வார்கள்.

அடுத்து முஸ்லிம் தலைவர்கள். இவர்கள் இரு வகையினர். முதலாவது மார்க்க அறிஞர்கள். அவர்கள் சத்தியத்தைச் சொன்னால் அதனை நாம் கேட்க வேண்டும். அவர்களிடம் மார்க்கக் கல்வியைப் பெற வேண்டும். அவர்கள் கல்வியையும், ஒழுக்கத்தையும் கற்றுத் தருவார்கள். சத்தியத்தைச் சொல்லும் முதலாவது மார்க்க அறிஞர்கள் முஸ்லிம்களின் தலைமைப் பண்புக்குத் தகுதியானவர்கள்.

அத்தியாயம் நஹ்ல் 43

فَاسْأَلُوا أَهْلَ الذِّكْرِ إِن كُنتُمْ لَا تَعْلَمُونَ ﴿٤٣﴾

“நீங்கள் (இதனை) அறிந்து கொள்ளாமலிருந்தால். (முந்திய) வேத ஞானம் பெற்றோரிடம் கேட்டறிந்து கொள்ளுங்கள்” (என்று கூறுவீராக).

மேலும் மார்க்க கல்வியில் அவர்களுக்கு உடலாலும், பொருளாலும் உதவி செய்ய வேண்டும். அவர்களைக் கண்ணியப்படுத்த வேண்டும். பலர் இப்போது வலைத் தளங்களில் மார்க்க அறிஞர்கள் குறித்து இழிவாகப் பதிவிடுகிறார்கள். சிலர் தவறான சிந்தனையிலும், செயல்களிலும் இருக்கிறார்கள். ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களே அப்படிப்பட்டவர்களைக் குறித்து எச்சரித்துள்ளார்கள். அதற்காக பொதுவான முறையில் மார்க்க அறிஞர்கள் குறித்து தவறாகப் புறம் பேசக்கூடாது. அவர்களின் கல்விக்காக கண்ணியம் கொடுக்கப்பட வேண்டும்.

இன்னொரு தலைவர்கள் ஆட்சியாளர்கள். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவுக்குக் கட்டுப்பட்டு அவர்கள் சொல்வதைப் பின்பற்ற வேண்டும். மாறு செய்தால் கட்டுப்பட வேண்டியதில்லை. அவர்களுக்கு எதிராக கிளர்ச்சி செய்யக்கூடாது. தவறு செய்தால் எடுத்துச் சொல்லி நல்லுபதேசம் செய்ய வேண்டும்.

பொது மக்களுக்கான நலம் நாடுவதில் பல அடங்கும். தாய் தந்தையர், கணவன் மனைவி, அண்டை வீட்டார் என சொல்லிக் கொண்டே இருக்கலாம். தம் நாவாலும், கரத்தாலும் யாருக்கும் தீங்கு ஏற்படாதோ அவர்தாம் உண்மையான முஸ்லிம் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். மற்றவர்களை நாம் நாம்மால் பாதிக்கப்படக் கூடாது.

ஜரீர் இப்னு அப்துல்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு தமது பணியாளரை நல்ல குதிரை வாங்கி வருமாறு அனுப்பினார். அவரும் அவ்வாறு செய்து நல்ல குதிரையை 300 திர்ஹம் விலை பேசி குதிரை விற்பவரை அழைத்து வருகிறார். அதனைக் கண்டு மகிழ்ச்சி அடைந்து அதன் விலையைக் கேட்க பணியாளர்300 திர்ஹம் எனக் கூறினார். ஆனால் அந்த குதிரை மிகக் குறைந்த விலை எனக் கூறி அதற்குத் தாம் 300 திர்ஹம் கொடுக்க விரும்புவதாகக் கூறினார். அவரும் சம்மதித்த நிலையில் , ஜரீர் ரழியல்லாஹு அன்ஹு அதற்கு 400 திர்ஹம் கொடுக்க விரும்புவதாகக் கூறினார். ஜரீர் ரழியல்லாஹு அன்ஹு அதற்கு 100 திர்ஹம் 100 திர்ஹம் என அதிகரித்து இறுதியல் 800 திர்ஹம் கொடுக்க விரும்புவதாகக் கூறி வாங்கினார். ஆச்சரியம் கொண்ட பணியாளர் அது குறித்துக் கேட்க, தாம் இஸ்லாத்தில் இணைந்தபோது ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் நலம் நாடுவேன் என்று பைஅத் செய்ததாக ஜரீர் ரழியல்லாஹு அன்ஹு கூறினார். அதற்காகத் தான் தாம் அவ்வாறு வாங்கியதாகக் கூறினார்.

நாம் கடை வீதிக்குச் செல்லும்போது சின்னஞ்சிறு வியாபாரிகளிடம் வீணாக பேரம் பேசாமல் வாங்குவதும் நலம் நாடும் செயலாகும். ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறிய நலம் நாடும் வாழ்கையை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நமக்கு அளிப்பானாக!

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 8

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி

الحديث الثامن

عَنْ ابْنِ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُمَا، أَنَّ رَسُولَ اللَّهِ ﷺ قَالَ: "أُمِرْت أَنْ أُقَاتِلَ النَّاسَ حَتَّى يَشْهَدُوا أَنْ لَا إلَهَ إلَّا اللَّهُ وَأَنَّ مُحَمَّدًا رَسُولُ اللَّهِ، وَيُقِيمُوا الصَّلَاةَ، وَيُؤْتُوا الزَّكَاةَ؛ فَإِذَا فَعَلُوا ذَلِكَ عَصَمُوا مِنِّي دِمَاءَهُمْ وَأَمْوَالَهُمْ إلَّا بِحَقِّ الْإِسْلَامِ، وَحِسَابُهُمْ عَلَى اللَّهِ تَعَالَى" . رَوَاهُ الْبُخَارِيُّ ، وَمُسْلِمٌ

'மனிதர்கள், வணக்கத்திற்குத் தகுதியானவன் அல்லாஹ் வை யன்றி வேறு யாருமில்லை, முஹம்மத் இறைத்தூதர் என்று உறுதியாக நம்பி, தொழுகையை நிலை நிறுத்தி, ஸகாத்தும் கொடுக்கும் வரை அவர்களுடன் போரிட வேண்டும் என்று நான் கட்டளையிடப் பட்டுள் ளேன். இவற்றை அவர்கள் செய்து விடுவார் களானால் தம் உயிர், உடைமைகளை என்னிட மிருந்து பாதுகாத்துக் கொள்வார்கள். இஸ்லாத் தின் வேறு உரிமைகளில் (அவர் கள் வரம்பு மீறனாலே) தவிர! மேலும் அவர்களின் விசா ரணை இறைவனிடமே உள்ளது' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அறிவிப்பவர்:அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) : நூல்: முஸ்லிம்.

இந்த ஹதீதை அறிவித்தவர் அப்துல்லாஹ் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு ஆவார். இந்த ஹதீதின்படி போர் புரிவது ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மீது அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா இட்ட கட்டளை எனத் தெரிகிறது. வாஜிபான காரியம். இத்தகைய ஹதீதுகலைக் கொண்டுதான் மாற்று மதத்தவர்கள், இஸ்லாத்தை ஏற்க வேண்டும் என முஸ்லிம்கள் நிர்பந்தப்படுத்துகிறார்கள் எனக் குற்றம் சாட்டுகிறார்கள். முஸ்லிம்களாகிய நாம் இந்த ஹதீதை எவ்வாறு எடுத்துக் கொள்ள வேண்டும்? அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா போர் புரியக் கட்டளை இட்டது அவர்கள் நன்மையின் பக்கம் வர வேண்டும் என்ற நோக்கில்தான். அவர்கள் அதே நிலையில் இறந்தால் நிரந்த நரகவாசிகளாக மாறி நஷ்டவாளிகளாக மாறக் கூடாது என்பதற்குத்தான். ஒரு ஆசிரியர் ஒரு மாணவனை அடிப்பதும், பெற்றோர் தம் குழந்தையை அடிப்பதும் துன்புற்றுதும் நோக்கில் அடிப்பதில்லை. அவர்கள் நல்வழி, நற்கல்வி பெற வேண்டும் என்ற காரணம்தான் என்பதை நாம் அறிவோம்.

இதைப்போல் தான் ஷஹாதா சொல்லி, தொழுகையை நிறைவேற்றி, ஜகாத் கொடுக்கும் வரை அவர்கள் மீது போர் புரியுமாறு, ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா கட்டளை இட்டுள்ளான். இந்த மூன்று காரியத்தை செய்து வருபவர்கள் மீது போர் புரிவது ஹராமாகிவிடுகிறது. அவர்களின் உயிர் மற்றும் உடைமைகள் பாதுகாக்கப்படும்.

ஷஹாதா சொல்லி இஸ்லாத்திற்கு வந்த ஒரு கூட்டம் தொழுகையை நிறைவேற்றாமல், ஜகாத்தும் கொடுக்காமல் இருந்தால் அவர்கள் மீதும் போர் தொடுக்கலாம். அதுபோல் ஜகாத் மட்டும் கொடுக்கமாட்டோம் என்று கூறுபவர்கள் மீதும் முஸ்லிம் ஆட்சியாளர்கள் போர் தொடுக்கலாம். அபு பக்ரு ரழியல்லாஹு அன்ஹு ஜகாத்தும் கொடுக்க மறுத்தவர்கள் மீது போர் தொடுத்துள்ளார்கள். உமர் அவர்கள் முஸ்லிம்களான அவர்களின் மீது போர் புரிய தயக்கம் கொண்டபோது, அபு பக்ரு ரழியல்லாஹு தாங்கள் தொழுகைக்கும், ஜகாத்திற்கும் வித்தியாசம் காணவில்லை என்றார்கள். இந்த மூன்று காரியாங்களை விட்டு வேறு சில

இஸ்லாத்தின் உரிமைகளை விதிவிலக்காக ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் இந்த ஹதீதில் கூறியுள்ளார்கள். உதாரணமாக திருமணம் முடித்து விபச்சாரம் செய்தவரின் உயிருக்கு பாதுகாப்பு என்று கூறமுடியாது. முந்தைய மூன்றையும் அவர்கள் கடைபிடித்தாலும் அவர்கள் முஸ்லிம் ஆட்சியாளர்களால் கொல்லப்படுவார்கள். அதுபோல் அப்பாவி முஸ்லிமை ஒருவர் கொன்றவரும் , குழப்பவாதியும் தங்களின் உயிருக்குப் பாதுகாப்பு பெற்றவர்களாக ஆகமாட்டார்கள்.

இறுதியாக அவர்கள் பற்றிய விசாரணை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவிடம் உள்ளதாக ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். மக்கள் உளத்தூய்மையோடு ஷஹாதா சொல்லி, தொழுகையை நிறைவேற்றி, ஜகாத் கொடுத்தார்களா என்ற விசாரணை அல்லாஹ் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவிடம் உள்ளது. அதன் உண்மைத் தன்மையைப் பட்டி அறிய, விசாரிக்க நமக்கு கடமையில்லை என இந்த ஹதீது தெளிவு படுத்துகிறது. நாம் அனைவரும் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா மற்றும் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் இட்ட கட்டளைகளை ஏற்று நடக்கும் பாக்கியத்தை நமக்கு அளிப்பானாக!

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 9

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி

الحديث التاسع

عَنْ أَبِي هُرَيْرَةَ عَبْدِ الرَّحْمَنِ بْنِ صَخْرٍ ﷺ قَالَ: سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: "مَا نَهَيْتُكُمْ عَنْهُ فَاجْتَنِبُوهُ، وَمَا أَمَرْتُكُمْ بِهِ فَأْتُوا مِنْهُ مَا اسْتَطَعْتُمْ، فَإِنَّمَا أَهْلَكَ الَّذِينَ مِنْ قَبْلِكُمْ كَثْرَةُ مَسَائِلِهِمْ وَاخْتِلَافُهُمْ عَلَى أَنْبِيَائِهِمْ ."

رَوَاهُ الْبُخَارِيُّ ، وَمُسْلِمٌ

ஹதீஸ்- கூ:

நான் எதை (ச் செய்ய வேண்டாமென) உங்களுக்குத் தடை செய்துள்ளேனோ அதிலிருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள். நான் எதை (ச்செய்யுமாறு) உங்களுக்குக் கட்டளையிட்டுள்ளேனோ அதை உங்களால் இயன்ற வரை செய்யுங்கள். ஏனெனில், உங்களுக்குமுன் வாழ்ந்த வர்களை அழித்த தெல்லாம் அவர்கள் தம் இறைத் தூதர் களிடம் அதிகமாகக் கேள்வி கேட்டதும் அவர்களுடன் கருத்து வேறுபாடு கொண்டதும்தான் என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள் நூல்: புகாரி முஸ்லிம்.

இந்த ஹதீதை அறிவித்தவர் அபு ஹுரைராஹ் ரழியல்லாஹு அன்ஹு ஆவார். இவர் அதிகமாக பூனைகளை வளர்த்து அவற்றுடன் விளையாடுபவராக இருந்தததால், அவர் பூனையின் தந்தை என்று பொருள்படும் அபு ஹுரைராஹ் ரழியல்லாஹு அன்ஹு என அழைக்கப்பட்டார். அவரது இயற்பெயர் குறித்து கருத்து வேறுபாடு உள்ளது. அதிகாமானோர் கருத்தின்படி அவரது பெயர் அப்துர் ரஹ்மான் இப்னு ஸஹர் ரழியல்லாஹு அன்ஹு ஆகும். நபித் தோழர்களில் அதிகமான, சுமார் 5000 ஹதீதுகளை அறிவித்தவர் இவர் ஆவார். மற்றவர்களைக் காட்டிலும் குறைவாகவே (சுமார் 3 1/2 அல்லது 4 ½ வருடங்கள்) தான் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுடன் ஒன்றாக இருத்திருக்கிறார். திண்ணைத் தோழர்களில் ஒருவராக இருந்து ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுடன் எல்லா இடங்களுக்கும் சென்று மார்க்கம் பயின்றவர்.

தம் தாய் இஸ்லாத்தை ஏற்க வேண்டும் என்பதற்காக ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் துஆ செய்யச் சொன்னவர். தாம் கேட்கும் ஹதீதுகள் மறந்து விடக் கூடாது என்பதற்காக தமக்குத் துஆ கேட்கும்படியும் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் கூறியவர். அதற்காக அவர்கள் துஆ செய்தார்கள். அதன் பிறகு தாங்கள் கேட்கும் அனைத்தும் மனனம் ஆகிவிடும் என அவர் கூறியுள்ளார்.

இந்த ஹதீதில் தடை செய்தததை விட்டு விடச் சொல்லும் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள், கட்டளை இட்டதை இயன்ற வரை செய்யுமாறு கூறியுள்ளார்கள். நம்மால் இயன்றவரை என்ற நிபந்தனை கட்டளை இட்டதைத் தான், ஆனால் தடுக்கப்பட்ட விஷயத்தில் முழுமையாக எனக் கூறப்பட்டுள்ளது.

உதாரணமாக ஒருவருக்கு நின்று தொழ இயலவில்லை என்றால் அமர்ந்து தொழலாம் என்ற அனுமதி உள்ளது. அது போல் நோய், வயோதிகம் காரணமாக நோன்புக்கு விதிவிலக்கு

உண்டு. ஆனால் தடை செய்யப்பட்டவைக்கு முடிந்தால் என்ற நிபந்தனை ஏதும் அளிக்கப்படவில்லை. அவற்றை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.

ஒரு காரியம் செய்வதற்குத் தான் சக்தி வேண்டும். எந்த காரியத்திளிருந்தும் விலகி இருப்பதற்கு சக்தி வேண்டியதில்லை.

எனினும் தடை செய்யப்பட சில, தவிர்க்க முடியாத வேளையில் அனுமதிக்கப்படும். உதாரணமாக ஹராமாக்கப்பட்ட உணவு, தவிர்க்க முடியாத காரணத்தால் உயிர் காக்கும் பொருட்டு அந்த சமயத்தில் தேவையான அளவுக்கு அனுமதி உண்டு. இவை போன்றவை நிர்பந்த சூழ்நிலையில் தான் அனுமதிக்கப்படுகிறது. அது போல் புகைப்படம் எடுப்பது போன்றவை.

இந்த ஹதீதில் முன் சென்ற சமுகத்தினாரான யூதர்களும், கிருத்துவர்களும் தங்கள் தூதர்களிடம் அதிகமான கேள்வி கேட்பது மற்றும் அவர்களுடன் கருத்து வேறுபாடு கொள்வது பற்றிக் கூறப்பட்டுள்ளது. யூதர்களிடம் ஒரு பசுமாட்டை அறுக்கச் சொன்னபோது, விருப்பம் இல்லாத அவர்கள், அந்த மாடு என்ன நிறம் போன்று பல கேள்விகளைக் கேட்டார்கள். ஹவாரிகள் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களிடம் தங்களுக்காக அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா ஒரு உணவை வானிலிருந்து இறக்கவேண்டும் என வினவினார்கள்.

மார்க்க விளக்கத்தை தெரிவதற்காக கேள்வி கேட்பது அறிவுறுத்தப்பட்ட ஒன்றாகும். அத்தியாயம் நஹ்ல் 43

فَاسْأَلُوا أَهْلَ الذِّكْرِ إِن كُنتُمْ لَا تَعْلَمُونَ ﴿٤٣﴾

“நீங்கள் (இதனை) அறிந்து கொள்ளாமலிருந்தால். (முந்திய) வேத ஞானம் பெற்றோரிடம் கேட்டறிந்து கொள்ளுங்கள்” (என்று கூறுவீராக).

ஆனால் தேவை இல்லாத, சோதனை செய்யும் நோக்கில், அல்லது குழப்பம் விளைவிக்க கேள்வி கேட்பது, துருவித் துருவி கேட்பதும் தடுக்கப்பட்டதாகும்.

தூதர்களுடன் கருத்து வேறுபாடு கொள்வதும் கூடாது. முக்கியமாக தெளிவான விஷயங்கள் குறித்து ஹதீதுகளுக்கு முரணபடக் கூடாது.

யூதர்கள் மூஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களுடன் தப்பிச் செல்லும் வழியில் குறுக்கே ஒரு கடல் வந்தபோது, தங்களை அவர்கள் இவ்வாறு ஃபிர்அவுனுக்கும், கடலுக்கும் இடையில் மாட்டி விட்டதாகக் குறை கூறினார்கள். அது போல ஒரு சமயம் போர் புரிய மூஸா அலைஹிஸ் ஸலாம் அழைத்தபோது, அவர்களும் அவர்களுடைய இறைவனும் சென்று போரிடுமாறு கூறிவிட்டனர். இவ்வாறு அவர்கள் தங்களின் தூதருடன் கருத்து வேறுபாடு கொண்டனர்.

இவ்வாறு நாம் நம் தூதர் விஷயத்தில் கருத்து வேறுபாடு ஏதும் கொள்ளாமலும், அவர்கள் ஏவிவவற்றயை செய்து, தடுத்தவற்றை விட்டு விலகும் பாக்கியத்தை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நமக்கு அளிப்பானாக!

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 10

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி

الحديث العاشر

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ ﷺ "إِنَّ اللَّهَ طَيِّبٌ لَا يَقْبَلُ إِلَّا طَيِّبًا، وَإِنَّ اللَّهَ أَمَرَ الْمُؤْمِنِينَ بِمَا أَمَرَ بِهِ الْمُرْسَلِينَ فَقَالَ تَعَالَى: "يَا أَيُّهَا الرُّسُلُ كُلُوا مِنْ الطَّيِّبَاتِ وَاعْمَلُوا صَالِحًا"، وَقَالَ تَعَالَى: "يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا كُلُوا مِنْ طَيِّبَاتِ مَا رَزَقْنَاكُمْ" ثُمَّ ذَكَرَ الرَّجُلَ يُطِيلُ السَّفَرَ أَشْعَثَ أَغْبَرَ يَمُدُّ يَدَيْهِ إِلَى السَّمَاءِ: يَا رَبِّ! يَا رَبِّ! وَمَطْعَمُهُ حَرَامٌ، وَمَشْرَبُهُ حَرَامٌ، وَمَلْبَسُهُ حَرَامٌ، وَغُذِّيَ بِالْحَرَامِ، فَأَنَّى يُسْتَجَابُ لَهُ؟ ".رَوَاهُ مُسْلِمٌ".

இந்த ஹதீதை அறிவித்தவர் அபு ஹுரைராஹ் ரழியல்லாஹு அன்ஹு ஆவார்.

"மக்களே! அல்லாஹ் தூயவன். தூய்மையானதையே அவன் ஏற்கின்றான். அல்லாஹ் தன்னுடைய தூதர்களுக் குக் கட்டளையிட்டவற்றையே இறை நம்பிக்கை யாளர்களுக்கும் கட்டளையிட்டுள்ளான்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறிவிட்டு(ப் பின்வரும் இரு வசனங்களை) ஓதிக்காட்டினார்கள்:

தூதர்களே! தூய்மையான பொருள்களி லிருந்து உண்ணுங்கள். நற்செயலைச் செய்யுங்கள். திண்ணமாக நான், நீங்கள் செய்வதை நன்கு அறிபவன் ஆவேன் (23:51). "நம்பிக்கையாளர்களே! நாம் உங்களுக்கு வழங்கிய தூய்மையான பொருள்களிலிருந்து உண்ணுங்கள். நீங்கள் (உண்மையில்) அல்லாஹ்வைத் தான் வணங்குகிறீர்களென்றால், அவனுக்கு நன்றி பாராட்டுங்கள் (2:172).

பிறகு ஒரு மனிதரைப் பற்றிச் சொன்னார்கள். "அவர் தலைவிரி கோலத்துடனும் புழுதி படிந்த நிலையிலும் நீண்ட பயணம் மேற்கொள்கிறார். அவர் தம் கரங்களை வானை நோக்கி உயர்த்தி "என் இறைவா, என் இறைவா" என்று பிரார்த்திக் கிறார். ஆனால், அவர் உண்ணும் உணவு தடைசெய்யப்பட்டதாக இருக்கிறது. அவர் அருந்தும் பானம் தடைசெய்யப்பட்டதாக இருக்கிறது. அவர் அணியும் உடை தடை செய்யப்பட்டதாக இருக்கிறது. தடை செய்யப் பட்ட உணவையே அவர் உட்கொண்டிருக்கி றார். இத்தகையவருக்கு எவ்வாறு (அவரது பிரார்த்தனை) ஏற்கப்படும்?" என்று கூறினார்கள். - அறிவிப்பவர்:அபூஹுரைரா (ரலி) அவர்கள் நூல்: புகாரி முஸ்லிம்.

அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா தூய்மையானவன். அவனுக்கு தூய்மையான பல பெயர்கள் உண்டு. அந்த அனைத்து பெயர்களும் எவ்வித குறையும் இல்லாமல், தூய்மையானவையாகும். ஸுப்ஹானல்லாஹ் என அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா தூய்மையானவனாக உள்ளான். அடியார்களிடமிருந்தும் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா தூய்மையானவற்றைத்தான் ஏற்றுக் கொள்கிறான். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவுக்கு சிறு தூக்கமும், அல்லது ஆழ்ந்த உறக்கமும் (لَا تَأْخُذُهُ سِنَةٌ وَلَا نَوْمٌ)இல்லை. எனவே தூய்மையானவற்றைத்தான் உண்ண வேண்டும், மற்றும் தூய்மையானவற்றைத்தான் செய்ய வேண்டும் என அவன் அடியார்களிடத்தில் எதிர்பார்க்கிறான். அசுத்தமானதையும், கெட்டதையும் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா விரும்பமாட்டான்.

எனவே ஒரு செயலாக இருந்தாலும் அது நற்செயலாகவும், மார்க்கத்தில் சொல்லியவாறும் இருக்க வேண்டும். இதில் எது தவறினாலும் அது அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவினால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. உதாரணமாக தொழுகை நற்காரியம் தான். ஆனால் உளூ இல்லாமல் தொழுதால் அதனை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா ஏற்றுக்

கொள்ள மாட்டான். அது தூய்மை இல்லாத தொழுகையாகும். அதுபோல் தவறான வழியில் ஈட்டிய எந்த செல்வத்தைக் கொண்டும் தர்மம் செய்தாலோ அல்லது ஹஜ், உம்ரா போன்ற வணக்கத்தில் ஈடுபட்டாலோ அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா எவ்வாறு ஏற்றுக் கொள்வான்? மாறாக அது கெட்டதாகும்.

மற்றொரு ஹதீதில் கூறப்பட்டுள்ளதாவது: ஒரு அடியான் சுத்தாமான வழியில் ஒரு பேரிச்சம்பழத்தை கொடுக்கிறாரோ, அவருக்கு அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா அதனை ஒரு ஆட்டை வளர்ப்பது போல வளர்த்து விடுகிறான். அது மலையளவு பெருகிவிடும். அது தூய்மையானதாக இருக்க வேண்டும்.

இவ்வாறு அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நபிமார்களுக்கும், முஃமீன்களுக்கும் கூறுகிறான். நபிமார்கள் முஃமீன்களுக்கு முன்மாதிரியாக, வழிகாட்டிகளாக அவன் ஆக்கியுள்ளான்.

அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா எவற்றையெல்லாம் ஹலாலாக ஆக்கினானோ அவை எல்லாம் தூய்மையானதாக இருக்கும். தடை செய்யப்பட்டவை அசுத்தமாகும். ஹலாலானவற்றை நாம் தவறான வழியில் ஈட்டினால் அவையும் ஹராமாக ஆகிவிடும். சுத்தம் அசுத்தமாக ஆகிவிடும். திருடிய கோழியை அருந்தினால், அனுமதிக்கப்பட்ட கோழி ஹராமாகிவிடும்.

அடுத்து நீண்ட பயணத்தை மேற்கொள்ளும் ஒரு நபர் குறித்து ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறுகிறார்கள். மூன்று நபர்களின் துஆக்கள் மறுக்கப்படாமல் ஏற்றுக் கொள்ளப்படும். பயணி, தாய் தந்தையர் தம் மகனுக்குக் கேட்கும் துஆ, மற்றும் அநீதி இழைக்கப்பவரின் துஆ (அல்லது நோன்பாளி) ஆகியன. இந்த நபர் நீண்ட பயணத்தில் உள்ளவர். தன்னைப் பற்றி கவலைப்பாடாமல், துஆவின் மீது முழு கவனம் செலுத்திக் கேட்கிறார். முழு கவனத்துடன் கேட்கப்படும் துஆ ஏற்றுக் கொள்ளப்படும் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். இவ்வாறு பயணி, முழுக் கவனம் என்ற இரண்டு விஷயங்கள் அவருக்கு துஆ ஏற்றுக் கொள்ளப்பட சாதகமாக உள்ளன. அவர் மேலும் தம் இரண்டு கரங்களையும் வான் நோக்கி நீட்டியவாறு துஆ கேட்கிறார். சங்கை மிக்க அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா தன்னை நோக்கி இரண்டு கரங்களையும் வான் நோக்கி நீட்டியவாறு துஆ கேட்கும்போது, வெறும் கையுடன் திரும்ப அனுப்புவது குறித்து வெட்கப்படுகிறான் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். இந்த மூன்றாவது விஷயமும் அவருக்கு துஆ ஏற்றுக் கொள்ளப்பட சாதகமாக உள்ளது.

நான்காவதாக அவர் 'எனது இரட்சகனே! எனது இரட்சகனே!' என அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவின் அழகிய ஒரு திருநாமம் கூறி துஆ கேட்கிறார். துஆ கேட்கும்போது அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவின் அழகிய திருநாமம் கூறி துஆ கேட்க வேண்டும் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள. ரப்பி மற்றும் ரப்பனா என நாம் அதிகம் கேட்போம். அவ்வாறு துஆ செய்யும் போதும் துஆ ஏற்றுக் கொள்ளப்படும். இதுவும் அவருக்கு துஆ ஏற்றுக் கொள்ளப்பட சாதகமாக உள்ளது.

எனினும் அவர் உண்ணும் உணவு ஹராமாக உள்ளது. அவர் அருந்தும் பானமும் ஹராமாக உள்ளது. அவர் உடுத்தும் ஆடையும் ஹராமான பொருளில் வாங்கியாதாக உள்ளது. இப்படி எல்லாம் ஹராமாக இருக்கும்போது அவரது எப்படி துஆ ஏற்றுக் கொள்ளப்படும் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் வினவுகிறார்கள்.

என்னென்ன காரணமாக துஆ ஏற்றுக் கொள்ளப்படும் என ஒவ்வொன்று நிலையையும் எடுத்துக் கொண்டு துஆ செய்தாலும், ஹராமானவற்றைப் பயன்படுத்தினால் துஆ என்றுக் கொள்ளப்படாது. ஹலாலான ஒன்றைப் பயன்படுத்தினால்தான் துஆ ஏற்றுக் கொள்ள ஏதுவாகும்.

தூய்மையானதை ஹலாலாக ஆக்கவும், அசுத்தத்தை ஹராமாக ஆக்க்கவும்தன் இந்த நபி வந்துள்ளாதாக அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா கூறுகிறான். சிகரெட், பீடி போன்றவையும் கெட்டத்துதான். பயன்படுத்தும் மக்களிடம் கேட்டால் அவர்களே கெட்டது என்றுதான் கூறுவார்கள். அவற்றைப் பயன்படுத்துவது கூடாது என்பது போல அவற்றை வைத்து வியாபாரம் செய்து ஈட்டுவதும் கூடாதுதான். நிர்பந்தத்தின் காரணமாக என்று கூற முடியாது. அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவிடம் ஹலாலான ரிஸ்கைக் கேட்க வேண்டும். நாமும் ஹலாலான வழியில் பொருள் ஈட்ட முயல வேண்டும். அதற்காகக் கவலை கொள்ள வேண்டும். ரிஸ்க் வழங்கக் கூடியவன் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாதான்.

ஒரு நபர் இப்ராஹீம் இப்னு அத்ஹம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களிடம் வந்து தமக்கு அதிகம் குழந்தைகள் இருப்பதாகக் கூறினார். அவரது குழந்தைகளில் யாருக்கு அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா ரிஸ்க் அளிக்க மாட்டான் என அவர் நினைக்கிறாரோ அந்தக் குழந்தையைத் தம்மிடம் அளிக்குமாறு கூறினார். அவர் ஏதும் கூறாமல் சென்று விட்டார். எல்லோருக்கும் ரிஸ்க் அளிப்பவன் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா தான்.

ஹலாலான ரிஸ்கை நம் அனைவருக்கும் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா அளிப்பானாக!

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 11

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

الحديث الحادي عشر

عَنْ أَبِي مُحَمَّدٍ الْحَسَنِ بْنِ عَلِيِّ بْنِ أَبِي طَالِبٍ سِبْطِ رَسُولِ اللَّهِ ﷺ وَرَيْحَانَتِهِ رَضِيَ اللَّهُ عَنْهُمَا، قَالَ: حَفِظْتُ مِنْ رَسُولِ اللَّهِ ﷺ "دَعْ مَا يُرِيبُك إلَى مَا لَا يُرِيبُك ".

رَوَاهُ التِّرْمِذِيُّ وَالنَّسَائِيّ ، وَقَالَ التِّرْمِذِيُّ: حَدِيثٌ حَسَنٌ صَحِيحٌ .

ஹதீஸ்- க க:

உனக்கு சந்தேகம் தருபவற்றை விட்டு விட்டு சந்தேகம் தராதவற்றின் பால் சென்று விடு என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் - அறிவிப்பவர்: ஹஸன் (ரலி) நூல்: திர்மிதி நஸாயீ

இதனை அறிவிப்பவர் ஹஸன் ரழியல்லாஹு அன்ஹு ஆவார். இவர் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மகளார் ஃபாத்திமா மற்றும் அலி ரழியல்லாஹு அன்ஹு ஆகியோரின் மகனாவார். மற்றொருவர் ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹு ஆவார்கள். இவர்கள் இருவரும் தங்களுக்கு அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா அளித்த (ரைஹானா பூவின்) நறுமணங்கள் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். மற்றொரு ஹதீதிம்படி இருவரும் சுவனத்தின் இளைஞர்களின் தலைவர்கள் எனக் கூறியுள்ளார்கள். இருவரில் ஹஸன் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் கூடுதலான சிறப்பு, அவர்கள் பற்றி ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியதாவது, “எனது இந்த மகன் இந்த உம்மத்திற்குத் தலைவனாக இருக்கிறார். பிரிந்திருக்கும் இரண்டு முஸ்லிம் கூட்டத்தினருக்கு இடையில் சமாதானத்தை ஏற்படுத்துவார்.” அலி ரழியல்லாஹு அன்ஹு மற்றும் முஆவியா ரழியல்லாஹு அன்ஹு ஆகிய இருவர் தலைமையில் இருந்த முஸ்லிம் கூட்டத்தினர் இடையில் சமாதானத்தை ஏற்படுத்தினார்கள்.

ஹஸன் ரழியல்லாஹு அன்ஹு விஷம் கொடுக்கப்பட்டு ஷஹீதாக்கப்பட்டார்கள். எனினும் சில கூட்டத்தினர் ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹு அவர்களை மட்டும் எடுத்துக் கொண்டு பேசுவதற்குக் காரணம், அப்போதுதான் அவர்கள் ஸஹாபாக்கள் சிலரைக் குறித்து அவதூறு கூற முடியும் என்பதால்தான். குறிப்பாக முஆவியா ரழியல்லாஹு அன்ஹு குறித்து அவர்களால் அவதூறு கூற முடியும்.

இந்த இருவரும் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால், இருவர்களையும் நேசிப்பது ஈமானைச் சேர்ந்ததாகும். அவர்களை நேசிப்பவர்கள் தங்களை நேசிப்பவர்களாக ஆவார்கள் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். அதுபோல் யார் அவர்கள் இருவரையும் வெறுப்பவர்கள் தங்களை வெறுப்பவர்களாக ஆவார்கள் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள்.

இந்த ஹதீதில் நமக்கு சந்தேகம் தருபவைகளை விட்டுவிட்டு, சந்தேகம் வராதவற்றை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று அறிவுறுத்தப் பட்டுள்ளது. நன்மை என்றால் நற்குணங்கள் ஆகும் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். தீமை என்றால் நம் உள்ளத்தில் உறுத்துவது என்ற அழகான வரைவிலக்கணத்தை ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். நம்மில் சிலர் உள்ளத்தை உறுத்தும்

சில விஷயங்கள் குறித்து தங்களுக்குத் தவறு எனத் தோன்றினாலும், அறிஞர்களிடம் அது குறித்துக் கேட்டுக் கொண்டே இருப்பார்கள். பலர் அவற்றைத் தவறு என்று கூறினாலும், யாராவது ஒருவர் சரி எனச் சொல்ல மாட்டார்களா என எதிர்பார்ப்பார்கள்.

ஆனால் உள்ளத்தில் உறுத்துவது தவறானது என இந்த ஹதீதில் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். சந்தேகம் வந்துவிட்டால் அதனை விட்டு விட்டு அது அல்லாத காரியத்தில் நாம் ஈடுபட வேண்டும். இந்த ஹதீதைக் கொண்டு ஒரு தீர்வும் எடுக்கப்படுகிறது. அது, உறுதியான ஒரு விஷயத்தை, உறுதியான மற்றொரு விஷயத்தைக் கொண்டுதான் நீக்க வேண்டும் என்பதாகும். வேறு விதமாகச் சொல்வதென்றால், சந்தேகத்தைக் கொண்டு உறுதியான விஷயத்தை நீக்க முடியாது என்பதாகும். உதாரணமாக ஒருவர் உளூ செய்துவிட்டுத் தொழுகிறார். ஆனால் அவருக்குத் தமது உளூ முறிந்து விட்டதா என சந்தேகம் வந்துவிட்டது. இதற்கான தீர்வானது, உளூ முறிந்து விட்டது என்ற சந்தேகம் உறுதியாகிவிட்டால், மறுபடியும் உளூ செய்து தொழ வேண்டும். எனினும் உளூ முறிந்ததா என்ற சந்தேக நிலையில், உளூ செய்தது உறுதியான விஷயமாக இருந்தால், சந்தேகத்தை விட்டுவிட்டு உறுதியான நிலையை எடுத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு சந்தேகத்தை ஏற்படுத்துவது ஷைத்தானின் சூழ்ச்சிதான் என்பதால் அது நம்மை வீழ்த்த விடக் கூடாது.

அது போல ஒருவர் சிறுநீர் கழித்து விட்டு உளூ செய்து விட்டார். ஆனால் சிறிது நேரம் சென்ற பிறகு சிறுநீர் கழித்து விட்ட பின்னர் தாம் உளூ செய்தாரா இல்லையா என்ற சந்தேகம் அவருக்கு வந்து விட்டது. அப்போது அவருக்குத் தாம் சிறுநீர் கழித்தது உறுதியானதாகவும், உளூ செய்தது சந்தேகமாகவும் இருந்தால், அவர் மீண்டும் உளூ செய்ய வேண்டும்.

அது போல நான்காவது ரகஅத் தொழுதாரா என்று சந்தேகம் ஏற்பட்டால், அவரது விஷயத்தில் மூன்று ரகஅத் தொழுதது சந்தேகம் இல்லாத ஒன்று என்பதால், அவர் அதனை எடுத்துக் கொண்டு நான்காவது ரகஅத் தொழுது முடிக்க வேண்டும்.

ஒருவரின் துணியில் தண்ணீர் தெறித்து விட்டது. எனினும் அதில் அசுத்தம் கலந்துள்ளதா என சந்தேகம் வந்தால், தண்ணீர் சுத்தமானது என்பது அடிப்படையானது   அதனை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாது இந்த ஹதீதின் அடிப்படையில் நாம் செயல் பட்டால், நாம் ஷைத்தானின் ஊசாட்டத்திலிருந்து நம்மைக் காத்துக் கொள்ளலாம். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவிடமும் நாம் துஆ கேட்டு நம்மைக் சீர்படுத்திக் கொள்ளலாம். நம்மை இவ்வித சந்தேகத்திலிருந்து அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா பாதுகாப்பானாக!

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 12

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி

الحديث الثاني عشر

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ ﷺ" مِنْ حُسْنِ إسْلَامِ الْمَرْءِ تَرْكُهُ مَا لَا يَعْنِيهِ". حَدِيثٌ حَسَنٌ، رَوَاهُ التِّرْمِذِيُّ، ابن ماجه

ஹதீஸ்- க உ:

ஒரு முஸ்லிம் தனக்கு சம்பந்தமில்லாதவை களை விட்டு விடுவதே இஸ்லாத்தின் சிறந்த காரியமாகும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்:அபூஹுரைரா(ரலி) நூல்: திர்மிதி

இந்த ஹதீதை அறிவித்தவர் அபு ஹுரைராஹ் ரழியல்லாஹு அன்ஹு ஆவார். இந்த ஹதீதில் நல்ல முச்ளிமுக்கான அடியாளமாக தமக்குச் சம்பந்தமில்லாதவற்றை விட்டு விடுதல் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். கடந்த ஹதீதில் ஹலால் மற்றும் ஹராம் அனைத்தும் தெளிவானது என அறிந்தோம். ஒரு நல்ல முஸ்லிம் ஒரு ஹலாலான காரியமாக இருந்தாலும் அதனைச் செய்தால் தமக்கு நன்மை ஏதும் உண்டா எனவும், மறுமையில் தமக்குப் பயன் அளிக்கும்மா என ஆய்ந்து, அப்படி என்றால் அதனைச் செய்வார்கள். அவ்வாறு இல்லை என்றால் ஹலாலையும் செய்யாமல் இருப்பார்கள். செய்ய வேண்டிய கட்டாயம் இல்லை என்றால், பயன் இல்லாத ஒன்றையும் விட்டு விடுவார்கள். இந்த நிலைப்பாட்டைத் தான் துஹ்த் என்று அறிஞர்கள் சொல்வார்கள். இதததகைய மக்களைத் தாஹித் என்பார்கள்.

அத்தியாயம் முஃமினூன் 1-3

قَدْ أَفْلَحَ الْمُؤْمِنُونَ ﴿١﴾ الَّذِينَ هُمْ فِي صَلَاتِهِمْ خَاشِعُونَ ﴿٢﴾ وَالَّذِينَ هُمْ عَنِ اللَّغْوِ مُعْرِضُونَ ﴿٣﴾

ஈமான் கொண்டவர்கள் நிச்சயமாக வெற்றி பெற்று விட்டனர். அவர்கள் எத்தகையயோரென்றால், தங்கள் தொழுகையில் உள்ளச்சத்தோடு இருப்பார்கள். இன்னும், அவர்கள் வீணான (பேச்சு, செயல் ஆகிய)வற்றை விட்டு விலகியிருப்பார்கள்.

உதாரணமாக தூங்குவது அனுமதிக்கப்பட்ட ஒன்று என்றாலும், தமக்கு அப்போது நேரமிருக்கிறது என்பதற்காகத் தேவையில்லாமல் தூங்க மாட்டார். அது போல தேவையில்லாத காரியம் குறித்து பேசுவது, தேவை இல்லாத விளையாட்டுகள் அனைத்தும் தவிர்த்துக் கொள்வது நல்ல முஸ்லிமின் அடையாளமாகும். குறிப்பாக தேவையில்லாத பேச்சு கட்டாயம் தவிர்க்க வேண்டும். தேவையில்லாத பேச்சு நரகில் கொண்டு சேர்க்க கூடும் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள்.

உதாரணமாக சிலர் குழைந்தை பெறாத நிலையில் அது குறித்து அவரிடம் மனம் வருத்தமடையும் விதத்தில் பேசுவது. ஒருவரின் வேலை குறித்தும், அவரது வருமானம் குறித்தும் குறை கூறிப் பேசுவதனால், தவறான வழியில் அவரைச் செல்லத் தூண்டக் கூடும். இதுபோன்ற தேவையற்ற காரியங்களைக் குறித்து நாம் ஆய்ந்து, அவை தேவை இல்லை என்று தெளிவாகத் தெரிந்தால் விட்டு விலக வேண்டும். அப்படிப்பட்ட தேவையற்ற காரியங்களிலிருந்து நாம் விலகி இருக்கும் பாக்கியத்தை அல்லாஹ் நமக்கு அளிப்பானாக!

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 13

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

الحديث الثالث عشر

عَنْ أَبِي حَمْزَةَ أَنَسِ بْنِ مَالِكٍ ﷺ خَادِمِ رَسُولِ اللَّهِ ﷺ عَنْ النَّبِيِّ ﷺ قَالَ: "لَا يُؤْمِنُ أَحَدُكُمْ حَتَّى يُحِبَّ لِأَخِيهِ مَا يُحِبُّ لِنَفْسِهِ ." (رَوَاهُ الْبُخَارِيُّ وَمُسْلِمٌ)

ஹதீஸ்- க ந:

தனக்கு விரும்புவதை தன் சகோதரனுக்கு விரும்பாதவரை உங்களில் எவரும் விசுவாசி யாக மாட்டார் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் அறிவிப்பவர்: அனஸ்(ரலி) அவர்கள் நூல்:புகாரி முஸ்லிம்

இந்த ஹதீதை அறிவித்தவர் அனஸ் ரழியல்லாஹு அன்ஹு ஆவார். அவரது தந்தை மாலிக் ஆவார். தாய் உம்மு ஸுலைம் ரழியல்லாஹு அன்ஹா ஆவார். அவரது பத்தாவது வயதில் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் ஹிஜ்ரத் செய்தார்கள். அவர்களுக்குப் பணியாளராக அனஸ் ரழியல்லாஹு அன்ஹுவை அவரது தாயார் விட்டுச் சென்றார். அவருடைய செல்வத்திலும், வயதிலும் பரக்கத் செய்யுமாறு அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவிடம் துஆ ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் செய்தார்கள். அவர் நூற்று மூன்று வயது வாழ்ந்தார்கள். அவருக்குக் குழந்தைகள் மற்றும் பேரக்குழந்தைகள் என சுமார் நூறுபேர் இருந்தார்கள்.

தமக்கு விரும்புவதையே தமது சகோதரருக்கும் விரும்பாதவரை ஒருவர் விசுவாசியாக மாட்டார் என இந்த ஹதீது குறிப்பிடுகிறது. எனினும் அவர் காஃபிர் ஆகிவிடுவார் என்று பொருள் அல்ல. அவர் பரிபூரணமான விசுவாசியாக ஆக முடியாது என்பதே பொருளாகும். மற்றொரு ஹதீதில் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள், "விசுவாசி ஆகமாட்டார்! விசுவாசி ஆகமாட்டார்! விசுவாசி ஆகமாட்டார்!" என மூன்று தடவைகள் கூறியபோது, யார் என ஸஹாபாக்கள் வினவினார்கள். "யாருடைய அண்டை வீட்டார், அவரிடமிருந்து பாதுகாப்பு பெறவில்லையோ, அவர் விசுவாசி ஆகமாட்டார்." என அவர்கள் கூறினார்கள். எனினும் அவர் காஃபிர் ஆகிவிடுவார் என்று பொருள் அல்ல. அவர் பரிபூரணமான விசுவாசியாக ஆக முடியாது என்பதே பொருளாகும்.

மற்றொரு ஹதீதில் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள், "சாப்பாடு வந்துவிட்டால் தொழுகை இல்லை" இதன் பொருள் பசியோடு இருக்கும்போது தொழுதால், அதில் ஈடுபாடு இருக்காது என்பதாகும். தொழுகையின் பரிபூரண நன்மை கிடைக்காது என்பதுதான் பொருளே அன்றி தொழுகை இல்லை என்று பொருள் அல்ல. இது போலத்தான், முன் சொன்ன ஹதீதில் விசுவாசி இல்லை என்றால் காஃபிர் ஆகிவிடுவார் என்று பொருள் அல்ல. பரிபூரணமான விசுவாசியாக ஆக முடியாது என்பதே பொருளாகும்.

விசுவாசத்தைப் பாதுகாப்பது கடமை என்பதால், நாம் விரும்புவதையே தம் சகோதரருக்கும் விரும்ப வேண்டும். இதன அடிப்படையில் நாம் மற்றவர்கள் கொண்டுள்ள நல்லவை குறித்துப் பொறாமை கொள்ளக் கூடாது. ஏனெனில் அவற்றை நாமும் விரும்புவோம் என்பதால், அவர்கள் கொண்டிருப்பது குறித்து மகிழ்ச்சியே கொள்ள வேண்டும்.

அது போல் பிறர் குறைகளைக் குறித்து நாம் புறம் பேசக்கூடாது. நம்மைக் குறித்து மற்றவர்கள் பேசுவதை நாம் விரும்பாதது போல நாமும் அவ்வாறு பேசக்கூடாது. நாம் மற்றவர்களிடம்

ஏமாற விரும்ப மாட்டோம் என்பதால் அதுபோல நாமும் பிறரை மோசடி செய்யக்கூடாது. நமது மகள் அடுத்த வீட்டில் நலமாக இருக்க வேண்டும் என நாம் நினைப்பது போல, நாமும் நம் வீட்டிருக்கு வரும் மருமகளை நன்றாக வைத்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு இந்த ஹதீது நமது எண்ணங்கள் அனைத்தையும் சீராக வைக்கப் போதுமானதாக இருக்கிறது. அப்படிப்பட்ட வாழ்கையை நாம் வாழ அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நல்லருள் புரிவானாக!

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 14

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி

الحديث الرابع عشر

عَنْ ابْنِ مَسْعُودٍ ﷺ قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ ﷺ" لَا يَحِلُّ دَمُ امْرِئٍ مُسْلِمٍ [يشهد أن لا إله إلا الله، وأني رسول الله] إلَّا بِإِحْدَى ثَلَاثٍ: الثَّيِّبُ الزَّانِي، وَالنَّفْسُ بِالنَّفْسِ، وَالتَّارِكُ لِدِينِهِ الْمُفَارِقُ لِلْجَمَاعَةِ ." (رَوَاهُ الْبُخَارِيُّ ، وَمُسْلِمٌ)

ஹதீஸ்-14:

'அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறெவரு மில்லை. நான் அல்லாஹ்வின் தூதராவேன் ' என உறுதி மொழி கூறிய முஸ்லி மான எந்த மனிதரையும் மூன்று காரணங்களில் ஒன்றை முன்னிட்டே தவிர வேறெதற்காகவும் கொலை செய்ய அனுமதி இல்லை.

(அவை:) 1. ஒரு மனிதரைக் கொலை செய்ததற்கு பதிலாகக் கொலை செய்வது.

2. திருமணமானவன் விபசாரம் செய்வது.

3. 'ஜமாஅத்' எனும் முஸ்லிம் சமூகக் கூட்ட மைப்பைக் கைவிட்டு, மார்க்கத்திலிருந்தே வெளியேறி விடுவது.

என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் அறிவிப்பவர்: இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் நூல்:புகாரி முஸ்லிம்

இந்த ஹதீதை அறிவித்தவர் அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் ரழியல்லாஹு அன்ஹு ஆவார். கொலை செய்வது அவர் முஸ்லிமாக இருந்தாலும் அல்லது வேறு யாராக இருந்தாலும் பெரும் பாவங்களில் ஒன்றாகும்.

ஒரு மனிதனைக் கொல்வது ஒரு சமுதாயத்தை கொல்வதைப் போல என அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா குர்ஆனில் கூறியுள்ளான். இந்த அளவு எச்சரிக்கை வேறு எந்த மார்க்கத்திலும் சொல்லப்பட்டிருக்காது.

அந் நிஸா 93

وَمَن يَقْتُلْ مُؤْمِنًا مُّتَعَمِّدًا فَجَزَاؤُهُ جَهَنَّمُ خَالِدًا فِيهَا وَغَضِبَ اللَّـهُ عَلَيْهِ وَلَعَنَهُ وَأَعَدَّ لَهُ عَذَابًا عَظِيمًا ﴿٩٣﴾

எவனேனும் ஒருவன், ஒரு முஃமினை வேண்டுமென்றே கொலை செய்வானாயின் அவனுக்கு உரிய தண்டனை நரகமே ஆகும். என்றென்றும் அங்கேயே தங்குவான். அல்லாஹ் அவன் மீது கோபம் கொள்கிறான்; இன்னும் அவனைச் சபிக்கிறான். அவனுக்கு மகத்தான வேதனையையும் (அல்லாஹ்) தயாரித்திருக்கிறான்.

எனவே கொலை செய்வது மிகப் பெரிய பாவமாகும். போர் சமயத்தில் கொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தாலும் யாரையெல்லாம் கொல்லக்கூடாது என வரைமுறை உள்ளது. நம்முடன் உடன்படிக்கை செய்தவர்கள், நம்மிடம் அடிக்கலாம் புகுந்தவர்கள், நம்முடைய ஆட்சியை ஏற்றுக்கொண்டு அதற்கான வரியை செலுத்துபவர்கள் அகியோர்களைக் கொல்லக்கூடாது.

ஷஹாதா சொன்னவரை மூன்று காரணத்தைத் தவிர கொல்லக்கூடாது. ஷஹாதா சொன்னவரின் இரத்தம் புனிதமானதாகும். முன் சொன்ன காரணமும் இஸ்லாமிய ஆட்சியில் தான் நடைமுறைப் படுத்த முடியும். தனிப்பட்ட நபர் யாரும் அக்காரனத்திர்காக ஒருவரைக் கொல்ல முடியாது.

திருமணத்திற்குப் பிறகு விபச்சாரம் செய்தால் கொல்லப்படுவார். திருமணம் செய்யாதவருக்கு அந்த தண்டனை இல்லை. அதற்கு நூறு கசையடி கொடுக்க வேண்டும். சில ஹதீதுகளின் அடிப்படையில் அத்துடன் ஒரு வருடம் ஊரை விட்டு நீக்கி வைக்க வேண்டும். இமாம் அபு ஹனீஃபா ரஹ்மத்துல்லாஹி அலைஹியின் கருத்தின்படி ஊரை விட்டு நீக்கி வைப்பது நீதிபதியின் முடிவைப் பொறுத்தது ஆகும்.

விபச்சாரம் செய்தவருக்கு கொலை தண்டனை இறக்கும்வரைக் கல்லால் (ரஜம்)எரிந்து கொல்வதாகும். இந்த வழிமுறையைக் கொடூரம் என ஒரு போதும் நிறுத்தக் கூடாது. அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா ஏற்படுத்தும் சட்டம்தான் மனிதருக்குப் பொருத்தமான சட்டமாகும். சிலர் இந்த முறையை மறுக்கிறார்கள். ஆனால் இது ஆதாரப்பூர்வமான ஒன்றாகும். உமர் ரழியல்லாஹு அன்ஹு இது சத்தியமான ஒன்று எனவும், பிற்காலத்தில் இதனை சிலர் மறுக்கக் கூடும் எனக் கூறியுள்ளார்கள். ரஜம் செய்வதை மறுப்பவர்கள் காஃபிராக மாறக்கூடும். இதனை நிறைவேற்ற, குற்றத்திற்கு எதிராக நான்கு சாட்சிகள் இருக்க வேண்டும். அல்லது செய்தவர் ஒப்புக்கொள்ள வேண்டும். எட்டாம் நூற்றாண்டில் வந்த இப்னு தைமியாஹ், இதுவரை நான்கு நபர்கள் சாட்சி சொல்லி யாருக்கும் தண்டனை கொடுக்கப்படவில்லை. நான்கு சாட்சி கிடைப்பது மிகவும் கடினம். மேலும் பொய் சாட்சி சொன்னால் அவருக்கு எண்பது கசையடி கொடுக்க வேண்டும். அந்த அளவுக்கு ஒருவருடைய மானம் விஷயத்தில் கடுமையாக ஆக்கப்பட்டுள்ளது. தவறைத் தாமே ஒப்புக்கொண்டவருக்குத் தீர்ப்பு வழங்கலாம்.

இரண்டாவது காரணம் ஒரு கொலைக்குப் பகரமாக கொல்லப்பட வேண்டும். கொல்லும் நோக்கத்தில் இருந்தால்தான் அந்த தண்டனை. மேலும் குடும்பத்தினரால் மன்னிக்கப்பட்டு விட்டால் கொலை தண்டனை இல்லை. அதற்குப் பதிலாக நூறு ஒட்டகங்களைக் கொடுக்க வேண்டும். ஆனால் தவறுதலாகக் கொல்லப்பட்டிருந்தால், அதற்குத் தண்டமாக (பியத்) நூறு ஒட்டகங்களைக் கொடுக்க வேண்டும்.

இஸ்லாத்தை விட்டு வெளியேறியவன் கொல்லப்பட வேண்டும். மற்றொரு ஹதீதின்படி, யார் மார்க்கத்தை மாற்றினார்களோ அவர்கள் கொல்லப்பட வேண்டும். இவை ஆதாரப்பூர்வமான சட்டங்கள் ஆகும். தமக்கு ஒத்து வரவில்லை என அவற்றை மறுக்க முடியாது.

நாம் அவ்வாறு ஆதாரப்பூர்வமான ஹதீதுகளை ஏற்றுக் கொள்ளும் மக்களாக நம்மை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா ஆக்குவானாக!

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 15

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி

الحديث الخامس عشر

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ أَنَّ رَسُولَ اللَّهِ ﷺ قَالَ: "مَنْ كَانَ يُؤْمِنُ بِاَللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ فَلْيَقُلْ خَيْرًا أَوْ لِيَصْمُتْ، وَمَنْ كَانَ يُؤْمِنُ بِاَللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ فَلْيُكْرِمْ جَارَهُ، وَمَنْ كَانَ يُؤْمِنُ بِاَللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ فَلْيُكْرِمْ ضَيْفَهُ ".

رَوَاهُ الْبُخَارِيُّ ، وَمُسْلِمٌ

ஹதீஸ்-15:

எவர் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் விசுவாசம் கொண்டிருக்கிறாரோ அவர் பேசினால் நல்லதை பேசட்டும், அல்லது வாய் மூடி மௌனமாக இருக்கட்டும். எவர் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் விசுவாசம் கொண்டிருக்கிறாரோ அவர் தனது அண்டைவீட்டாரை கௌரவப்படுத்தட்டும். எவர் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் விசுவாசம் கொண்டிருக்கிறாரோ அவர் தனது விருந்தாளியை கண்ணியப்படுத்தட்டும். என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்:அபூஹுரைரா(ரலி) அவர்கள் நூல்: புகாரி முஸ்லிம்.

இந்த ஹதீதை அறிவித்தவர் அபு ஹுரைராஹ் ரழியல்லாஹு அன்ஹு ஆவார். இந்த ஹதீதில் மூன்று விஷயங்கள் கூறப்பட்டுள்ளது. அவற்றைச் சொல்லும் முன்பாக ஈமான் குறித்து நினைவூட்டப்படுகிறது. இந்த ஈமான் உள்ளத்தில் மட்டும் இருந்தால் போதாது. வெளிப்படையில் நமது செயல்களில் இருக்க வேண்டும் என இவ்வாறு கூறப்பட்டுள்ளது. அவ்வாறு வெளிப்படவில்லை என்றால், ஈமான் கேள்விக்குறியாக ஆகிவிடும். எண்ணமும், செயலும் சேர்ந்துதான் நம்மைக் சீராக்க முடியும். மறுமை வாழ்க்கை பற்றிய அச்சம், நாம் நற்செயல் செய்யத் தூண்டும்.

நல்லதைப் பேசவேண்டும் அல்லது வாய் மூடி மௌனமாக இருக்க வேண்டும் என முதலாவதாக ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். நாவைக் கொண்டு திக்று செய்வது, துஆ செய்வது, உபதேசம் செய்வது போன்ற நல்லவற்றைச் செய்யும்போது நமக்குப் பயன் அளிக்கிறது. அதே நேரத்தில் பொய் பேசுவது, திட்டுவது, சண்டை மூட்டி விடுவது போன்ற காரியங்களில் ஈடு படுத்தினால் அவை பாவங்களில் முடியும். நாவைக் கொண்டு நரகம் வரலாம் என்ற ஹதீதை நாம் மறந்து விடக் கூடாது.

அத்தியாயம் காஃப் 19

مَّا يَلْفِظُ مِن قَوْلٍ إِلَّا لَدَيْهِ رَقِيبٌ عَتِيدٌ ﴿١٨﴾

கண்காணித்து எழுதக்கூடியவர் அவனிடம் (மனிதனிடம்) இல்லாமல் எந்த சொல்லையும் அவன் மொழிவதில்லை.

எனவே நாம் மொழியும் சொற்கள் தவறாக இருந்தால் அது பதியப்பட்டுவிடும். அது குறித்த விசாரணை உண்டு என நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

குத்பாவிலும் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் ‘குத்பதுல் ஹாஜாஹ்’வில் , நேரான சொல்லையே சொல்ல வேண்டும் என கூறுவார்கள்.

அத்தியாயம் அஹ்ஸாப்

ا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّـهَ وَقُولُوا قَوْلًا سَدِيدًا ﴿٧٠﴾

ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; (எந்நிலையிலும்) நேர்மையான சொல்லையே சொல்லுங்கள்.

தவறான பேச்சைப் பேசக்கூடாது. மற்றுமொரு ஹதீதில, யார் தம் இரண்டு தொடை, மற்றும் இரண்டு உதடுகளுக்கு இடையில் உள்ளதைக் குறித்து (தவறாகப் பயன்படுத்த மாட்டார் என)உத்தரவாதம் தந்தால், அவருக்கு தாங்கள் சுவனம் பெற்றுத் தரப் பொறுப்பு ஏற்பதாக ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். மக்கள் தவறான வழியில் போக இந்த இரண்டும் பயன்படும்.

எனவே நல்லதையே பேச வேண்டும், அல்லது பேசாமல் இருக்க வேண்டும். யார் அதிக நேரம் பேசாமல் இருப்பாரோ, அவர் தப்பித்து விட்டார் எனவும் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள்.

ஈமானை நினைவுபடுத்தி இரண்டாவதாக, ஒருவர் தம் அண்டை வீட்டாரைக் கௌரவப் படுத்த வேண்டும் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். அண்டை வீட்டார்களைப் பற்றி ஜிப்ரயீல் அலைஹிஸ் ஸலாம் கூறுகையில், பல விஷயங்களை கூறிய விதம் எந்த அளவுக்கு என்றால், தம் சொத்துக்களிலும் ஒருவர் பங்கு கொடுக்க வேண்டும் எனச் சொல்லிவிடுவார்களோ தாங்கள் நினைத்தார்கள் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். இந்த ஒரு கூற்றே அண்டை வீட்டாரிடம் நாம் கொள்ள வேண்டிய நடைமுறைகளை விளக்கிவிடும். தம் வீட்டில் தயாரித்த குழம்பில் சிறிது தண்ணீர் அதிகப்படுத்தியாவது தம் அண்டை வீட்டாருக்க்குக் கொடுக்குமாறு ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். மகிழ்வான நேரங்களில் நாம் அண்டை வீட்டாருடன் நாம் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

அபு ஹம்ஸா என்ற ஸலஃபி ரஹ்மத்துல்லாஹி அலைஹியின் அண்டை வீட்டார் ஒருவர் தம் வீட்டை 4000 வெள்ளிக் காசுக்கு விற்க முனைந்தார். ஆனால் அதனைப் பார்த்தவர்கள் அது 2000 வெள்ளிக் காசுக்குத்தான் மதிப்புள்ளதாகக் கூறினார்கள். இரண்டு மடங்கு விலைக் கூறக் காரணம் என்ன என்று கேட்டதற்கு, அதன் மதிப்பு 2000 வெள்ளிக் காசாக இருந்தாலும், மதிப்பு மிக்க அண்டை வீட்டார் அபு ஹம்ஸா என்ற ஸலஃபி ரஹ்மத்துல்லாஹி அலைஹியைக் கொண்டுள்ளதாகக் கூறினார். அதற்கான மதிப்புதான் இது என்றார்.

ஸலஃபி ஒருவர் வீட்டில் அதிகம் எலிகள் இருந்தன. அதற்கான தீர்வு என்ன என்று ஆலோசனை கேட்க, வீட்டில் ஒரு பூனை வளர்க்கலாம் என்று சொல்லப்பட்டது. அதற்கு அவர் உடன்படவில்லை. காரணம் கேட்கப்பட்டபோது, வெளியில் செல்லும் அந்த எலிகள் அண்டை வீட்டிற்கு அல்லவா செல்லும் என்பதால் என்று கூறினார். இந்த அளவுக்கு அவர்கள் அண்டை வீட்டாருக்கு ஏதும் தீங்கு ஏற்படக் கூடாது என மிகவும் எச்சரிக்கையாக இருந்தார்கள் என அறியலாம்.

ஆனால் நாமோ நம் வீட்டுக் குப்பைகளை அண்டை வீட்டார் அருகில் போடுவது, அவர்களுடன் சண்டை இடுவது, அவர்களுக்கு துன்பம் விளக்கும் வகையில் செய்வது போன்ற விஷயங்களில் பொடுபோக்காக இருக்கும் நிலையில் உள்ளோம்.

அண்டை வீட்டார் என்றால் ஒரு அறிவிப்பின்படி நாற்பது வீடுகள் என கூறப்படுகிறது. எனினும் அது பலவீனமான அறிவிப்பாகும். இவ்வாறு எடுப்பதில் சிரமம். அந்தந்த வழக்கப்படி நாம் அண்டை வீட்டார் அளவை எடுத்துக் கொள்ளலாம்.

அடுத்த உபதேசம், தமது விருந்தாளியைக் கண்ணியப்படுத்த வேண்டும். இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் விருந்தாளி இல்லாமல் இருக்க மாட்டார்கள். விருந்தாளியைக் கண்ணியப்படுத்துவத் என்பது, பேச்சால், வீட்டில் தங்கினால் கண்ணியப்படுத்துவது

போன்றவை. வீட்டில் தங்கும் விருந்தாளிக்குப் பிடித்த உணவை முதல் நாளில் அளிப்பது குறித்து ஒரு ஹதீதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அடுத்த இரண்டாம் மற்றும் மூன்றாம் நாட்களில் நம் உணவை அளிக்கலாம். மூன்று நாட்கள் விருந்தாளியின் உரிமையாகும். அதற்கு மேல் அதிகமாகத் தங்கினால், அவருக்கு அளிக்கும் அனைத்துக்கும் ஸதகா நன்மை கிடைக்கும்.

விருந்தாளி வீட்டை விட்டுச் செல்லும்போது, அவரை வாசல் வரை சென்று வழி அனுப்புவது ஸுன்னாஹ் ஆகும். அபு தல்ஹா ரழியல்லாஹு அன்ஹு, ஒரு விருந்தாளிக்கு உணவளிக்க நேர்ந்தது. வீட்டில் ஒருவருக்குப் போதுமான உணவுதான் இருந்தது. எனவே அதனை விருந்தாளிக்குக் கொடுத்து விட்டு, விளக்கை அணைத்துவிட்டு அவருடன் தாம் உண்பது போல் பாசாங்கு செய்து, விருந்தாளியை உண்ணச் செய்தார். இது குறித்து அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா பாராட்டி வசனத்தை இறக்கினான்.

அத்தியாயம் அல் ஹஷ்ர் 9

وَيُؤْثِرُونَ عَلَىٰ أَنفُسِهِمْ وَلَوْ كَانَ بِهِمْ خَصَاصَةٌ ۚ

தங்களுக்குத் தேவையிருந்த போதிலும், தங்களைவிட அவர்களையே (உதவி பெறுவதற்குத் தக்கவர்களாகத்) தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள்

விருந்தாளி வந்தால் நமக்குப் பரக்கத் என நாம் நினைக்க வேண்டும். அவர்கள் வந்தால் நமக்கு துன்பம் என நினைக்கக் கூடாது. நாம் விருந்தாளியாக சென்றால் கடைபிடிக்க வேண்டியது: ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள, “ஒரு விருந்தாளி நீண்ட நாட்கள் ஒரு வீட்டில் தங்குவது கூடாது. அந்த வீட்டில் உள்ளவரைப் பாவத்தில் செல்ல விடக்கூடாது “

இஸ்லாம் கூறும் இத்தகைய வழிகாட்டுதல்களைப் பின்பற்றி ஒழுகும் நன்மக்களாக நம்மை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா ஆக்குவானாக!

The Forty Hadith of Imam Nawawi - Hadith 16

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 16

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

الحديث السادس عشر

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ أَنَّ رَجُلًا قَالَ لِلنَّبِيِّ ﷺ أَوْصِنِي. قَالَ: لَا تَغْضَبْ، فَرَدَّدَ مِرَارًا، قَالَ: لَا تَغْضَبْ" . رَوَاهُ الْبُخَارِيُّ

ஹதீஸ்-16:

ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து எனக்கு நல்லுபதேசம் செய்யுங்கள் என்றார். அப்போது நபியவர்கள் நீ கோபப்படாதே என்றார்கள். அம்மனிதர் மீண்டும் மீண்டும் கேட்டார். அப்போதும் நீ கோபப்படாதே என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்:அபூஹுரைரா(ரலி) நூல்: புகாரி :

இந்த ஹதீதை அறிவித்தவர் அபு ஹுரைராஹ் ரழியல்லாஹு அன்ஹு ஆவார். கோபப்படுவது மனிதரின் இயற்கையான சுபாவம் தான். எனவே இங்கு ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியது, கோபத்தை வெளிப்படுத்தக் கூடாது என்பதாகும். கோபப்படக் கூடாது என்று சொல்வது சாத்தியப்படாத ஒன்றாகத் தான் இருக்கும். எனவே நாம் கோபத்தை வெளிக்காட்டாமல் அடக்க வேண்டும். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா கூறுகிறான்,

அத்தியாயம் ஆல இம்ரான் 134

وَالْكَاظِمِينَ الْغَيْظَ وَالْعَافِينَ عَنِ النَّاسِ ۗ وَاللَّـهُ يُحِبُّ الْمُحْسِنِينَ ﴿١٣٤﴾

தவிர கோபத்தை அடக்கி கொள்வார்கள்; மனிதர்(கள் செய்யும் பிழை)களை மன்னிப்போராய் இருப்பார்கள்; (இவ்வாறு அழகாக) நன்மை செய்வோரையே அல்லாஹ் நேசிக்கின்றான்.

கோபத்தை அடக்குபவர்கள் நன்மை செய்தவர்கள் என அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா கூறுகிறான். கோபம் வரக்கூடிய காரியம் செய்யப்பட்டாலும், நாம் அதனை வெளிக்காட்டாமல் அடக்க வேண்டும். மல்யுத்தத்தில் பிறரை வீழ்த்துவது பலசாலி அல்ல, மாறாக கோபம் வரும்போது அதனை அடக்கிக் கொள்பவர்தான் பலசாலி என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள்.

கோபமாக இருக்கும்போது சரியான முடிவை எடுக்க முடியாது. கோபம் தீர்ந்தபிறகு, நம் எடுத்த முடிவு தப்பு என புரிந்து கொள்வோம், எனவேதான் கோபமாக இருக்கும்போது இருவர் மத்தியில் தீர்ப்பு அளிக்கக் கூடாது என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள்.

யாருக்கேனும் நின்று கொண்டிருக்கும்போது கோபம் வந்தால் உட்கார்ந்து விட வேண்டும் எனவும், அப்போதும் இருந்தால் படுத்து விட வேண்டும் எனவும் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். அப்போது தண்ணீர் குடிக்க வேண்டும் அல்லது உளூ செய்ய வேண்டும் என நம் நிலையை மாற்றிக் கொண்டு தன கோபத்தை அடக்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

புஹாரியில் பதியப்பட்டுள்ள ஹதீதில், ஸுலைமான் இப்னு ஸுரத் ரழியல்லாஹு அன்ஹு கூறியதாவது,

“ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் முன்னிலையில் இரண்டு மனிதர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். ஒருவர் மற்றொருவரின் மீது சாபமிட்டார். கோபத்தின் காரணமாக அவரது முகம் சிவந்துவிட்டது. அப்போது ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள்,

إنِّي لَنَا علمُ شَيْئًا لَذَهَبَ عَنْهُ مَايَجِدُ: أعُودُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ

“நான் சில வார்த்தைகளை அறிவேன். அவர் அவற்றைச் சொன்னால், அவரின் (கோப) உணர்வு (அவரை விட்டுச்) சென்று விடும். அது, “அவூது பில்லாஹி மினஸ் ஷைத்தானிர்ரஜீம்”

கோபம் மூட்டுவபரை மன்னித்து விட்டால் அதற்கான கூலியை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா கணக்கின்றி நமக்கு அளிப்பான். நாம் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறியபடி கோபத்தை அடக்கி வாழும் பாக்கியத்தை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நமக்கு அளிப்பானாக!

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 17

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

الحديث السابع عشر

عَنْ أَبِي يَعْلَى شَدَّادِ بْنِ أَوْسٍ ﷺ عَنْ رَسُولِ اللَّهِ ﷺ قَالَ: "إنَّ اللَّهَ كَتَبَ الْإِحْسَانَ عَلَى كُلِّ شَيْءٍ، فَإِذَا قَتَلْتُمْ فَأَحْسِنُوا الْقِتْلَةَ، وَإِذَا ذَبَحْتُمْ فَأَحْسِنُوا الذِّبْحَةَ، وَلْيُحِدَّ أَحَدُكُمْ شَفْرَتَهُ، وَلْيُرِحْ ذَبِيحَتَهُ". رَوَاهُ مُسْلِمٌ

ஹதீஸ்-17:

அல்லாஹ் எல்லாவற்றிலும் எளிய முறையை விதியாக்கியுள்ளான். எனவே, கொல்லும் போதும் எளிய முறையில் கொல்லுங்கள். அறுக்கும்போதும் எளிய முறையில் அறுங்கள். உங்களில் ஒருவர் அறுப்பதற்கு முன் கத்தியைத் தீட்டிக் கொள்ளட்டும். அறுக்கப்படும் பிராணியின் கஷ்டங்களை எளிதாக்கட்டும் (ஆசுவாசப் படுத்தட்டும்) என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் அறிவிப்பவர். அபூயஃலா ஷத்தாத் இப்னு அவ்ஸ்(ரலி) (ரலி) அவர்கள் நூல்: முஸ்லிம்

இந்த ஹதீதை அறிவித்தவர் அபு யஃலா ஷத்தாத் இப்னு அவ்ஸ் ரழியல்லாஹு அன்ஹு ஆவார். இவரும் இவரது தந்தை அவ்ஸ் ரழியல்லாஹு அன்ஹுவும் நபித் தோழர்கள் ஆவார்கள். பத்ரு போரிலும், உஹத் போரிலும் கலந்து கொண்ட அவ்ஸ் ரழியல்லாஹு அன்ஹு உஹத் போரில் ஷஹீதானார்கள். உபாதா இப்னு ஸாபித் ரழியல்லாஹு அன்ஹு அவரைக் குறித்துக் கூறுகையில், கல்வியும், பொறுமையும் கொடுக்கப்பட்டவர்களுள் இவரும் ஒருவர் என்றார். ஷாம் நாட்டில் இந்த இருவரும் மிகப் பெரிய அறிஞர்களாக இருந்தார்கள் என இமாம் ஜஹதி தம் நூலிலி குறிப்பிட்டுளார்.

ஒருமுறை ஷத்தாத் இப்னு அவ்ஸ் ரழியல்லாஹு அன்ஹுக்கு உடல்நிலை மிகவும் மோசமாக இருந்தது. அவரின் உடல்நலம் குறித்து ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் விசாரிக்க வந்தார்கள். தான் உயிரோடு இருப்பேனா என அவர் கூறினார். ஆனால் அவர் அந்த நோயினால் இறக்க மாட்டார் எனவும், அவரும் அவரது சந்ததியினரும் ஷாம் நாட்டில் வசிக்கப்போவதாகவும், பைத்துல் முகத்திஸ் முஸ்லிம் வசம் வரும் எனவும் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள். அவ்வாறே அவர் அங்கு சென்று வசித்தார்கள்.

அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா ஒவ்வரு விஷயத்திலும் ‘இஹ்ஸானை’ விதித்துள்ளான் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறுகிறார்கள். இஹ்ஸான் பற்றி ‘ஹதீத் ஜிப்ரயீல்’ கூறுகிறது. அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவைப் பார்ப்பது போல வணங்க வேண்டும். அதே போல் எல்லா காரியங்களிலும் இஹ்ஸான் கடைபிடிக்க வேண்டும். தன உறவினர், நண்பர்கள், அண்டை விட்டார் என அனைவரிடமும் நாம் உறவாடும்போது சிறந்த முறையில், இஹ்ஸானோடு நடக்க வேண்டும்.

அத்தியாயம் அந் நஹல் 90

إِنَّ اللَّـهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْإِحْسَانِ

நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும்,.... (உங்களை) ஏவுகிறான்;

எனவே நாம் எல்லா காரியங்களிலும் இஹ்ஸான் கடைபிடிக்க வேண்டும்.

அதற்கான உதாரணமாக, நீங்கள் கொல்வது என்றாலும் இஹ்ஸான் கடைபிடிக்கப்பட வேண்டும் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் எனக் கூறியுள்ளார்கள்.

போர் களத்தில் மனிதனைக் கொல்வதாக இருந்தாலும், அல்லது தண்டனையாகக் கொல்வதாக இருந்தாலும் இஹ்ஸான் கடைபிடிக்கப்பட வேண்டும். எதிரிகளைக் கொல்லும்போது உடலின் அங்கங்களை அறுத்து சின்னாபின்னமாகி விடுவது (முத்லா)அக்காலப் பழக்கமாக இருந்தது. அவ்வாறு செய்யக் கூடாது என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் ஜும்மாவில் அடிக்கடி கூறுவார்கள்.

எனினும் விபச்சாரத்திகாக கொடுக்கப்படும் ரஜம் என்ற கல்லால் எறிந்து கொல்வது குறித்து சந்தேகள் எழலாம். ஆனால் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா மிகவும் அறிந்தவனாக இருக்கிறான். அவனது கட்டளை விஷயத்தில் அதுதான் இஹ்ஸான் ஆகும்.

அது போலவே ஆடுகளைப் பலியிடும்போதும் இஹ்ஸான் கடைபிடிக்கப்பட வேண்டும். இவ்வாறு ஹலாலான விலங்குகளை பலியிடும்போதும் இஹ்ஸான் கடைபிடிக்கப்பட வேண்டும். அந்த விலங்குகளின் முன்னால் கத்தியைத் தீட்டக்கூடாது. அவ்வாறு செய்த ஒருவரைப் பார்த்து, அவர் பலியிடுவதற்கு முன்னால் அந்தப் பிராணியைப் பலதடவை கொல்ல விரும்புகிறாரா என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் வினவினார்கள். நல்ல முறையில், கூர்மையான கத்தியைக் கொண்டு பலியிட வேண்டும். ஒரு பிராணிக்கு முன்னால் மற்றொரு பிராணியைப் பலியிடக் கூடாது. கற்களின் மீது படுக்க வைத்து பலியிடக் கூடாது. நன்றாக அறுக்கப்பட்டதா என நிச்சயம் செய்வதன் மூலம், உயிர் பிரிவது தாமதம் இல்லாமல் இருக்கும். உயிர் பிரிந்த பின்புதான் தோலை உரிக்க வேண்டும். இவை அனைத்துக்கும் மாற்றமாக செய்யக் கூடாது.

நாம் அனைவரும் எல்லா காரியங்களிலும் இஹ்ஸானைப் பேணும் பாக்கியத்தை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா அருள் புரிவானாக!

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 18

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி

الحديث الثامن عشر

عَنْ أَبِي ذَرٍّ جُنْدَبِ بْنِ جُنَادَةَ، وَأَبِي عَبْدِ الرَّحْمَنِ مُعَاذِ بْنِ جَبَلٍ رَضِيَ اللَّهُ عَنْهُمَا، عَنْ رَسُولِ اللَّهِ ﷺ قَالَ: "اتَّقِ اللَّهَ حَيْثُمَا كُنْت، وَأَتْبِعْ السَّيِّئَةَ الْحَسَنَةَ تَمْحُهَا، وَخَالِقْ النَّاسَ بِخُلُقٍ حَسَنٍ ."

رَوَاهُ التِّرْمِذِيُّ وَقَالَ: حَدِيثٌ حَسَنٌ، وَفِي بَعْضِ النُّسَخِ: حَسَنٌ صَحِيحٌ .

எங்கிருந்தாலும் அல்லாஹ்வை அஞ்சிக் கொள். தீய செயலை செய்து விட்டால் அதனைத் தொடர்து நன்மையொன்றை செய்து கொள். இந்த நல்ல செயல் தீய செயலை அழித்து விடும். மக்களிடம் அழகிய முறையில் நடந்து கொள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் அறிவிப்பவர்: அபூதர் ஜுன்துப் இப்னு ஜுனாதா(ரலி) .நூல்: திர்மிதி

இந்த ஹதீதை அறிவித்தவர்கள் அபூதர் மற்றும் முஆத் இப்னு ஜபல் ரழியல்லாஹு அன்ஹும் ஆகியோர் ஆவர். அபூதர் ரழியல்லாஹு அன்ஹு ஆரம்பத்தில் (ஆறாவது அல்லது எழாவது) இஸ்லாத்தை என்றுக் கொண்டவர். இஸ்லாமிய வாழத்தான 'அஸ்ஸலாமு அலைக்கும்' என்பதை முதன்முதலாக ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் கூறி அறிமுகப் படுத்தியவர் இவர்தாம். இவரிடமிருந்து ஹதீதுகளைக் கேட்டு இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு, இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு, ஜாபிர் ரழியல்லாஹு அன்ஹு போன்ற பலர் மற்றவர்களுக்கு அறிவித்து இருக்கிறார்கள். மதினாவிற்கு இரண்டாம் வருடம் ஹிஜ்ரத் செய்தார்கள். பத்ருப் போரில் கலந்து கொள்ளவில்லை. மற்ற போரில் கலந்து கொண்டார்கள். அபு பக்ரு ரழியல்லாஹு அன்ஹு , உமர் ரழியல்லாஹு அன்ஹு , மற்றும் உத்மான் ரழியல்லாஹு அன்ஹு ஆகியோர் ஆட்சிக் காலத்தில் இருந்தார்கள். உத்மான் ரழியல்லாஹு அன்ஹு ஆட்சிக் காலத்தில், அபூதர் ரழியல்லாஹு அன்ஹு ஒரு தனிப்பட்ட கருத்தைக் கொண்டிருந்தார்கள். அதாவது, ஒருவர் தமக்குத் தேவை போக மீதியுள்ள பணத்தைச் சேமிக்காமல் ஏழைகளுக்குக் கொடுத்து விடவேண்டும் எனவும், அவ்வாறு சேமிப்பது ஹராம் எனவும் கருத்து கொண்டிருந்தார். பலர் இவரது நிலையை எடுத்துக் கொண்டார்கள். இது பிரச்சனை ஆகலாம் என நினைத்து உத்மான் ரழியல்லாஹு அன்ஹு, அவரை ராமதாஹ் என்ற இடத்தில் தங்குமாறு அனுப்பி வைத்தார்கள். அந்த அளவுக்கு அவர் உலகப் பற்று இல்லாதவராக வாழ்ந்து வந்தார்.

முஆத் இப்னு ஜபல் ரழியல்லாஹு அன்ஹு தம் பதினெட்டாம் வயதில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். தம் முப்பது மூன்று வயதில் ஏமன் நாட்டில் கொடிய தொத்து நோயினால் இறந்த பல மக்களுடன் இவரும் மரணமடைந்தார். குர்ஆனைக் கற்றுக் கொள்வதாயிருந்தால் நால்வரிடம் கற்றுக் கொள்ளுங்கள் என ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள். அவர்கள் இப்னு மஸ்வூத் ரழியல்லாஹு அன்ஹு, ஸாலிம் ரழியல்லாஹு அன்ஹு, உபை இப்னு கஅப் ரழியல்லாஹு அன்ஹு மற்றும் முஆத் இப்னு ஜபல் ரழியல்லாஹு அன்ஹு ஆகியோர். இவரிடமிருந்தும் ஹதீதுகளைக் கேட்டு இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு, இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு, ஜாபிர் ரழியல்லாஹு அன்ஹு போன்ற பலர் மற்றவர்களுக்கு அறிவித்து இருக்கிறார்கள். இவரது கல்வித் திறமையைக்

கண்டு அவரை ஏமன் நாட்டு ஆளுநராக நியமித்தார்கள். அங்கு வேதக் காரர்களிடம் இஸ்லாம் குறித்து விலக்கி, அதனை ஏற்குமாற்கு கூறும்படி அறிவுறுத்தினார்கள். அவர்கள் ஏற்றுக் கொண்டால் தொழும்படியும், அவ்வாறு தொழுதால் ஜகாத் கொடுக்கும்படியும் கூறுமாறும் அறிவுறுத்தினார்கள். முஆத் இப்னு ஜபல் ரழியல்லாஹுு அன்ஹுுவின் கல்வித் திறமையால், பலர் அவரிடம் வந்து ஹலால் மற்றும் ஹராம் பற்றி விளக்கம் கேட்பார்கள். ஹலால் மற்றும் ஹராம் பற்றி நன்கறிந்த ஒருவர் என இவர் அறியப்பட்டார்.

எங்கிருந்தாலும் அல்லாஹ் ஸுப்ஹானஹுு வ தஆலாவை அஞ்சிக்கொள்ள வேண்டும். பகல் , இரவு, வீடு, வெளியே, சபையில், தனிமையில் என எப்போதும், எங்கிருந்தாலும் அல்லாஹ் ஸுப்ஹானஹுு வ தஆலாவை அஞ்சிக்கொள்ள வேண்டும். இது தான் நாம் முன் சொன்ன இஹ்ஸான் என்ற உன்னத நிலையாகும். தனிமையில் இருக்கும்போது பல தவறு செய்ய வாய்ப்பு ஏற்படும். இரவில் பல தவறு செய்ய வாய்ப்பு ஏற்படும். அது போல வெளியில் இருக்கும்போது பல தவறு செய்ய வாய்ப்பு ஏற்படும். இவ்வாறு சில நேரங்களில் நாம் தவறு செய்யும் நிலை, மற்ற நேரங்களிம் நாம் பயபக்தியாளராக நடிக்கிறோம் என்ற நிலைக் கொண்டு சேர்க்கும். உண்மையில் நாம் அல்லாஹ் ஸுப்ஹானஹுு வ தஆலாவை அஞ்சி நடக்கிறோம் என்றால், தனிமையிலும், இரவிலும், வெளியிலும் என எல்லா நேரங்களிலும் நாம் அல்லாஹ் ஸுப்ஹானஹுு வ தஆலாவை அஞ்சிக்கொள்ள வேண்டும்.

உத்மான் ரழியல்லாஹுு அன்ஹுு மற்றும் அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் ரழியல்லாஹுு அன்ஹுுஆகியோரை அழைத்து, தாங்கள் உமர் ரழியல்லாஹுு அன்ஹுுஅவர்களை தங்களுக்குப் பிறகு கலிஃபாவாக நியமிக்க விரும்புவதாக அபு பக்ரு ரழியல்லாஹுு அன்ஹுுகூறினார்கள். அது பற்றி அவர்களின் கருத்து என்ன என்று தனித்தனியாக வினவினார்கள். இருவரும் உமர் ரழியல்லாஹுு அன்ஹுு அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கை போது வாழ்கையைவிடச் சிறந்ததாக உள்ளது எனக் கூறினார்கள். இவ்வாறுதாம் நாம் வாழ்கையை அமைத்துக் கொள்ள வேண்டும்.

அடுத்து ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹுு அலைஹி வ ஸல்லம் கூறுவதாவது, யாரேனும் தீமையைச் செய்து விட்டால், அதனைப் பின்தொடர்ந்து ஒரு நன்மையான காரியம் செய்து விடவேண்டும். அது அந்தத் தீமையை அளித்து விடும். இது குறித்து அறிஞர்களின் கருத்தாவது, பாவம் செய்த பிறகு உடனே தவ்பா செல்ல வேண்டும். அது ஒரு நன்மையான காரியம் என்பதோடு அந்தத் தீய செயலை அளித்து விடும். எனவே அறியாமல் பாவம் செய்து விட்டாலும், உடனே அதற்குத் தவ்பா செய்ய வேண்டும். இது நம் விருப்பம் என்பதல்ல. தீமைக்கு நாம் பரிகாரம் தேடாமல் இருப்பதே பாவமாக ஆகிவிடும்.

இது குறித்த மற்றுமொரு கருத்தாவது, தீமை நடந்தது விட்டால், பின்னர் திக்று செய்வது, குர்ஆன் ஓதுவது போன்று ஏதேனும் ஒரு நற்செயல் செய்ய வேண்டும்.

அத்தியாயம் ஹூது 114

إِنَّ الْحَسَنَاتِ يُذْهِبْنَ السَّيِّئَاتِ

நிச்சயமாக நற்செயல்கள், தீச்செயல்களைப் போக்கிவிடும் -

ஃபஜ்ர் தொழுகைக்குப் பிறகு ஒரு ஸஹாபி ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹுு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் தாம் ஒரு தவறு செய்து விட்டதாக வருந்திக் கூறினார். அவர் தங்களுடன் ஃபஜ்ர் தொழுகை தொழுதாரா என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹுு அலைஹி வ ஸல்லம் வினவ, ஆம் என அவர் சொல்ல, அது அந்த தவறுக்கு சரி என்றார்கள். எனினும் சிறு பாவங்கள்தாம் இப்படி மன்னிக்கப்படும். பெரும்பாவங்களுக்கு தவ்பாவும், அதற்குண்டான பரிகாரமும் தான் பதிலாகும். இஸ்லாத்தை ஏற்பது, ஒப்புக்கொள்ளப்பட்ட ஹஜ் மற்றும் ஹிஜ்ரத் செய்வது ஆகியன முந்தைய அனைத்து பாவங்களை நீக்கிவிடும்.

அடுத்து மக்களுடன் நற்பண்புகளுடன் அணுக வேண்டும் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். மூன்று விஷயங்கள் கொண்டு அந்த நற்பண்புகள் அமையும். ஒன்றாவது நம்மால் சொல்லாலும், செயலாலும் மற்றவர்களுக்கு எவ்வித துன்பமும் கொள்ளக் கூடாது. இரண்டாவதாக, மற்றவர்கள் நம்மிடம் தவறாக நடந்தால் மன்னித்து விடுவது. மூன்றாவது யாரையும் சந்தித்தாலும் புன்னகையுடன் நல்ல முறையில் வரவேற்பது. ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் வாழ்கையில் பல உதாரணங்கள் உள்ளன. யூதர்கள் ஒரு தடவை ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு 'அஸ்ஸாமு அழைக்கும்' என முகமன் கூறினார்கள். அதன் பொருள் அழிவு உண்டாகட்டும் என்பதாகும். பதிலாக ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் 'அலைக்கும்' (உங்கள் மீது)என்று மட்டும்தான் கூறிவிட்டார்கள். அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் மீது அழிவும், சாபமும் உண்டாகட்டும் என்று சொல்ல விழைந்தார்கள். ஆனால் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் தாங்கள் இவ்வாறு கூறுபவர்கள் அல்ல என்பதை நினைவு படுத்தினார்கள்.

இவ்வாறு இருப்பதுதான் உண்மையான முஸ்லிமுக்கு அடையாளமாகும். ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களை தங்கள் வாழ்நாள் முழுவதும் துன்புறுத்திய மக்கத்துக் காஃபிர்களை, மக்கா வெற்றியின்போது மன்னித்த நிலையை நினைவு கூறுங்கள். அவர்கள் அனைவரையும் ஒட்டு மொத்தமாக மன்னித்தார்கள். எப்போதும் புன்னகை தவழும் முகத்துடன் தான் நாம் மற்றவரை அணுக வேண்டும். கடுகடுப்பு காட்டக் கூடாது. தாம் இஸ்லாம் ஏற்ற பின், தம் சந்திக்கும் போதெல்லாம் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களைப் புன்னகையுடன் தான் பார்த்ததாக ஜாரீர் இப்னு அப்துல்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு கூறியுள்ளார். உம சகோதரனைப் பார்த்து புன்னகை செய்வதும் ஒரு நன்மைதான் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள்.

அப்படிப்பட்ட நல்ல வாழ்க்கையை நான் மேற்கொள்ளும் பாக்கியத்தை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா அருள் புரிவானாக!

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 19

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

الحديث التاسع عشر

عَنْ عَبْدِ اللَّهِ بْنِ عَبَّاسٍ رَضِيَ اللَّهُ عَنْهُمَا قَالَ: "كُنْت خَلْفَ رَسُولِ اللَّهِ ﷺ يَوْمًا، فَقَالَ: يَا غُلَامِ! إنِّي أُعَلِّمُك كَلِمَاتٍ: احْفَظْ اللَّهَ يَحْفَظْك، احْفَظْ اللَّهَ تَجِدْهُ تُجَاهَك، إذَا سَأَلْت فَاسْأَلْ اللَّهَ، وَإِذَا اسْتَعَنْت فَاسْتَعِنْ بِاَللَّهِ، وَاعْلَمْ أَنَّ الْأُمَّةَ لَوْ اجْتَمَعَتْ عَلَى أَنْ يَنْفَعُوك بِشَيْءٍ لَمْ يَنْفَعُوك إلَّا بِشَيْءٍ قَدْ كَتَبَهُ اللَّهُ لَك، وَإِنْ اجْتَمَعُوا عَلَى أَنْ يَضُرُّوك بِشَيْءٍ لَمْ يَضُرُّوك إلَّا بِشَيْءٍ قَدْ كَتَبَهُ اللَّهُ عَلَيْك؛ رُفِعَتْ الْأَقْلَامُ، وَجَفَّتْ الصُّحُفُ" . رَوَاهُ التِّرْمِذِيُّ وَقَالَ: حَدِيثٌ حَسَنٌ صَحِيحٌ.

وَفِي رِوَايَةِ غَيْرِ التِّرْمِذِيِّ: "احْفَظْ اللَّهَ تَجِدْهُ أمامك، تَعَرَّفْ إلَى اللَّهِ فِي الرَّخَاءِ يَعْرِفُك فِي الشِّدَّةِ، وَاعْلَمْ أَنَّ مَا أَخْطَأَك لَمْ يَكُنْ لِيُصِيبَك، وَمَا أَصَابَك لَمْ يَكُنْ لِيُخْطِئَك، وَاعْلَمْ أَنَّ النَّصْرَ مَعَ الصَّبْرِ، وَأَنَّ الْفَرَجَ مَعَ الْكَرْبِ، وَأَنَّ مَعَ الْعُسْرِ يُسْرًا ".

ஒரு நாள் நான் நபி (ஸல்) அவர்களுடன் வாகனத்தில் பின்னால் இருந்தேன்.அப்போது பின்வருமாறு என்னிடம் கூறினார்கள்.

மகனே ! உனக்கு சில வார்த்தைகளை கற்றுத் தருகிறேன்.

நீ அல்லாஹ்வை மனதில் கொள், அல்லாஹ் உன்னை காப்பாற்றுவான். அல்லாஹ்வை மனதில் கொள். அவனை உனக்கு முன்னால் காண்பாய். நீ கேட்டால் அல்லாஹ்விடம் கேள். உதவி தேடினால் அல்லாஹ்விடம் உதவி தேடு. உனக்கு ஒரு நன்மையை செய்யவேண்டும் என்று சமூகம் ஒன்று சேர்ந்தாலும் அல்லாஹ் உனக்கு விதித்ததை தவிர எந்த நன்மையையும் உனக்கு வந்து சேராது. உனக்கு ஒரு தீமையை செய்யவேண்டும் என்று சமூகம் ஒன்று சேர்ந்தாலும் அல்லாஹ் உனக்கு விதித்ததை தவிர எந்த தீமையையும் உனக்கு வந்து சேராது. எழுது கோல்கள் உயர்த்தப்பட்டு ஏடுகள் மூடப்பட்டு விட்டன.

என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ்(ரலி) (நூல்: திர்மிதி)

திர்மிதி யில் வரும் மற்றொரு அறிவிப்பில்

நீ செழிப்பாக இருக்கும் போது அல்லாஹ்வை நினைவில் கொள், நீ கஷ்டத்தில் இருக்கும் போது அல்லாஹ் உன்னை நினைவில் கொள்வான்.

உன்னை விட்டும் தவறிப் போன எந்த வொன்றும் உனக்கு எதுவும் செய்ய முடியாது. உன்னை வந்தடைந்த எந்தவொன்றும் உன்னை விட்டும் தவறிப் போகாது என்பதை அறிந்து கொள்.

பொறுமையுடன் தான் உதவி இருக்கிறது என்பதை அறிந்து கொள் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்

இந்த ஹதீதை அறிவித்தவர் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு ஆவார். அவர் கூறுவதாவது, “நான் ஒருநாள் வாகனத்தில் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்குப் பின்னால் அமர்ந்திருந்தேன். அப்போது அவர்கள் எனக்கு சில சொற்களைக் கற்றுக் கொடுத்தார்கள்.” அதனை இந்த ஹதீதில் அறிவித்துள்ளார்.

இதில் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அருமையான உபதேசங்களை அளிக்கிறார்கள். இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹுவை மகனே என அழைக்கிறார்கள். ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் உலகை விட்டு பிரியம்போது, அவருக்கு பதின்மூன்று வயதுதான். இதில் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் ஒரு மாணவருக்குக் கற்றுக் கொடுக்கும் விதத்தில் அவருக்குக் கூறினார்கள். மாணவரின் மனதில் நன்றாகப் பதியும் விதமாக ஆசிரியர் எடுத்துச் சொல்ல வேண்டும். இந்த பொறுப்பின் காரணமாகத்தான், ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் தாங்கள் இதனைச் சொல்லப்போகிறேன் என்று கூறிவிட்டு ஆரம்பிப்பார்கள். சில சமயம் வரைந்து காட்டிவிட்டு சொல்வார்கள். சில சமயம் கேள்விக் கேட்டவாறு ஆரம்பிப்பார்கள். முக்கிய விஷயங்களை மூன்று தடவைகள் திருப்பி திருப்பி சொல்வார்கள். சில சமயம் உதாரணங்களைக் கூறி சொல்வார்கள். சூழ்நிலைக்கு ஏற்ப இவ்வாறு சொல்வது ஒரு ஆசிரியரின் கடமையாகும்.

முதல் உபதேசம், அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவை மனிதில் கொள்ள வேண்டும் என்பது. முன்பு சொன்னது போல, எந்த நேரத்திலும், எந்த காரியத்திலும் நாம் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவை நினைவில் கொள்ள வேண்டும். அப்போது தான் அவனது கட்டளைகளைப் பேணி, ஆகுமானதை செய்து, தடுத்தவற்றை விலக்கி இருப்போம். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவின் மார்க்கத்தைப் படிக்க வேண்டும். அதன்படி செயல் பட வேண்டும். பிறருக்கும் எத்தி வைக்க வேண்டும். இவ்வாறு செய்வதால், அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நம்மை, நம் மார்கத்தை, நம் பொருளாதாரத்தைப் பாதுகாப்பான். நம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்வான்.

அத்தியாயம் அன்ஃபால் 64

يَا أَيُّهَا النَّبِيُّ حَسْبُكَ اللَّـهُ وَمَنِ اتَّبَعَكَ مِنَ الْمُؤْمِنِينَ ﴿٦٤﴾

நபியே! உமக்கும், முஃமின்களில் உம்மைப் பின்பற்றுவோருக்கும் அல்லாஹ்வே போதுமானவன்.

எனவே நமக்கு அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா போதுமானவனாக இருக்கிறான். முஸ்லிம் அறிவிப்பின்படி, ஜாபிர் ரழியல்லாஹு அன்ஹு மற்றும் அபு உபைதாஹ் ரழியல்லாஹு அன்ஹு ஆகியோர் கூறுவதாவது: இருவரும் ஒரு பயணத்தில் சில ஸஹாபாக்களோடு சென்றார்கள். அவர்களிடம் கொஞ்சம்தான் பேரித்தம் கனி இருந்தது. அவற்றைக் கொண்டு அவர்கள் அதிக நாட்கள் கழிக்க வேண்டும். அமீராக இருந்த ஜாபிர் ரழியல்லாஹு அன்ஹு, தோழர்களுக்கு ஒரு நாளைக்கு ஒன்று அல்லது இரண்டு என்ற எண்ணிக்கையில் கொடுத்தார். பயணத்தின் போது தூரத்தில் சிறு மலை போன்று ஒன்றைக் கண்டார்கள். அருகில் சென்ற பிறகுதான் அது ஒரு பெரிய திமிங்கலம் எனத் தெரிந்தது. சுமார் ஒரு மாதம் அதனைச் சாப்பிட்டார்கள். மீதியை எடுத்து பயணத்தை தொடர்ந்தார்கள். அதன் கண்ணிலிருந்து வடிந்த கொழுப்பை பாத்திரங்களில் பிடித்து வைத்தார்கள். அதன் கண் எலும்புக்குள் சுமார் பதின்மூன்று நபர்கள் உட்காரும் அளவு அது பெரிதான ஒன்றாக இருந்தது.

மதினா வந்த பிறகு அந்த சம்பவத்தை ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் கூறியபோது, அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா அவர்களுக்கு அளித்த ரிஸ்க் என அவர்கள் கூறினார்கள். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா இவ்வாறு நினையா புறத்திலிருந்து நமக்கு அருள்வான். யார் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா விடம் அஞ்சி நடப்பார்களோ அவர்களுக்கு அவ்வாறு உதவி செய்வான்.

அடுத்த உபதேசம், உதவி கேட்பதாக இருந்தால் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவிடம் கேட்க வேண்டும். கேட்டதும் கொடுப்பதற்குத் தயாராக உள்ளான். இரவின் பின்பகுதியில் கீழ் வானத்துக்கு இறங்கி வந்து, தன்னிடம் கேட்கும் யாருக்கும் கொடுப்பதற்குத் தயாராக

உள்ளதாகக் கூறுகிறான். மேலும் தன்னிடம் கை ஏந்தி கேட்டவரின் கையை வெறுமனே அனுப்ப வெட்கப்படுவதாகக் கூறுகிறான்.

கொடுக்கத் தயாராக இருக்கும் இருந்தால் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவிடம் கேட்க அஞ்சக் கூடாது. மனிதர்களிடத்தில் கேட்டால், அவர்கள் வருத்தப் படலாம் அல்லது கோபப்படலாம். ஆனால் கேட்காமல் அலட்சியமாக இருந்துவிட்டால் தான்அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா கோபப்படுவான். கேட்கக் கூடாது என நினைப்பது நமது அகம்பாவத்தை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கலாம். சிறு விஷயம் முதல், பெரும் விஷயம் குறித்தும் நாம் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவிடம் கேட்க அஞ்சக் கூடாது. நாம் தினமும் தொழுகையில் إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ ۝ உன்னையே வணங்குகிறோம், உன்னிடத்திலேயே உதவி தேடுகேறோம், எனக் கேட்கிறோம். எனவே உதவியை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவிடம் தேட வேண்டும்.

மனிதரிடம் நாம் உதவி தேடலாம். ஆனால் அப்படிப்பட்டவை ஒரு மனிதரால் முடியும் என்ற நிலையில் தான் உதவி கேட்க வேண்டும். எந்த காரியம் முடியுமோ அதைத் தான் கேட்க வேண்டும். மனிதரால் முடியாத விஷயத்தில் அவரிடம் கேட்காமல் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவிடம் தான் கேட்க வேண்டும். மாறாக அவற்றை மனிதரிடம் கேட்டால் அது ஷிர்க் ஆக முடிந்து விடும். உதாரணமாக குழந்தை பாக்கியம் குறித்து அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவிடம் தான் கேட்க வேண்டும். மற்றவர்களுடன் கேட்டு, நேர்ச்சை செய்வது ஷிர்க் ஆக முடிந்து விடும். எனவே இது குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மனிதர் மூலமாகக் கிடைக்கும் உதவியும், அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாதான் அவர் மூலம் நமக்கு உதவி அளிக்கிறான் என்ற எண்ணத்தை நாம் கொள்ள வேண்டும்.

அடுத்ததாக விதியைக் குறித்து ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறுகிறார்கள். நமக்கு நன்மை செய்ய வேண்டும் என சமூகம் ஒன்று சேர்ந்தாலும், அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா விதித்ததைத் தவிர எந்த நன்மையையும் அவர்கள் கொடுக்க முடியாது. அது போல, நமக்கு தீமை செய்ய வேண்டும் என சமூகம் ஒன்று சேர்ந்தாலும், அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா விதித்ததைத் தவிர எந்த தீமையையும் அவர்கள் கொடுக்க முடியாது. பேனாக்கள் மூடப்பட்டன என்றும், ஏடுகள் உயர்த்தப் பட்டன என்றும் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறி, நமக்கு விதிக்கப்பட்டது தான் கிடைக்கும் என்றார்கள். விதியில் எழுதப்படாதது நமக்கு வந்து சேராது என்பதை நாம் உணர வேண்டும்.

நம்மில் சிலர், நடத்த ஒரு நிகழ்வு குறித்து, இப்படி நடந்தால் இவ்வாறு ஏற்பட்டிருக்காது என்று கூறுவதுண்டு. சிறிது முன்னால் சென்றால் அவர் காப்பற்றப் பட்டிருப்பார் என்றெல்லாம் கூறுவதை நாம் தவிர்க்க வேண்டும். இந்த சொற்கள் ஷைத்தானின் தூண்டுதல்தாம். விதியை மறந்து விட்டு இவ்வாறு கூறுவது தவறாகும். இது கொள்கைக்கு முரணானது. அனுமதிக்க முடியாத ஒன்றாகும். நடந்து முடிந்த விஷயம் குறித்து இவ்வாறு நாம் செய்திருந்தால்… எனக் சொல்லக் கூடாது. அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நாடியதும், தாங்கள் நாடியதும் என ஒரு ஸஹாபி கூறிய போது, ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவரைக் கடிந்து கொண்டார்கள். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவுடன் தங்களை இவ்வாறு இணைக்கக் கூடாது என்றார்கள். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா எதனை நாடினானோ, அதன் பிறகு தாங்கள் நாடியது எனக் கூறுமாறு அறிவுறுத்தினார்கள். அந்த ஸஹாபி அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவுக்கு இணை வைக்கும் விதத்தில் அவ்வாறு கூறியிருக்க மாட்டார் என்றாலும், சொற்கள் இணை வைப்பதைப் போல இருப்பதால் அதனை அவர்கள் கண்டித்தார்கள். எனவே எச்சரிக்கையாகப் பேச வேண்டும்.

அடுத்ததாக, செழிப்பாக இருக்கும் நேரத்தில் நாம் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவை நினைவு கூர்ந்தால், துன்ப நேரத்தில் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நம்மை நினைவில்

கொள்வான் என்று ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள். சிலர் தங்களுக்குத் துன்பம் வந்தால் மட்டுமே அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவை நினைவு கூர்வார்கள்.

யூனுஸ் அலைஹிஸ் ஸலாம் அவர்களை மீன் விழுங்கியபோது அவர்கள் மீன் வயிற்றில் இருக்கும்போது (அத்தியாயம் அன்பியா 87)

لَآ اِلٰهَ اِلَّآ اَنْتَ سُبْحٰنَكَ ۖ اِنِّىْ كُنْتُ مِنَ الظّٰلِمِيْنَ

என்று தொடர்ந்து துஆ கேட்டார்கள். இவ்வாறு அவர்கள் துஆ கேட்காமல் இருந்தால் அவர்கள் மீன் வயிற்றிலேயே இருந்திருப்பார்கள் என அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா கூறியுள்ளான். எனவே நல்ல நிலையில் உள்ளபோது அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவை நினைவு கூர்ந்தால், துன்ப நேரத்தில் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நம்மை நினைவில் கொள்வான்.

அடுத்ததாக நம்மை விட்டும் தவறிப்போனது நமக்கு வந்தடையாது எனவும், வந்தடைய ஒன்று நமக்குத் தவறிப் போகாது என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நாடியது நமக்குக் கிடைக்கும். நாடாதது கிடைக்காது. இவ்வாறு விதியைப் பொருந்திக் கொள்ள வேண்டும்.

ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் பிறக்கும் முன்பே தந்தையை இழந்து விட்டார்கள். ஆறு வயதில் தாயாரை இழந்து விட்டார்கள். எட்டு வயதில் பாட்டனாரை இழந்து விட்டார்கள். அவர்கள் முக்கியமான தருணத்தில் அவர்கள் தங்கள் அன்னை மனைவி கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களையும், ஆதரவாக இருந்த அபு தாலிப் அவர்களையும் இழந்தார்கள். தங்கள் மூன்று ஆண்மக்களையும் இழந்து விட்டார்கள். ஃபாதிமாஹ் ரழியல்லாஹு அன்ஹா அவர்களை தவிர மூன்று பெண்பிள்ளைகளையும் இழந்து விட்டார்கள். மகனார் இப்ராஹீம் இறந்த போது அவர்கள் துக்கப்பட்டுக் கண்ணீர் வடித்தாலும், விதிக்கு மாற்றமான சொற்களைக் கூற மாட்டேன் என்ற சொன்னார்கள். ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் அழகிய முன்மாதிரி இவ்வாறு உள்ளது. இதனை நாம் எடுத்துக் கொண்டு விதியை ஏற்றுக் கொண்டால் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நமக்கு வெற்றி அளிப்பான்.

அடுத்ததாக, பொறுமைக்குப் பிறகுதான் உதவி இருக்கிறது எனவும், கஷ்டத்திற்குப் பிறகுதான் இலகு இருக்கிறது எனவும் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். எனவே நமது துன்பத்திற்குப் பொறுமையாக இருந்து அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவின் உதவியைத் தேட வேண்டும். உண்மையான பொறுமை என்பது துன்பத்தின் முதல் நிலையில் இருப்பது தான். ஆரம்பத்தில் புலம்பி விட்டு பின்னர் வேறுவழி இல்லாமல் இருப்பது பொறுமை அல்ல.

அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நமக்கு அழகான பொறுமையையும், முடிவான வெற்றியையும் தந்தருள்வானாக!

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 20

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

الحديث العشرون

عَنْ أَبِي مَسْعُودٍ عُقْبَةَ بْنِ عَمْرٍو الْأَنْصَارِيِّ الْبَدْرِيِّ ﷺ قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ ﷺ" إنَّ مِمَّا أَدْرَكَ النَّاسُ مِنْ كَلَامِ النُّبُوَّةِ الْأُولَى: إذَا لَمْ تَسْتَحِ فَاصْنَعْ مَا شِئْت . " رَوَاهُ الْبُخَارِيُّ

ஹதீஸ்-20:

முன்தைய தூதுத்துவத்திலிருந்து மக்கள் பெற்ற செய்திகளில் ஒன்று உனக்கு வெட்கம் இல்லை என்றால் விரும்பியதை செய்து கொள் என்பதாகும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.அறிவிப்பவர்; அபூமஸ்ஊத் உக்பத் இப்னு அம்ரு அல் அன்சாரி அல்பத்ரி (ரலி)
நூல்: புகாரி

இந்த ஹதீதை அறிவித்தவர் அபுமஸ்வூத் உக்பத் இப்னு அம்ரு அல் அன்ஸாரி அல் பத்ரி ரழியல்லாஹு அன்ஹு ஆவார். இவர் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் ஹிஜ்ரத் செய்வதற்கு முன்பே அவர்களை சந்தித்து அகபா உடன்படிக்கையில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவரில் ஒருவர் ஆவார். ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் பல ஹதீதுகளை அறிவித்துள்ளார். அறிஞர்களில் ஒருவராகக் கருதப்பட்டவர்.

முந்தைய தூதர்களிடமிருந்து பெற்ற செய்திகளில் ஒன்று, உமக்கு வெட்கம் இல்லை என்றால் நீ விரும்பியதைச் செய்யலாம் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். கோபத்தின்போது நாம் தேவை இல்லாத சொற்களைச் சொல்வார்கள். அது போல வெட்கம் இல்லை என்றால் தங்கள் விருப்பபடி எதனையும் செய்வார்கள். வெட்கம் நம்மிடம் இருந்தால், நம்மை பொய், திருட்டு, விபச்சாரம் போன்ற அனைத்து தீமைகளிலிருந்தும் தடுத்துவிடும்.

வெட்கம் குறித்து பல ஹதீதுகள் உள்ளன. ஈமான் அறுபது அல்லது எழுபது கிளைகளைக் கொண்டதாகும். அதில் உயர்ந்த கிளையானது, கலிமா சொல்வது. அதில் தாழ்ந்த கிளையானது பாதையில் கிடக்கும் நோவினை தரும் பொருளை அகற்றுவது. இவ்வாறு கூறிய ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் வெட்கம் எனபதும் முக்கியமாக கிளை என குறிப்பிட்டு கூறினார்கள். மேலும் வெட்கம் என்பது ஈமான் எனவும், ஈமான் சுவனத்திம் பக்கம் அழைத்துச் செல்லும் என்றும் கூறியுள்ளார்கள்.

ஒரு முறை ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் ஒரு அன்ஸாரி ஸஹாபி தம் சகோதரரைக் குறித்து முறையிடும்போது, அவர் மிகவும் வெட்கப் படுவதாகக் கூறினார். ஆனால் அதற்கு ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவரை விட்டு விடக்க கூறி வெட்கம் ஈமானின் ஒரு பகுதிதான் என்றும் கூறினார்கள். மற்றொரு ஹதீதில், வெட்கம் நம்மைதான் என்று கூறியுள்ளார்கள். அது ஒருபோதும் தீமையைக் கொண்டு வராது.

எனவே வெட்கம் நமக்கு இருப்பது, அனைத்து வகைப் பாவங்களையும் தடுக்க கூடிய ஒன்றாகும். எனினும் வெறுக்கத்தக்க வெட்கம் தவிர்க்கப் படவேண்டிய ஒன்றாகும். உதாரணமாக, எந்த வெட்கம் கல்வியைக் கற்க விடாமல் தடுக்கிறதோ அதுபோன்ற வெட்கம் கூடாது. இது கோழைத்தனத்தைச் சேர்ந்தது. அன்சாரிப் பெண்மணிகள் சிறந்தவர்கள் என்று

கூறிய அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள், அதற்குக் காரணம் மார்க்கம் பற்றி அறிய அவர்கள் வெட்கப்பட மாட்டார்கள் என்பதால் என்றார்கள். உதாரணமாக அனஸ் இப்னு மாலிக் ரழியல்லாஹு அன்ஹு வின் தாயார் உம்மு ஸுலைம் ரழியல்லாஹு அன்ஹா மாதவிடாய் பற்றி ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் மார்க்க விளக்கம் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள்.

நம்மை விடச் சிறியவர் என எண்ணி, தேவையான விஷயங்களைக் கேட்டுத் தெரிய வெட்கப்படக் கூடாது. யாராக இருந்தாலும் மார்க்கக் கல்வியை பெற வேண்டும். சத்தியத்தைச் சொல்லும்போதும் வெட்கப்படக் கூடாது.

அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா கூறுகிறான்: (அத்தியாயம் அஹ்சாப் 53

وَاللّٰهُ لَا يَسْتَحْيٖ مِنَ الْحَقِّ

உண்மையைச் சொல்ல அல்லாஹ் வெட்கப்படுவதில்லை.

அசத்தியத்தில் இருப்பவரைக் கண்டு சத்தியத்தைச் சொல்ல வெட்கப்படக் கூடாது. முடிந்தால் கரத்தால், அல்லது நாவினால் செய்ய வேண்டும்.

நமக்குத் தேவையான வெட்கத்தை அளித்து, தேவையில்லாத வெட்கத்தை விட்டு நீங்க அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா அருள்பாலிப்பானாக!

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 21

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

الحديث الحادي والعشرون

عَنْ أَبِي عَمْرٍو وَقِيلَ: أَبِي عَمْرَةَ سُفْيَانَ بْنِ عَبْدِ اللَّهِ ﷺ قَالَ: "قُلْت: يَا رَسُولَ اللَّهِ! قُلْ لِي فِي الْإِسْلَامِ قَوْلًا لَا أَسْأَلُ عَنْهُ أَحَدًا غَيْرَك؛ قَالَ: قُلْ: آمَنْت بِاَللَّهِ ثُمَّ اسْتَقِمْ" . رَوَاهُ مُسْلِمٌ [رقم:٣٨].

ஹதீஸ்-21:
அல்லாஹ்வின் தூதரே யாரிடத்திலும் கேட்கத் தேவையில்லாத வகையில் இஸ்லாத்தைப் பற்றி எனக்கு கூறுங்களேன் என்று நான் கேட்டேன். அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கிறேன் என க்கூறி பிறகு அதில் உறுதியாக இரு என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் அறிவிப்பவர்: அபூஅம்ரு(ரலி) நூல்: முஸ்லிம்

இந்த ஹதீதை அறிவித்தவர் அபு அம்ரு ஸுஃப்யான் இப்னு அப்துல்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு ஆவார். ஹுனைன் போரில் கலந்து கொண்டவர். உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆட்சி காலத்தில் தாயிஃப் நகர ஆளுநராக இருந்தார். ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் சென்று உபதேசம் செய்யுமாறும், அந்த உபதேசத்திற்குப் பிறகு இனி வேறு யாரிடமும் உபதேசம் கேட்கத் தேவை இல்லாமல் இருக்க வேண்டும் என்றும் கூறினார். அதற்கு, அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவின் மீது நம்பிக்கை வைத்து அதில் உறுதியாக இருக்குமாறு ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள்.

இந்த உபதேசம் சுருக்கமானதாக இருந்தாலும் ஒட்டு மொத்த மார்க்கமும் இதில் அடங்கியுள்ளது. அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவின் மீது நம்பிக்கை வைத்தவர் அவன் கூறும் கடமைகளை நிறைவேற்ற வேண்டிய கடமை வந்து விடும். அது போல் அவன் விலக்கியவற்றிலிருந்து நாம் நீங்கி இருக்க வேண்டும். மரணிக்கும் வரை இவ்வாறு நடக்க வேண்டும். எனவே இது சிறிய உபதேசமாக இருந்தாலும், முழுமயான ஒன்றாகும்.

எனவே இறை நம்பிக்கை கொண்டு கடைசிவரை உறுதியாக இருந்தால், வாகளிக்கப்பட்ட சுவனம் உண்டு.

அத்தியாயம் ஃபுஸ்ஸிலாத் (முஃமின்) 30

إِنَّ الَّذِينَ قَالُوا رَبُّنَا اللَّـهُ ثُمَّ اسْتَقَامُوا تَتَنَزَّلُ عَلَيْهِمُ الْمَلَائِكَةُ أَلَّا تَخَافُوا وَلَا تَحْزَنُوا وَأَبْشِرُوا بِالْجَنَّةِ الَّتِي كُنتُمْ تُوعَدُونَ ﴿٣٠﴾

நிச்சயமாக எவர்கள்: "எங்கள் இறைவன் அல்லாஹ்தான்" என்று கூறி, (அதன் மீது) உறுதியாக நிலைத்து நின்றார்களோ, நிச்சயமாக அவர்கள்பால் மலக்குகள் வந்து, "நீங்கள் பயப்படாதீர்கள்; கவலையும் பட வேண்டாம் - உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சுவர்க்கத்தைக் கொண்டு மகிழ்ச்சி பெறுங்கள்" (எனக் கூறியவாறு) இறங்குவார்கள்.

அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவும் முஸ்லிம்களாக அன்றி மரணிக்க வேண்டாம் என்று கூறியுள்ளான். எரிக்கப்பட்டாலும், கொல்லப்பட்டாலும் இஸ்லாத்தை விட்டு விட வேண்டாம் என ஒரு ஸஹாபியிடம் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம்

கூறியுள்ளார்கள். யாஸிர் ரழியல்லாஹு அன்ஹு மற்றும் அவரது மனைவி சுமையாஹ் ரழியல்லாஹு அன்ஹா ஆகியோரின் தியாகம் இதைக் கொண்டே அமைந்தது. மற்றும் பிலால் ரழியல்லாஹு அன்ஹு , குபைப் ரழியல்லாஹு அன்ஹு போன்று ஏராளமானவர்கள் பயங்கரமாக துன்புறுத்தப்பட்டும், இஸ்லாத்தில்தான் இறுதி வெற்றி உள்ளது என அதில் உறுதியாக இருந்தார்கள்.

ஒறு சமயம், காஃபிர்கள் தங்கள் இஸ்லாம் பற்றி அறிய வேண்டும் என்பதற்காக சிலரை அனுப்புமாறு வேண்ட, ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் எழுபது ஸஹாபாக்களை அனுப்பினார்கள். எனினும் சிலரை அவர்கள் கொன்றார்கள். சிலரைக் கைது செய்து கொண்டு போய் துன்புறுத்திக் கொன்றார்கள். அவர்களில் குபைப் ரழியல்லாஹு அன்ஹும் ஒருவர். அவரை கொல்லும் முன்பாக, அவருக்கு கடைசி ஆசை ஏதேனும் உள்ளதா எனக் கேட்க, இரண்டு ரகஅத் தோழா வேண்டும் என்றார்கள். அவர் அனுமதிக்கப் பட்டார். அவர் சீக்கிரம் தொழுத பிறகு, தான் அதிக நேரம் தொழ விரும்பியதாகவும், உயிருக்குப் பயந்து தொழுவதாக யாரும் நினைத்து விடக் கூடாது என்பதால் அவ்வாறு செய்யவில்லை என்று கூறினார்.

அவரைக் கொல்ல அவர்கள் தயாரானபோது, ஒருவர் அவரிடம் அவருக்குப் பதிலாக ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் தங்களிடம் மாட்டிக் கொண்டிருந்தால் அவர் தப்பிக்க வழி என்பதால் மகிழ்ச்சி அடைவாரா என வினவினார். ஆனால் குபைப் ரழியல்லாஹு அன்ஹுவோ, தமது உயிருக்குப் பதிலாக, ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் காலின் மீது சிறு முள் குத்தக் கூட நான் சம்மதிக்க மாட்டேன் என வீறு கொண்டு கூறினார். பின் ஒரு கவிதை பாடினார்.

“முஸ்லிமாக நான் இறக்கும்போது, நான் எப்படி இறப்பேன் என்ற கவலை எனக்கில்லை. படுக்கையில் அல்லது கொடூரமாக கொல்லப்படுவது குறித்து கவலை இலை. அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவுக்காக இந்த உயிரை அர்ப்பணம் செய்கிறேன். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நாடினால் எனது உடலின் ஒவ்வொரு பகுதியிலும் எனக்கு பரக்கத் அளிப்பான்.” இவ்வாறு அவர் வீறு கொண்டு மரணத்தைத் தழுவினார்.

எனவே அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாகொடுத்த இந்த அருட்கொடையை நாம் நிரந்தரமாக வைத்துக் கொண்டால்தான் இறுதி வெற்றி நமக்கு கிடைக்கும். நம் இறுதி மூச்சு வரை இந்த இஸ்லாத்தை தக்க வைக்கும் பாக்கியத்தை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நம் அனைவருக்கும் அளிப்பானாக!

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 22

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

الحديث الثاني والعشرون

عَنْ أَبِي عَبْدِ اللَّهِ جَابِرِ بْنِ عَبْدِ اللَّهِ الْأَنْصَارِيِّ رَضِيَ اللَّهُ عَنْهُمَا: "أَنَّ رَجُلًا سَأَلَ رَسُولَ اللَّهِ ﷺ فَقَالَ: أَرَأَيْت إذَا صَلَّيْت الْمَكْتُوبَاتِ، وَصُمْت رَمَضَانَ، وَأَحْلَلْت الْحَلَالَ، وَحَرَّمْت الْحَرَامَ، وَلَمْ أَزِدْ عَلَى ذَلِكَ شَيْئًا؛ أَأَدْخُلُ الْجَنَّةَ؟ قَالَ: نَعَمْ". رَوَاهُ مُسْلِمٌ.

ஹதீஸ்-22:

ஒரு மனிதர் நபி(ஸல்) அவர்களிடம்: நான் கடமையாக்கப்பட்ட தொழுகைகளை நிறைவேற்றுகிறேன். ரமழானில் நோன்பு நோற்கிறேன். அனுமதிக்கப்பட்ட (ஹலாலான வைகளை) ஏற்று நடக்கிறேன். தடுக்கப்பட்ட வைகளை (ஹராமானவைகளை) தவிர்ந்து நடக்கிறேன். இதற்கு மேல் நான் எதுவும்செய்ய வில்லை. இந்த நிலையில் நான் சுவனம் நுழைவேனா? என்று கேட்டார் அதற்கு நபி(ஸல்) அவர்கள் ஆம் என கூறினார்கள்.

இந்த ஹதீதை அறிவித்தவர் அபு அப்துல்லாஹ் ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் அல் அன்ஸாரி ரழியல்லாஹு அன்ஹு ஆவார். இவரது தந்தை அப்துல்லாஹ் ரழியல்லாஹு அன்ஹுவும் ஸஹாபாதான். பத்ருப் போரிலும், உஹதுப் போரிலும் கலந்த அவர், உஹதுப் போரில் ஷஹீதானார். இருவரும் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் மதினா வரும் முன்பே அவர்களை மக்காவில் சந்தித்து இஸ்லாத்தை ஏற்றவர்கள். ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் அல் அன்ஸாரி ரழியல்லாஹு அன்ஹுக்கு ஒன்பது சகோதரிகள் இருந்தார்கள் என்பதால் அந்த இரண்டு போர்களிலும் கலந்து கொள்ள தந்தை அனுமதிக்கவில்லை. ஒரு வேளை இருவரும் போரில் கொல்லப்பட்டால், அவர்களின் நிலை என்னவாகும் என்ற கவலையில்தான் அனுமதிக்கவில்லை. எனினும் அதற்குப் பிறகு நடந்த போர்களில் அவர் கலந்து கொண்டார். இவர் சுமார் ஆயிரத்து நானூறு ஹதீதுகளை அறிவித்திருக்கிறார். குறிப்பாக ஹஜ் சம்பந்தப்பட்ட பல ஹதீதுகளை அறிவித்திருக்கிறார்.

ஒரு நபர், தாம் ஐவேளை தொழுகை தொழுது, ரமழானில் நோன்பு நோற்று, ஹலாலானவற்றை ஏற்றும், ஹராமானவற்றைத் தவிர்த்தும் வருவதாக ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் கூறி, அந்நிலையில் தாம் சுவனம் செல்வாரா எனக் கேட்க, அவர்களும் ஆம் என்று கூறினார்கள். இந்த ஹதீதில் கேட்பவர், ஜகாத் மற்றும் ஹஜ்ஜைப் பற்றி குறிப்பிடவில்லை. ஜகாத் மற்றும் ஹஜ் ஆகியன கடமையாவதற்கு முன்பு நடந்ததாக இருக்கலாம் என சிலர் காரணம் கூறுகிறார்கள். ஆனால் ஜகாத் கடமையான மறு வருடம் நோன்பு கடமையானது என்பதால் இந்த காரணம் பொருந்தாது. அந்த நபர் ஏழையாக இருந்திருக்கலாம் எனவும், ஜகாத் நிஸாப் அடைந்திருக்க மாட்டார் என்பதால் அது குறித்து சொல்லி இருக்கமாட்டார்.

மேலும் ஹராமை விட்டு விலகி இருப்பதாக சொல்வது, ஜகாத் கடமையான பின் அதனைக் கொடுக்காமல் இருப்பது ஹராமாகும்.

ஹலாலை ஹலால் என நம்புவதாகச் சொன்னதற்கு இமாம் நவவி ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறும் விளக்கமாவது, ஹலாலை ஹலாகாக நம்புவதே நம் மீது கடமையாகும். அதனால் சந்தேகமில்லாதஹலாலான விஷயத்தை ஹராம் என்று கூறுவது இஸ்லாத்திற்கு மாற்றமான ஒன்றாகும். ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் தங்களின்

மனைவியைத் திருப்தி செய்யும் நோக்கில் தேன் சாப்பிடுவதை விடப்போவதாகக் கூறிய போது, அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா அதனைத் தடுத்து விட்டான்.

அத்தியாயம் அத் தஹ்ரீம் 1

يٰٓاَيُّهَا النَّبِيُّ لِمَ تُحَرِّمُ مَآ اَحَلَّ اللّٰهُ لَكَۚ تَبْتَغِيْ مَرْضَاتَ
اَزْوَاجِكَۗ وَاللّٰهُ غَفُوْرٌ رَّحِيْمٌ ۝

நபியே நீர் உமது மனைவிகளின் திருப்தியைக் கருதி அல்லாஹ் உமக்கு ஆகுமாக்கி வைத்தவைற்றை நீர் ஏன் விளக்கிக் கொண்டீர்? அல்லாஹ் மன்னிப்பவனும், கருணை உடையவனும் ஆவான்.

நமக்குப் பிடிக்கவில்லை என்றால் ஒன்றை விடலாம். ஆனால் ஹலாலை ஹராம் எனக் கூற முடியாது. ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு உடும்புக் கறி பரிமாறப்பட்டபோது, தங்கள் பகுதியில் அதனைச் சாப்பிட்டுப் பழக்கம் இல்லை எனினும், மற்றவர்கள் சாப்பிடுவதற்கு தடை இல்லை என்றார்கள்.

ஹராமை ஹராமாகக் கருதுவதும், அதனை விட்டு விலகுவதும் கடமையாகும். மேலும் அவற்றுக்கு மேலாகத் தாம் ஒன்றும் செய்யப் போவதில்லை என அவர் கூறினாலும், கடமையான தொழுகைக்கு மேலாக உபரியான தொழுகை தொழுபவர், அவரை விடச் சிறந்தவராக ஆகிவிடுவார். நம் காலகட்டத்தில், கடமையான காரியத்தை மட்டும் செய்பவர் குறித்து அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா குற்றம் பிடிக்க மாட்டான். அனால் உபரியான அமல்களைச் செய்பவர், முன்னரை விடச் சிறந்தவர் என்பதில் சந்தேகம் இல்லை.

அந்த நபரின் கேள்வியில் அவர் சுவனத்தில் நுழைவது குறித்த ஆர்வத்தை நாம் காணலாம். இவ்வாறு தங்களின் இலக்கு இதுதான் என்று தெளிவு படுத்திய நிகழ்வுகள் பல உள்ளன. ஒரு முறை ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் போரில் கலந்து கொள்வது பற்றிய சிறப்பு, அதில் ஷஹீதானால் எந்த அளவு சிறப்பு எனக் கூறினார்கள். அப்போது பேரித்தம் பழம் சாப்பிட்டுக் கொண்டிருந்த ஸஹாபி ஒருவர் ஆச்சரியத்தில் ‘பஹிம், பஹிம்’ என்று கூறினார். எதற்காக அவர் இப்படி சொன்னார் என அவரிடம் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கேட்க, இந்த களத்தில் இறங்கி போரிட்டு ஷஹீதானால் சுவனம் கிடைக்கும் என்று தாங்கள் கூறியதற்கு அவ்வாறு சொன்னதாகக் கூறினார். தாம் பேரித்தம் பழம் சாப்பிட்டு முடித்து விட்டு களம் செல்வது என்பது நீண்ட நேரம் என்பதால் அவற்றை விட்டு விட்டு போர்க்களம் சென்று வீர மரணம் அடைந்தார். அவ்வாறு அவர்கள் சுவனத்திற்கு ஆர்வமாக இருந்தார்கள். ராபிய்யாஹ் ரழியல்லாஹு அன்ஹு என்ற ஸஹாபி ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்குப் பணிவிடை செய்வார். குறிப்பாக தஹுஜ்ஜுத் நேரத்தில் உளூ செய்யத் தண்ணீர் போன்ற அவர்களுடைய தேவைகளை கவனிப்பார். ஒரு தடவை அவரிடம் என்ன வேண்டும் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் வினவினார்கள். தாம் சுவனத்திலும் அவர்களுடன் இருக்கும் பாக்கியம் வேண்டும் எனக் கூறினார்கள். வேறு ஏதும் வேண்டாமா என அவரை ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் வினவினார்கள். ஆனால் அவரோ அதுதான் வேண்டும் என்றார். தாங்கள் அதற்காகத் துஆ செய்வதாகவும், அதிகம் அதிகம் தொழுவது கொண்டு அதற்கு உதவி செய்ய வேண்டும் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள். எனவே சுவனத்தை அடைய வேண்டிய ஆர்வம் அவர்களிடத்தில் இருந்தன.

கடமையான காரியங்களைச் செய்தாலே சுவனம் உண்டு என இந்த ஹதீது குறிப்பிட்டாலும், மேலதிக வணக்கங்கள் நமது படித்தரத்தை உயர்த்தும். நம் அனைவருக்கும் கடமையான வணக்கங்களை பேணிச் செய்யும் பாக்கியத்தை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நம் அனைவருக்கும் அளிப்பானாக!

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 23

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி

الحديث الثالث والعشرون

عَنْ أَبِي مَالِكٍ الْحَارِثِ بْنِ عَاصِمٍ الْأَشْعَرِيِّ ﷺ قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ ﷺ "الطُّهُورُ شَطْرُ الْإِيمَانِ، وَالْحَمْدُ لِلَّهِ تَمْلَأُ الْمِيزَانَ، وَسُبْحَانَ اللَّهِ وَالْحَمْدُ لِلَّهِ تَمْلَآنِ -أَوْ: تَمْلَأُ- مَا بَيْنَ السَّمَاءِ وَالْأَرْضِ، وَالصَّلَاةُ نُورٌ، وَالصَّدَقَةُ بُرْهَانٌ، وَالصَّبْرُ ضِيَاءٌ، وَالْقُرْآنُ حُجَّةٌ لَكَ أَوْ عَلَيْك، كُلُّ النَّاسِ يَغْدُو، فَبَائِعٌ نَفْسَهُ فَمُعْتِقُهَا أَوْ مُوبِقُهَا ".

[رَوَاهُ مُسْلِمٌ]

ஹதீஸ்-23:

சுத்தம் ஈமானின் (இறைநம்பிக்கையில்) ஒரு பகுதி யாகும்இறைநம்பிக்கையில் பாதியாகும். அல் ஹம்து லில்லாஹ் (எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே) என்(று துதிப்)பது (நன்மை மற்றும் தீமைகளை நிறுக்கக்கூடிய) தராசை நிரப்பக் கூடியதாகும். சுப்ஹானல்லாஹி, வல் ஹம்து லில்லாஹி (அல்லாஹ் தூயவன் எல்லாப் புகழும் அவனுக்கே உரியது) என்(று துதிப்)பது வானங்கள் மற்றும் பூமிக்கிடையே யுள்ள இடத்தை நிரப்பிவிடக் கூடிய (நன்மை களைக் கொண்டதாகும். தொழுகை (வழிகாட்டும்) ஒளியாகும். தர்மம் சான்றாகும். பொறுமை வெளிச்சமாகும். குர்ஆன் உனக்கு சாதகமான அல்லது பாதகமான சான்றாகும். மக்கள் அனை வரும் காலையில் புறப்பட்டுச் சென்று தம்மை விற்பனை செய்கின்றனர். சிலர் தம்மை (இறைவனிடம் விற்று நரகத்திலிருந்து தம்மை) விடுவித்துக் கொள்கின்றனர். வேறு சிலர் (ஷைத்தானிடம் விற்று) தம்மை அழித்துக் கொள்கின்றனர் என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் அறிவிப்பவர். அபூமாலிக் அல்அஷ்அரீ (ரலி) அவர்கள்: அறிவிக்கிறார்கள்.(நூல்முஸ்லிம்)

இந்த ஹதீதை அறிவித்தவர் அபு மாலிக் அல் அஷ்அரீ ரழியல்லாஹு அன்ஹு ஆவார். இவர் ஹாரிஸ் அல்லது அம்ரு ஆகும். அபு மூஸா அல் அஷ்அரீ ரழியல்லாஹு அன்ஹுவுக்கு உறவினர். அபிசீனியாவுக்கு ஹிஜ்ரத் செய்த மக்கள், ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் மதீனாவுக்குச் சென்று முஸ்லிம் சமுதாயத்தை நிறுவி விட்டார்கள் என அறிந்து, மதீனாவுக்கு இரண்டாவது ஹிஜ்ரத்தாகச் சென்றார்கள். அவர்களில் இவரும் ஒருவர். மதினா வந்து இஸ்லாத்தை ஏற்றார். அவருக்கு சில ஒட்டகங்கள் கிடைத்தன. அதில் தங்களுக்கும் பங்கு வேண்டும் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் கேட்க, அவரிடமே சென்று கேட்குமாறு கூறினார்கள். மக்கள் அவரிடம் வந்தபோது, ஒட்டகங்களை ஐந்து பங்குகளாகப் பிரித்து, ஒரு பங்கை ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு அனுப்பி விட்டார். மீதி உள்ளதை மூன்றாகப் பிரித்து, அதில் ஒன்றை தங்களைச் சேர்ந்தவர்களுக்கு எடுத்துக் கொண்டு, மீது இரண்டு பங்கை முச்ளிம்களுக்குக் கொடுத்து விட்டார். அதனை அவர்கள் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் முறையிட, அவர் நிலையில் தாங்கள் இருந்தால், தாங்களும் அவ்வாறு தான் பங்கிட்டிருப்பார்கள் என கூறினார்கள். எனினும் இது பலவீனமான அறிவிப்பு ஆகும்.

தூய்மை ஈமானின் ஒரு பகுதி (பாதி) ஆகும் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள்.

அத்தியாயம் பகரா 222

إِنَّ اللَّهَ يُحِبُّ التَّوَّابِينَ وَيُحِبُّ الْمُتَطَهِّرِينَ ﴿٢٢٢﴾

நிச்சயமாக அல்லாஹ் தவ்பா செய்பவர்களை நேசிக்கிறான். தூய்மையானவர்களையும் நேசிக்கிறான்.

எனவே தூய்மை, குறிப்பாக தொழுகைக்கு, மிக மிக அவசியாமானது. தூய்மை இல்லாமல் தொழுகை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. உளூ, குளிப்பு கடமையிருந்தால் குளிப்பது போன்றவை முக்கியம். ஆடையில் தூய்மை, வீட்டில் தூய்மை என எல்லாவற்றிலும் தூய்மை இருக்க வேண்டும்.

அத்தியாயம் முத்தத்ஃதிர் 4, 5.

وَثِيَابَكَ فَطَهِّرْ ﴿٤﴾ وَالرُّجْزَ فَاهْجُرْ ﴿٥﴾

மேலும் உமது ஆடையை தூய்மையாக வைத்துக் கொள்வீராக! இன்னும் அசுத்தத்தை வெறுத்து விடுவீராக!

என்னே தூய்மை இஸ்லாத்தின் ஒரு பகுதியாகும்.

அடுத்து அல்ஹம்துலில்லாஹ் என்பது தராசை நிரப்பக்கூடியது எனவும், ஸுப்ஹானல்லாஹ் மற்றும் அல்ஹம்துலில்லாஹ் என்று கூறுவது, வானத்திற்கும், பூமிக்கும் இடையில் உள்ள இடத்தை நிரப்புவது என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். சிறிய சிறிய சொற்கள் சொல்வதற்கு இலகுவானது என்றாலும், அதற்கான கூலியோ மிகவும் மகத்தானதாக உள்ளது. எனவே நமக்குப் பிடித்த சொற்களைவிட ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் சொல்லித் தந்த சொற்களை வைத்து திக்ர் செய்வது மிகவும் அதிக பலனைத் தரும்.

ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் ஃபஜ்ர் தொழுகைக்குச் செல்லும் போது அன்னை ஜுவைரியாஹ் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் திக்ரு செய்து கொண்டிருப்பதைக் கண்டார்க்கள். அவர்கள் லுஹாத் தொழுகைக்குப் பிறகு திரும்பும்போதும் அன்னை ஜுவைரியாஹ் ரழியல்லாஹு அன்ஹா அவர்களைத் திக்று செய்யும் நிலையிலே கண்டார்கள். 'ஸுப்ஹானல்லாஹு வபி ஹம்திஹி, அத்த கல்கிஹி, வ ரிழா நஃப்ஸிஹி, வ ஸினத்தி அர்ஷிஹி, மிதாத கலிமாதிஹி, என்று மூன்று தடவை ஓதுவது, நீர் காலையிலிருந்து இதுவரை ஓதியதை விட கனமாக இருக்கும் எனக் கூறினார்கள்.

எனவே ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கற்றுக் கொடுத்தவற்றைக் கொண்டு திக்று செய்வது மிகவும் சிறந்தது. திக்று செய்பவருக்கும், செய்யாதவருக்கும் உள்ள உதாரணம், உயிருள்ளவருக்கும், உயிரில்லாதவருக்கும் உள்ள உதாரணமாகும். திக்று நம் உள்ளங்களுக்கு உயிரைக் கொடுக்கும்.

தொழுகை ஒரு ஒளி என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் எனக் கூறியுள்ளார்கள். வெளிச்சம் இருந்தால்தான் நல்லது எது கெட்டது எது எனக் காண முடியும். இருட்டில் எதனையும் பிரித்துப் பார்க்க முடியாது. அது போல தொழுகையை நிலை நிறுத்தினால், நன்மை தீமையைப் பிரித்து அறியும் பாக்கியம் நமக்குக் கிடைக்கும்.

அத்தியாயம் அன்கபூத் 45

إِنَّ الصَّلَاةَ تَنْهَىٰ عَنِ الْفَحْشَاءِ وَالْمُنكَرِ

நிச்சயமாக தொழுகை மானக்கேடானவற்றிலிருந்தும், மறுக்கப்பட்டதிலிருந்தும் தடுக்கும்.

மேலும் யார் தொழுகையைப் பேணித் தொழுவாரோ, அவருக்கு மறுமையில் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா ஒளியை, சான்றைத் தருவான் எனவும், நரக நெருப்பிலிருந்து

ஈடேற்றம் தருவான் எனவும் ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். நமது முகத்தைப் பிரகாசமாக்கிக் கண்ணியப்படுத்துவான்.

மேலும் தானம் என்பது உள்ளத்தில் இருக்கும் இறை நம்பிக்கையின் சான்றாகும். ஏனெனில் செல்வம் மனிதனுக்குப் பிரியமான ஒன்று.

அத்தியாயம் அல் ஆதியாத் 8

وَإِنَّهُۥ لِحُبِّ ٱلْخَيْرِ لَشَدِيدٌ ۝

இன்னும் நிச்சயமாக மனிதனாகிய அவன் செல்வத்தை விரும்புவதில் மிகக் கடுமையானவனாக இருக்கிறான்.

அப்படிப்பட்ட மனிதர் இறையச்சத்தின் காரணமாக மிகவும் பிரியமான செல்வத்தை மறுமை வெற்றிக்காக செலவழிக்கிறார்.

அடுத்து பொறுமை என்பது வெளிச்சம் என ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். பொறுமையை இழந்தவர்கள் மார்க்கத்துக் மாறாக காரியங்களைச் செய்வார்கள். பொறுமை மூன்று வகைப்படும். நன்மையான காரியங்களைப் பொறுமையாகத் தொடர்ந்து செய்வது. இடையில் பொறுமை இழந்து அவற்றை விட்டு விடக் கூடாது. இரண்டாவது பாவங்களைத் தவிர்ப்பதில் பொறுமை கொள்ளவேண்டும். நம் மனோ இச்சைக்குக் கட்டுப்படாமல், பொறுமையுடன் பாவங்களிலிருந்து விலகி இருக்க வேண்டும். மூன்றாவது அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா ஏற்படுத்திய விதியில் திருப்தி கொண்டு பொறுமையாக, தவறாக முறையிடாமல் இருக்க வேண்டும்.

அடுத்ததாக, குர்ஆன் நமக்கு சாதகமாக அல்லது எதிராக அமையும் என ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். குர்ஆன் ஓத வேண்டும் எனவும், அது நமக்கு சிபாரிசு செய்யக்கூடியது எனவும் ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். நோன்பும், குர்ஆனும் மறுமை நாளன்று மக்களுக்குப் பரிந்துரை செய்யும் எனவும் ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். தனக்காக பட்டினி இருந்ததாக நோன்பும், தன்னை ஓதுவதில் பகல் மற்றும் இரவைக் கழித்ததாக குர்ஆனும் பரிந்துரை செய்யும். யார் குர்ஆனை ஓதி அதன்படி நடந்தார்களோ, அவர்களுக்கு குர்ஆன் பரிந்துரை செய்யும். யார் குர்ஆனைப் புறக்கணித்து ஓதாமல் விட்டாலோ, அதற்கு மாற்றமாக நடந்தார்களோ அவருக்கு எதிராகக் சாட்சி சொல்லும்.

ஒவ்வொரு நாளும் மனிதன் தன ஆன்மாவை விற்கிறான் என ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவின் கட்டளைக்குக் கட்டுப்பட்டு தன் ஆன்மாவை விற்றால், அவன் நரக நெருப்பிலிருந்து பாதுகாப்பு பெறுவான். ஷைத்தான் வழியில் தன் ஆன்மாவை விற்றால், தம்மையே அழித்து விடுவார். எனவே அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவும், அவனது தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களும் காட்டிய வழியில் நாம் பயணித்தால், நரக நெருப்பிலிருந்து பாதுகாப்புப் பெற்று, நிரந்தர வெற்றியை அடைவோம். அப்படிப்பட்ட நிலையை நம் அனைவருக்கும் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாஅளிப்பானாக!

الحديث الرابع والعشرون

عَنْ أَبِي ذَرٍّ الْغِفَارِيِّ ﷺ عَنْ النَّبِيِّ ﷺ فِيمَا يَرْوِيهِ عَنْ رَبِّهِ تَبَارَكَ وَتَعَالَى، أَنَّهُ قَالَ: "يَا عِبَادِي: إنِّي حَرَّمْت الظُّلْمَ عَلَى نَفْسِي، وَجَعَلْته بَيْنَكُمْ مُحَرَّمًا؛ فَلَا تَظَالَمُوا. يَا عِبَادِي! كُلُّكُمْ ضَالٌّ إلَّا مَنْ هَدَيْته، فَاسْتَهْدُونِي أَهْدِكُمْ. يَا عِبَادِي! كُلُّكُمْ جَائِعٌ إلَّا مَنْ أَطْعَمْته، فَاسْتَطْعِمُونِي أُطْعِمْكُمْ. يَا عِبَادِي! كُلُّكُمْ عَارٍ إلَّا مَنْ كَسَوْته، فَاسْتَكْسُونِي أَكْسُكُمْ. يَا عِبَادِي! إنَّكُمْ تُخْطِئُونَ بِاللَّيْلِ وَالنَّهَارِ، وَأَنَا أَغْفِرُ الذُّنُوبَ جَمِيعًا؛ فَاسْتَغْفِرُونِي أَغْفِرْ لَكُمْ. يَا عِبَادِي! إنَّكُمْ لَنْ تَبْلُغُوا ضُرِّي فَتَضُرُّونِي، وَلَنْ تَبْلُغُوا نَفْعِي فَتَنْفَعُونِي. يَا عِبَادِي! لَوْ أَنَّ أَوَّلَكُمْ وَآخِرَكُمْ وَإِنْسَكُمْ وَجِنَّكُمْ كَانُوا عَلَى أَتْقَى قَلْبِ رَجُلٍ وَاحِدٍ مِنْكُمْ، مَا زَادَ ذَلِكَ فِي مُلْكِي شَيْئًا. يَا عِبَادِي! لَوْ أَنَّ أَوَّلَكُمْ وَآخِرَكُمْ وَإِنْسَكُمْ وَجِنَّكُمْ كَانُوا عَلَى أَفْجَرِ قَلْبِ رَجُلٍ وَاحِدٍ مِنْكُمْ، مَا نَقَصَ ذَلِكَ مِنْ مُلْكِي شَيْئًا. يَا عِبَادِي! لَوْ أَنَّ أَوَّلَكُمْ وَآخِرَكُمْ وَإِنْسَكُمْ وَجِنَّكُمْ قَامُوا فِي صَعِيدٍ وَاحِدٍ، فَسَأَلُونِي، فَأَعْطَيْت كُلَّ وَاحِدٍ مَسْأَلَته، مَا نَقَصَ ذَلِكَ مِمَّا عِنْدِي إلَّا كَمَا يَنْقُصُ الْمِخْيَطُ إذَا أُدْخِلَ الْبَحْرَ. يَا عِبَادِي! إنَّمَا هِيَ أَعْمَالُكُمْ أُحْصِيهَا لَكُمْ، ثُمَّ أُوَفِّيكُمْ إيَّاهَا؛ فَمَنْ وَجَدَ خَيْرًا فَلْيَحْمَدْ اللَّهَ، وَمَنْ وَجَدَ غَيْرَ ذَلِكَ فَلَا يَلُومَن إلَّا نَفْسَهُ".رَوَاهُ مُسْلِمٌ]

ஹதீஸ்-24:

வளமும் உயர்வும் மிக்க அல்லாஹ் பின்வருமாறு கூறியதாக நபி (ஸல்) அவர்கள் அறிவித்தார்கள்:

என் அடியார்களே! அநீதியிழைப்பதை எனக்கு நானே தடை செய்து கொண்டேன். அதை உங்களிடையேயும் தடை செய்யப் பட்டதாக ஆக்கிவிட்டேன். ஆகவே, நீங்கள் ஒருவருக்கொருவர் அநீதியிழைக்காதீர்கள்.

என்அடியார்களே! உங்களில் யாரை நான் நேர் வழியில் செலுத்தினேனோ அவர்களைத் தவிர மற்ற அனைவரும் வழி தவறியவர்களே. ஆகவே, நேர் வழியில் செலுத்துமாறு என்னிடமே கேளுங்கள். உங்களை நான் நேர் வழியில் செலுத்துவேன்.

என் அடியார்களே! உங்களில் யாருக்கு நான் உணவளித்துள்ளேனோ அவர்களைத் தவிர மற்ற அனைவரும் பசித்திருப்பவர்களே. ஆகவே, என்னிடமே உணவைக் கேளுங்கள். நான் உங்களுக்கு உணவளிக்கிறேன். என் அடியார்களே! உங்களில் யாருக்கு நான் ஆடையணிவித்துள்ளேனோ அவர்களைத் தவிர மற்ற அனைவரும் நிர்வாணமானவர் களே. ஆகவே, என்னிடமே ஆடை கேளுங்கள். நான் உங்களுக்கு ஆடையணிவிக்கிறேன். என் அடியார்களே! நீங்கள் இரவிலும் பகலிலும் பாவம் செய்கிறீர்கள். நான் அனைத்துப் பாவங்களையும் மறைத்துக் கொண்டிருக்கி றேன். ஆகவே, என்னிடமே பாவமன்னிப்புக் கோருங்கள். நான் உங்கள் பாவங்களை மன்னிக்கிறேன்.

என்அடியார்களே! உங்களால் எனக்கு எவ்விதத் தீங்கும் அளிக்க முடியாது; மேலும், உங்களால் எனக்கு எவ்விதப் பயனும்அளிக்கமுடியாது.

என்அடியார்களே! உங்களில் முன் சென்றவர்கள், பின்னால் வருபவர்கள், மனிதர்கள், ஜின்கள் ஆகிய அனைவரும் உங்களில் மிகவும் இறையச்சமுடைய ஒரு மனிதரைப் போன்று மாறிவிட்டாலும் அது எனது ஆட்சியில் எதையும் அதிகமாக்கி விடுவதில்லை.

என் அடியார்களே! உங்களில் முன் சென்ற வர்கள் பின்னால் வருபவர்கள் மனிதர்கள், ஜின்கள் ஆகிய அனைவரும் மிகவும் தீயமனிதர் ஒருவரைப் போன்று மாறிவிட்டாலும் அது எனது ஆட்சியில் எதையும் குறைத்து விடப்போவதில்லை.

என்அடியார்களே! உங்களில் உங்களில் முன் சென்றவர்கள் பின்னால் வருபவர்கள் மனிதர்கள், ஜின்கள் ஆகிய அனைவரும் திறந்த வெளியில் நின்று என்னிடத்தில் (தத்தம் தேவை களைக்) கோரினாலும் ஒவ்வொரு மனிதருக்கும் அவர் கேட்பதை நான் கொடுப்பேன். அது என்னிடத்தில்

இருப்பவற்றில் எதையும் குறைத்து விடுவதில்லை; கடலில் நுழை(த்து எடு)க்கப்பட்ட ஊசி (தண்ணீரைக்) குறைப்ப தைப் போன்றே தவிர (குறைக்காது)!
என்அடியார்களே! நீங்கள் செய்து வரும் நல்லறங்களை நான் உங்களுக்காக எண்ணிக் கணக்கிடுகிறேன். பிறகு அதன் நற்பலனை நான் முழுமையாக வழங்குவேன். நல்லதைக் கண்டவர் அல்லாஹ்வைப் புகழட்டும். அதல்லாததைக் கண்டவர் தம்மையே நொந்து கொள்ளட்டும்!.

- அறிவிப்பவர்: அபூதர் (ரலி) அவர்கள்: அறிவிக்கிறார்கள்.(நூல்முஸ்லிம்)

இந்த ஹதீதை அறிவித்தவர் அபுதார் கிஃப்ஃபாரி ரழியல்லாஹுு அன்ஹுு ஆவார். அல்லாஹ் ஸுுப்ஹானஹுு வ தஆலா சொல்வதாக இந்த நீண்ட ஹதீது அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தகைய ஹதீது, 'ஹதீது குத்ஸி' என்பதாகும். இதற்கும் குர்ஆனுக்கும் உள்ளா வித்தியாசம், 'ஹதீது குத்ஸி' அல்லாஹ் ஸுுப்ஹானஹுு வ தஆலா சொல்வதாக அறிவிக்கப்பட்டதாலும், அது குர்ஆனின் ஒரு பகுதி இல்லை. குர்ஆன் ஓதுவது ஒரு இபாதத். தொழுகையில் குர்ஆன் ஓத வேண்டும். 'ஹதீது குத்ஸி'க்கு இது பொருந்தாது. குர்ஆன் அதிகமான நபர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. ஹதீது குத்ஸி சிலரால்தான் அறிவிக்கப்பட்டுள்ளது.

அநீதி இழைப்பதை தன் மீது ஹராமாக ஆக்கியதாகக் கூறிய அல்லாஹ் ஸுுப்ஹானஹுு வ தஆலா, நாமும் அவ்வாறு அதனை ஹராமாக ஆக்க வேண்டும் என அறிவுறுத்துகிறான்.

அத்தியாயம் அல் கஹ்பு 49

وَلَا يَظْلِمُ رَبُّكَ اَحَدًا ۝

உமது இரட்சகன் ஒருவருக்கும் அநியாயம் செய்ய மாட்டான்.

இவ்வாறு பல இடங்களில் அல்லாஹ் ஸுுப்ஹானஹுு வ தஆலாகூறியுள்ளான். எனிவே விதி பற்றிய நிலையில் ஷைத்தான் நம் உள்ளத்தில் சந்தேகம் எழுப்பி நம் ஈமானைக் கெடுக்க நினைப்பான். ஆனால் இறைவன் அநீதி இழைக்க மாட்டான் என்பதைத் தெளிவாக்கி உள்ளான். அது போல் நாமும் அநீதி இழைக்கக் கூடாது என அறிவுறுத்தியுள்ளான்.

அநீதி மறுமை நாளில் இருள்களாக வரும் என ரஸுூலுல்லாஹி ஸல்லல்லாஹுு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். ஸிராத் பாலத்தைக் கடக்க நமக்கு ஒளி வேண்டும். அநீதி இழைப்பது இருளைக் கொடுக்கும் என்பதால் அதனைக் கடக்க சிரமமாக இருக்கும். அநீதி இழைத்தால், இழைக்கப்பட்டவருக்கு, நம்முடைய நன்மைகள் அவர்களுக்குப் போய் சேரக்கூடும். அல்லது அவர்கள் பாவங்கள் நமக்கு வந்து சேரலாம். நம்மை நட்டவாளிகளாக ஆக்கிவிடக் கூடும். அநீதி இழைக்கப்பட்டவர் நமக்கு எதிராக சாபம் இட்டாலோ, அல்லது துஆ செய்தாலோ அது ஒருபோதும் நிராகரிக்கப்படாது. அவர்களின் சாபம் குறித்து பயந்து கொள்ளுமாறு ரஸுூலுல்லாஹி ஸல்லல்லாஹுு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். அவர்களுக்கும் இறைவனுக்கும் இடையில் எந்த திரையும் இருக்காது.

வரலாற்றில் இது குறித்து பல நிகழ்வுகளை நாம் காணலாம். உதாரணமாக கலிஃபா உமர் ரழியல்லாஹுு அன்ஹுு ஆட்சி காலத்தில் அமர் இப்னு ஆஸ் ரழியல்லாஹுு அன்ஹுு ஆளுநராக இருந்தார். அவர் குறித்து ஒருவர் அவதூறைக் கூறினார். தொழுகை ஒழுங்காக தொழுவதில்லை எனவும், போரில் கோழைத்தனம் செய்வதாகவும், கனீமத் பொருட்களை நேர்மையாகப் பங்கிடுவதில்லை எனவும் கூறப்பட்டார். அமர் இப்னு ஆஸ் ரழியல்லாஹுு

மற்றும் குறை கூறிய நபர் இருவரையும் உமர் ரழியல்லாஹு அன்ஹு அழைத்து விசாரித்தார்கள். அந்த நபர் அந்த மூன்று குறைகளையும் கூறினார். “இறைவா! இவர் ஏன் மீது அவதூறு சுமத்துகிறார். எனவே இவரது வயதை நீட்டி விடுவாயாக! அக்கால கட்டத்தில் பிச்சை எடுக்கவும், பெண்கள் விஷயத்தில் குழப்பம் அடையவும் செய்வாயாக!” என அமர் இப்னு ஆஸ் ரழியல்லாஹு இறைவனிடம் அந்த மூன்று அவதூறுக்குப் பகரமாக துஆ கேட்டார். இந்த நிகழ்வைக் கண்ட ஒருவர் தாம் அந்த நபர் வயோதிகம் அடைந்ததைக் கண்டதாகக் கூறினார். மேலும் வறுமையில் பிச்சை எடுத்ததையும், கண் சரியாகத் தெரியாத நிலையிலும் பெண்கள் குரலைக் கேட்டாலே அவர் குழப்பம் அடைந்ததையும் கண்டதாகக் கூறினார். எனவே அநீதி இழைப்பது குறித்து நாம் எசசரிக்கையாக இருக்க வேண்டும்.

அடுத்ததாக அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா யாருக்கு நேர்வழி காட்டினானோ, அவர்களைத் தவிர மற்றயவர்கள் வழி கேட்டவர்கள்தாம் என ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் தங்கள் சிறிய தந்தை அபு தாலிப் அவர்களுக்கு நேர்வழி கிடைக்க வேண்டும் என மிகவும் விருப்பப் பட்டார்கள். ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மார்க்கம் சாத்தியமானது தான் என்பதில் அவருக்கு சிறிதளவும் சந்தேகம் இல்லை. எனினும் அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் ஆனால் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா அவ்வாறு நாடவில்லை.

அத்தியாயம் கஸஸ் 56

إِنَّكَ لَا تَهْدِي مَنْ أَحْبَبْتَ وَلَٰكِنَّ اللَّهَ يَهْدِي مَن يَشَاءُ ۚ وَهُوَ أَعْلَمُ بِالْمُهْتَدِينَ ﴿٥٦﴾

நிச்சயமாக நீர் விரும்பியோரை நேர்வழியில் செலுத்தி விடமாட்டீர். எனினும் அல்லாஹ், தான் நாடியவரை நேர்வழியில் செலுத்துகிறான். மேலும் நேர்வழி பெறுகிறவர்களை அவனே மிகவும் அறிந்தவன்.

அது போல் நூஹ் அலைஹிஸ் ஸலாம் தங்கள் மகனுக்கு நேர்வழி கொடுக்க முடியவில்லை. லூத் அலைஹிஸ் ஸலாம் தங்கள் மனைவிக்கு நேர்வழி கொடுக்க முடியவில்லை. இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் தங்கள் தந்தைக்கு நேர்வழி கொடுக்க முடியவில்லை. நேர்வழி அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவிடமே உள்ளது. அவன் நாடினால் நேர்வழி கிடைக்கும். ஃபிர்அவுன் மனைவி அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவின் நாட்டத்தால் நேர்வழி பெற்றார். நமக்கு நேர்வழியைப்பற்றி நாம் பிறருக்கு எடுத்துக் கூறலாம். ஆனால் அதனைப் பெறுவது அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவின் நாட்டத்தால்தான் முடியும்.

யாருக்கு அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா உணவு அளிக்கிறானோ அவர்களைத் தவிர அனைவரும் பசித்தவர்கள். யாருக்கு அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா ஆடை அளிக்கிறானோ அவர்களைத் தவிர அனைவரும் நிர்வாணமானவர்கள். எனவே அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவிடத்தில் நாம் உணவையும், ஆடையையும் கேட்க வேண்டும். நம்மிடம் பணம் இருந்தும் நாம் சாப்பிட முடியாத நிர்ப்பந்தம் ஏற்படலாம். மருத்துவர் அறிவுரையினால், அல்லது வேறு காரணங்களினால் நாம் பட்டினி இருக்க வேண்டியதிருக்கும். எனவே சாப்பிடும் பாக்கியத்தைக் கொடுத்த இறைவனுக்கு, சாப்பிட்ட பின்னர் நன்றி செலுத்த வேண்டும். யாருக்கு அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா ஆடை அளிக்கிறானோ அவர்களைத் தவிர அனைவரும் நிர்வாணமானவர்கள். வறுமையின் காரணமாக ஆடை அணியாமலும், அல்லது வசதி இருந்தும் ஹராமாக அரைகுறை ஆடையை அணிபவர்களும் உண்டு. அந்நிலையிலிருந்து நம்மை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா காப்பாற்றிய அவனை அதற்காகப் புகழ வேண்டும். ஸுலைமான் அலைஹிஸ் ஸலாம் அவர்களுக்கு யாருக்கும் அளிக்காத ஆட்சியை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா அளித்தான். அவர்கள் கூறினார்கள், (அத்தியாயம் நம்லு 40

هَٰذَا مِن فَضْلِ رَبِّي

“இது எனது இரட்சகனின் பேரருளில் உள்ளது.”

மேலும் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா கூறுகிறான், “நீங்கள் இரவும், பகலும் பாவம் செய்கிறீர்கள். நான் அனைத்துப் பாவங்களையும் மன்னிக்கிறேன். எனவே என்னிடம் பாவமன்னிப்பு கேளுங்கள்.” பாவமன்னிப்பு கேட்பது கடமையாகும். பாவங்களிலிருந்து பாதுகாக்கப்பட்ட ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஒரு நாளுக்கு எழுபது (அல்லது நூறு) முறை பாவமன்னிப்பு கேட்பார்கள். பாவங்களில் மூழ்கி இருக்கும் நாம் எந்த அளவுக்குக் கேட்க வேண்டும்? அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாபாவங்களை மன்னிக்கக் கூடியவனாக இருக்கிறான்.

நாம் செய்யும் நற்செயல்கள் நமக்கு நன்மை அளிக்குமே அன்றி, அதனால் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா எந்த பயனையும் அடைவதில்லை. மனிதர்கள், ஜின்கள் அனைவரும் நல்லவர்களாக ஆகிவிட்டால், அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவின் ஆட்சியில் எதனையும் அதிகமாக்கி விடாது. அது போல மனிதர்கள், ஜின்கள் அனைவரும் கெட்டவர்களாக ஆகிவிட்டால், அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவின் ஆட்சியில் எதனையும் குறைத்து விடாது.

மேலும் அல்லாஹ் கூறுகிறான், “உலகில் முன் சென்ற, இப்போதுள்ள மக்கள் அனைவரும் என்னிடத்தில் என்ன கேட்டாலும் கொடுப்பேன். அதனால் என்னிடம் எதுவும் குறைந்து விடாது. கடலில் இருந்து ஊசி எந்த அளவு நீரை எடுத்து விடும்?” நன்மையும், தீமையும் நம்மையே வந்து அடையும். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நமக்கு அளித்வற்றிற்கு அவனை புகழ வேண்டும். நாம் தீமை செய்தால் நம்மை நாமே நொந்து கொள்ள வேண்டும்.

அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா மற்றும் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் உபதேசங்களைப் பின்பற்றக் கூடிய மக்களாக நம்மை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா ஆக்குவானாக!

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 25

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி

الحديث الخامس والعشرون

عَنْ أَبِي ذَرٍّ ﷺ أَيْضًا، "أَنَّ نَاسًا مِنْ أَصْحَابِ رَسُولِ اللَّهِ ﷺ قَالُوا لِلنَّبِيِّ ﷺ يَا رَسُولَ اللَّهِ ذَهَبَ أَهْلُ الدُّثُورِ بِالْأُجُورِ؛ يُصَلُّونَ كَمَا نُصَلِّي، وَيَصُومُونَ كَمَا نَصُومُ، وَيَتَصَدَّقُونَ بِفُضُولِ أَمْوَالِهِمْ. قَالَ: أَوَلَيْسَ قَدْ جَعَلَ اللَّهُ لَكُمْ مَا تَصَّدَّقُونَ؟ إنَّ بِكُلِّ تَسْبِيحَةٍ صَدَقَةً، وَكُلِّ تَكْبِيرَةٍ صَدَقَةً، وَكُلِّ تَحْمِيدَةٍ صَدَقَةً، وَكُلِّ تَهْلِيلَةٍ صَدَقَةً، وَأَمْرٌ بِمَعْرُوفٍ صَدَقَةٌ، وَنَهْيٌ عَنْ مُنْكَرٍ صَدَقَةٌ، وَفِي بُضْعِ أَحَدِكُمْ صَدَقَةٌ. قَالُوا: يَا رَسُولَ اللَّهِ أَيَأْتِي أَحَدُنَا شَهْوَتَهُ وَيَكُونُ لَهُ فِيهَا أَجْرٌ؟ قَالَ: أَرَأَيْتُمْ لَوْ وَضَعَهَا فِي حَرَامٍ أَكَانَ عَلَيْهِ وِزْرٌ؟ فَكَذَلِكَ إذَا وَضَعَهَا فِي الْحَلَالِ، كَانَ لَهُ أَجْرٌ ."[رَوَاهُ مُسْلِمٌ]

நபித்தோழர்களில் (ஏழைகளான) சிலர் நபி (ஸல்) அவர்களிடம் "அல்லாஹ்வின் தூதரே! வசதி படைத்தோர் நன்மைகளை (தட்டி)க் கொண்டு போய்விடுகின்றனர். நாங்கள் தொழுவதைப் போன்றே அவர்களும் தொழுகின்றனர்; நாங்கள் நோன்பு நோற்ப தைப் போன்றே அவர்களும் நோன்பு நோற்கின் றனர்; (ஆனால், அவர்கள்) தங்களது அதிகப் படியான செல்வங்களைத் தானதர்மம் செய்கின்றனர். (அவ்வாறு தானதர்மங்கள் செய்ய எங்களிடம் வசதி இல்லையே!)" என்று கூறினர். அதற்கு நபி (ஸல்) அவர்கள், “நீங்களும் தர்மம் செய்வதற்கான (முகாந்தரத்) தை அல்லாஹ் உங்களுக்கு ஏற்படுத்த வில்லையா? அல்லாஹ் வை துதிக்கும் ஒவ்வொரு (சுப்ஹானல்லாஹ்) துதிச் சொல்லும் தர்மமாகும்; அல்லாஹ்வை பெருமைப்படுத்தும் ஒவ்வொரு (அல்லாஹு அக்பர்) சொல்லும் தர்மமாகும்; ஒவ்வொரு (அல்ஹம்து லில்லாஹ்) புகழ் மாலையும் தர்மமாகும்; ஒவ்வொரு (லா இலாஹ இல்லல்லாஹ்) ஓரிறை உறுதி மொழியும் தர்மமாகும்; நல்லதை ஏவுதலும் தர்மமே; தீமையைத் தடுத்தலும் தர்மமே; உங்களில் ஒருவர் தமது மனைவியுடன் இல்லறத்தில் இணைவதும் தர்மமாகும் என்று கூறினார்கள். மக்கள், “அல்லாஹ்வின் தூதரே! எங்களில் ஒருவர் (தம் துணைவியிடம்) இச்சை களைத் தீர்த்துக்கொள்வதற்கும் நன்மை கிடைக்குமா?” என்று கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், “(நீங்களே) சொல்லுங்கள்: தடைசெய்யப்பட்ட வழியில் அவர் தமது இச்சையைத் தீர்த்துக்கொண்டால் அவருக்குக் குற்றம் உண்டல்லவா! அவ்வாறே அனுமதிக் கப் பட்ட வழியில் அவர் தமது இச்சையை நிறை வேற்றிக் கொள்ளும்போது அதற்காக அவருக்கு நன்மை கிடைக்கவே செய்யும்" என்று விடையளித்தார்கள். அறிவிப்பவர்: அபூதர் கிபாரி(ரலி) நூல்: முஸ்லிம்)

இந்த ஹதீதை அறிவித்தவர் அபுதார் கிஃப்ஃபாரி ரழியல்லாஹு அன்ஹு ஆவார். இந்த ஹதீதில் நபித்தோழர்களுக்கு நன்மையைச் சேகரிப்பதில் உள்ள ஆர்வம் வெளிப்படுகிறது. நம்மில் சிலருக்கும் இவ்வாறு உண்டு. ஆனால் பலர் இவ்வுலக வாழ்கையின் முன்னேற்றத்தில்தான் ஆர்வம் இருப்பதைக் காணலாம். ஆனால் நபித்தோழர்களுக்கு மறுமையின் முன்னேற்றத்தில் அதிகம் ஆர்வம் கொண்டிருந்தனர். எனவே தான் செல்வந்தர்கள் தங்கள் பணத்தை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவின் பாதையில் செலவு செய்து அதிக நன்மையை ஈட்டுவது போல நமக்கு வழியில்லையே என கவலை கொண்டார்கள். இவ்வாறு செல்வந்தர்கள் தானதர்மம் செய்வதில் ஆர்வமாக இருந்தார்கள்.

எனவே ஏழை ஸஹாபாக்கள் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் சென்று தங்களுக்கு நன்மை சேர்க்கும் வாய்ப்பு குறித்து முறையிட்டார்கள். அதற்கு ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் சொன்ன பதில் இஸ்லாத்தில் நன்மை என்பது எந்த அளவுக்கு விசாலமானது என்பதை அறியலாம். தாங்கள் தொழுவது போல அவர்களும் தொழுகிறார்கள் எனவும், தாங்கள் நோன்பு வைப்பது போல அவர்களும் நோன்பு வைக்கிகிறார்கள் என அவர்கள் முறையிட்டார்கள். இந்த ஹதீதின் சாரமாவது ஒரு அடியார் உளத் தூய்மையோடு அனுமதிக்கப் பட்ட எதனைச் செய்தாலும் நன்மையான காரியம் தான் என்பதாகும். எனவேதான் எண்ணங்களைப் பொறுத்தே அமல்கள் அமையும்.

அதற்கான உதாரணங்களாக ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியதாவது: ஒவ்வொரு தஸ்பீஹும் நன்மைதான். ஸுப்ஹானல்லாஹ் என்று சொல்லுவதும், அல்ஹம்துலில்லாஹ் என்று சொல்லுவதும், அல்லாஹு அக்பர் என்று சொல்லுவதும் ஒரு தர்மம் ஆகும். நல்லதை ஏவுவதும், தீமையைத் தடுப்பதும் ஒரு தர்மம்தான்.

ஒரு முறை முஆத் இப்னு ஜபல் ரழியல்லாஹு அன்ஹுவை அவரது தோழர் தாங்கள் இருவரும் இரவு முழுவதும் தொழலாம் என்று அழைத்த போது, அவர் கூறியதாவது, “நான் இருவு முழுவதும் நின்று தொழுவதால் என்ன நன்மை கிடைக்குமோ அந்த அளவு நன்மை நான் உறங்கினாலும் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நன்மையை அளிப்பான் என நம்பிக்கை கொள்கிறேன்.” நாம் தூங்கும் போது எந்த எண்ணத்தில் தூங்குவோமோ அதைப் பொறுத்து அவ்வாறு கிடைக்கும். உதாரணமாக நாம் தூங்கினால், காலையில் எழுந்து ஃபஜ்ர் தொழலாம், நேர்வழியில் பொருளாதாரத்தை சம்பாதிக்கலாம் என நினைத்தால் தூக்கமும் நன்மையில் சேரும்.

தம் மனைவிக்கு அன்புடன் சாதம் ஊட்டி விட்டாலும் ஸதகாதான் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். தம் சகோதரனைப் பார்த்து புன்னகை செய்தாலும் ஸதகாதான் என்றும் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். தான் பிடித்த தண்ணீரை, அடுத்தவருக்கு ஊற்றி விட்டாலும் ஸதகாதான். உயிர் வாழ, உடல் நலம் பேண உணவு உண்பதும் ஸதகாதான். அதுபோல மனைவி மக்களுக்கு செலவிடுவதும் ஸதகாதான்.

ஒரு முஸ்லிம் வளர்த்த ஒரு மரத்தினால் யார் பயன்பெற்றாலும், அதன் நன்மை அவருக்குக் கிடைக்கும். அது போல பறவைகள் மற்றும் விலங்கினங்கள் யார் பயன்பெற்றாலும், அதன் நன்மை அவருக்குக் கிடைக்கும்.

இந்த ஹதீதில் தம் மனைவியுடன் இல்லறத்தில் இணைவதும் நன்மையில் சேரும் ஸதகாதான் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். அதைக் கேட்டு வியந்த நபித் தோழர்கள், தங்கள் இச்சையைப் பூர்த்தி செய்தாலுமா நன்மை என வினவினார்கள். எனினும் தடுக்கப்பட்ட வழியில் இச்சையைப் பூர்த்தி செய்தால் குற்றம் என்பது போல, ஹலாலான வழியில் இச்சையைப் பூர்த்தி செய்தால் நன்மை ஏற்படும் என அவர்கள் விவரித்தார்கள்.

அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நான்கு வகையான மக்களைப் படைத்துள்ளான். ஒரு வகையினர், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கல்வியையும், செல்வத்தையும் பிறருக்காக செலவழிக்கிறார்கள். இரண்டாவது வகையினர் கல்வியும், செல்வமும் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. எனினும் தங்களுக்கும் அவ்வாறு கொடுக்கப்பிட்டிருந்தால், தாங்களும் அவ்வாறு நல்ல வழியில் செலவழித்திருப்பேன் என நினைக்கிறார்கள். அவர்களுக்கும் முன்னர் வகையைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நன்மைபோல் கொடுக்கப்படும்.

இவ்வாறு ஒட்டு மொத்த வாழ்கையும் நன்மைக்குரிய ஒன்றாகத் தம் எண்ணத்தைக் கொண்டு மாற்றிவிடலாம். மலஜலம் கழிக்கும்போதும் அதற்கான வழிமுறையுடன் செய்யும்போது, அவையும் நன்மையாக ஆகிவிடும். சாப்பிடுவது, நீர் அருந்துவதும் நன்மையாகிவிடும். நல்லது

செய்ய வேண்டும் என்ற எண்ணமும் நன்மையை பெற்றுத் தரும். அனைத்தையும் நபி வழியில், நல்ல எண்ணத்துடன் செய்யும்போது நன்மையாக ஆகிவிடும்.

அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நான்கு வகையான மக்களைப் படைத்துள்ளான். ஒரு பிரிவினருக்கு அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா கல்வியையும், செல்வத்தையும் அளித்து அவற்றை நல்ல வழியில் செலவு செய்கிறார்கள். மற்றொரு பிரிவினருக்கு அவை கொடுக்கப்படவில்லை. எனினும் தங்களுக்கும் அவ்வாறு கொடுக்கப்பட்டிருந்தால், தாங்களும் அவற்றை நல்ல வழியில் செலவு செய்திருப்போம் என நினைப்பவர்கள். அந்த எண்ணமே அவர்களுக்கு முந்தையவர்களின் நன்மையைக் கொடுக்கும். மூன்றாவது வகையினருக்குக் கொடுக்கப்பட்டதை தவறான வழியில் செலவு செய்கிறார்கள். அதற்கான தண்டனை அவர்களுக்குக் கிடைக்கும். நான்காவது பிரிவினருக்கு அவை கொடுக்கப்படவில்லை. எனினும் தங்களுக்கும் அவ்வாறு கொடுக்கப்பட்டிருந்தால், தாங்களும் அந்த கெட்டவர்களைப் போல செலவு செய்திருப்போம் என நினைப்பவர்கள். அந்த எண்ணமே அவர்களுக்கும் அதே தீமை எழுதப்படும்.

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 26

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி

الحديث السادس والعشرون

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ ﷺ" كُلُّ سُلَامَى مِنْ النَّاسِ عَلَيْهِ صَدَقَةٌ، كُلَّ يَوْمٍ تَطْلُعُ فِيهِ الشَّمْسُ تَعْدِلُ بَيْنَ اثْنَيْنِ صَدَقَةٌ، وَتُعِينُ الرَّجُلَ فِي دَابَّتِهِ فَتَحْمِلُهُ عَلَيْهَا أَوْ تَرْفَعُ لَهُ عَلَيْهَا مَتَاعَهُ صَدَقَةٌ، وَالْكَلِمَةُ الطَّيِّبَةُ صَدَقَةٌ، وَبِكُلِّ خُطْوَةٍ تَمْشِيهَا إلَى الصَّلَاةِ صَدَقَةٌ، وَتُمِيطُ الْأَذَى عَنْ الطَّرِيقِ صَدَقَةٌ". رَوَاهُ الْبُخَارِيُّ ، وَمُسْلِمٌ

ஹதீஸ்-26:

மனிதர்கள் சூரியன் உதிக்கின்ற ஒவ்வொரு நாளிலும் தம்முடைய ஒவ்வொரு மூட்டு எலும்புக்காகவும் தர்மம் செய்வது கடமையா கும். இருவருக்கிடையே நீதி செலுத்துவதும் தர்மமாகும். ஒருவர் தமது வாகனத்தின் மீது ஏறி அமர உதவுவதும் அல்லது அவரது பயணச் சுமைகளை அதில் ஏற்றிவிடுவதும் தர்மமாகும். நல்ல வார்த்தையும் தர்மமாகும். ஒருவர் தொழுகைக்குச் செல்ல எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் தர்மமாகும். தீங்கு தரும் பொருளைப் பாதையிலிருந்து அகற்றுவதும் ஒரு தர்மமேயாகும். என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அறிவிப்பவர் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் நூல்: புகாரி முஸ்லிம்

இந்த ஹதீதை அறிவித்தவர் அபு ஹுரைராஹ் ரழியல்லாஹு அன்ஹு ஆவார். இந்த ஹதீதிலும் நன்மைகள் தரும் மற்ற விஷயங்களை ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். ஒவ்வொரு நாளும் தம்முடைய ஒவ்வொரு எலும்பு மூட்டுக்கும் தர்மம் செய்வது கடமை எனக் கூறும் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம், இருவருக்கிடையில் நீதி செலுத்துவதும் தர்மம்தான் என்று கூறியுள்ளார்கள். ஒருவரை வாகனத்தில் ஏற உதவுவதும், அவரது பயணச் சுமைகளை அதில் ஏற்றி விடுவதும் தர்மம்தான். பள்ளிவாசலை நோக்கி எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் தர்மமாகும். தீங்கு தரும் பொருளைப் பாதையிலிருந்து அகற்றுவதும் தர்மமாகும்.

முன்னூறு எலும்பு மூட்டுக்கும் அதிகமாக அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா படைத்துள்ளான். அவை அனைத்துக்கும் ஸதாகா அளிப்பது கடினமல்ல. ஏனெனில் முன்பு கூறப்பட்டது போல ஒவ்வொரு நற்செயலும் நன்மை என்பதால் அது இலகுவான ஒன்றே ஆகும்.

அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நமக்கு தூய்மையான எண்ணங்களைக் கொண்டு அதிகமதிகமான நன்மைகளைத் தேடும் பாக்கியத்தை அனைவருக்கும் அருள்வானாக!

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 27

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

الحديث السابع والعشرون

عَنْ النَّوَّاسِ بْنِ سَمْعَانَ ﷺ عَنْ النَّبِيِّ ﷺ قَالَ: "الْبِرُّ حُسْنُ الْخُلُقِ، وَالْإِثْمُ مَا حَاكَ فِي صَدْرِك، وَكَرِهْت أَنْ يَطَّلِعَ عَلَيْهِ النَّاسُ" رَوَاهُ مُسْلِمٌ]

ஹதீஸ்-27:

நன்மை என்பது நற்பண்பாகும் பாவம் என்பது உன் உள்ளத்தை உறுத்தக் கூடியதும் மக்கள் கவனித்துவிடுவார்களோ என்று நீ வெறுப்பதுமாகும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர்: நவாஸ் இப்னு ஸம்ஆன்(ரலி) நூல்:முஸ்லிம்

இந்த ஹதீதை அறிவித்தவர் நவாஸ் இப்னு ஸம்ஆன் ரழியல்லாஹு அன்ஹு ஆவார். அவர் அன்ஸாரி ஸஹாபி. அவரது தந்தை, தம் சகோதரி ஜவுன் என்பவரை ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் மணமுடித்துக் கொடுத்தார்கள். ஆனால் அந்தப் பெண்மணி ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களைப் பார்த்து ‘அவூது பில்லாஹி மின்க’ (உங்களிடமிருந்து அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவிடம் பாது காப்பு தேடுகிறேன்) என்று கூறிவிட்டார். உடனே அந்தப் பெண்ணிடம் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவிடம் பாது காப்பு தேடியதால், தங்களை விட்டுப் போகுமாறு ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறிவிட்டார்கள். அப்பெண்மணிக்கு ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மனைவியாகும் பாக்கியம் கிடைகாமல் போயிற்று.

நவாஸ் இப்னு ஸம்ஆன் ரழியல்லாஹு அன்ஹு கல்வி தேடலில் ஆர்வம் கொண்டிருந்தார். தான் மார்க்கக் கல்வியை கற்க வேண்டும் எண்ணத்தில், இஸ்லாத்தை ஏற்றபிறகு தம் ஊருக்குச் செல்லாமல் இருந்து விட்டதாக அவர் கூறியுள்ளார்.

நன்மை என்று சொன்னால் நற்குணங்கள். தீமை என்றால் தம் உள்ளத்தில் உறுத்துவது அல்லது, மக்கள் கவனித்தால் தம்மை வெறுப்பார்களோ என்று எண்ணச் செய்வது என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள்.

உள்ளத்தில் உறுத்தக் கூடியதில், நமக்கு ஹராமா அல்லது ஹலாலா என்று சந்தேகம் வரக்கூடியதும் அடங்கும். அப்படிப்பட்டதை விட்டு விட வேண்டும்.

நற்குணங்கள் பற்றி முன்னர் குறிப்பிட்டுளோம். எங்கிருந்தாலும் அல்லாஹ் வை அஞ்சிக்கொள்ள வேண்டும் எனவும், ஒரு தீமை செய்தால் உடனே ஒரு நன்மையைச் செய்ய வேண்டும் எனவும், மக்களோடு நற்குனகளைக் கொண்டு பழக வேண்டும் எனவும் முன்னர் கூறியிருந்தோம். நற்குணம் பற்றி கூறுகையில், நம்மால் சொல்லலும், செயலாலும் பிறருக்கு எந்த துன்பமும் வரக்கூடாது. மற்றவர்களால் ஏதேனும் துன்பம் ஏற்பட்டால், விசாலமாக அவர்களை மன்னித்து விட வேண்டும். மற்றவர்களைப் புன்னகையுடன் சந்திக்க வேண்டும்.

இத்தகைய நற்குணங்களைக் கடைப்பிடித்து வாழ்வோமானால், இம்மையிலும், மறுமையிலும் வெற்றி கிடைக்கும். ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அனுப்பப்பட்ட நோக்கம், ஏகத்துவத்தைப் போதிப்பதற்காகத்தான். அதன் மூலம் ஷிர்க்கை ஒழிக்க வேண்டும். அத்துடன் மேலும் சில முக்கிய நோக்கங்கள் உள்ளன. மக்களுக்கு நற்குணங்களை முழுமைப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் தாங்கள் அனுப்பப்பட்டதாக ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள்.

அத்தகைய நற்குணங்களை நாம் கடைப்பிடித்து வாழ்வோமானால், இம்மையிலும், மறுமையிலும் வெற்றி கிடைக்கும். பல ஹதீதுகள் இது பற்றி கூறுகிறது. ஒரு சிலவற்றைக் காண்போம். (அதிகமானது இமாம் நவவி எழுதியுள்ள ரியாதுஸ் ஸாலிஹீன் என்ற நூலில் காணலாம்.)

ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியதாவது, ''உங்களில் சிறந்தவர் நற்குணம் கொண்டவரே'' மறுமையில் இந்த நற்குணங்கள் நன்மைத் தட்டை கனமாகச் செய்யும். மக்களை அதிகம் சுவனத்தில் நுழைய வைக்கும் காரியம் எது எனவும், மக்களை அதிகம் நரகத்தில் நுழைய வைக்கும் காரியம் எது எனவும் ஸஹாபாக்கள் கேட்டபோது, இறையச்சம் மற்றும் நற்குணங்கள் காரணமாக அதிகம் சுவனத்திலும், நாக்கு மற்றும் மர்ம உறுப்பு ஆகியவற்றின் காரணமாக அதிகம் நரகத்திலும் நுழையும் நிலை ஏற்படும் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். இறையச்சம் இருந்தால் நாம் அதிகமதிகம் வணக்க வழிபாடுகளில் சரியாகவும், நற்குணங்கள் இருந்தால் மற்றவர்களிடம் சரியாகவும் இருப்போம் என்பதுதான் அதன் காரணமாகும்.

சுவனத்தில் படித்தரம் கூடுவதற்கும் நற்குணம் உதவி செய்யும். நிச்சயமாக அதிகம் தொழக்கூடிய, அதை உபரி நோன்பு நோற்கக்கூடியவர் ஆகியோருக்கு எந்த படித்தரத்தை அளிப்பானோ அதே படித்தரத்தை நற்குணம் கொண்டவர் அடையலாம். சுவனத்தின் உயர்ந்த படித்தரத்தை அடையவும் நற்குணம் பயன்படும். சுவனத்தின் உயர்ந்த படித்தரம் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுடன் நெருக்கமாக இருப்பதாகும். தங்களிடத்தில் மிகப்பிரியாயமானவரும், தங்களுடன் சுவனத்தில் நெருக்கமாக இருப்பவரும் நற்குணத்தைக் கொண்டவர்தாம் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள்.

மேலும் தங்களிடத்தில் மிக மோசமானவரும், தங்களை விட்டும் தூர இருபவரும் கெட்ட குணத்தைக் கொண்டவர்தாம் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். கடமையான வணக்கங்களுடன், நற்குணம் கொண்ட முஸ்லிமாகத் திகழ்ந்தால் மிக்க வெற்றி கிடைக்கும்.

ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் வாழ்கையில் அதிகமான முன்மாதிரிகள் உள்ளன. ஜாகிர் என்ற ரழியல்லாஹு அன்ஹு ஸஹாபி சிறிது குள்ளமாக, கறுத்தவராக இருப்பார். அவர் மதீனாவுக்கு வந்தால் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்குப் பரிசுப் பொருட்களைக் கொண்டு வருவார்கள். ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களும் அவருக்குப் பரிசுப் பொருள் கொடுத்து அனுப்புவார்கள். ஒரு நாள் அவர் கடைவீதியில் சில பொருட்களை விற்றுக் கொண்டிருந்தார். அப்போது ஒருவர் அவரின் பின்னால் வந்து அவரது கண்ணை மூடிக்கொண்டார்கள். அவர்கள் யார் என்று எண்ணிய அவர், அவர்கள் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களைத் தவிர வேறு யாராகவும் இருக்க முடியாது என ஊகம் கொண்டார். ஏனெனில் அந்த அளவுக்கு வேறு யாரும் தம்மை நெருங்கி வர மாட்டார்கள். எனினும் அவர்கள் தம் அருகில் நெருக்கமாக இருந்ததால், அது தொடர வேண்டும் என்ற எண்ணத்தில் அவர் அவர்களை அடையாளம் கண்டதாக காட்டிக் கொள்ளவில்லை. அப்போது ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவரைப் பிடித்தவர்களாக, 'இந்த அடிமையை வாங்குபவர் யாரேனும் உண்டா?' என விளையாட்டாக சொன்னாரகள். இந்த அளவுக்கு அவர்கள் எல்லோருக்கும் கண்ணியம் கொடுத்தார்கள். அவரை மகிழ்விக்க அவ்வாறு அவர்கள் செய்தார்கள். அப்போது தம்மை யாரும் வாங்க மாட்டார்கள் எனவும் தமக்கு இந்த சமுதாயத்தில் மதிப்பு ஏதும் கிடையாது எனக் கூறினார். அவருக்கு மக்களிடையே இருக்கும் மதிப்பு குறித்து எண்ண வேண்டாம் எனவும் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவிதத்திலோ அவருக்கு அதிகம் மதிப்பிருப்பதாக ரஸூலுல்லாஹி

ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள். இத்தகைய நற்குணங்களை ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கொண்டுள்ளார்கள்.

.وَعَنْ وَابِصَةَ بْنِ مَعْبَدٍ ﷺ قَالَ: أَتَيْت رَسُولَ اللَّهِ ﷺ فَقَالَ: "جِئْتَ تَسْأَلُ عَنْ الْبِرِّ؟ قُلْت: نَعَمْ. فقَالَ: استفت قلبك، الْبِرُّ مَا اطْمَأَنَّتْ إلَيْهِ النَّفْسُ، وَاطْمَأَنَّ إلَيْهِ الْقَلْبُ، وَالْإِثْمُ مَا حَاكَ فِي النَّفْسِ وَتَرَدَّدَ فِي الصَّدْرِ، وَإِنْ أَفْتَاك النَّاسُ وَأَفْتَوْك . "

حَدِيثٌ حَسَنٌ، رَوَيْنَاهُ فِي مُسْنَدَي الْإِمَامَيْنِ أَحْمَدَ بْنِ حَنْبَلٍ وَالدَّارِمِيّ بِإِسْنَادٍ حَسَنٍ .

வாபிஸயா இப்னு மஹ்பத்(ரலி) அவர்கள் கூறுகிறார்கள் நான் நபி(ஸல்) அவர்களிடம் வந்தேன் அப்போது அவர்கள் நன்மையைப் பற்றி கேட்பதற்காக வா வந்தீர்? எனக் கேட்டார் கள். நான் ஆம் என்றேன். அப்போது நபி (ஸல்) அவர்கள் உன் உள்ளத்தை கேட்டு பாரும். நன்மை என்பது ஆத்மா திருப்தியடை வதும், உள்ளம் அமைதியடைவதுமாகும். பாவம் என்பது (அது குறித்து) மக்கள் தீர்ப்பளிப்பதும், தீர்ப்பளிப்பவர்கள் உனக்கு தீர்பளிப்பதும், ஆத்மாவை உறுத்தக் கூடியதும், உள்ளத்தில் அடிக்கடி வந்து போகக் கூடியதுமாகும் என கூறினார்கள் (நூல்: அஹ்மத் தாரமி)

இதே ஹதீதை வாபிஸதா இப்னு மஃபத் ரழியல்லாஹு அன்ஹு என்ற நபித் தோழர் அறிவித்துள்ளார். இவர் கூஃபாவில் வசித்து வந்துள்ளார். இவரது மகன்கள் அவரது ஹதீதுகளை அறிவித்துள்ளார்கள். இவர் வழிவந்த அப்துல்லாஹ் இப்னு ஸஹர், கலிஃபா ஹாரூன் ரஷீத் காலத்தில் காழியாக இருந்திருக்கிறார். இவர் நன்மை என்றால் என்ன எனவும், தீமை என்றால் என்ன எனவும் கேட்பதற்காக ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் வந்தார். அப்போது ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவரிடம் கேள்வியை அவர் கேட்கப் போகிறாரா அல்லது தாங்களே கேள்வியைக் கேட்கவா என்றார்கள். அவர்களே சொல்லட்டும் என அவர் கூற, நன்மை என்றால் என்ன எனவும், தீமை என்றால் என்ன என்பதை விசாரிக்கவே வந்துள்ளதாகக் கூறினார்கள். பின்னர் முன்போல அவற்றைக் குறித்துக் கூறிய ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம், மேலதிகமாக நம் உள்ளம் எது குறித்து திருப்தி அடையுமோ அது நல்லது எனவும், மற்றவர்கள் சரி என்று கூறினாலும், உங்கள் உள்ளத்தில் உறுத்தல் ஏற்பட்டால் அதனை தீமை என விடுவது தான் சிறந்தது எனக் கூறினார்கள்.

நாம் நல்லதைச் செய்து, தீயதை விடும் பாக்கியத்தை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா அளிப்பானாக!

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 28

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

الحديث الثامن والعشرون

عَنْ أَبِي نَجِيحِ الْعِرْبَاضِ بْنِ سَارِيَةَ ﷺ قَالَ: "وَعَظَنَا رَسُولُ اللَّهِ ﷺ مَوْعِظَةً وَجِلَتْ مِنْهَا الْقُلُوبُ، وَذَرَفَتْ مِنْهَا الْعُيُونُ، فَقُلْنَا: يَا رَسُولَ اللَّهِ! كَأَنَّهَا مَوْعِظَةُ مُوَدِّعٍ فَأَوْصِنَا، قَالَ: أُوصِيكُمْ بِتَقْوَى اللَّهِ، وَالسَّمْعِ وَالطَّاعَةِ وَإِنْ تَأَمَّرَ عَلَيْكُمْ عَبْدٌ، فَإِنَّهُ مَنْ يَعِشْ مِنْكُمْ فَسَيَرَى اخْتِلَافًا كَثِيرًا، فَعَلَيْكُمْ بِسُنَّتِي وَسُنَّةِ الْخُلَفَاءِ الرَّاشِدِينَ الْمَهْدِيينَ، عَضُّوا عَلَيْهَا بِالنَّوَاجِذِ، وَإِيَّاكُمْ وَمُحْدَثَاتِ الْأُمُورِ؛ فَإِنَّ كُلَّ بِدْعَةٍ ضَلَالَةٌ ."

رَوَاهُ أَبُو دَاوُدَ وَالتِّرْمِذِيُّ وَقَالَ: حَدِيثٌ حَسَنٌ صَحِيحٌ.

ஹதீஸ்-28:

(ஒரு முறை) நபி (ஸல்) அவர்கள் எங்களுக்கு ஒரு உபதேசம் செய்தார்கள். அதனைக் கேட்டு எங்கள் உள்ளங்கள் நடுநடுங்கின. கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தன. அப்போது நாங்கள் அல்லாஹ்வின் தூதரே (எங்களை விட்டும்) விடை பெற்று செல்லும் உபதேசம் போன்று உள்ளது எனவே எங்களுக்கு உபதேசியுங்கள் என்றோம். அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள் ஒரு அடிமை உங்களுக்கு தலைவராக நியமிக்கப் பட்டாலும் அவருக்குக் கட்டுப்படுங்கள். உங்களில் அதிக நாட்கள் வாழ்பவர் அதிக கருத்து வேறுபாடுகளை காண்பார். அப்போது எனது வழிமுறையையும் நேர்வழிப் பெற்ற கலீபாக் (ஆட்சியாளர்)களின் முறையையும் பற்றிப் பிடியுங்கள். அவைகளை உங்கள் கடவாய் பற்களால் பற்றிப் பிடியுங்கள். மார்க்கத்தில் புதுமைகளை உண்டாக்குவதை விட்டும் எச்சரிக்கின்றேன். நிச்சயமாக ஒவ்வொரு புதுமைகளும் நூதனங்களாகும். ஒவ்வொரு நூதனங்களும் வழிகேடாகும். ஒவ்வொரு வழிகேடும் நரகத்தில் சேர்க்கும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் அறிவிப்ப வர்: அபூநஜீஹ் அல்இர்பால் இப்னு ஸாரியா (ரலி) நூல்:அபூதாவுத் திர்மிதி

இந்த ஹதீதை அறிவித்தவர் அபு நஜீஹ் அல் இர்பால் இப்னு ஸாரியாஹ் ரழியல்லாஹுு அன்ஹுு ஆவார். இவர் திண்ணைத் தோழர்களில் ஒருவர் ஆவார். முஹாஜிரில் ஒருவர். சில ஸஹாபாக்கள் ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹுு அலைஹி வ ஸல்லம் அவர்களிடத்தில் வந்து தாங்களும் போரில் கலந்து கொள்ள விருப்பமாக இருப்பதாகவும், எனினும் தங்களிடம் போருக்கான பொருளும், வாகனங்களும் இல்லை என்றார்கள். தங்களுக்கு அளிக்கப்பட்டால் போரில் கலந்து கொள்வதாகக் கூறினார்கள். ஆனால் அவர்களுக்கு அளிக்கத் தங்களிடம் வாகனங்கள் இல்லை என ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹுு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறியதால், அவர்கள் கவலையில் அழுது கொண்டே திரும்பினார்கள். இது குறித்து அல்லாஹ் ஸுப்ஹானஹுு வ தஆலா பாராட்டிக் கூறியுள்ளான். அவர்களில் இவரும் ஒருவர்.

ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹுு அலைஹி வ ஸல்லம் ஒரு தடவை உபதேசம் செய்யும்போது ஸஹாபாக்களின் உள்ளங்கள் நடுங்கின. எல்லோரும் அழுதனர்.

அத்தியாயம் அன்ஃபால் 2

إِنَّمَا الْمُؤْمِنُونَ الَّذِينَ إِذَا ذُكِرَ اللَّهُ وَجِلَتْ قُلُوبُهُمْ

நிச்சயமாக விசுவாசிகள் யார் என்றால் அல்லாஹ்வை நினைவு கூறப்பட்டால், அவர்களின் உள்ளங்கள் பயந்து நடுங்கிவிடும்.

அத்தகைய நிலைமியில் ஸஹாபாக்களின் உள்ளங்கள் இருந்தன. ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் விடைபெறப் போகும் உபதேசம் போல அவர்களுக்கு எண்ணம் ஏற்பட்டது. மேலும் உபதேசம் சொல்லும்படி அவர்கள் கேட்க, அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவை அஞ்சிக் கொள்ளுங்கள் என்றார்கள்.

அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவும் அந் நிஸா 131ல் குறிப்பிடுகிறான்,

وَلَقَدْ وَصَّيْنَا الَّذِيْنَ اُوْتُوا الْكِتٰبَ مِنْ قَبْلِكُمْ وَاِيَّاكُمْ اَنِ اتَّقُوا اللّٰهَ

உங்களுக்கு முன்னர் வேதம் கொடுக்கப்பட்டவர்களுக்கும், உங்களுக்கும் ‘அல்லாஹ் ஒருவனையே பயப்படுங்கள்’ என உபதேசம் செய்தோம்.

உபை இப்னு கஃப் ரழியல்லாஹு அன்ஹுவிடத்தில் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தக்வா (இறையச்சம்) என்ன என்று வினவினார்கள். உபை இப்னு கஃப் ரழியல்லாஹு அன்ஹு வினவினார், “அமீருல் முஃமினீன் அவர்களே! முட்கள் நிறைந்த பகுதியில் நீங்கள் சென்றிருக்கிறீர்களா?”உமர் ரழியல்லாஹு அன்ஹு ஆம் எனக் கூற அவர் தொடர்ந்தார், “அப்போது உங்கள் நிலை என்ன?” உமர் ரழியல்லாஹு அன்ஹு கூறினார்கள், “நாம் எனது ஆடைகளைப் பாதுகாப்பாக முள் குத்தாமல் கவனமாகச் செல்வேன்.” உபை இப்னு கஃப் ரழியல்லாஹு அன்ஹு கூறினார், “இவ்வாறுதான் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவுக்கு மாறு செய்யக் கூடிய பல விஷயங்கள் இருக்கும். அவற்றைக் கவனமாகக் கடந்து, இலக்கை நோக்கிப் பயணம் செய்வதுதான் தக்வா.”

இமாம் ஷாஃபி ரஹ்மத்துல்லாஹி அலைஹி தக்வாவுக்கு ஒரு வரைவிலக்கணம் கூறியுள்ளார். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவின் புறத்தில் கிடைத்த ஆதாரத்தின் அடிப்படையில் அவன் அதற்கான கூலியைத் தருவான் என்ற நம்பிக்கையில் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவை வணங்க வேண்டும். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவின் புறத்தில் கிடைத்த ஆதாரத்தின் அடிப்படையில் அவன் தடுத்தவற்றை, அவனது வேதனைக்குப் பயந்து விட்டுவிட வேண்டும்.

எனவே ஒட்டு மொத்த வாழ்க்கையையும் இந்தத் தக்வாவில் இருக்க வேண்டும். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற இஹ்ஸான் நிலையே பயபக்தியாகும். ஒட்டு மொத்த மார்க்கமும் இதில்தான் இருக்க வேண்டும்.

அடுத்ததாக, உங்களுக்கு ஒரு ஹபஸி அடிமை அமீராக நியமிக்கப்பட்டாலும் அவருக்குக் கட்டுப்பட வேண்டும் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். அபு பக்ரு ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் அறிவிப்பின்படி தலைவர் நியமிக்கப்படுபவர் குறைஷியைச் சார்ந்தவராக இருக்க வேண்டும் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். இஸ்லாத்தில் பாகுபாடு இல்லை என்றாலும், அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா சிலருக்கு சிறப்பைத் தந்தால் அது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். இந்த ஹதீத் ஒரு ஹபஸி அடிமை அமீராக நியமிக்கப்படலாம் என்ற ஹதீதுக்கு முரண்படுவதாகத் தெரியலாம். மாறாக, கலிஃபாவுக்குக் கீழ் உள்ள ஆளுநர்கள் குறைஷி அல்லாத மற்றவர்கள் வர வாய்ப்புண்டு. அல்லது தம் முயற்சியில் யாரும் கலிஃபாவாக ஆகிவிட்டால், அவருக்குக் கட்டுப்பட வேண்டும்.

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓاْ أَطِيعُواْ ٱللَّهَ وَأَطِيعُواْ ٱلرَّسُولَ وَأُوْلِي ٱلۡأَمۡرِ مِنكُمۡۖ فَإِن تَنَٰزَعۡتُمۡ فِي شَيۡءٖ فَرُدُّوهُ إِلَى ٱللَّهِ وَٱلرَّسُولِ إِن

كُنتُمۡ تُؤۡمِنُونَ بِٱللَّهِ وَٱلۡيَوۡمِ ٱلۡأٓخِرِۚ ذَٰلِكَ خَيۡرٞ وَأَحۡسَنُ تَأۡوِيلًا ۝

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுக்கு கீழ்படியுங்கள்; இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள்.

அதிகாரம் உள்ள ஆட்சியாளர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பது அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவின் கட்டளை ஆக்கும். ஆனால் படைத்தவனுக்கு மாறு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டால் யாருக்கும் கட்டுப்பட வேண்டியதில்லை என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். பெற்றோர், ஆசிரியர், கணவர் போன்றோருக்குக் கட்டுப்படுவது விஷயத்திலும் இவ்வாறுதான். மார்க்கத்துக்கு மாறான கட்டளைக்கு அடிபணிய முடியாது.

படைத்தவனுக்கு மாறு செய்யச் சொல்லும் ஆட்சியாளர்களிடம் எப்படி நடந்து கொள்வது என்று ஸஹாபாக்கள் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடத்தில் கேட்டபோது, உங்கள் மீது என்ன கடமையோ அதனை அவர்கள் செய்து விடவேண்டும் எனவும், ஆட்சியாளர் விஷயம் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவிடத்தில் என்று கூறினார்கள். தமக்குக் கசையடி கொடுத்தாலும், தம்முடைய சொத்துக்களைப் பிடுங்கிக் கொண்டாலும், ஒருவர் அந்த முஸ்லிம் தலைவருக்குக் கட்டுப்பட்டே ஆக வேண்டும். அவருக்கு எதிராக அணி திரட்டிப் போராட்டம் செய்யக் கூடாது என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். கிளர்ச்சியோ, கலவரமும் செய்யக்கூடாது. ஹாரிஜியாக்கள் தான் முதல்முதலில் இவ்வாறு கிளர்ச்சி செய்தார்கள். அதன் மூலம் அவர்கள் அகீதாவுக்கு மாறு செய்து விட்டார்கள்.

அநியாயத் தலைவருக்கு எதிராக நடக்கக்கூடாது என்று சொல்லக் காரணம், அந்த அநியாய தலைவரால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்பை விட, கிளர்ச்சியால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்பு அதிகம் என்பதால்தான். அதிகமான உயிர்ப்பலி ஏற்பட வாய்ப்புண்டு. எனவே பொறுமையாக இருக்க வேண்டும்.

அடுத்ததாக தங்களுக்குப் பிறகு பல கருத்து வேறுபாடுகளைக் காண்பார்கள் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். ஸஹாபாக்கள் காலத்திலேயே ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்குப் பிறகு பல கருத்து வேறுபாடுகளைக் கண்டார்கள். மார்க்க விஷயத்தில், கொள்கை (மன்ஹஜ்) விஷயத்தில், அகீதா (அடிப்படை) விஷயத்தில் அவர்களுக்கு இடையில் கருத்து வேறுபாடுகள் இருந்ததில்லை. சட்டம் சம்பந்தப்பட்ட விஷயங்களில்தான் கருத்து வேறுபாடுகள் இருந்தன. உதாரணமாக வாரிசுரிமை பற்றி போன்ற சட்டம் சம்பந்தப்பட்ட விஷயங்களில்தான் கருத்து வேறுபாடுகள் இருந்தன. எனினும் மார்க்க விஷயத்தில், கொள்கை (மன்ஹஜ்) விஷயத்தில், அகீதா (அடிப்படை) விஷயத்தில் ஸஹாபாக்கள் அல்லாத பின்னால் வந்தவர்கள் மாறுப்பட்டு சென்றார்கள். இல்லாத விஷயங்களை எல்லாம் சொன்னார்கள். உதுமான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆட்சி காலத்தில் கிளம்பிய காரிஜியாக்கள் கருத்து வேறுபாடுகள் கொண்டார்கள். இறுதியில் . உதுமான் ரழியல்லாஹு அன்ஹு ஷஹீதாகக் காரணமாக இருந்தார்கள்.

அது போல அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆட்சி காலத்தில் ஒரு கூட்டமாகவே ஆகிவிட்டார்கள். அவர்கள் அலி ரழியல்லாஹு அன்ஹு ஷஹீதாகக் காரணமாக இருந்தார்கள்.

இப்போதும் இவ்வாறு பல்வேறு கூட்டங்கள் உருவாக்கி உள்ளன. இந்த உம்மத் 73 கூட்டங்ககளாகப் பிரியும் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். இவ்வித கருத்து வேறுபாடுகள் இருக்கும்போது, தங்கள் வழிமுறை மற்றும் நேர்வழி பெற்ற கலிஃபாக்கள் வழிமுறைகளையும் பின்பற்ற வேண்டும் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். அவர்கள் தாங்கள் வெளிச்சமான மார்க்கத்தை விட்டுச் செல்வதாகக் கூறியுள்ள அவர்கள், அது இரவிலும் பகல் போல பிரகாசமாக இருக்கும் என்றும் கூறியுள்ளார்கள். இந்த நேர்வழி பெற்ற கலிஃபாக்கள் அபு பக்ரு ரழியல்லாஹு அன்ஹு, உமர் ரழியல்லாஹு அன்ஹு, உத்மான் ரழியல்லாஹு அன்ஹு மற்றும் அலி ரழியல்லாஹு அன்ஹு ஆகிய முதல் நான்கு கலிஃபாக்கள் ஆவர். நபி

வழியில் கிலாஃபத் முப்பது ஆண்டுகள் இருக்கும் என என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். அதன்படி அபு பக்ரு ரழியல்லாஹு அன்ஹு இரண்டரை ஆண்டுகள், உமர் ரழியல்லாஹு அன்ஹு பத்தரை ஆண்டுகள், உத்மான் ரழியல்லாஹு அன்ஹு பன்னிரண்டு ஆண்டுகள் மற்றும் அலி ரழியல்லாஹு அன்ஹு ஆட்சிக் காலம் ஆகியவற்றைச் சேர்த்தால் முப்பது ஆண்டுகள் இருக்கும். எனவே இவர்களின் வழிமுறையைப் பின்பற்ற வேண்டும். கடவாய்ப் பற்கள் என கூறுவது உறுதியாகப் பிடிக்க வேண்டும் என்ற பொருளைக் கொடுக்கும்.

பின்னர் பித்அத்கள் குறித்து எச்சரிக்கை செய்யும் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம், அவை வழிகேடுகள் எனக் கூறியுள்ளார்கள். அனைத்தும் நரகில் கொண்டு சேர்க்கும். எனவே இந்த விஷயத்தில் கவனக் குறைவாக, அலட்சியமாக இருக்காமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா அனைத்து வகையான வழிகேட்டிலிருந்தும் நம்மைப் பாதுகாத்து, நேரான நபி வழி மற்றும் கலிஃபாக்கள் வழிமுறைகளையும் பின்பற்ற அருள்பாலிப்பானாக!

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 29

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

الحديث التاسع والعشرون

عَنْ مُعَاذِ بْنِ جَبَلٍ ﷺ قَالَ: قُلْت يَا رَسُولَ اللَّهِ! أَخْبِرْنِي بِعَمَلٍ يُدْخِلُنِي الْجَنَّةَ وَيُبَاعِدْنِي مِنْ النَّارِ، قَالَ: "لَقَدْ سَأَلْت عَنْ عَظِيمٍ، وَإِنَّهُ لَيَسِيرٌ عَلَى مَنْ يَسَّرَهُ اللَّهُ عَلَيْهِ: تَعْبُدُ اللَّهَ لَا تُشْرِكْ بِهِ شَيْئًا، وَتُقِيمُ الصَّلَاةَ، وَتُؤْتِي الزَّكَاةَ، وَتَصُومُ رَمَضَانَ، وَتَحُجُّ الْبَيْتَ، ثُمَّ قَالَ: أَلَا أَدُلُّك عَلَى أَبْوَابِ الْخَيْرِ؟ الصَّوْمُ جُنَّةٌ، وَالصَّدَقَةُ تُطْفِئُ الْخَطِيئَةَ كَمَا يُطْفِئُ الْمَاءُ النَّارَ، وَصَلَاةُ الرَّجُلِ فِي جَوْفِ اللَّيْلِ، ثُمَّ تَلَا: " تَتَجَافَى جُنُوبُهُمْ عَنِ الْمَضَاجِعِ " حَتَّى بَلَغَ "يَعْمَلُونَ"، ثُمَّ قَالَ: أَلَا أُخْبِرُك بِرَأْسِ الْأَمْرِ وَعَمُودِهِ وَذُرْوَةِ سَنَامِهِ؟ قُلْت: بَلَى يَا رَسُولَ اللَّهِ. قَالَ: رَأْسُ الْأَمْرِ الْإِسْلَامُ، وَعَمُودُهُ الصَّلَاةُ، وَذُرْوَةُ سَنَامِهِ الْجِهَادُ، ثُمَّ قَالَ: أَلَا أُخْبِرُك بِمَلَاكِ ذَلِكَ كُلِّهِ؟ فقُلْت: بَلَى يَا رَسُولَ اللَّهِ! فَأَخَذَ بِلِسَانِهِ وَقَالَ: كُفَّ عَلَيْك هَذَا. قُلْت: يَا نَبِيَّ اللَّهِ وَإِنَّا لَمُؤَاخَذُونَ بِمَا نَتَكَلَّمُ بِهِ؟ فَقَالَ: ثَكِلَتْك أُمُّك وَهَلْ يَكُبُّ النَّاسَ عَلَى وُجُوهِهِمْ –أَوْ قَالَ عَلَى مَنَاخِرِهِمْ– إلَّا حَصَائِدُ أَلْسِنَتِهِمْ؟"!رَوَاهُ التِّرْمِذِيُّ وَقَالَ: حَدِيثٌ حَسَنٌ صَحِيحٌ .

அல்லாஹ்வின் தூதரே என்னை சுவர்க்கத் தில் நுழைவிக்கச் செய்து நரகத்திலிருந்து தூரமாக்கக்கூடியஒரு செயலை சொல்லித் தாருங்களேன் என்றேன். அப்போது நபி (ஸல்) அவர்கள் மிகப் பரிய விஷயம் பற்றி என்னிடம் கேட்டுள்ளீர். அல்லாஹ் அதனை யாருக்கு இலகுவாக்கினானோ அவருக்கு அது இலகு வாகும் அல்லாஹ்வுக்கு எதனையும் இணை யாக்காது அல்லாஹ்வை நீ வணங்க வேண்டும். தொழுகையை நிலை நாட்ட வேண்டும். ஸகாத்தை கொடுத்து வர வேண்டும். ரமழானில் நோன்பு நோற்க வேண்டும் இறை இல்லத்திற்குச் சென்று ஹஜ் செய்யவேண்டும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் பிறகு நன்மைகளின் வாயல்களை உனக்கு அறிவித்துத் தரட்டுமா எனக் கேட்டு விட்டு நீர் நெருப்பை அணைப்பது போல் தர்மம் பாவத்தை அழித்து விடும் இரவில் நின்று வணங்குவதும் (ஆகிய மூன்று காரியங்களா கும்) எனக் கூறி "அவர்களது விலாப்புறங்கள் படுக்கைகளை விட்டும் விலகியிருக்க, அவர்கள் தமது இரட்சகனை அச்சத்துடனும், ஆதரவுட னும் பிரார்த்திப்பார்கள். மேலும், நாம் அவர்களுக்கு வழங்கியவற்றிலிருந்து (நல்லறங்களில்) செலவும் செய்வார்கள்.

எனவே, அவர்கள் செய்துக்கொண்டிருந்த வற்றுக்குக் கூலியாக அவர்களுக்கு மறைத்து வைக்கப்பட்டிருக்கும் கண் குளிர்ச்சியை எந்த ஆன்மாவும் அறிந்து கொள்ளாது." (32:16-17) என்ற வசனத்தை ஓதினார்கள். பிறகு அனைத்து காரியங்களுக்கும் தலையானதையும் அனைத்து காரியங்களுக்கும் தூணாக இருப்பதையும் உயர்வானதையும் உனக்கு அறிவிக்கட்டுமா? எனக் கேட்டார்கள். நான் ஆம் அல்லாஹ்வின் தூதரே எனக் கூறினேன்

தலையாகக் கடமை இஸ்லாமாகும். தூணாக இருப்பது தெழுகையாகும். உயர்வா னது ஜிஹாதாகும் என்றார்கள். பிறகு இவைகள் அனைத்தையும் உள்ளடக்கும் விடயத்தை சொல்லித் தரட்டுமா என்று கேட்டார்கள் நான் ஆம் அல்லாஹ்வின் தூதரே என்றேன். தமது நாவை பிடித்து இதனை பேணிக் கொள் என்றார்கள். அல்லாஹ்வின் தூதரே இதன் மூலம் நாங்கள் பேசுவதற்காக வும் தண்டிக்கப் படுவோமா என்று கேட்டேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள் முஆதே! உன் தாய் உன்னை இழக்கட்டும் மனிதர்கள் தம் நாவால் அறுவடை செய்ததைத் தவிர வேறெதுவும் அவர்களை முகங்குப்புற நரகில் தள்ளுமா? எனக் கேட்டார்கள் அறிவிப்பவர் :முஆத் (ரலி) நூல்: திரிமிதி

இந்த ஹதீதை அறிவித்தவர் முஆத் ரழியல்லாஹு அன்ஹு ஆவார். இந்த ஹதீதில் அநேக செய்திகள் கூறப்பட்டுள்ளன. சுவனத்தில் நுழையச் செய்து, நரகத்தைத் தூரமாக்கும் செயலைத் தங்களுக்குக் கூறுமாறு ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் முஆத் ரழியல்லாஹு அன்ஹு வினவினார்கள். மிகப் பெரிய விஷயம் குறித்துத் தங்களிடம் அவர் கேட்டுள்ளதாக ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள். காரணம் மனிதனும் வாழ்கையின் முக்கிய நோக்கமே அதுதான். நரகத்தை விட்டுப் பாதுகாக்கும் மற்றும் சுவனத்தை அடையும் செயலைச் செய்ய வேண்டும்.

அத்தியாயம் ஆல இம்ரான் 185

فَمَنْ زُحْزِحَ عَنِ النَّارِ وَاُدْخِلَ الْجَنَّةَ فَقَدْ فَازَ ؕ

யார் நரக நெருப்பிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு சுவனத்தில் நுழைவிக்கப் படுகிறாரோ அவர் நிச்சயமாக பெரும் பாக்கியத்தை அடைந்து விட்டார்.

அதற்கான வழியைக் கூறும்போது இஸ்லாத்தின் அடிப்படைகளை ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள். நாம் ஷஹாதா சொல்லிவிட்டு, அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவுக்கு எதனையும் இணைவைக்காமல், அவனை முற்றிலும் பணிந்து வழிபட வேண்டும். ஆனால் பிறகு இணைவைக்கும் காரியத்தை செய்ய மாட்டோம் என நினைத்து விட்டு விடக்கூடாது. ஏனெனில் பலர் நபிமார்களையும், இறை நேசர்களையும் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவுக்கு இணை வைக்கும் செயல்களைச் செய்கிறார்கள். ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களை கிருத்துவர்கள் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவுக்கு இணை வைக்கிறார்கள்.

அத்தியாயம் மாயிதா 116

وَاِذْ قَالَ اللّٰهُ يٰعِيْسَى ابْنَ مَرْيَمَ ءَاَنْتَ قُلْتَ لِلنَّاسِ اتَّخِذُوْنِىْ وَاُمِّىَ اِلٰهَيْنِ مِنْ دُوْنِ اللّٰهِ ؕ

قَالَ سُبْحٰنَكَ مَا يَكُوْنُ لِىْۤ اَنْ اَقُوْلَ مَا لَيْسَ لِىْ بِحَقٍّ ؕ

மேலும் அல்லாஹ் (மறுமை நாளன்று) ஈஸாவிடம், ‘மரியமுடைய மகன் ஈஸாவே! அல்லாஹ்வைத் தவிர என்னையும், என்னுடைய தாயையும் இரண்டு வணக்கத்திற்கு உரியவர்களாக ஏற்றுக் கொள்ளுங்கள் என்று மனிதர்களுடன் நீர் கூறினீரா?’ என்று கேட்பான். (அதற்கு) ‘நீ மிகப் பரிசுத்தமானவன். எனக்கு ஒரு சிறிதும் உரிமை இல்லாததை நான் ஒருபோதும் கூறுவதற்கு எனக்குத் தகுதி இல்லை…’

அதுபோல, சிலர் , இறை நேசர்களை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவுக்கு இணை வைக்கிறார்கள். அவர்களும் மறுமை நாளில் இவ்வாறே கூறுவார்கள். எனவே நாம் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கற்றுத் தந்த விதமாகத் தான் வழிபட வேண்டும். இணை வைக்கும் காரியங்களை சிலர் தவறாகக் கற்பித்து விடுகிறார்கள். ஆனால் நாம் அவற்றை விட்டு விட்டு ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கற்றுத் தந்த விதமாகத் தான் வழிபட வேண்டும். கடமையான ஐந்து ஒழுங்காகப் பேணி செய்ய வேண்டும்.

பின்னர் அதிகமான நன்மைகளை அடைவது குறித்து ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். கடிமான அமல்களில் குறைபாடுகள் இருக்கலாம். உதாரணமாக நமது தொழுகையில் குறைபாடு இருக்கலாம். ஜாகாத் கணக்கில் தவறு இருக்கலாம். அது போன்று நோன்பிலும் தவறு இருக்கலாம். இவற்றிக்காக உபரியான வணக்க வழிபாடுகளைச் செய்ய வேண்டும்.

அத்தியாயம் ஆல இம்ரான் 114ல் முஃமீன்களைப் பற்றிக் கூறுகையில்

وَيُسَارِعُونَ فِي الْخَيْرَاتِ

நன்மையாக காரியங்கள் பால் விரைந்து செல்வார்கள். எனக் கூறுகிறான்.

நோன்பு ஒரு கேடயம் என ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். கேடயம் எதிரியின் தாக்குதலிலிருந்து பாதுகாப்பு பெறலாம். அதுபோல நோன்பு நரக நெருப்பிலிருந்து நம்மைப் பாதுகாக்கும். நாம் முன்னர் சொன்னது போல நாம் செய்யும் ஒரு நன்மைக்கு பத்து முதல் எழுநூறு நன்மைகள் கிடைக்கும். ஆனால் நோன்புக்குக் கணக்கற்ற நன்மைகள் கிடைக்கும். இறை நம்பிக்கையோடு நோன்பு வைக்கும்போது, முந்தைய பாவங்கள் மன்னிக்கப்படும் என ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். அத்துடன் நபிலான நோன்புக்கும், அரஃபா, ஆஷுரா போன்ற நோன்புகளுக்கும் அதிக நன்மைகள் கிடைக்கும்.

அடுத்ததாக ஸதாகா அதிக நன்மையைக் கொடுக்கும் என்று ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். தண்ணீர் நெருப்பை அணைப்பது போல ஸதாகா பாவங்களை அளித்து விடும் என்று ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். நரக நெருப்பிலிருந்து பாதுகாப்பு கொடுக்கும் ஒன்றாக ஸதாகா உள்ளது.

தான் வழங்கிய செல்வத்திலிருந்து தன் பாதையில் செலவளிக்குமாறு அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா அத்தியாயம் முனாஃபிகூனில் குறிப்பிடுகிறான். மரணம் வருவதற்கு முன்பே செய்யுமாறு கூறும் அவன், பின்னர் அவகாசம் கேட்டு புலம்பி எந்த பயனும் இல்லை என அறிவுறுத்துகிறான்.

மூன்றாவதாக அதிக நன்மை பயக்கும் செயலாக இரவு நேரத் தொழுகையைக் குறித்து ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். அவ்வாறு கூறிய பிறகு இதனை ஓதிக் காட்டுகரார்க்கள்.

அத்தியாயம் ஸஜ்தா 16, 17

تَتَجَافَىٰ جُنُوبُهُمْ عَنِ الْمَضَاجِعِ يَدْعُونَ رَبَّهُمْ خَوْفًا وَطَمَعًا
وَمِمَّا رَزَقْنَاهُمْ يُنفِقُونَ ۝ فَلَا تَعْلَمُ نَفْسٌ مَّا أُخْفِيَ لَهُم مِّن قُرَّةِ
أَعْيُنٍ جَزَاءً بِمَا كَانُوا يَعْمَلُونَ ۝

அவர்களின் விலாக்கள் படுக்கையை விட்டு தூக்கத்திலிருந்து விலகி விடும். தங்களுடைய இரட்சகனை அச்சதோடும், ஆதரவோடும் அழைத்துப் பிரார்த்திப்பார்கள். நாம் அவர்களுக்குக் கொடுத்தவற்றிலிருந்து அவர்கள் தர்மமாக செலவு செய்வார்கள். ஆகவே அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றிக்குக் கூலியாக அவர்களுக்காக மறைத்து வைக்கப்பட்டிருக்கும் கண்களில் குளிர்ச்சியை எந்த ஒரு ஆத்மாவும் அறியாது.

எனவே தஹஜ்ஜுத் தொழுகையினால் பல நனமைகள்உள்ளன. மேலும் ‘ஸலாத்தைப் பரப்புங்கள், ஏழை மக்களுக்கு உணவளியுங்கள், மக்களெல்லாம் தூன்கின்கொண்டு இருக்கும் வேளையில் நீங்கள் தொழுது கொள்ளுங்கள், சாந்தியுடன் நீங்கள் சுவனத்தில் நுழைந்து விடுவீர்கள்’ என ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள்.

இவ்வுலக வாழ்க்கையிலும் நமக்கு நன்மை செய்யும் அமல் இந்த தஹஜ்ஜுத் தொழுகை ஆகும். இரவின் மூன்றாவது பகுதியல் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா கடைசி வானத்தில் வந்து கூறுகிறான், "கேட்கக் கூடியவர்கள் யார்? நான் அவர்களுக்கு அளிக்கிறேன். பாவமன்னிப்பு கேட்கக் கூடியவர்கள் யார்? நான் அவர்களுக்குப் பாவமன்னிப்பு அளிக்கிறேன்." அவன் கொடுக்கத் தயாராக இருக்கிறான். நாம் பாவமன்னிப்பும், இவ்வுலகத் தேவையையும் கேட்டுப் பெறலாம். பலர் தஹஜ்ஜுத் தொழுகையின் பயனை உணர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

பின்னர், அனைத்துக் காரியங்களுக்கும் தலையாய காரியமும், தூணாக இருக்கும் காரியமும் பற்றி அறிவிக்கட்டுமா என்று வினவிய என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியதாவது, "தலையாக இருப்பது இஸ்லாம். தூணாக இருப்பது தொழுகை. உயர்வாக இருப்பது ஜிஹாத்."

இஸ்லாம் மனித வாழ்கையின் அடிப்படை. மேலும் கட்டடத்தின் தூணை அகற்றிவிட்டால், அது பழுதடைந்து விடும். அது போலத்தான் தொழுகையை விட்டால், நமது மார்க்கம் பழுதடைந்து விடும்.

மார்க்க வரைமுரையின்படி நாம் ஜிஹாத் செய்தால் இஸ்லாத்தை மேலோங்கச் செய்யும். இப்படித்தான் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் புரிந்த போர்கள் இருந்தன. அதன் மூலம் அவர்கள் மிகப் பெரிய வெற்றிகளைப் பெற்றார்கள். "எவர் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவின் கலிமா மேலோங்கிச் செல்ல வேண்டும் என போர் செய்கிறாரோ, அதுதான் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவின் பாதையில் புரிந்த போராகும் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள்.

மக்கா வெற்றிக்குப் பிறகு ஹிஜ்ரத் இல்லை எனவும், ஆனால் ஜிஹாதும், சுத்தமான எண்ணமும் கியாம நாள் வரை நீடிக்கும் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். எனவே ஜிஹாத் இல்லை என்று மறுப்பது தவறாகும். எனினும் எல்லா இடங்களிலும் ஜிஹாத் இல்லை. தற்காப்புக்காகத் திருப்பி அடிக்க நிபந்தனை இல்லை. ஆனால் திட்டமிட்டு போர் செய்வதில் பல நிபந்தனைகள் உள்ளன.

அனைத்திற்கும் உள்ளடக்கமான ஒன்றை கூறட்டுமா என்று வினவிய என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் ,"இதனைப் பேணிக்கொள்ள வேண்டும்," என நாவைப் பிடித்துக் கூறினார்கள். "இதனைக் கொண்டு நாங்கள் பேசுவதால் தண்டிக்கப்படுவோமா?' என முஆத் ரழியல்லாஹு அன்ஹு கேட்டார். "உமது தாய் உம்மை இழக்கட்டும்" என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள். உபதேசத்தை நடைமுறை படுத்தாவிட்டால் உமது தாய் உம்மை இழந்து விடுவார் எனப் பொருள் என சில அறிஞர்கள் கூறுகிறார்கள். சிலர் தம் கருத்தைப் பதிய வைக்க, ஆர்வமூட்ட, இவ்வாறு கூறுவது அரபியகளின் வழக்கம் என்று கூறுகிறார்கள். எனவே இது சாபமான சொல் அல்ல. "மக்களை முகம் குப்புற நரகில் வீசக் கூடியது நாவால் பேசக் கூடியது" என அவர்கள மேலும் கூறினார்கள். நாவால் ஷிர்க் செய்வது, மானக் கேடான பேச்சு, பொய், தவறான் வழிக்கு மக்களை அழைப்பது போன்ற பல பாவமான காரியங்கள் செய்ய நாக்கு துணை போகிறது. எனவேதான் இதனைக் கட்டுப் படுத்த வேண்டும் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள்.

இவ்வாறு அவர்கள் தங்களிடம் கேட்ட ஒரு கேள்விக்கு பல விஷங்களைக் கூறி பதிலளித்தார்கள். இது ஒரு ஆசிரியருக்கு இருக்க வேண்டிய பண்பாகும். இறுதியாக ஒரு சட்டவரைவு. இந்த ஹதீதில் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அத்தியாயம் ஸஜ்தாவின் இரு வசனங்களை ஓதும் முன்பு அவூது ஓதவில்லை. இவ்வாறு பல சமயங்களின் வசனங்கள் அவூது ஓதாமல் சொல்லியிருக்கிறார்கள். எனவே சில நேரங்களில் இவ்வாறு எடுத்துக் காட்டு சொல்லும் போது அவூது சொல்வதில்லை என அறிந்து கொள்ளலாம். ஆனால் திலாவத் ஓதும்போது அவூது ஓத வேண்டும்.

நம் அனைவருக்கும் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் உபதேசத்தின்படி வாழும் பாக்கியத்தை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா அருள்புரிவானாக!

الحديث الثلاثون

عَنْ أَبِي ثَعْلَبَةَ الْخُشَنِيِّ جُرْثُومِ بن نَاشِبٍ ﷺ عَنْ رَسُولِ اللَّهِ ﷺ قَال: "إنَّ اللَّهَ تَعَالَى فَرَضَ فَرَائِضَ فَلَا تُضَيِّعُوهَا، وَحَدَّ حُدُودًا فَلَا تَعْتَدُوهَا، وَحَرَّمَ أَشْيَاءَ فَلَا تَنْتَهِكُوهَا، وَسَكَتَ عَنْ أَشْيَاءَ رَحْمَةً لَكُمْ غَيْرَ نِسْيَانٍ فَلَا تَبْحَثُوا عَنْهَا ." حَدِيثٌ حَسَنٌ، رَوَاهُ الدَّارَقُطْنِيُّ [في سننه"، وَغَيْرُهُ .

நிச்சயமாக அல்லாஹ் மார்கத்தின் கடமைகளை விதியாக்கியுள்ளான் அவைகளை வீணாக்காதீர்கள். எல்லைகளை வகுத்துள்ளான் அவைகளை தாண்டாதீர்கள். சில விடயங்களை தடை செய்துள்ளான் அவைகளை மீறாதீர்கள். சில விஷயங்களில் மௌனமாக இருக்கின்றான் அவை உங்களுக்கு அருளாகுமே தவிர மறதியின் காரணமாக அல்ல. எனவே அவைகளை ஆய்வு செய்யாதீர்கள் என நபி அவர்கள் கூறினார்கள் அறிவிப்பவர்: அபூ ஸஹ்லபா (ரலி) நூல்: தாரகுத்னி)

இந்த ஹதீதை அறிவித்தவர் அபு ஃதஹ்லபா ரழியல்லாஹு அன்ஹு ஆவார். இவர்கள் ஹுதைபியா உடன்படிக்கையில் கலந்து கொண்டு அந்த பைஅத்தில் கலந்து கொண்டார். ஹுனைன், கைபர் போர்களில் கலந்து கொண்டார். கைபர் போரில் தங்களுக்குக் கிடைத்த கணிமத்துப் பொருட்களை ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவருக்கு அளித்து விட்டார். தமது சமுதாயத்திற்கு அழைப்பாளராக ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அனுப்பி வைத்தார்கள். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா மார்கத்தின் கடமைகளை விதியாக்கி வைத்தான். இரண்டு விதமான கடமைகள், ஒன்று அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவுக்குச் செய்ய வேண்டிய கடமைகள், மற்றொன்று மனிதர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் ஆகியன. அவைகளை வீணாக்கி விடக்கூடாது. அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா சில விஷயங்களைத் தடை செய்துள்ளான். அவற்றை மீறக் கூடாது. அவன் விதித்த எல்லை பற்றி என்ற حُدود சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. குற்றங்களுக்கு வழங்கப் படிக்கூடிய தண்டனைக்கு இந்த சொல் பயன்படுத்தப்படும். எனவே தண்டனை விதிப்பதில் எல்லை மீறக் கூடாது என்பது இதன் பொருள் என சில அறிஞர்கள் கூறுகிறார்கள். உதாரணத்திற்கு மணம் முடிக்காதவர் விபச்சாரம் புரிந்தால் 100 கசை அடிகள் என்றால் அதனை மீறக்கூடாது.

ஹராமான விஷயங்களை எல்லைகள் என சில அறிஞர்கள் கூறுகிறார்கள். அதனை மீறக்கூடாது. எனினும் ஹராம் பற்றி அடுத்து சொல்லப்பட்டுள்ளதால், எல்லை என்பது முன்னர் சொன்ன பொருளைக் குறிக்கும் என்பதுதான் சரியாக இருக்க முடியும். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா மிக அறிந்தவன்.

மூன்றாவதாக, அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா தடை செய்யாதவற்றை மீறக்கூடாது என்று ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். மேலும் சுவனம் என்பது பிடிக்காத காரியங்களைக் கொண்டு திரை இடப்பட்டிருக்கிறது என்றும், நரகமானது மனோ இச்சையைக் கொண்டு திரை இடப்பட்டிருக்கிறது என்றும் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். ஒரு திரையை அகற்றினால்தான் அதனை அடைய முடியும். சுவனத்திற்குப் போக வேண்டுமென்றால், நமக்குப் பிடிக்கவில்லை என்றாலும் ஃபஜ்ர் தொழுகைக்கும், நன்மையான விஷயங்கள் பாரமாக இருந்தாலும், அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவின் பாதையில் செலவழிக்கப் பிடிக்கவில்லை என்றாலும், அவற்றை விலக்கினால்தான் சுவனம் கிடைக்கும். அது போல

மனோ இச்சையைப் பின்பற்றினால் நரகத்தின் திரை விலகி அதனுள் நுழையக் கூடும். எனவே அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா தடை செய்தவற்றை மீறக்கூடாது.

அடுத்ததாக, சில விஷயங்களில் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா மௌனமாக இருக்கிறான். அதாவது சில விஷங்களை அவசியமாக ஆக்கவும் இல்லை. சில விஷங்களைத் தடுக்கவும் இல்லை. அவற்றைக் குறித்து ஆராயக் கூடாது என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். அவ்வாறு அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா கூறாமல் விட்டது அவனது மறதியால் அல்ல. அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா அதை விட்டும் பரிசுத்தமாணவம். உங்கள் மீதுள்ள கருணையின் காரணமாகத்தான் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். மனிதர்களின் சிரமம் காரணமாக அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா விட்டிருக்கலாம். உதாரணமாக நாம் ஒரு முஸ்லிம் கடையில் சென்று இறைச்சி வாங்கச் சென்றால், அது பிஸ்மி சொல்லி அறுக்கப் பட்டிருக்கிறதா என்று கேட்க வேண்டும் எனச் சொல்லப்படவில்லை. என அவ்வாறு கேட்க வேண்டுமா என்று ஆராய வேண்டிய அவசியமில்லை. குறிப்பிட்ட கடையில் அவ்வாறு பிஸ்மி சொல்லி அறுக்க வாய்ப்பில்லை என்று தெரிந்தால், அந்தக் கடையை விட்டு விடாலாம். ஆனால் பொதுவாக வாங்கும்போது, கேட்டு வாங்க வேண்டும் என அவசியமில்லை. கடைவீதிக்குச் சென்றால் நாங்கள் அவ்வாறு கேட்காமலே வாங்குவோம் என இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு கூறியுள்ளார்.

அதுபோல, அதானுக்கும் இகாமத்திற்கும் இடையில் குறிப்பிட்ட இந்த அளவு நேரம் விட வேண்டும் என்று சொல்லப்படவில்லை. எனவே அந்தந்த இடத்திற்குத் தகுந்தவாறு முடிவு செய்து கொள்ளலாம்.

அதுபோல, தம் குடும்பத்திற்கு இவ்வளவு செலவு செய்ய வேண்டும் என அளவு குறிப்பிடப்பட்டவில்லை. எனவே அது குறித்து நாம் ஆராய வேண்டியதில்லை. இவை எல்லாம் நம் மீதுள்ள அவனது அருளே காரணமாகும்.

அதேபோல் விலங்குகள் பலியிடுவது குறித்து சில விஷயங்களைத் தான் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா விளக்கியிருக்கிறான். அது போக வேறு எதனையும் ஆராயாமல் விட்டு விட வேண்டும். யூதர்களிடம் ஒரு மாட்டை அறுக்குமாறு அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா கட்டளை இட்டான். அவர்கள் உடனே ஒரு மாட்டை அறுக்காமல், அது பற்றி என்ன நிறம் என்பன போன்ற பல கேள்விகள் கேட்டார்கள். கடையிசில் அவர்கள் அம்மாட்டைப் பெற அதிக விலை கொடுக்க வேண்டியதிருந்தது.

ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் காலத்திலும் தேவை இல்லாத கேள்விகள் கேட்கத் தடை இருந்தது. ஹஜ் செய்வது கடமை என்று ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் சொன்னபோது, அக்ராஹ் இப்னு ஹாபித் ரழியல்லாஹு அன்ஹு என்ற ஸஹாபி ஒவ்வொரு வருடமும் ஹஜ் செய்ய வேண்டுமா என வினவினார். ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அதற்குப் பதிலளிக்கவில்லை. அவர் மறுபடியும் கேட்டு பதிலளிக்கவில்லை. மூன்றாம் முறை கேட்டபோது, ஒவ்வொரு வருடமும் கடமை என்று தாங்கள் பதிலளித்தால் அது ஆகிவிடுமே என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் திருப்பிக் கேட்டார்கள். தேவை இல்லாத கேள்வியின் விளைவு துயரமாகத்தான் இருக்கும். இப்போதும் சிலர் தேவையற்ற கேள்விகளைக் கேட்கக் கூடும். ஈஸா அலைஹிஸ் ஸலாம் திரும்ப வந்து திருமணம் முடிப்பார்களா? குழந்தை பெறுவார்களா? என்று சிலர் கேட்கலாம். அவர்களின் வருகை குரிதுஅ ஹதீத் உள்ளது. மேலதிகமாக நாம் ஆராய வேண்டியதில்லை.

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 31

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

الحديث الحادي والثلاثون

عَنْ أَبِي الْعَبَّاسِ سَهْلِ بْنِ سَعْدٍ السَّاعِدِيِّ ﵁ قَالَ: جَاءَ رَجُلٌ إلَى النَّبِيِّ ﷺ فَقَالَ: يَا رَسُولَ اللَّهِ! دُلَّنِي عَلَى عَمَلٍ إذَا عَمِلْتُهُ أَحَبَّنِي اللَّهُ وَأَحَبَّنِي النَّاسُ؛ فَقَالَ: "ازْهَدْ فِي الدُّنْيَا يُحِبَّك اللَّهُ، وَازْهَدْ فِيمَا عِنْدَ النَّاسِ يُحِبُّك النَّاسُ . " حديث حسن، رَوَاهُ ابْنُ مَاجَهْ وَغَيْرُهُ بِأَسَانِيدَ حَسَنَةٍ .

ஹதீஸ்-31:

ஒரு மனிதர் நபி(ஸல்) அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதரே எனக்கு ஒரு (அமலை) செயலை சொல்லித் தாருங்கள் அதனை நான் செய்தால் அல்லாஹ்வும் மக்களும் என்னை நேசிக்க வேண்டும் என்றார். அப்போது நபி (ஸல்) அவர்கள் நீ உலகில் பற்றற்று இரு, அல்லாஹ் உன்னை நேசிப்பான். மக்களி டத்தில் உள்ளவற்றில் (அவர்கள் சொந்தம் கொண்டாடு பவற்றில்) எதுவும் தேவையற்று இரு, மக்கள் உன்னை நேசிப்பார்கள் எனக் கூறினார்கள் அறிவிப்பவர்: அபூல் அப்பாஸ் ஸஹ்ல் இப்னி அஸ்ஸாஇதி (ரலி) நூல்: இப்னுமாஜா)

இந்த ஹதீதை அறிவித்தவர் அபுல் அப்பாஸ் ஸஹ்ல் இப்னு அஸ்ஸாயிதி ரழியல்லாஹு அன்ஹு ஆவார். ஆரம்பத்தில் இவரது பெயர் ஹஜன் என்பதாகும். அதற்குக் கவலை என்று பொருள். அந்த பெரரய் ஸஹல் (இலகு) என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் மாற்றினார்கள். எனவே நல்ல பொருள் கொண்ட பெயர்களை நாம் இடுவது நபி வழியாகும். இதுபோல் சுமார் அறுபது பெயர்களை ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் மாற்றியுள்ளார்கள். எனவே தவறான பொருள் கொண்ட பெயரை மாற்றிக் கொள்ளலாம். இவரும், இவரது தந்தையும் ஸஹாபிகள். இவர் பல ஹதீதுகளை அறிவித்துள்ளார். அபு ஹுரைராஹ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் பல ஹதீதுகளை அறிவித்துள்ளார். ஹிஜ்ரி 91ல் மதினாவில் மரணித்த கடைசி ஸஹாபி இவர் எனக் கூறப்படுகிறது.

ஒரு மனிதர் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் வந்து அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவும், மக்களும் தம்மை நேசிக்கக்கூடிய ஒரு செயலைக் கற்றுத் தருமாறு வினவினார். உலகத்தில் பற்றற்று இருந்தால் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நேசிப்பான் எனவும், மக்களிடம் தேவையற்று இருந்தால் அவர்களும் நேசிப்பார்கள் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள்.

உலக வாழ்கையில் பற்றற்ற நிலையை زُهْدٌ என்பார்கள். இது மறுமை வாழ்கையில் பயன் தராதவற்றை விடுவது ஆகும். மறுமை வாழ்கையில் நட்டம் அளிப்பது என்பது வேறு. மறுமை வாழ்கையில் பயன் தராத அனுமதிக்கப்பட்ட விஷயங்களை விடுவது தான் பற்றற்ற நிலையாகும். ஒரு நல்ல முஸ்லிமுக்கு அடையாளம் தேவை இல்லாத விஷயங்களை விட்டு விடுதல் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். இந்த வழியைத்தான் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களும், நபித் தோழர்களும் கடைபிடித்திருக்கிறார்கள். ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் நினைத்தால் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்திருக்கலாம். ஆனால் அது மறுமை வாழ்வுக்குப் பயன்தராது என்பதால் அதனைத் தேர்ந்தெடுக்கவில்லை. இப்படிப்பட்ட நிலையை அல்லாஹ் நேசிக்கிறான்.

அடுத்ததாக மக்களிடம் தேவையற்று இருந்தால் அவர்களும் நேசிப்பார்கள். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவிடத்தில் நீங்கள் கேட்காமல் இருந்தால் அவன் கோபப்படுவான். ஆனால் மனிதர்களிடத்தில் நீங்கள் கேட்டால் அவர்கள் கோபமும், எரிச்சலும் கொள்வார்கள். எனவே அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவிடத்தில் கேட்க வேண்டும். பஸ்ராவில் ஒருவரிடம் அங்கு தலைவராக கருதப்படுபவரும், மக்கள் பின்பற்றக்கூடியவரும் யார் என கேட்டதற்கு, ஹசன் பஸரி ரஹ்மத்துல்லாஹி அலைஹி என்று கூறினார். அதற்குக் காரணம் கேட்டபோது, அவரது கல்விக்காக மக்கள் அவரைத் தேடி போவார்கள். ஆனால் தமது தேவைக்காக அவர் மக்களிடம் சென்றதில்லை.

எனவே மக்கள் நம்மை நேசிக்க வேண்டும் என்றால், அவர்களிடம் தேவை அற்றவர்களாக இருக்க வேண்டும். ஒருவருக்கு ஒருவர் உதவி செய்ய வேண்டும் என வலியுறுத்தப்பட்டாலும், நாம் மற்றவர்களிடம் தேவை அற்றவர்களாக இருக்க வேண்டும். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவிடத்தில் மற்றும் கேட்க வேண்டும். மற்றவர்களிடம் கேட்பதை முடிந்த அளவுக்குத் தவிர்ப்பது அவர்களின் நேசத்தை அடைய உதவும்.

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 32

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

الحديث الثاني والثلاثون

عَنْ أَبِي سَعِيدٍ سَعْدِ بْنِ مَالِكِ بْنِ سِنَانٍ الْخُدْرِيِّ ﵁ أَنَّ رَسُولَ اللَّهِ ﷺ قَالَ: " لَا ضَرَرَ وَلَا ضِرَارَ " . حَدِيثٌ حَسَنٌ، رَوَاهُ ابْنُ مَاجَهْ ، وَالدَّارَقُطْنِيّ ، وَغَيْرُهُمَا مُسْنَدًا. وَرَوَاهُ مَالِكٌ فِي "الْمُوَطَّإِ" عَنْ عَمْرِو بْنِ يَحْيَى عَنْ أَبِيهِ عَنْ النَّبِيِّ ﷺ مُرْسَلًا، فَأَسْقَطَ أَبَا سَعِيدٍ، وَلَهُ طُرُقٌ يُقَوِّي بَعْضُهَا بَعْضًا.

ஹதீஸ்-32:

தீங்கிழைக்கவும் கூடாது தீங்கிற்கு பழிவாங்கவும் கூடாது என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்
அறிவிப்பவர்: அபூ ஸஹீத் ஸஹ்திப்னு மாலிக் இப்னி ஸினான்(ரலி) நூல்: இப்னு மாஜா தாரகுத்னி

இந்த ஹதீதை அறிவித்தவர் அபு ஸஹீத் ஸஹ்த் இப்னு மாலிக் இப்னு ஸினான்அஸ்ஸாயிதி ரழியல்லாஹுு அன்ஹுு ஆவார். ஹிஜ்ரத் செய்த சம்பவத்திற்கு பத்து வருடம் முன்பு பிறந்தவர். ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹுு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மதீனாவுக்கு வரும்போது அவருக்குப் பத்து வயது. அவரது தந்தை உஹதுப் போரில் ஷஹீதானவர். அவரும் உஹதுப் போரில் கலந்து கொள்ள வந்தாலும் பன்னிரண்டு வயது என்பதால் அவரை ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹுு அலைஹி வ ஸல்லம் அனுமதிக்கவில்லை. பின்னர் அகழிப் போரிலிருந்து சுமார் பத்து போர்களில் கலந்து கொண்டார்கள். அவர் சுமார் 1170 ஹதீதுகள் அறிவித்துள்ளார்.

'யாருக்கும் தீங்கிழைக்கக் கூடாது. பழிவாங்கும் நோக்கிலும் தீங்கிழைக்கக் கூடாது' ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹுு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். இந்த ஹதீது குறித்து அரபு உலமாக்கள், 'தெரியாமல் தீங்கிழைக்கக் கூடாது. தெரிந்தும் தீங்கிழைக்கக் கூடாது.' என்ற பொருளைக் கூறுகிறார்கள்.

இது ஒரு அடிப்படை சட்டத்தைக் கொடுக்கிறது. இதனைக் கொண்டு பல தீர்ப்புகளைச் சொல்லலாம். மார்க்க சட்டங்கள் நமது பாதுகாப்புக்கே உள்ளன. ஹலாலாக்கப்பட்ட மற்றும் ஹராமாகாப்பட்ட விஷயங்களுக்குப் பின்னால் ஐந்து அடிப்படை நோக்கங்கள் இருப்பதை நாம் கூறாலாம். ஒரு மனிதனுடைய மார்க்கத்தை, மறுமையை, இறை நம்பிக்கையை ஆகியவற்றைப் பாதுகாப்பது. இதனால் தான் ஷிர்கை அல்லாஹ் ஸுுப்ஹானஹுு வ தஆலாஹராமாக ஆக்கியுள்ளான். தொழுகையை பேணச் சொல்லியுள்ளான். இரண்டாவது நோக்கம் மனிதனுடைய உயிர் பாதுகாக்கப்பட வேண்டும். கொலை செய்வது ஹராம் என்று சொல்வது இதற்காகத்தான். ஒருவரைக் கொன்றால், ஒட்டு மொத்த மனித சமுதாயத்தையே கொள்வதற்குச் சமம் என குர்ஆன் கூறுகிறது. தற்கொலை ஹாரம் ஆகியது இதனால்தான். பழிக்குப்பழி அடிப்படையில் கொல்வதும் அவசியமாகப்பட்டது.

மனிதருடைய பொருளாதாரம் பாதுகாக்கப்பட திருடுவது, மோசடி செய்வது, லஞ்சம் வாங்குவது போன்றவை ஹராமாக்கப்பட்டுள்ளது. நான்காவதாக மனிதனுடைய மானம் மரியாதை பாதுகாக்கப்பட விபச்சாரம் செய்வதும், புறம் பேசுவதும் ஹராமாக்கப்பட்டுள்ளது. அவதூறுக்கு என்பது கசை அடிகள் தண்டனையாகும்.

ஐந்தாவது அறிவு பாதுகாக்கப்பட வேண்டும். மது அருந்தினால் மனிதனின் அறிவு செயல் இழந்துவிடும்.

இவ்வாறு இந்த ஐந்து அடிப்படையில் ஏதேனும் ஒன்று மார்க்கத்தில் பிரதிபலிக்கும். தெரிந்தோ தெரியாமலோ இந்த ஐந்து அடிப்படையின் விஷயத்தில் தீங்கிழைப்பது கூடாது என்ற இந்த ஹதீதும் இதன் அடிப்படையில் தான் உள்ளது.

மற்றுமொரு முக்கிய சட்டம், மார்க்கத்தில் நன்மை சேர்ப்பதை விட தீங்கிலிருந்து விடுபடுவது அதிக அவசியமாக உள்ளது. உதாரணமாக பொதுக் கழிப்பிடம் கட்டுவது நல்லதுதான். ஆனால் குறிப்பிட்ட ஒரு இடத்தில் கழிப்பிடம் கட்டுவதனால் மற்றவர்களுக்கு இடையூறு ஏற்படும் என்றால், அவ்வாறு கட்டுவதை விட கட்டாமல் இருப்பது நல்லது.

மற்றுமொரு உதாரணம், நாம் தர்மம் செய்ய விரும்புகிறோம். ஒருவருக்குக் காரணம் ஏதும் இல்லாமல் கொடுப்பது, மற்றொவருக்கு நோயுக்கு சிகிச்சை செய்யக் கொடுப்பது. இவை இரண்டில் சிகிச்சை செய்யக் கொடுப்பதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். தீங்கிலிருந்து, தம்மையும் பிறரையும் பாதுகாக்க வேண்டும்.

அநியாயம் செய்யும் எண்ணத்துடனும் தீங்கு செய்யலாம். அதேபோல தெரியாமல் தீங்கு இழைக்கவும் வாய்ப்புண்டு. இரண்டும் கூடாது. நாம் செய்யும் ஒரு செயல் பின்னால் மற்றவருக்குப் பாதிப்பை ஏற்படுத்தலாம். எனவேதான் தெரியாமல் தீங்கு இழைக்கவும் கூடாது. உதாரணமாக ஒரு செல்வந்தரின் மகன் அவர் இருக்குப்போதே மரணமடைந்து விட்டார் என வைத்துக் கொள்வோம். அவரது பேரக்குழந்தைகள் வறுமையில் வாடிக்கொண்டிருக்கின்றன. மரண சாசனம் எழுதி வைத்துக் கொள்ள வேண்டும் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். அதனைப் பின்பற்றி, மரணித்தவர் தமது குழந்தைகளுக்காக பங்கு கொடுக்க வேண்டும் என முன்னரே எழுதியிருக்க வேண்டும். ஏனெனில் பின்னர் அந்த செல்வந்தர் இறந்து விட்டால், அவரது சொத்தில் பேரக்குழந்தைளுக்குப் பங்கு இருக்காது. ஏனெனில் அவரையும், பேரக்குழந்தைகளையும் இணைக்கும் மகன் ஏற்கனவே இறந்து விட்டார் என்பதால் பங்கு கிடைக்காது. எனினும் வஸியத் என்ற ஒரு வழியின் மூலம் தம் சொத்தில் மூன்றில் ஒரு பங்கை யாருக்கும் கொடுக்கலாம். அதன் வழியில், இறந்த தம் மகனின் குழந்தைகளுக்காக, அந்த செல்வந்தார் வஸியத் மூலமாகத் தம் பேரக்குழந்தைகளுக்கு செல்வத்தை அளித்திருக்கலாம். அவ்வாறு செய்யாமல் இருப்பது தவறாகும். தம் சொந்தப் பேரக்குழந்தைகள் பற்றி கவலைப்படாமல் இருந்தது தவறாகும்.

மற்றொரு உதாரணம், பயணத்தில் போது, சிவப்பு விளக்கு எரியும்போது, நாம் மீறி செல்லக் கூடாது. அவ்வாறு யாரேனும் சென்று அவருக்கு எந்த பாதிப்பும் இல்லாமல் சென்று விட்டாலும், அவரைப் பின்பற்றி அவ்வாறு சென்ற நபருக்கு ஆபத்து ஏதேனும் வந்தால், அவர் அதற்குக் காரணமாக ஆகிவிடுவதால், அவ்வாறு அவர் செய்தது தவறாகிவிடும். இததான் தெரியாமல் செய்யும் தீங்கு ஆகும்.

தெரிந்தே செய்யும் தீங்குக்கு பல உதாரணம் உண்டு. உதாரணமாக தமது வாரிசுகளின் மீது உள்ள கோபத்தின் காரணமாவே, தமது சொத்தில் மூன்றில் ஒரு பங்கை வேண்டுமென்றே வாரிசு ஆகாத வேறு ஒருவருக்கு வஸியத் செய்வது, தெரிந்தே செய்யும் தீங்கு ஆகும். இதன் மூலம் வாரிசுகளுக்கு நட்டம் ஏற்படுத்தும் நோக்கில் செய்வது தீங்காகும்.

புகை பிடிப்பது தமக்கும், மற்றவர்களுக்கும் தீங்கு அளிக்கும் என்று தெரிந்தே பலர் அந்த தவறை செய்கிறார்கள். இது போன்று தெரிந்தும், தெரியாமலும் மற்றவருக்கு தீங்கு செய்யாத நிலையை நம் அனைவருக்கும் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா அளிப்பானாக!

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 33

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

الحديث الثالث والثلاثون

عَنْ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اللَّهُ عَنْهُمَا أَنَّ رَسُولَ اللَّهِ ﷺ قَالَ: "لَوْ يُعْطَى النَّاسُ بِدَعْوَاهُمْ لَادَّعَى رِجَالٌ أَمْوَالَ قَوْمٍ وَدِمَاءَهُمْ، لَكِنَّ الْبَيِّنَةَ عَلَى الْمُدَّعِي، وَالْيَمِينَ عَلَى مَنْ أَنْكَرَ . "

حَدِيثٌ حَسَنٌ، رَوَاهُ الْبَيْهَقِيّ [في"السنن وَغَيْرُهُ هَكَذَا، وَبَعْضُهُ فِي "الصَّحِيحَيْنِ ".

ஹதீஸ்-33:

மக்கள் தம்முடையவை என்று சொந்தம் கொண்டாடுபவைகளை வழங்கக் கூடியதாக இருந்தால் அவர்கள் அடுத்தவர்களின் செல்வங்களையும் இரத்தங்களையும் கோரு வார்கள். தன்னுடையது என்று உரிமை கொண்டாடக் கூடியவர் அதற்கான சான்றை சமர்பிக்க வேண்டும். அதனை மறுப்பவர் சத்தியம் செய்ய வேண்டும். என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (ரலி) நூல்: பைஹகி

இந்த ஹதீதை அறிவித்தவர் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு ஆவார். ஒருவர் தமக்கு இன்னார் பணம் தர வேண்டும் என்றோ, அல்லது இன்னார் இருக்கும் வீடு தமக்கு சொந்தமானது அல்லது இவரது வண்டி தமக்கு சொந்தமான ஒன்று என யாரும் உரிமை கொண்டாடினால், அதற்கான சான்றினைச் சமர்ப்பிக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் தங்கள் விருப்பபடி உரிமை கொண்டாட ஆரம்பிப்பார்கள். அதற்காத்தான் இது குறித்து தீர்ப்பு வழங்குபவர்கள் இந்த ஹதீதின்படி, உரிமை கொண்டாடுபவர் அதற்கான சான்று கொண்டு வரவேண்டும். தாம் சொன்னதை நிரூபிக்க வேண்டும். அது போல அது அவரது பணம், வீடு அல்லது வண்டி அவ்வாறேல்லால் இல்லை என மறுப்பவர் தாம் சொல்வது குறித்து சத்தியம் செய்ய வேண்டும். எனவே வாதாடுபவர் நிரூபிக்க வேண்டும். மறுப்பவர் சத்தியம் செய்ய வேண்டும்.

உதாரணமாக ஒருவர் மற்றவருக்கு கடன் கொடுத்தார் என்று முறையிடுகிறார். ஆனால் அவரோ அதனை மறுக்கிறார். எனவே தீர்ப்பு சொல்பவர், முறையீடு செய்பவரிடம் அது குறித்து ஆதாரம் கொண்டுவருமாறு கேட்க வேண்டும். மறுப்பவர் அவ்வாறு வாங்கவில்லை என சத்தியம் செய்ய வேண்டும். இதுதான் இந்த ஹதீதில் சாரமாகும். இதைப் போல் தான் வீட்டை குறித்து ஏதேனும் பிரச்சினை வந்தாலும் இவ்வாறே நடந்து கொள்ள வேண்டும்.

சான்றாகச் சாட்சி சொல்லுப்போது, இரண்டு ஆண்கள் அல்லது ஒரு ஆண் மற்றும் இரண்டு பெண்கள் இருக்க வேண்டும். எனினும் பால் குடித்தது பற்றி சாட்சி சொல்லும்போது ஒரு சாட்சி போதும். உதாரணமாக, ஒரு ஆணும், பெண்ணும் மணம் புரிய நினைக்கும்போது, யாரேனும் அவர்கள் இருவரும் பால்குடி சகோதர, சகோதரி என்று முறையிட்டால், அதற்கு அந்த இருவருக்கும் பால் கொடுத்த ஒரு பெண்மணியின் சாட்சி மட்டும் போதும். இவ்வாறு சாட்சி விஷயத்தில் வேறுபாடுகள் உள்ளன.

சில சமயத்தில் அடையாளங்களைக் கொண்டும், சாட்சிகளை எடுத்துக் கொள்ளலாம். உதாரணமாக யூஸுஃப் அலைஹிஸ் ஸலாம் சட்டை எந்தப்பக்கம் கிழிந்தது என்ற அடையாளத்தைச் சாட்சியாக எடுத்துக் கொல்லப்பட்டது.

நவீன காலத்தில், பல சான்றுகள் ஒளி மற்றும் ஒலி வடிவில் எடுத்துக் கொள்ளலாம்.

இந்த சட்டங்கள் அனைத்தும் முஸ்லிம்கள் அநீதி இழைக்கக் கூடாது என்பதற்குத்தான். ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறுவதின் சாரமாவது: “உங்களில் யாரேனும் தம் வாதத் திறமையால் வழக்காடும்போது, பொய்யை உண்மை போல சித்தரித்து தமக்கு சாதகமாகத் தீர்ப்பை பெற்றுக் கொள்ளலாம். ஆனால் அப்படி தீர்ப்பு அளிக்கப்பட்டாலும், அது அவருக்கு ஹாலாக ஆகிவிடாது. அது நரகத்தின் ஒரு பகுதியாக ஆகிவிடக் கூடும்.”

நாம் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவை அஞ்சி நடக்க வேண்டும். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நம்மைப் பாதுகாப்பானாக!

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 34

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

الحديث الرابع والثلاثون

عَنْ أَبِي سَعِيدٍ الْخُدْرِيِّ ﷺ قَالَ سَمِعْت رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: "مَنْ رَأَى مِنْكُمْ مُنْكَرًا فَلْيُغَيِّرْهُ بِيَدِهِ، فَإِنْ لَمْ يَسْتَطِعْ فَبِلِسَانِهِ، فَإِنْ لَمْ يَسْتَطِعْ فَبِقَلْبِهِ، وَذَلِكَ أَضْعَفُ الْإِيمَانِ" . رَوَاهُ مُسْلِمٌ .

ஹதீஸ்-34:

உங்களில் ஒருவர் தவறை காண்பவர் தனது கையினால் அதனை தடுக்கட்டும். அதற்கு முடியாது விட்டால் தனது நாவால் தடுக்கட்டும். அதற்கும் முடியாது விட்டால் தனது உள்ளத்தால் வெறுக்கட்டும் இது ஈமான் (இறை நம்பிக்கை யின்) கடைசி படித்தரமாகும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூ ஸயீதுல் குத்ரி (ரலி) நூல்: முஸ்லிம்

இந்த ஹதீதை அறிவித்தவர் அபு ஸயிதுல் குத்ரி ரழியல்லாஹு அன்ஹு ஆவார். இந்த ஹதீதில் முஸ்லிம்களுக்கு முக்கியமான பணியை ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். அது தான் தீமையைத் தடுப்பது ஆகும். இந்த முக்கியமான கடமையை முஸ்லிம்கள் செய்யாவிட்டால், தீமை செய்யாமல் இருப்பவர்களுக்கும் இதனால் பாதிப்பு அடையக் கூடும். இதற்கு ஒரு உதாரணம் சொல்லி விளக்குகிறார்கள். ஒரு கப்பலில் கீழ் தளத்தில் உள்ளவர்கள் தங்களின் தண்ணீர் தேவைக்கு அடிக்கடி மேல் தளத்திற்குச் சென்று கொண்டிருந்தார்கள். இதனால் வருத்தமடைந்த அவர்கள், தாங்கள் ஏன் தண்ணீருக்காக மேல் தளத்திற்குச் செல்ல வேண்டும், கப்பலில் துளையிட்டு, நேரடியாகத் தண்ணீர் எடுத்துக் கொள்ளலாம் என நினைத்தார்கள். அவர்கள் அவ்வாறு செய்வதை மேல் தளத்தில் உள்ளவர்கள் தடுக்காமல் இருந்து விட்டால், கிழே உள்ளவர்கள் மட்டுமல்லாமல், அனைவரும் பாதிக்கப்படுவார்கள்.

எனவே தீமையைத் தடுக்காமல் இருந்தால் அனைவரும் பாதிப்புக்கு ஆளாக வேண்டியதிருக்கும் என்பதால், இந்தக் கடமையை நாம் சரியாகச் செய்ய வேண்டும். அதனால் தான், ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள்: “உங்களில் ஒருவர் தீமையைக் கண்டால் தங்களின் கரத்தால் அதனைத் தடுக்க வேண்டும்.” அதாவது தங்களின் சக்தியைக் கொண்டு தடுக்க வேண்டும். ஆட்சியாளர்கள், காவலர்கள், பெற்றோர், ஆசிரியர் ஆகியோர் தங்களின் கரத்தைக் கொண்டு தடுக்கலாம். தேவைப்பட்டால் அடித்து திருத்துவது. உதாரணமாக உங்கள் பிள்ளைகளை எழு வயதில் தொழச் சொல்லி ஏவுங்கள். பத்து வயதை அடைந்து தொழாவிட்டால் அடித்துத் தொழச் சொல்லுங்கள். இது தான் கரத்தைக் கொண்டு தடுக்கும் விதத்திற்கு உதாரணமாகும். குற்றவாளிகளைத் தண்டிப்பது, தவறான பொருளை வைத்திருந்தால் அதனைப் பிடுங்குவது போன்றவையும் இதில் அடங்கும்.

இரண்டாவது நாவைக் கொண்டு தடுப்பது என்பது, பேசித் தடுப்பது, எழுது கோல் கொண்டு தடுப்பது. சிறியவர்கள் மற்றும் பெரியவர்கள் என யாரும் இதனை கை கொள்ளலாம். கரத்தால் தடுத்தும் கேட்காமல் இருந்தால் வேறு வழி இல்லாமல் நாவினால் தான் கூற முடியும். அது போல பெரியவர்களின் தவறுகளை கையால் தடுக்க முடியாது. நாவினால் தான் முயல வேண்டும். ஆட்சியாளர்கள் தவறு செய்தாலும் நாவினால் தான் திருத்த முடியும். எனவே நமக்கு மேல் இருப்பவர்களுக்கு இதுதான் வழி.

நாவினால் பேசும்போது மெல்லினமாக, கடுமை இல்லாத சொற்களைக் கொண்டு தடுக்க முயல வேண்டும். மூஸா அலைஹிஸ் ஸலாம் ஃபிர்அவுனிடம் சென்று உபதேசம் செய்ய அனுப்பப்பட்டபோது அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா கூறுவதாவது,

அத்தியாயம் தாஹா 44

فَقُوْلَا لَهٗ قَوْلًا لَّيِّنًا فَقُوْلَا لَهٗ قَوْلًا لَّيِّنًا

நீங்கள் அவனுக்கு நளினமாக உபதேசம் செய்யுங்கள். அவன் நல்லுணர்ச்சி பெறலாம் அல்லது அச்சம் கொள்ளலாம்.

எனவே அநியாககார ஃபிர்அவுனிடமே அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நளினமாக உபதேசம் செய்யச் சொல்கிறான். நாமும் அவ்வாறே செய்ய வேண்டும். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா மேலும் கூறுவதாவது,

அத்தியாயம் நஹ்ல் 125

وَجَادِلْهُمْ بِالَّتِيْ هِيَ اَحْسَنُ

அழகான முறையில் தர்க்கம் செய்யுங்கள்.

தவறு செய்பவர்கள் பிடிவாதமாக இருந்தால், பேசிப் பயனில்லை என்றால், அவர்களை விட்டுவிட்டு சென்று விட வேண்டும்.

அத்தியாயம் ஃபுர்கான் 63

وَّاِذَا خَاطَبَهُمُ الْجٰهِلُوْنَ قَالُوْا سَلٰمًا ۝٦٣

மூடர்களுடன் தர்க்கிக்க முற்பட்டால் ஸலாம் சொல்லிவிட்டு விலகிச் செல்லுங்கள்.

பேசாமல் இருந்தும் நாம் தீமையை தடுக்க முயற்சி செய்யலாம். பொதுவாக நாம் மற்றவர்களுடன் மூன்று நாட்களுக்கு அதிகமாகப் பேசாமல் இருக்கக் கூடாது. எனினும் பேசாமல் இருப்பதை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தி தீமையைத் தடுக்க முடியும் என்றால் அதனையும் முயற்சி செய்யலாம். ‘ஹஜர்’ செய்வது என்பது இந்த வழிமுறை ஆகும்.

இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு தம் மகனிடம் கூறியதாவது, “பெண்கள் பள்ளிவாசலுக்குத் தொழச் செல்ல வேண்டும் என அனுமதி கேட்டால், கொடுத்து விடுமாறு ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள்.” அனால் அவரது மகன் தாம் அவ்வாறு அனுமதிக்க மாட்டேன் எனக் கூறினார். கோபப்பட்ட இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு ஹதீதுக்கு மாறாக பேசியதற்காக தம் மகனிடம் அதிக நாட்கள் பேசாமல் இருந்தார்.

ஹஜர் ஒரு மருந்து மாதிரி. நோய் இருந்தால்தான் பயன் படுத்த வேண்டும். அந்த மருந்து பயன் தராது என நினைத்தால் விட்டு விட வேண்டும். தேவையான அளவுக்குத்தான் அதனை பயன்படுத்த வேண்டும். ஹஜரை இவ்வாறு தான் பயன்படுத்த வேண்டும். அதனை தவறு செய்பவர் பொருட்படுத்தவில்லை என்றால் அதனை விட்டு விட வேண்டும். அது போல பயன் கிடைத்ததும் அதனை விட்டு விட வேண்டும். தாய் தந்தை, மற்றும் சகோதரர் விஷயத்தில் இதனை பயன்படுத்தலாம்.

கரத்தைக் கொண்டு தடுப்பது, நாவைக் கொண்டு தருப்பது ஆகிய அனைத்தும் மார்க்க வரமுறைக்கு உட்பட்டுதான் செய்ய வேண்டும். தீமையைத் தடுக்கிறோம் என வரம்பு மீறி மற்றொரு தவறைச் செய்யக் கூடாது. ஒரு தவறு மற்றொரு தவறைச் சரிபடுத்தாது.

இரண்டையும் பயன்படுத்த இயலவில்லை என்றால், அதனை உள்ளத்தில் தீமையாக எண்ணிக்கொள்ள வேண்டும் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். இது ஈமானின் கடைசி படித்தரமாகும். அதைத் தீமை என்று கூட நினைக்காவிட்டால் அது ஈமானில் நயவஞ்சகத்தனத்தைக் காட்டும். எனவே குறைந்தபட்சம் அதனை வெறுப்பது ஈமான் ஆகும்.

தீமையைத் தடுக்கும்போது கவனிக்க வேண்டிய வழிமுறைகள்:

1. எந்தத் தீமையைத் தடுத்தால், அதனை விடப் பெரிய தீமை வந்தவிடும் என்ற அச்சம் இருந்தால், அதனைத் தடுக்காமல் விட வேண்டும். இப்னு தைமியா ரஹ்மத்துல்லாஹி அலைஹியும் அவரது மாணவரும் சென்று கொண்டிருந்தபோது கத்தார் என்ற இனத்தைச் சேர்ந்தவர்கள் மது அருந்திக் கொண்டிருந்தார்கள். அதனைத் தடுக்க இருந்த மாணவரை இப்னு தைமியா ரஹ்மத்துல்லாஹி அலைஹி வேண்டாம் என்றார். காரணம் கேட்க, அவ்வாறு தடுத்தால், அவர்கள் நினைவி தெளிந்த பிறகு, யாரையும் கொல்லக் கூடும் என்றார். மதுவை விட கொலை மிகப்பெரிய பாவம் ஆகும். அது போல் தான், அநியாய ஆட்சியாளரை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தால் அவர் கோபம் கொண்டு அதிக துன்பம் செய்ய வைய்ப்புள்ளதால், கிளர்ச்சி செய்வதை மார்க்கம் தடுக்கிறது.

மற்றொரு உதாரணம், நல்ல முஸ்லிமாக இருந்த ஒருவர் சூழ்நிலை காரணமாக எதேனும் ஒரு தீமையின்பால் இருக்கும்போது, அவரைத் திருத்தும் நோக்கில் அவருக்கு உபதேசம் செய்யும்போது, இறை நிராகரிப்பு போன்ற நிலைக்குச் சென்று விடக்கூடும் என பயந்தால், அவரை அப்போது தடுப்பதை விட்டு விட வேண்டும்.

2. இந்தக் கடமை அறிஞர்களின் கடமை மட்டும் அல்ல. எல்லோருக்கும் கடமையாகும். எனினும் இதற்குக் அடிப்படை கல்வி அவசியம்.

3. தடுக்க நினைக்கும் காரியம் உண்மையில் தீமைதான் என உறுதியாக அறிந்திருக்க வேண்டும். கருத்து வேறுபாடு உள்ள நிலையைக் குறித்து அறிந்து, நம் நிலையை மற்றவர்கள் மீது திணிக்கும் வகையில் இருக்கக்கூடாது.

4. செய்யக் கூடியவருக்கு அது தீமைதான என அறிந்து தடுக்க வேண்டும். உதாரணமாக ரமழான் மாதத்தில் ஒருவர் பகலில் உணவு அருந்தினால், அது அவருக்கு ஆகுமானதாக இல்லை என்ற நிலை அறிந்து நாம் செயல்பட வேண்டும். அது போலத்தான், ஒரு பெண் தொழவில்லை என நாம் குற்றம் காணக்கூடாது. அதற்கான தகுந்த காரணம் அவரிடம் இருக்கவில்லை என்று அறிந்த பிறகுதான் நாம் செயல்பட வேண்டும்.

அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நமக்கு நன்மையை ஏவி தீமையைத் தடுக்கும் பாக்கியத்தை அருள்வானாக!

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 35

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

الحديث الخامس والثلاثون

عَنْ أَبِي هُرَيْرَةَ ؓ قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ ﷺ " لَا تَحَاسَدُوا، وَلَا تَنَاجَشُوا، وَلَا تَبَاغَضُوا، وَلَا تَدَابَرُوا، وَلَا يَبِعْ بَعْضُكُمْ عَلَى بَيْعِ بَعْضٍ، وَكُونُوا عِبَادَ اللَّهِ إخْوَانًا، الْمُسْلِمُ أَخُو الْمُسْلِمِ، لَا يَظْلِمُهُ، وَلَا يَخْذُلُهُ، وَلَا يَكْذِبُهُ، وَلَا يَحْقِرُهُ، التَّقْوَى هَاهُنَا، وَيُشِيرُ إلَى صَدْرِهِ ثَلَاثَ مَرَّاتٍ، بِحَسْبِ امْرِئٍ مِنْ الشَّرِّ أَنْ يَحْقِرَ أَخَاهُ الْمُسْلِمَ، كُلُّ الْمُسْلِمِ عَلَى الْمُسْلِمِ حَرَامٌ: دَمُهُ وَمَالُهُ وَعِرْضُهُ". رَوَاهُ مُسْلِمٌ.

ஒருவருக்கொருவர் பொறாமை கொள்ளாதீர் கள். (பிறரை அதிக விலை கொடுத்து வாங்க வைப்பதற்காக விற்பனைப் பொருளின்) விலையை ஏற்றிக் கேட்காதீர்கள். ஒருவருக் கொருவர் கோபம் கொள்ளாதீர்கள். ஒருவருக் கொருவர் பிணங்கிக்கொள்ளாதீர்கள். ஒருவர் வியாபாரம் செய்து கொண்டிருக்கும் போது மற்றவர் தலையிட்டு வியாபாரம் செய்ய வேண்டாம். (மாறாக) அல்லாஹ்வின் அடியார்களே! (அன்பு காட்டுவதில்) சகோதரர் களாக இருங்கள். ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுக்குச் சகோதரர் ஆவார். அவர் தம் சகோதரருக்கு அநீதியிழைக்கவோ, அவருக்குத் துரோகமிழைக்கவோ, அவரைக் கேவலப் படுத்தவோ வேண்டாம். இறையச்சம் (தக்வா) இங்கே இருக்கிறது. (இதைக் கூறிய) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தமது நெஞ்சை நோக்கி மூன்று முறை சைகை செய்தார்கள். ஒருவர் தம் சகோதர முஸ்லிமைக் கேவலப்படுத்துவதே அவருடைய தீமைக்குப் போதிய சான்றாகும். ஒவ்வொரு முஸ்லிமுக்கும் மற்ற முஸ்லிம்களின் உயிர், பொருள், மானம் ஆகியவை தடைசெய்யப்பட்டவையாகும். என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அறிவிப்பவர் அபூஹுரைரா (ரலி) அவர்கள் நூல்: புகாரி முஸ்லிம்

இந்த ஹதீதை அறிவித்தவர் அபு ஹுரைராஹ் ரழியல்லாஹு அன்ஹு ஆவார். இந்த ஒரே ஹதீதில் பல விஷயங்கள் குரிப்பிடப்பட்டுள்ளன. இவை அனைத்தையும் பின்பற்றினால் ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாக்க முடியும். இவற்றிலுள்ளவற்றைப் புறக்கணிப்பதால்தான் பல பிரச்சனைகள் சமுதாயத்தில் உருவாகிறது.

1. பொறாமை கொள்ளக்கூடாது என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். தமக்குக் கிடைக்காத ஒன்று மற்றவருக்கு கிடைத்தால் அது குறித்து ஆசைபடுவதோடு, அவருக்குக் கிடைத்திருக்கக் கூடாது என மனதில் எண்ணுவது கூடாது. இப்னு தைமியா ரஹ்மத்துல்லாஹி அலைஹி இவ்வாறு வரும் எண்ணத்தைப் தாண்டி ஒரு முஸ்லிம் சென்று விடவேண்டும் என்று கூறுகிறார். தவறானவர்தான் அது குறித்து பொறாமைப் படுவார். யார் குறித்து மனதில் பொறாமை வருமோ, அவருக்காக நாம் உடனே துஆ செய்து விட வேண்டும். அவருக்குக் கிடைத்ததில் பரக்கத் வேண்டும் எனவும் துஆ செய்து விட வேண்டும். பொறாமை மற்ற பாவங்களும் ஒருவரைத் தள்ளிவிடும். வேறு பல தவறுகளையும் செய்யத் தூண்டிவிடும். அது போல மற்றவர்களின் பொறாமைத் தீங்கிலிருந்து அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவிடம் நாம் பாதுகாப்பு கோர வேண்டும்.

அத்தியாம் அல் ஃபலக்: 5

وَمِن شَرِّ حَاسِدٍ إِذَا حَسَدَ ۝٥

“பொறாமைப்படும் போதான பொறாமையின் தீங்கை விட்டும்” நாம் பாதுகாப்பு பெற துஆ செய்ய வேண்டும். இந்த அத்தியாயத்தை அதிகமாக ஓத வேண்டும்.

2. விலையை அதிகமாக ஏற்றவேண்டாம். ஒரு பொருளை வாங்கும் எண்ணம் இல்லாமல், வேண்டுமென்றே அதன் விலையை உயர்த்துவது கூடாது. ஒருவர் ஒரு பொருளை வாங்க வரும்போது, அந்த பொருள் தமக்குத் தேவையில்லாத ஒருவர் இடையில் வந்து வேண்டுமென்றே அதிக விலைக்குக் கேட்டு, உண்மையில் வாங்க வந்தவரை அதிக விலை கொடுக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தி விடுவது கூடாது. அப்படி இடையில் வருபவர், கடைக்காரர் ஏற்பாடு செய்தவராக இருக்கலாம். அல்லது வாங்க வந்தவருக்கு நட்டம் ஏற்படும் நிலையை ஏற்படுத்தும் நோக்கில் அவரைப் பிடிக்காதவர்கள் இவ்வாறு செய்யலாம். இவ்வாறு வாங்கும் எண்ணம் இல்லாமல் இவ்வாறு செய்யக் கூடாது.

3. ஒருவரை ஒருவர் கோபித்துக் கொள்ளக் கூடாது. தங்களுக்குக் கருத்து வேறுபாடு கொண்டிருந்தாலும், ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்து பிணக்கு இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மன்னித்து விடுவது நற்குணம் ஆகும். வெறுப்பை உள்ளத்தில் வளர்த்துக் கொள்ளாமல் மன்னிக்கும் மனப்பான்மையை கைகொள்ள வேண்டும். எனினும் மார்கத்திற்காக வெறுக்க அனுமதி உண்டு. ஒவ்வொரு காரியத்தையும் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவுக்காக விருப்பு, வெறுப்பு கொள்வது கூடும். ஒரு ஸஹாபி குறித்து, அவர் சுவனவாசி என ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மூன்று நாட்கள் தொடர்ச்சியாகக் கூறினார்கள். அவர் அப்படி என்ன அமல் செய்கிறார் என்று அறிய அப்துல்லாஹ் இப்னு உமர் இப்னு ஆஸ் ரழியல்லாஹு அன்ஹு விரும்பி அவரது வீட்டில் மூன்று நாட்கள் தங்கினார். எனினும் எந்த வித அதிகமான அமல் செய்யாததையும் கண்டு கொண்டு, அது குறித்து அவரிடமே வினவினார். தாம் எந்த ஒன்றையும் விஷேசமாகச் செய்யவில்லை. எனினும் உறங்கும் முன்பாக, அன்றைய நாளில் எனக்கு வருத்தம் அளிக்கும் விதமாக யாரேனும் செயல் புரிந்தார்களானால், அவர்கள் குறித்து என் மணம் வெறுப்பு கொள்ளாதவாறு, அவர்களை மன்னித்து எனது உள்ளத்தைத் தூய்மை படுத்தியவாறு படுப்பேன் என்றார். அதற்கு அப்துல்லாஹ் இப்னு உமர் இப்னு ஆஸ் ரழியல்லாஹு அன்ஹு அதுதான் சுவனத்தை அளிக்கும் செயல் எனக் கூறினார். எனவே மனதில் வெறுப்பை நீக்கி வாழ வேண்டும்.

4. ஒருவரை ஒருவர் புறக்கணிக்க வேண்டாம். ஒரு முஸ்லிம் தம் முஸ்லிம் சகோதரருடன் மூன்று நாட்களுக்கு அதிகமாகப் பேசாமல் இருக்ககூடாது. எவர் முதலில் முன்வந்து ஸலாம் சொல்லி பெற ஆரம்பிக்கிரரோ அவர் தான் சிறந்தவர் என ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். இத்தகையவர்களை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நேசிக்கிறான். ஆனால் முன்னர் சொன்னபடி ஒருவரைத் திருத்த பேசாமல் இருக்கலாம். ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் வாழ்க்கை சரித்திரத்தில், போரில் கலந்து கொள்ளாத மூன்று ஸஹாபிகளிடம் நாற்பது நாட்களுக்கு அதிகமாக பேசாமல் இருந்த வரலாற்றை அறிவோம்.

5. பிறருடைய வியாபாரத்தை மீறி மற்றவர் வியாபாரம் செய்யக் கூடாது. உதாரணமாக ஒரு பொருளை ஒருவருக்குக் குறிப்பிட்ட விலையில் விற்க சம்மதித்து விட்டு, வேறு ஒருவர் அதனை அதிக விலை கொடுப்பதாகக் கூறினால், தமது வியாபாரத்தை அவரிடம் மாற்றக் கூடாது. அதிக விலை கேட்பவரும் தவறு செய்தவர் ஆகிவிடுவார். அவருக்கு விற்கும் வியாபாரியும் தவறு செய்தவராக ஆகிவிடுவார். வாங்குபவர் தெரியாமல் கேட்டாலும், வியாபாரி தாம் ஏற்கனவே விற்றுவிட்டதாகக் கூறி விட வேண்டும்.

அது போல ஒரு கலிஃபாவுக்குப் பைஅத் செய்த பிறகு, வேறு நபர் தமக்காகப் பைஅத் கொடுங்கள் எனக் கேட்ககூடாது.

6. உங்களுக்கு இடையில் சகோதரர்களாக இருங்கள்.

அத்தியாயம் ஹுஜுராத் 10

إِنَّمَا الْمُؤْمِنُونَ إِخْوَةٌ

நிச்சயமாக முஃமின்கள் தங்களுக்கு இடையில் சகோதரர்கள் ஆவார்கள்.

சகோதரத்துவம் என்பது, இரத்த சம்பந்தம், பால்குடி சகோதரத்துவம் மற்றும் இஸ்லாத்தின் காரணமாக சகோதரத்துவம் ஆகிய மூன்று வழியில் சகோதரத்துவம் உள்ளன. இந்த மூன்றிலும் இஸ்லாத்தின் காரணமாக சகோதரத்துவம் சிறந்தவர்கள். மற்ற சகோதர்கள் காஃபிர்களா இருக்க வாய்ப்புண்டு. ஸஹாபாக்களும் தங்கள் சொந்த சகோதரர்களை விட, இஸ்லாம் பிணைத்த சகோதரர்களையே அதிகமாக நேசித்தார்கள். அது போல முஃமின்களும் சகோதரத்துவத்தை பேணி, தங்களுக்குள் இணக்கமாக இருக்க வேண்டும். ஒருவரை ஒருவர் தரக் குறைவாக பேசக்கூடாது.

பின்னர் தங்களின் நெஞ்சைச் சுட்டிக் காட்டி தக்வா இங்கு இருக்கிறது என ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். வழக்கமான அமல்கலான தொழுகை, நோன்பு ஆகியவற்றைக் கடை பிடித்தால் மட்டும் தக்வா அல்ல. மாறாக மற்ற மனிதர்கள் விஷயத்திலும் நாம் இறையச்சத்தோடு நடந்து கொள்ள வேண்டும். உங்களில் ஒருவர் தம் சகோதரனை இழிவாகக் கருதினால், அவர் கெட்டவர் எனபதற்கு அதுவே போதுமான சான்றாகும் என ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். மற்றவரை இழிவாக எண்ணுவதற்குக் காரணம் அகம்பாவம் மற்றும் பெருமைதான். யாருடைய உள்ளத்தில் கடுகளவு பெருமை இருக்குமோ அவர் சுவனம் புகமாட்டார் என ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவுக்கு மட்டும்தான் பெருமை கொள்ள தகுதி உள்ளது. அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவுடன் போட்டிப் போடா முடியாது. அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா பெருமை பேசுபவர்களை வெறுக்கிறான்.

ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் இந்த போதனைகளை நாம் கைகொண்டால் பல பிரச்சனைகளைத் தீர்க்கலாம். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நம் அனைவருக்கும் அதனை பின்பற்றும் பாக்கியத்தை தந்தருள்வானாக!

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 36

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

الحديث السادس والثلاثون

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ عَنْ النَّبِيِّ ﷺ قَالَ: "مَنْ نَفَّسَ عَنْ مُؤْمِنٍ كُرْبَةً مِنْ كُرَبِ الدُّنْيَا نَفَّسَ اللَّهُ عَنْهُ كُرْبَةً مِنْ كُرَبِ يَوْمِ الْقِيَامَةِ، وَمَنْ يَسَّرَ عَلَى مُعْسِرٍ، يَسَّرَ اللَّهُ عَلَيْهِ فِي الدُّنْيَا وَالْآخِرَةِ، وَمَنْ سَتَرَ مُسْلِما سَتَرَهُ الله فِي الدُّنْيَا وَالْآخِرَةِ ، وَاللَّهُ فِي عَوْنِ الْعَبْدِ مَا كَانَ الْعَبْدُ فِي عَوْنِ أَخِيهِ، وَمَنْ سَلَكَ طَرِيقًا يَلْتَمِسُ فِيهِ عِلْمًا سَهَّلَ اللَّهُ لَهُ بِهِ طَرِيقًا إِلَى الْجَنَّةِ، وَمَا اجْتَمَعَ قَوْمٌ فِي بَيْتٍ مِنْ بُيُوتِ اللَّهِ يَتْلُونَ كِتَابَ اللَّهِ، وَيَتَدَارَسُونَهُ فِيمَا بَيْنَهُمْ؛ إِلَّا نَزَلَتْ عَلَيْهِمْ السَّكِينَةُ، وَغَشِيَتْهُمْ الرَّحْمَةُ، وَذَكَرَهُمْ اللَّهُ فِيمَنْ عِنْدَهُ، وَمَنْ أَبْطَأَ بِهِ عَمَلُهُ لَمْ يُسْرِعْ بِهِ نَسَبُهُ ." رَوَاهُ مُسْلِمٌ .

யார் இம்மையில் ஓர் இறைநம்பிக்கை யாளரின் துன்பங்களில் ஒன்றை அகற்று கிறாரோ அவருடைய மறுமைத் துன்பங்களில் ஒன்றை அல்லாஹ் அகற்றுகிறான். யார் சிரமப்படுவோருக்கு உதவி செய்கிறாரோ அவருக்கு அல்லாஹ் இம்மையிலும் மறுமை யிலும் உதவி செய்கிறான். யார் ஒரு முஸ்லிமின் குறைகளை மறைக்கிறாரோ அவருடைய குறைகளை அல்லாஹ் இம்மை யிலும் மறுமையிலும் மறைக்கிறான். அடியான் தன் சகோதரன் ஒருவனுக்கு உதவி செய்துக் கொண்டிருக்கும் வரை அந்த அடியானுக்கு அல்லாஹ் உதவி செய்துகொண்டிருக்கிறான்.

யார் கல்வியைத் தேடி ஒரு பாதையில் நடக்கிறாரோ அவருக்கு அதன் மூலம் சொர்க்கத்திற்குச் செல்லும் பாதையை அல்லாஹ் எளிதாக்குகிறான். மக்கள் இறையில் லங்களில் ஒன்றில் ஒன்று கூடி, அல்லாஹ்வின் வேதத்தை ஓதிக்கொண்டும் அதை ஒருவருக் கொருவர் படித்துக் கொடுத்துக் கொண்டும் இருந்தால், அவர்கள் மீது அமைதி இறங்கு கிறது. அவர்களை இறையருள் போர்த்திக் கொள்கிறது. அவர்களை வானவர்கள் சூழ்ந்துகொள்கின்றனர். மேலும் இறைவன், அவர்களைக் குறித்துத் தம்மிடம் இருப்போ ரிடம் (பெருமையுடன்) நினைவு கூருகிறான். அறச் செயல்களில் பின்தங்கிவிட்ட ஒருவரைக் குலச்சிறப்பு முன்னுக்குக் கொண்டு வந்து விடுவதில்லை. என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அறிவிப்பவர் அபூஹுரைரா (ரலி) அவர்கள் நூல்: புகாரி முஸ்லிம்

இந்த ஹதீதை அறிவித்தவர் அபு ஹுரைராஹ் ரழியல்லாஹு அன்ஹு ஆவார். இந்த ஹதீதிலும் பல கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

1. மக்களுக்கு உதவி செய்வது: யார் துன்பத்தில் இருக்கும் ஒரு முஃமினுக்கு அவரது துன்பத்தை அகற்றுகிராரோ, அவருக்கு மறுமையில் ஒரு துன்பத்தை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நீக்குகிறான் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். மக்களுக்கும் துன்பங்களில் உதவி செய்வது ஈமானின் ஒரு பகுதியாகும் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். ஒரு சகோதரருடன் சென்று, அவருடைய தேவைக்கு உதவி செய்வது, இந்த (மதினா) பள்ளிவாசலில் ஒரு மாதம் இஃதிகாஃப் இருப்பதை விட தங்களுக்குப் பிரியமானது என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். ஒரு மாதம் இஃதிகாஃப் இருந்து, முழுவதும் அமல்களில் செலவழிப்பதை விட ஒரு சகோதரருடன் சென்று, அவருடைய தேவைக்கு உதவி செய்வது சிறந்தது.

2. யார் ஒருவர் துன்பத்தில் இருக்கிறாரோ அவருக்காக அக்காரியத்தை சுலபமாக்குவது, மறுமையில் நாம் காரியம் சுலபமாக்கப்பட உதவியாக இருக்கும். தாங்கள் சுலபமாக ஆக்குவதற்காக அனுப்பப்பட்டார்களே அன்றி கடுமையாக ஆக்குவதற்காக அனுப்பப்படவில்லை என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். எந்த ஒரு காரியத்தைச் செய்தாலும், சுலபமான வழியைத்தான் தேட வேண்டும். சிலரைப் போல அதனைக் கடுமையக்கக் கூடாது. மற்றவர்களிடம் வேலை வாங்கும்போதும் கடுமை கூடாது. சுலபத்தைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். ஒருவர் வாங்கும்போதும், எதனையும் விற்கும்போதும், சுலபமான வழியைத் தேர்ந்தெடுத்தால், அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா அவர் மீது அருள் புரியட்டும் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். புஹாரி ஒரு அறிவிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: முந்தைய சமுதாயத்தில் ஒருவர் இறந்தார். வானவர்கள் அவரது ஆன்மாவைப் பார்த்து என்ன நன்மை உலகத்தில் செய்தாய் என வினவினார்கள். தாம் உலகத்தில் தேவை உள்ள மக்களுக்கு அதிகமாகக் கடன் கொடுத்துள்ளதாகவும், கடனைத் திருப்பி வாங்கச் சென்ற மக்களிடம், அவர்களின் நிலைமையைப் பார்த்து புரிந்து கொண்டு நடந்தது கொள்ளுமாறு கூறியதாகவும் சொன்னார். மக்களின் நிலைமையைப் பார்த்து புரிந்து கொண்டு நடந்தது கொள்ளுமாறு கூறிய அவரின் நிலையையும் புரிந்து செயல்படுமாறு வானவர்களுக்கு அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா அறிவுறுத்தினான். இவ்வாறு நாம் எப்படி நடக்கிறோமோ, அதன்படியே நாமும் நடத்தப்படுவோம். நாம் ஒருவரை மன்னித்தால், அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவும் நம்மை மன்னிப்பான். ஒருவரைப் புரிந்து செயல்பட்டால், அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவும் அவ்வாறே நடப்பான்.

யார் துன்பத்தில் இருக்கும் ஒரு கடனாளிக்குத் திருப்பிக் கொடுக்கும் அவகாசத்தை நீட்டிக்கிராரோ, அல்லது அவரை கடனிலிருந்து மன்னித்து விடுகிறாரோ, அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நிழல் இல்லாத மறுமை நாளில் தனது அர்ஷுக்குக் கீழ் நிழல் தருவான் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள்.

3. முஃமினான தம் சகோதரரின் ஒரு குறையை நாம் மறைத்தால், நம் குறையை இம்மையிலும், மறுமையிலும் மன்னிப்பான். யார் ஒருவருடைய குறையை வெளிபடுத்துவாரோ, அவரது குறையை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா வெளிப்படுத்துவான். அவரது வீட்டிலேய அவரைக் கேவலப்படுத்துவான் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். (இப்னு மாஜாஹ்)

நம்மில் பலர் நம் குறைகளை விட்டுவிட்டு, குறைகளை ஆராய்ந்து பார்ப்பதில் அதிக கவனம் எடுத்துக் கொள்கிறோம். இவ்வாறு மற்றவர்களின் குறை குறித்து எண்ணுபவர்கள், அதிக நபர்கள் இறையச்சத்தின் காரணமாக அவ்வாறு செய்வதில்லை. பிறருடைய குறைகளை அறிந்தால், அவர்களைத் தனிமையில் சந்தித்து, அவர்கள் திருந்த வேண்டும் என்ற நோக்கில் உபதேசம் செய்ய வேண்டும். அல்லது யாரைக் கொண்டு அவருக்கு உபதேசம் செய்ய வழி உள்ளதோ, உதாரணமாக மகனைக் குறித்து அவரது தந்தையிடம், அவரது குறைகளைக் கூற வேண்டும். இது அவர்களின் நலம் நாடும் செயலாகும். அது அல்லாமல் குறை காணும் நோக்கோடு ஒருவரை அணுகக் கூடாது. அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவை அஞ்சி இதனை நாம் தவிர்க்க வேண்டும்.

4. ஒரு அடியான் தம் முஸ்லிம் சகோதரருக்கு உதவி செய்யும் காலம் வரை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவும் அவருக்கு உதவி செய்வான். இம்மையிலும், மறுமையிலும் நமக்கு உதவி கிடைக்கும். இதனை மனதில் கொண்டு, நம்மால் முடிந்தவரை நம் நேரத்தை, பணத்தைக் கொண்டு உதவி செய்ய வேண்டும். எந்த வாய்ப்பு கிடைத்தாலும், நாம் உதவி செய்ய வேண்டும். தம் சகோதரர் அநீதி இழைக்கப்பட்டவரானாலும், அநீதி இழைப்பவரானாலும் அவருக்கு உதவி செய்யுங்கள் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். அது கேட்டு ஆச்சரியத்துடன் அநீதி

இழைப்பவரானாலும் உதவி செய்யச் சொல்லும் காரணம் பற்றி நபித் தோழர்கள் வினவினார்கள். அவரது கையைப் பிடித்து, அதாவது அநியாயம் செய்வதைத் தடுப்பதன் மூலாம் உதவி செய்ய வேண்டும் என அவர்கள் விளக்கினார்கள். இதே விதமாகத் தான் அறியாமைக் காலத்தில் கூறுவார்கள். ஆனால் அவர்கள் தங்கள் கிளையினருக்கு எல்லா விதத்திலும் உதவி செய்ய வேண்டும் என்ற தவறான கொள்கையைக் கொண்டிருந்தார்கள். அதனை மாற்றித்தான் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் இவ்வாறு கூறியுள்ளார்கள்.

5. கல்வியைத் தேடுதலின் நன்மை கூறப்பட்டுள்ளது. பள்ளிவாசலைத் தேடி மார்க்கப் பிரசங்கம் கேட்கச் செல்வது, கல்வி பயில மதரஸா செல்வது போன்றவை சுவனத்தின் பாதை இலகுவாக்கப்படும். கடமையான விஷயம் குறித்த மார்க்கக்கல்வியைத் தேடுவது நம் மீது கடமையாகும். தொழுகை பற்றிய கல்வி, பெற்றோர், மனைவி குறித்த கடமைகள் ஆகியவற்றை கற்பது நம் மீது கடமையாகும். மேலதிகமான மார்க்கக்கல்வி கற்பது விரும்பத்தக்கதாகும். கல்வி கற்பது, நஃபிலான வணக்கத்தை விடச் சிறந்தது. கல்வியும் அடிப்படையில் அமல் செய்வது அதிக நன்மையைத் தரும். கல்வி அறிவு பெற்றவர்களும், இல்லாதவர்களும் சமமாக மாட்டார்கள். அதுபோல் தான் அவர்களின் அமல்களும் சமமாக ஆகாது. பன்மடங்கு நன்மை வேண்டுமென்றால், கல்வியை அதிகரிக்க வேண்டும்.

6. அல்லாஹ் வின் வேதத்தைக் கற்று மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தால், அவர்கள் மீது சாந்தியை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா இறக்குகிறான். வானவர்கள் அவர்களைச் சூழ்ந்து கொள்கிறார்கள். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா அவர்களைக் குறித்து வானவர்களிடம் பெருமை பாராட்டுகிறான். இத்தகைய சபையைக் குறித்து சுவனத்தின் சோலைகள் எனவும், அவற்றைக் கடந்து சென்றால் மேய்ந்து கொள்ளுங்கள் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். திக்ருடைய மஜ்லிஸ் அவ்வாறான சுவனத்தின் சோலைகள் ஆகும். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவின் பள்ளிவாசல்களை இந்த நோக்கத்திலும் பயன் படுத்த வேண்டும் என்பதும் இதிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

7. ஒருவர் தம் அமல் விஷயத்தில் பின்தங்கி இருந்தால், தம் மூதாதையரின் பெருமையைப் பேசி முன்னேற முடியாது. அமல்தான் நமக்கு வெற்றியை கொண்டு வரும். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவின் அருள் அமல் இருந்தால்தான் வரும். எனவே தங்களின் அனைத்து கிளையினரையும் அழைத்து, அவர்கள் அனைவரையும் பெயர் சொல்லி அழைத்து, அனைவரும் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவுக்கு அஞ்சி அமல் செய்யுமாறு ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள். அமல் இல்லாமல் தங்களால் எதுவும் செய்ய முடியாது எனவும் கூறினார்கள். எனவே மூதாதையரின் சிறப்பை வைத்து நாம் சுவனம் செல்ல முடியாது. இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் தந்தையும், நூஹ் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் குடும்பத்தினரும் நபிமார்களின் உறவினர்கள் என்பதால் சுவனத்தை அவர்களுக்குப் பெற்றுத் தராது.

நம் அனைவருக்கும் அமல் செய்யும் பாக்கியத்தை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா அருள் பாலிப்பானாக!

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 37

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

الحديث السابع والثلاثون

عَنْ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اللَّهُ عَنْهُمَا عَنْ رَسُولِ اللَّهِ ﷺ فِيمَا يَرْوِيهِ عَنْ رَبِّهِ تَبَارَكَ وَتَعَالَى، قَالَ: "إنَّ اللَّهَ كَتَبَ الْحَسَنَاتِ وَالسَّيِّئَاتِ، ثُمَّ بَيَّنَ ذَلِكَ، فَمَنْ هَمَّ بِحَسَنَةٍ فَلَمْ يَعْمَلْهَا كَتَبَهَا اللَّهُ عِنْدَهُ حَسَنَةً كَامِلَةً، وَإِنْ هَمَّ بِهَا فَعَمِلَهَا كَتَبَهَا اللَّهُ عِنْدَهُ عَشْرَ حَسَنَاتٍ إلَى سَبْعِمِائَةِ ضِعْفٍ إلَى أَضْعَافٍ كَثِيرَةٍ، وَإِنْ هَمَّ بِسَيِّئَةٍ فَلَمْ يَعْمَلْهَا كَتَبَهَا اللَّهُ عِنْدَهُ حَسَنَةً كَامِلَةً، وَإِنْ هَمَّ بِهَا فَعَمِلَهَا كَتَبَهَا اللَّهُ سَيِّئَةً وَاحِدَةً ".

رَوَاهُ الْبُخَارِيُّ ، وَمُسْلِمٌ في "صحيحيهما" بهذه الحروف .

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தம் இறைவனைப் பற்றி அறிவிக்கையில் (பின்வருமாறு) கூறினார்கள்: அல்லாஹ் நன்மைகளையும் தீமைகளையும் (அவை இன்னின்னவை என நிர்ணயித்து) எழுதி விட்டான். பிறகு அவற்றை தெளிவுப்படுத்தி விட்டான். ஒருவர் ஒரு நன்மை செய்ய வேண்டும் என (மனதில்) எண்ணிவிட்டாலே (அதைச் செயல்படுத்தா விட்டாலும்) அவருக்காகத் தன்னிடம் அதை ஒரு முழுமையான நன்மையாக அல்லாஹ் பதிவு செய்கிறான். அதை அவர் எண்ணியதுடன் செயல்படுத்தியும் விட்டால். அந்த ஒரு நன்மையைத் தன்னிடம் பத்து நன்மைகளாக எழுநூறு மடங்காக இன்னும் அதிகமாக அல்லாஹ் பதிவு செய்கிறான். ஆனால் ஒருவர் ஒரு தீமை செய்ய எண்ணி அதைச் செய்யாமல் கைவிட்டால் அதற்காக அவருக்குத் தன்னிடம் ஒரு முழு நன்மையை அல்லாஹ் எழுதுகிறான். எண்ணியபடி அந்தத் தீமையை அவர் செய்து முடித்துவிட்டாலோ, அதற்காக ஒரேயொரு குற்றத்தையே அல்லாஹ் எழுதுகிறான். என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அறிவிப்பவர் இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள் நூல்: புகாரி முஸ்லிம்

இந்த ஹதீதை அறிவித்தவர் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு ஆவார். இது ஹதீத் குத்ஸி வகையைச் சேர்ந்தது. அதிக நன்மைகள் குறித்து குர்ஆனிலும் கூறப்பட்டுள்ளது.

அத்தியாயம் அல் அன்ஆம் 160

مَن جَآءَ بِٱلۡحَسَنَةِ فَلَهُۥ عَشۡرُ أَمۡثَالِهَاۖ

எவரேனும் ஒரு நன்மையைச் செய்தால், அதேபோல் அவருக்குப் பத்து பங்கு உண்டு.. அது போல அத்தியாயம் அல் பகரா 245, 261 மற்றும் அந் நிஸா 40 ஆகியனவும், பல ஹதீதுகளும் அதிக நன்மைகள் கிடைப்பதைக் கூறுகின்றன. நன்மைகள் பத்து மடங்கிலிருந்து எழுநூறு மடங்கும், அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நாடினால் அதைவிட அதிகமாகவும் தருவதாக வாக்களிக்கிறான். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா எந்த அளவுக்கு அருளாளன் மற்றும் அன்பிடையோன் என்பதைக் காட்டுகிறது.

இந்த ஹதீதின்படி ஒருவர் பாவம் செய்ய நினைத்து அதனைச் செய்யாமல் விட்டால் அதற்கு ஒரு முழுமையான நன்மை எழுதப்படும் என்றுள்ளதை இப்னு ரஜப் ரஹ்மத்துல்லாஹி அலைஹி சுட்டிக் காட்டுகிறார். அதே நேரத்தில், அந்தத் தீமையைச் செய்தால், ஒரு தீமை மட்டும் எழுதப்படும் என அழுத்தமாகக் கூறப்பட்டுள்ளது.

அடியார் ஒரு நன்மையான காரியத்தைச் செய்ய நினைத்தால் ஒரு நன்மை எழுதப்படும். அந்த நன்மையைச் செய்து விட்டால், பத்திலிருந்து எழுநூறு மடங்கு அல்லது அதனை விட அதிகமாக எழுதப்படும். தீமை செய்ய நினைத்து அதனைச் செய்யாமல் விட்டால் அதற்கு ஒரு

முழுமையான நன்மை எழுதப்படும். அந்தத் தீமையைச் செய்தால், ஒரு தீமை மட்டும் எழுதப்படும்.

ஹதீதின் ஆரம்பத்தில் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியதாவது: யார் எந்த அளவுக்கு நன்மை செய்வாகள் எனவும், எந்த அளவுக்குத் தீமை செய்வார்கள் எனவும் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா ஏற்கனவே லவ்ஹுல் மஹ்ஃபூல் என்ற எட்டில் எழுதி விட்டான். ஏற்கனவே விதிக்கப்பட்ட ஒன்று. அவர் செய்யும் நன்மை பற்றியும், அந்த நன்மைக்கு எந்த அளவுக்குக் கூலி கொடுக்கப்படும் என்பது பற்றியும் எழுதப்படும். அது போலத் தீமைகளைப் பற்றியும் அதைப்போலவே எழுதப்படும். அதைப்பற்றியும் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா தெளிவு படுத்திவிட்டான். ஒரு நன்மையான காரியத்தைச் செய்ய நினைத்தால் ஒரு நன்மை எழுதப்படும் என்பதை இரண்டாகப் பிரித்து புரிந்து கொள்ள வேண்டும். ஒரு அடியார் ஒரு நன்மையான காரியத்தைச் செய்ய வேண்டும் என நாடினார். எனினும் அதனை அவர் உறுதியாக நாடவில்லை. ஒரு எண்ணமாக வந்து கடந்து சென்று விட்டது. இத்தகைய எண்ணம் கொண்டதற்கு ஒரு நன்மை எழுதப்படும். ஒரு அடியார் ஒரு நன்மையான காரியத்தைச் செய்ய வேண்டும் என நாடினார். அதனை அவர் உறுதியாகவும் எண்ணினார். எதோ ஒரு காரணத்திற்காக செய்யாமல் விட்டு விட்டார் என்றால், அவர் செய்தால் என்ன நன்மை கொடுப்பானோ, அதே அளவு நன்மையை அவருக்கு அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா கொடுப்பான். பத்ருப் போரில் கலந்து கொள்ள ஆர்வம் இருந்தும், கலந்து கொள்ள முடியாமால் போனவர்களுக்கு, அதே நன்மையை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா வழங்குவான் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள். உதாரணமாக, உத்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களின் மனைவியின் உடல்நலக் குறைவால் பத்ருப் போரில்கலந்து கொள்ள முடியவில்லை. அவர்களுக்கும் அதே நன்மையை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா வழங்குவான்.

அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நான்கு வகையான மக்களைப் படைத்துள்ளான். ஒரு பிரிவினருக்கு அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா கல்வியையும், செல்வத்தையும் அளித்து அவற்றை நல்ல வழியில் செலவு செய்கிறார்கள். மற்றொரு பிரிவினருக்கு அவை கொடுக்கப்படவில்லை. எனினும் தங்களுக்கும் அவ்வாறு கொடுக்கப்பட்டிருந்தால், தாங்களும் அவற்றை நல்ல வழியில் செலவு செய்திருப்போம் என நினைப்பவர்கள். அந்த எண்ணமே அவர்களுக்கு முந்தையவர்களின் நன்மையைக் கொடுக்கும்.

தான் எண்ணிய அந்த நன்மையை அடியார் செய்து விட்டால், அதற்குப் பகரமாக பத்திலிருந்து எழுநூறு மடங்கு எழுதப்படும். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நாடினால் அதனை விட அதிகமாக எழுதுவான். அதற்குக் காரணம், அந்த அடியாரிடம் இருக்கும் இஹ்ஸான் ஆகும். இறையச்சத்துடனும், உளத் தூய்மையுடனும் அவர் செய்வது தான் காரணமாகும். அதன் அடிப்படைக்குத் தகுந்தவாறு நன்மை எழுதப்படும்.

அவர் நன்மை செய்த இடத்தைப் பொருத்தும் நன்மை வித்தியாசமாகும். மக்கா பள்ளிவாசல்லில் தொழும் தொழுகை ஒரு லட்சம் மடங்கு நன்மையைத் தரும். அது போல மதினா பள்ளிவாசலில் தொழும் தொழுகை ஐயாயிரம் மடங்கு நன்மையைத் தரும். மஸ்ஜித் அக்ஸாவில் தொழும் தொழுகை ஐநூறு மடங்கு நன்மையைத் தரும்.

நேரத்த்திப் பொருத்தும் நன்மை வித்தியாசமாகும். உதாரணமாக, ரமழான் மற்று துல் ஹஜ் மாதங்களில் செய்யும் அமல்களுக்கு அதிக நன்மைகள் கிடைக்கும். லைலத்துல் கத்ர் இரவில் செய்யும் அமல்களுக்கு ஆயிரம் மாதங்களை விட அதிக நன்மைகள் கிடைக்கும்.

தாம் வறுமையில் அல்லது மிகத் தேவையுடன் இருக்கும் நிலையில் மற்றவர்களுக்குக் கொடுப்பதும் அதிக நன்மையைப் பெற்றுத் தரும்.

ஒரு அடியார் தீமை செய்ய நினைத்து அதனைச் செய்யாமல் விட்டால் அதற்கு ஒரு முழுமையான நன்மை எழுதப்படும். இதனையும் நாம் இரண்டாகப் பிரித்துப் பார்க்க

வேண்டும். உறுதியில்லாமல் ஒரு தீமை செய்ய நாடி, அதனை செய்யாவிட்டால் அப்போது தான் ஒரு நன்மை எழுதப்படும். தாம் செய்ய நினைத்த தீமையைச் செய்வதற்காக என்ற முயற்சியும் செய்யவில்லை.

தாம் தீமை செய்ய வேண்டும் என்ற உறுதியான எண்ணம் கொண்ட ஒருவர். இதனை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். ஒரு வகையினர், கடைசி நேரத்தில் இறையச்சம் காரணமாகச் செய்யாமல் விட்டால், அவருக்கு இறையச்சத்திற்கான நன்மையும் எழுதப்படும். இரண்டாவது வகையினர், மக்கள் பார்த்து விடுவார் என்ற எண்ணத்தில் அதனைச் செய்யாமல் விட்டு விட்டால், அந்த முகஸ்துதிக்கான தீமை அவருக்கு எழுதப்படும். மூன்றாவது வகையினர், திட்டமிட்டு செய்ய முயன்று, அதனை செய்து முடிக்கவில்லை என்றாலும், அவருக்கு தீமை செய்தவர் போன்று எழுதப்படும். எனவே அவர் அந்த தீமை செய்யாவிட்டாலும், அதகான முயற்சிக்காக அந்த தீமை எழுதப்படும்.

ஒருவர் தாம் எண்ணிய அந்தத் தீமையைச் செய்து விட்டால் , ஒரு தீமை மட்டும் எழுதப்படும். காலம் மற்றும் நேரம் ஆகியன பொறுத்து தீமையும் அதிகமாக எழுதப்படலாம். மாக்காவில் ஒரு தீமை செய்தால், அதற்காக அதிக தீமை எழுதப்படும். அது போல சிறந்த நேரங்களில் தவறு செய்தால், அதிக தீமை எழுதக் கூடும். பல அறிஞர்கள், உதாரணமாக இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு போன்றோர், மக்காவில் இருந்தால் அதிக தீமை வந்து விடுமோ என அஞ்சி வேறு இடம் சென்று வசித்தார்கள். இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு தாயிபில் வசித்தார்கள். இப்னு ரஜப் ரஹ்மத்துல்லாஹி அலைஹி தம் நூலில் இது குறித்து எழுதியுள்ளார்கள். மக்காவில் செய்யும் ஒரு பாவத்தை விட, மற்ற இடங்களில் செய்யும் எழுபது பாவங்கள் சிறந்தது என உமர் ரழியல்லாஹு அன்ஹு கூறியுள்ளார்கள். இப்படி பல ஹதீதுகளின் தொகுப்பாக இந்த நன்மை தீமை பற்றிய ஹதீது உள்ளது. தீமையை சில இடங்களில் செய்வதால் அதிகமாக எழுதப்படும் என்றிருந்தாலும், அந்த தீமையை எழுதும் முன்பாக, பாவமன்னிப்பு கேட்பாரா என தாமக்கிப்படும். அவ்வாறு பாவமன்னிப்பு செய்து விட்டால் அத்தீமை எழுதப்படாமல் விடப்படும். அந்த அளவுக்கு அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா அளவற்ற அருளாளனாக இருக்கிறான். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நம் அனைவருக்கும் நன்மையாக காரியத்தையே செய்யும் பாக்கியத்தையும், தீமையான காரியத்தைச் செய்யும் எண்ணத்தையும் விட்டுக் காப்பாற்றி அருள் புரிவானாக!

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 38

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

الحديث الثامن والثلاثون

عَنْ أَبِي هُرَيْرَة ﷺ قَالَ: قَالَ رَسُول اللَّهِ ﷺ إنَّ اللَّهَ تَعَالَى قَالَ: "مَنْ عَادَى لِي وَلِيًّا فَقْد آذَنْتهُ بِالْحَرْبِ، وَمَا تَقَرَّبَ إلَيَّ عَبْدِي بِشَيْءٍ أَحَبَّ إلَيَّ مِمَّا افْتَرَضْتُهُ عَلَيْهِ، وَلَا يَزَالُ عَبْدِي يَتَقَرَّبُ إلَيَّ بِالنَّوَافِلِ حَتَّى أُحِبَّهُ، فَإِذَا أَحْبَبْتُهُ كُنْت سَمْعَهُ الَّذِي يَسْمَعُ بِهِ، وَبَصَرَهُ الَّذِي يُبْصِرُ بِهِ، وَيَدَهُ الَّتِي يَبْطِشُ بِهَا، وَرِجْلَهُ الَّتِي يَمْشِي بِهَا، وَلَئِنْ سَأَلَنِي لَأُعْطِيَنَّهُ، وَلَئِنْ اسْتَعَاذَنِي لَأُعِيذَنَّهُ". رَوَاهُ الْبُخَارِيُّ .

எவன் என் நேசரை பகைத்துக் கொண்டானோ அவனுடன் நான் போர் பிரகடனம் செய்கிறேன். எனக்கு விருப்பமான செயல்களில் நான் கடமையாக்கிய ஒன்றை விட வேறு எதன் மூலமும் என் அடியான் என்னுடன் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதில்லை. என் அடியான் கூடுதலான (நஃபிலான) வணக்கங் களால் என் பக்கம் நெருங்கி வந்து கொண்டே யிருப்பான். இறுதியில் அவனை நேசித்து விடும் போது அவன் கேட்கிற செவியாக, அவன் பார்க்கிற கண்ணாக, அவன் பற்றுகிற கையாக, அவன் நடக்கிற காலாக நான் ஆகிவிடுவேன். அவன் என்னிடம் கேட்டால் நான் நிச்சயம் தருவேன். என்னிடம் அவன் பாதுகாப்புக் கோரினால் நிச்சயம் நான் அவனுக்குப் பாதுகாப்பு அளிப்பேன். ஓர் இறை நம்பிக்கையாளனின் உயிரைக் கைப்பற்றுவதில் நான் தயக்கம் காட்டுவதைப் போன்று, நான் செய்யும் எச்செயலிலும் தயக்கம் காட்டுவ தில்லை. அவனோ மரணத்தை வெறுக்கிறான். நானும் (மரணத்தின் மூலம்) அவனுக்குக் கஷ்டம் தருவதை வெறுக்கிறேன். என அல்லாஹ் கூறுவதாக நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: அறிவிப்பவர் அபூஹுரைரா (ரலி) அவர்கள் நூல்: புகாரி

இந்த ஹதீதை அறிவித்தவர் அபு ஹுரைராஹ் ரழியல்லாஹு அன்ஹு ஆவார். இது ஹதீத் குத்ஸி வகையைச் சேர்ந்தது. இமாம் ஸவ்கானி ரஹ்மத்துல்லாஹி அலைஹி இந்த ஹதீது விளக்கமாக ஒரு நூலையே எழுதியுள்ளார். அந்த அளவுக்கு இது சிறந்த ஹதீது ஆகும். நமக்கு ஊக்கம் அளிக்கும் செய்தி இதில் கூறப்பட்டுள்ளது. யார் தனது நேசரைப் பகைத்தாரோ, அவருக்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்வதாக அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா கூறியுள்ளான். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவை அஞ்சி நடக்கும், ஒவ்வொரு இறையச்சமுள்ள முஸ்லிமும் அவனது நேசராகும்.

அத்தியாயம் யூனுஸ் 63

الَّذِيْنَ اٰمَنُوْا وَكَانُوْا يَتَّقُوْنَ ۞

அவர்கள் நாம்பிக்கை கொண்டு அல்லாஹ்வை அஞ்சி நடப்பவர்கள்.

இவ்வாறான நேசருக்கு எந்த பயமும் இல்லை என அவன் முந்தைய வசனத்தில் கூறுகிறான். தனது நேசரைப் பகைப்பது அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாக்கு கோபத்தை வரவழைக்க கூடியது. அவர் மீது அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா போர்ப் பிரகடனம் செய்கிறான். நேசரைப் பகைப்பது பெரும் பாவமாகும். மார்க்க விஷயத்திலும், உலக விஷயத்திலும் பகைமை கொள்வது கூடாது. சில சமயங்களில் சில பிரச்சனைகள் வரலாம். இரு நேசர்களுக்கு

இடையிலும் அவ்வாறு வரலாம். அவர்களுக்கு எதிராக அநீதி இழைக்காத வரையில் ஒன்றும் பாவமாக இருக்காது.

இந்த ஹதீதில் கடமையான வணக்கங்களுடன், அதிகப்படியான நஃபிலான வணக்கங்களைச் செய்யும் அடியார் பற்றி கூறப்பட்டுள்ளது. அவர்களும் இறை நேசர்கள்தாம். ஆனால் இன்று சிலர் கடமையான வணக்கங்களைக் கூட ஒழுங்காகச் செய்யாதவர்களை வலிமார்கள் எனக் கூறுகிறார்கள். இது தவறான, மடமையான காரியமாகும். அவர்களுக்கு என்று ஒரு வணக்க இடத்தை ஏற்படுத்தித் தவறான வழியில் செல்கிறார்கள். இது குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். உண்மையான வலியை மேற்கண்ட வசனத்தின்படி நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

அந்த இறைநேசர்கள் கடமையான வணக்கங்களுடன், அதிகப்படியான நஃபிலான வணக்கங்களைச் செய்தவாறு அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவை நெருங்குவார்கள். அதுபோல் தவிர்க்க வேண்டியதைத் தவிர்த்தும் கொள்வார்கள். அதிகப்படியான நஃபிலான வணக்கங்களை விட, கடமையான வணக்கங்கள் மிகவும் முக்கியமாது. அவை தான் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவின் முதல் கட்ட நெருக்கத்தை முதலில் ஏற்படுத்தும். அவற்றிக்கு இடையில் வேறுபாடு இருக்கலாம். ஐவேள தொழுகை மற்ற வணக்கங்களை மிகவும் சிறந்தது. அமல்களில் சிறந்தது எது என இப்னு மஸ்வூது ரழியல்லாஹு அன்ஹு வினவும்போது, தொழுகையை அந்த நேரத்தில் தொழுவது என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள். மக்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளில், தாய் தந்தையருக்குச் செய்யும் கடமை மிகச் சிறந்ததாகும்.

ஒருவர் கடமையான சில விஷயங்களில் பொடுபோக்காக இருந்து விட்டு, உபரியான விஷயங்களைச் செய்வதனால், அவர் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவை நெருங்க மாட்டார். உண்மையாக அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவை நெருங்கக் கூடியவர், உபரியான வணக்கங்களுக்கு முன்பு கடமையானத்தை முழுமையாக நிறைவேற்ற வேண்டும். சிலர் கடமையானத்தை விட்டு விட்டு, உதாரணமாக, நெருங்கிய உறவினர்களுக்கு கொடுக்க வேண்டிய தான தர்மங்களைக் கொடுக்காமல், நஃபிலான உம்ராக்களைச் செய்வார்கள். அதற்கான நன்மை கிடைத்தாலும், கடமையானதைச் செய்யாமல் விடுவதால், அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவின் நெருக்கத்தைப் பெறக் கடினமாகும்.

கடமையான விஷயங்களைச் செய்து அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவின் நெருக்கத்தைப் பெற்று, அதிக உபரியான வணக்கங்களும் செய்தால், நாம் மேலும் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவின் நெருக்கத்தைப் பெறலாம். கடமையான விஷயங்களை செய்தால் மட்டும் முழுமையான நெருக்கம் கிடைக்காதது. அதிக உபரியான வணக்கங்களும் செய்தால், நாம் மேலும் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவின் நெருக்கத்தைப் பெறலாம். மேலும் நமது கடமையான அமல்களில் தெரிந்தோ அல்லது தெரியாமல் பல குறைபாடுகள் இருக்கலாம். அவற்றை நிவர்த்தி செய்ய இவை பயன்படும்.

அபு தாவூது 864

نَّ أَوَّلَ مَا يُحَاسَبُ النَّاسُ بِهِ يَوْمَ الْقِيَامَةِ مِنْ أَعْمَالِهِمُ الصَّلاَةُ قَالَ يَقُولُ رَبُّنَا جَلَّ وَعَزَّ لِمَلاَئِكَتِهِ وَهُوَ أَعْلَمُ انْظُرُوا فِي صَلاَةِ عَبْدِي أَتَمَّهَا أَمْ نَقَصَهَا فَإِنْ كَانَتْ تَامَّةً كُتِبَتْ لَهُ تَامَّةً وَإِنْ كَانَ انْتَقَصَ مِنْهَا شَيْئًا قَالَ انْظُرُوا هَلْ لِعَبْدِي مِنْ تَطَوُّعٍ فَإِنْ كَانَ لَهُ تَطَوُّعٌ قَالَ أَتِمُّوا لِعَبْدِي فَرِيضَتَهُ مِنْ تَطَوُّعِهِ ثُمَّ تُؤْخَذُ الأَعْمَالُ عَلَى ذَاكُمْ " .

அபு ஹுரைராஹ் ரழியல்லாஹு அன்ஹு அறிவித்த இந்த ஹதீதின்படி, மறுமையில் முதலில் தொழுகையைப்பற்றி கேள்வி கேட்கப்படும். கடமையான தொழுகையில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால், அந்த அடியார் செய்த உபரி தொழுகையிலிருந்து சரி செய்யப்படும். அது போல் தான் மற்ற வணக்கங்களான நோன்பு, ஜகாத் போன்றவையும் சரி செய்யப்படும்.

எனவே அதற்காக நாம் ஒவ்வொரு வணக்கத்திற்கும் அதிகப்படியான வணக்கங்களை செய்ய வேண்டும்.

ராபிய்யாஹ் ரழியல்லாஹு அன்ஹு தாம் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுடன் மறுமையில் சுவனத்தில் நெருங்கி இருக்க வேண்டும் என்ற விரும்பியபோது, அவரை அதிகமாக ஸஜ்தா செய்யுமாறு ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள்.

தொடர்ந்து அந்த அடியார் அதிக அமலைச் செய்து தன்னை நெருங்குவதாக அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா கூறியுள்ளதை நாம் கவனிக்க வேண்டும். எனவே எதனையும் தொடர்ந்து செய்ய வேண்டும். குறைவான அமலாக இருந்தாலும் தொடர்ந்து செய்வது சிறப்புக்குரியது என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். அதிகமாகச் செய்து, இடையில் விட்டு விடுவது நல்லதல்ல.

இவ்வாறு அமல் செய்யும்போது தான் அவரை நேசிப்பதாக அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா கூறுகிறான். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா ஒரு அடியாரை நேசித்தால், அவன் வானவர்களின் தலைவர் ஜிப்ரயீல் அலைஹிஸ் ஸலாம் அவர்களை அழைத்து, தான் அந்த அடியாரை நேசிப்பதாகவும், அவர்களும் நேசிக்க வேண்டும் என்று கூறுவான். ஜிப்ரயீல் அலைஹிஸ் ஸலாம் அவர்களும் அந்த அடியாரை நேசித்து, மற்ற வானவர்களிடம், தங்களும், அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவும் அந்த அடியாரை நேசிப்பதாகவும், அவர்கள் அனைவரும் நேசிக்க வேண்டும் என்று கூறுவார்கள். அதனால் அனைத்து வானவர்களும் அந்த அடியாரை நேசிபார்கள். பின்னர் பூமியிலுள்ள மக்கள் அனைவர் உள்ளத்திலும் இந்த அடியாருக்கு நேசிக்கும் மனதைக் கொடுப்பான்.

அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா ஒரு அடியாரை நேசித்தால், பின்னர் அவர் செவி ஏற்கக்கூடிய காதாக, பார்க்கக்கூடிய கண்ணாக, நடக்ககூடிய பாதமாக தான் ஆகிவிடுவதாகக் கூறுவான். அதாவது அந்த அடியாரின் பார்வையை, செவியை, கால்களை தவறுகளிலிருந்து அவன் பாதுகாப்பான். பிறகு அவர் என்னிடம் கேட்டால், அதனை நான் கொடுப்பேன்.

துஆவுக்கு மூன்று வித பதிலை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா அளிக்கிறான். முதலாவது கேட்டதை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா ஏற்றுக் கொள்கிறான். அல்லது அதற்குப் பதிலாக ஒரு தீமையை அகற்றி விடுவான். அல்லது அதற்கான மகத்தான கூலியை மறுமைக்கு வைத்துவிடுவான். எனவே நல்லடியாரின் துஆ என்றும் வீணாகாது. எனவே நாம் கேட்டது உடனே கிடைக்காமல் போகலாம். அது நமக்கு ஒரு நல்லதையே கொடுக்கும். நல்லடியார் ஒருவர் கூறுவதாவது, ‘‘நான் கேட்டது கிடைத்தால் ஒரு தடவை மகிழ்வேன். கிடைக்காவிட்டால் பலமடங்கு மகிழ்வேன். ஏனெனில் கேட்டது கிடைத்தால் அது எனது விருப்பத்தைச் சேர்ந்தது. கிடைக்கவில்லை என்றால் அது அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவின் நாட்டம்.’’

பின்னர் ஒரு துன்பத்தை விட்டு அடியார் பாதுகாப்பு தேடினால், அதனை அளிப்பதாக அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா கூறுகிறான். இவ்வுலக துன்பங்களுக்கு அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நாடினால் அவன் பதில் அளிப்பான். ஆனால் மறுவுலக தீமை குறித்து பாதுகாப்பு தேடினால் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நிச்சயமாகத் தீர்ப்பான்.

நாம் கடமையான அமல்களையும், அதிகப்படியான அமல்களையும் செய்யும் பாக்கியத்தை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா அருள் புரிவானாக!

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 39

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

الحديث التاسع والثلاثون

عَنْ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اللَّهُ عَنْهُمَا أَنَّ رَسُولَ اللَّهِ ﷺ قَالَ: "إنَّ اللَّهَ تَجَاوَزَ لِي عَنْ أُمَّتِي الْخَطَأَ وَالنِّسْيَانَ وَمَا اسْتُكْرِهُوا عَلَيْهِ . " حَدِيثٌ حَسَنٌ، رَوَاهُ ابْنُ مَاجَهْ ، وَالْبَيْهَقِيّ

ஹதீஸ்-39:

எனது சமூகத்தினரின் மறதி, தவறு மற்றும் நிர்பந்தம் காரணத்தால் செய்பவைகளை எனக்காக அல்லாஹ் மன்னித்து விட்டான் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ்(ரலி) நூல்: இப்னுமாஜா பைஹகீ.

இந்த ஹதீதை அறிவித்தவர்அபுஹுரைராஹ் ரழியல்லாஹு அன்ஹு ஆவார். இந்த ஹதீதானது பலவீனமானது. அறிவிப்பாளர்களின் தொடரில் ஏதேனும் பிரச்சனை இருந்தால் அது பலவீனமானது ஆகும். அறிவிப்பாளர் பொய் சொல்பவராகவோ, நினைவு சரியில்லாததாவாராகவோ எற்றுக்கு கொள்வதற்கு நாம் தயக்கம் காட்டுவோம். இவ்வாறே ஹதீது தரம் பிரிக்கப்பட்டு சரியானதா அல்லது பலவீனமானது எனக் கூறப்படுகிறது.

இந்த ஹதீதை அறிவித்தவர்களில் நினைவு வைப்பதில் குறை உள்ளவர்கள். அந்த அடிப்படையில் இந்த ஹதீதானது பலவீனமானது கூறப்படுகிறது. யாரேனும் மறதி, தவறு அல்லது நிர்பந்தத்தின் காரணமாக செயப்பவைகளை தங்களுக்காக அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா மன்னித்து விட்டான் என கூறியுள்ளார்கள். இந்த செய்தி சரியான, ஆதாரப்பூர்வமான செய்திதான். குர்ஆனி லும் இவ்வாறு கூறப்படும் வசனங்கள் உள்ளன. உதாரணமாக

அத்தியாயம் பகரா 286

رَبَّنَا لَا تُؤَاخِذْنَا إِنْ نَسِينَا أَوْ أَخْطَأْنَا ۚ رَبَّنَا وَلَا تَحْمِلْ عَلَيْنَا إِصْرًا كَمَا حَمَلْتَهُ عَلَى الَّذِينَ مِنْ قَبْلِنَا ۚ رَبَّنَا وَلَا تُحَمِّلْنَا مَا لَا طَاقَةَ لَنَا بِهِ ۖ وَاعْفُ عَنَّا وَاغْفِرْ لَنَا وَارْحَمْنَا ۚ أَنْتَ مَوْلَانَا فَانْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكَافِرِينَ

“எங்கள் இறைவா! நாங்கள் மறந்து போயிருப்பினும், அல்லது நாங்கள் தவறு செய்திருப்பினும் எங்களைக் குற்றம் பிடிக்காதிருப்பாயாக! எங்கள் இறைவா! எங்களுக்கு முன் சென்றோர் மீது சுமத்திய சுமையை போன்று எங்கள் மீது சுமத்தாதிருப்பாயாக! எங்கள் இறைவா! எங்கள் சக்திக்கப்பாற்பட்ட (எங்களால் தாங்க முடியாத) சுமையை எங்கள் மீது சுமத்தாதிருப்பாயாக! எங்கள் பாவங்களை நீக்கிப் பொறுத்தருள்வாயாக! எங்களை மன்னித்தருள் செய்வாயாக! எங்கள் மீது கருணை புரிவாயாக! நீயே எங்கள் பாதுகாவலன்; காஃபிரான கூட்டத்தாரின் மீது (நாங்கள் வெற்றியடைய) எங்களுக்கு உதவி செய்தருள்வாயாக!”

எனவே மறந்து குற்றம் செய்தால் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நம்மைத் தண்டிக்க மாட்டான்.

அத்தியாயம் அஹ்ஸாப் 5

وَلَيْسَ عَلَيْكُمْ جُنَاحٌ فِيمَا أَخْطَأْتُم بِهِ وَلَـٰكِن مَّا تَعَمَّدَتْ قُلُوبُكُمْ ۚ وَكَانَ اللَّـهُ غَفُورًا رَّحِيمًا ﴿٥﴾

இது பற்றி நீங்கள் தவறு செய்திருந்தால், உங்கள் மீது குற்றமில்லை; ஆனால், உங்களுடைய இருதயங்கள் வேண்டுமென்றே கூறினால் (உங்கள் மீது குற்றமாகும்); அல்லாஹ் மன்னிப்பவனாகவும், மிக்க கிருபையுடையவனாகவும் இருக்கின்றான்.

அத்தியாயம் அந் நஹ்ல் 106

مَن كَفَرَ بِاللَّـهِ مِن بَعْدِ إِيمَانِهِ إِلَّا مَنْ أُكْرِهَ وَقَلْبُهُ مُطْمَئِنٌّ بِالْإِيمَانِ

அவருடைய உள்ளம் ஈமானைக் கொண்டு அமைதி கொண்டிருக்கும் நிலையில் யார் நிர்ப்பந்திக்கப்படுகிறாரோ அவரைத் தவிர - (எனவே அவர் மீது குற்றமில்லை)

உதாரணமாக, கொல்லப்போவதாக நிர்பந்தப்படுத்தி ஒருவரை குஃப்ரான காரியம் சொல்லச் சொன்னால், மனதில் ஈமானுடன் சொல்வது குற்றமில்லை.

எனவே ஹதீதில் சொல்லப்பட்ட செய்தி, குர்ஆன் மூலம் உறுதியாகிறது. ஒருவர் தவற்காகக் குற்றம் செய்வது பற்றிய உதாரணம், ஒருவர் தாம் தொழுகையில் பேசுவது தவறு என்று தெரியாமல் அதனைச் செய்து விட்டால், அது குற்றமில்லை. ஒரு ஸஹாபி தொழுகையின்போது தும்மிவிட்டு அல்ஹம்துலில்லாஹ் என்று சொன்னபோது, அதனைக் கேட்ட முஆவியா இப்னு ஹகம் ரழியல்லாஹு அன்ஹு அதற்குப் பதிலாக யர்ஹககுமுல்லாஹ் என்று கூறிவிடுகிறார். அருகில் உள்ளவர்கள், கண்ணை அசைத்துப் பேசக்கூடாது என சைகை செய்கிறார்கள். அதற்கு அவர், “உங்களை உங்கள் தாய்மார்கள் இழந்து விடட்ட்டும்” என கூறினார். தொழுகைக்குப் பிறகு அவரை ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அழைத்தார்கள். தம்மை ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் திட்டவில்லை எனவும், தம் மீது கோபப்படவில்ல எனவும், மாறாக மேல்லினமாகத் தொழுகையில் பேசக் கூடாது என்று கூறியதாக முஆவியா இப்னு ஹகம் ரழியல்லாஹு அன்ஹு கூறினார். அவர் தெரியாமால் பேசியதால், அது குற்றம் இல்லை என்பதால், அவரைத் திரும்பவும் தொழுமாறு ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறவில்லை.

ஒருவர் தவறாக் சூரியம் மறைந்து விட்டது என நினைத்து நோன்பை முடித்து விட்டார் என்றால் அது தவறாகச் செய்ததால், அது மன்னிக்கப்பட்டு நோன்பு ஏற்கப்படும். மேக மூட்டமாக இருந்த நிலையில், சூரியன் மறைந்து விட்டிருக்கும் என சில ஸஹாபாக்கள் நோன்பு திறந்து விட்டார்கள். சிறிது நேரம் கழித்து, மேகம் விலகியபோது, சூரியன் இருப்பதைக் கண்டார்கள். எனினும் தவறான முடிவால் அவர்கள் அதனை களா செய்யவில்லை என ஒரு அறிவிப்பில் அஸ்மா ரழியல்லாஹு அன்ஹா கூறினார்கள். எனவே தவறாகச் செய்தால் குற்றம் பிடிக்கப்பட மாட்டார்கள்.

அதேபோல், தொழுகையின் ரகஅத்துக்கள் மறதியாக தொழுதால் அது குற்றமாகக் கருதப்பட மாட்டாது. ஒரு தடவை ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களும் லுஹர் தொழுகையில் இரண்டு ரகஅத்துக்கள் தொழுத பிறகு ஸலாம் கூறிவிட்டார்கள். பின்னர் நினைவு படுத்தப்பட்டபின் மீதி இரண்டு ரகஅத்துக்கள் தொழுதார்கள்.

நோன்பு நேரத்தில் மறந்து சாப்பிட்டால், அதனால் நோன்பை விட வேண்டிய அவசியமில்லை எனவும் அதனைத் தொடரலாம் எனவும் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள்.

அது போல் நிர்பந்தப்படுத்தப்பட்டால், தம்மைக் காப்பாற்ற ஏதேனும் செய்தாலும், நமது ஈமானில் உறுதி இருக்கும் நிலையில் அதனால் எந்த குற்றமும் இல்லை.

இந்த மூன்று காரணங்களில் சில விதிவிலக்கும் உள்ளன. உதாரணமாக ஒருவரைத் தவறாகக் கொலை செய்தால் குற்றம் பிடிக்க மாட்டாது. ஆனால், அதற்காக பிணை (பியத்) கொடுப்பது அவசியமாகும். அது போல ஒருவரின் பொருளைத் தெரியாமல் உடைத்துவிட்டால், அவர்

குற்றம் பிடிக்கப்பட மாட்டார். ஆனால் அந்தப் பொருளுக்குப் பகரமாகக் கொடுப்பது கடமையாகும்.

நிர்பந்தம் காரணமாக கொலை அல்லது விபச்சாரம் செய்வது தவறு இல்லை என ஏற்கப்பட மாட்டாது. அதுபோல் கவனக் குறைவாக இருப்பத்தனைக் குற்றம் பிடிக்கக் கூடாது என்று கூரமுடியாது. நம்மை நாம் சரிபடுத்திக் கொள்ளவேண்டும்.

அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நம் அனைவருக்கும் மார்க்கத்தில் சரியான புரிதலைஅருள் புரிவானாக!

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 40

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி

الحديث الأربعون

عَنْ ابْنِ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُمَا قَالَ: أَخَذَ رَسُولُ اللَّهِ ﷺ بِمَنْكِبِي، وَقَالَ: "كُنْ فِي الدُّنْيَا كَأَنَّك غَرِيبٌ أَوْ عَابِرُ سَبِيلٍ". وَكَانَ ابْنُ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُمَا يَقُولُ: إذَا أَمْسَيْتَ فَلَا تَنْتَظِرْ الصَّبَاحَ، وَإِذَا أَصْبَحْتَ فَلَا تَنْتَظِرْ الْمَسَاءَ، وَخُذْ مِنْ صِحَّتِك لِمَرَضِك، وَمِنْ حَيَاتِك لِمَوْتِك .رَوَاهُ الْبُخَارِيُّ .

ஹதீஸ்-40:

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் என் தோளைப் பிடித்துக் கொண்டு 'உலகத்தில் நீ அந்நியனைப் போன்று, அல்லது வழிப் போக்கனைப் போன்று இரு' என்று கூறினார்கள். (அறிவிப்பாளர்களில் ஒருவரான முஜாஹித்(ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: 'நீ மாலை நேரத்தை அடைந்தால் காலை வேளையை எதிர்பார்க்காதே! நீ காலை வேளையை அடைந்தால் மாலை நேரத்தை எதிர்பார்க்காதே! நீ நோய் வாய்ப்படும் நாளுக்காக உன்னுடைய ஆரோக்கியத்தில் சிறி(து நேரத்)தைச் செலவிடு. உன்னுடைய இறப்புக்குப் பிந்திய நாளுக்காக உன்னுடைய வாழ்நாளில் சிறிது நேரத்)தைச் செலவிடு 'என்று இப்னு உமர்(ரலி) அவர்கள் கூறுவார்கள் நூல்: புகாரி

இந்த ஹதீதை அறிவித்தவர் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு ஆவார். இந்த ஹதீது அவருக்கு உபதேசம் சொல்லும் வகையில் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள்.

இந்த ஹதீதின் மூலம் உலக வாழ்கையின் எதார்த்தம் பற்றி ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். அது போல மறுமை வாழ்கையை எவ்வாறு புரிந்து கொள்ள வேண்டும் என்பதனையும் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள்.

"இவ்வுல வாழ்க்கை ஏமாற்றத்தைத் தரக்கூடிய ஒரு பொருளாகும்" என அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா கூறியுள்ளான். மக்கள் இதன் ஆடம்பத்தைப் பார்த்து மயங்கி, நிரந்தரமாக இருக்கம் என்ற நினைப்பில் மார்க்கத்துக்குப் புறம்பாக ஏமாற்றி, பான் சொல்லி வாழ்க்கையை மேன்படுத்த நினைகிறார்கள். தவிர்க்கப்பட வேண்டிய பலவற்றைச் செய்ய முனைகிறார்கள். குர்ஆன் கூறும் இவ்வுலக வாழ்க்கையை அறிந்து, அதன்படி செயல்பட வேண்டும். இந்த ஏமாற்றத்தில் முஃமின் விழக்கூடாது.

"மறுமையை ஒப்பிடும்போது, இவ்வுலக வாழ்க்கை அற்பமானது" எனவும் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா கூறியுள்ளான். இதைத் தான் 'ஒரு பறவை, தன அலகைக் கொண்டு எந்த அளவுக்குக் கடல் நீரை எடுத்துக் கொள்ளமுடியுமோ, அந்த அளவுக்குத்தான் இவ்வுலக வாழ்க்கை. அந்தக் கடலோ மறுமை வாழ்க்கையைப் போன்றது" என்ற பொருளில் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். பறவை எடுக்கும் நீர் அற்பமானது. அதுவும் வீணாக வாய்ப்புண்டு. கடல் நீர் போல் மறுமை நிரந்தரமானது.

"உங்களில் மறுமையில் சுவனத்தில் அளிக்கப்போகும் ஒருவருடைய சாட்டை அளவு இடம் என்பது, இவ்வுலகில் உள்ள அனைத்தயும் விடச் சிறந்தது" என்ற பொருளில் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள்.

இதற்குத்தான் உலகத்தில் நாம் அந்நியனைப் போல வாழ வேண்டும் என என்ற பொருளில் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். நாம் ஒரு தேவைக்காக வெளியூருக்குச் சென்றால், அதனை முடித்து எப்போது தம்முடைய ஊருக்கு வருவோம் என்று நினைப்பது போல, இவ்வுலக வேலையை விட்டு நம்முடைய உண்மையான ஊருக்குத் திருப்பிவர முயல வேண்டும். இவ்வுலகில் நம்முடைய வேலை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவை வணங்குவதுதான். அதனைச் செய்துவிட்டு நமது ஊரான மறுமைக்கான வழியைத் தயார் செய்ய வேண்டும்.

இரண்டாவது உதாரனமாக, நாம் இவ்வுலகில் ஒரு வலிப்போக்கரைப் போல இருக்க வேண்டும் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். அந்நியராவது சென்ற இடத்தில் தங்க வாய்ப்புண்டு. ஆனால் வழிப்போக்கரோ, அந்த இடத்தைக் கடந்து போய்விடுவார். அந்த அளவுக்கு நாம் பற்றற்றவர்களாக இருக்க வேண்டும். ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள், "எனக்கும் இந்த உலக வாழ்க்கைக்கும் என்ன தொடர்பு உள்ளது? ஒருவர் ஒரு பாதையைக் கடந்து செல்லும்போது, ஒரு மர நிழலில் சிறிது நேரம் நின்று விட்டுச் சென்று விடுவார். அது போல்தான் எனக்கும்."

ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள், "இவ்வுலகம் முஃமின்களுக்கு ஒரு சிறைச்சாலை, காஃபிர்களுக்கு ஒரு சுவனப் பூங்கா." காஃபிர்கள் இவ்வுலகில் வரம்பு இல்லாமல் வாழ்வார்கள். முஃமின்கள் அவ்வாறு சுதந்திரமாக வாழ முடியாது. சிறை போன்று கட்டுப்பாடான வாழ்கையைத்தான் வாழ வேண்டும். அவ்வாறு வாழ்ந்தால் மறுமையில் வரம்பற்ற வாழ்க்கையை நாம் பெறலாம். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவுடைய பார்வையில் ஒரு ஈயின் இறக்கைக்குக் கூட சமம் இல்லை. அவ்வாறு இருந்தால், காஃபிர்களுக்கு ஒரு குவளை தண்ணீர் கூட கொடுக்க மாட்டான். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவுடைய பார்வையில் இவ்வுலகம் முக்கியமே இல்லை. இந்த கருத்தில்தான் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களும், ஸஹாபாக்களும், ஸலஃபுகளும் வாழ்ந்தார்கள். ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களைச் சந்திக்க உமர் ரழியல்லாஹு அன்ஹு வந்திருந்தபோது, அவர்கள் ஒரு பாயில் படுத்திருந்தார்கள். பாயில் அடையாளம் அவர்களின் முதுகில் கண்டதைப் பார்த்த உமர் ரழியல்லாஹு அன்ஹு அழத் தொடங்கினார்கள். அதற்கான காரணத்தை ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் வினவ, அவர்கள் கூறினார்கள், "கைஸர், கிஸ்ரா போன்ற அரசர்கள் ஆடம்பர வாழ்கையில் வாழ்கிறார்கள். தங்கள் நிலையோ இவ்வாறு உள்ளதே!" அதற்கு ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் பதிலளித்தார்கள், "உமரே! அவர்களெல்லாம் இவ்வுலக வாழ்கையைப் பெறுகிறபோது, நமக்கு மறுமையின் வெற்றி வாழ்க்கை கிடைப்பது உமக்குபோ பிடிக்காதா?" நிச்சயமாக நாம் மறுமையையே விரும்புவோம். கலிஃபாவாக இருந்தும் அபு பக்ரு ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் எதனையும் விட்டுச் செல்லவில்லை. உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கடனை விட்டுச் சென்றார்கள். தங்களின் மகனை அடைக்கும்படி வஸியத் செய்தார்கள். "உலக வாழ்க்கையே! என்னை விட்டுவிட்டு வேறு யாரையும் ஏமாற்றச் சென்று விடு, ஏனெனில் நான் உன்னைத் தலாக் சொல்லிவிட்டேன். எனக்கும், உனக்கும் தொடர்பு இல்லை." என அலி ரழியல்லாஹு அன்ஹு கூறியுள்ளார்கள்.

நேரத்தைத் தவிர எந்த ஒரு விஷயத்துக்கும் இவ்வுலக வாழ்வில் முக்கியத்துவம் இல்லை. அதனை இபாத்துக்காக நாம் பயன்படுத்த வேண்டும். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா காலத்தைக் குறித்து கூறுவதாவது,

அத்தியாயம் அல் அஸ்ர்:

وَالْعَصْرِ ﴿١﴾ إِنَّ الْإِنسَانَ لَفِي خُسْرٍ ﴿٢﴾ إِلَّا الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ وَتَوَاصَوْا بِالْحَقِّ وَتَوَاصَوْا بِالصَّبْرِ ﴿٣﴾

காலத்தின் மீது சத்தியமாக. நிச்சயமாக மனிதன் நஷ்டத்தில் இருக்கின்றான். ஆயினும், எவர்கள் ஈமான் கொண்டு ஸாலிஹான (நல்ல) அமல்கள் செய்து, சத்தியத்தைக் கொண்டு ஒருவருக்கொருவர் உபதேசம் செய்து, மேலும் பொறுமையைக் கொண்டும் ஒருவருக்கொருவர் உபதேசிக்கிறார்களோ அவர்களைத் தவிர (அவர்கள் நஷ்டத்திலில்லை).

சத்தியத்தைக் குறித்தும், பொறுமையைக் குறித்தும் நாம் கவலைபப் பட வேண்டும் எனக் கூறுகிறான்.

“உலக வாழ்விற்காக ஏதாவது செய்ய வேண்டுமென்றால், நாம் நிரந்தமாக இருக்கப் போகிறோம் என்ற நினைப்பில் அவற்றைத் தள்ளிப்போட்டுக் கொண்டு இருந்து விடலாம். ஆனால் மறுமை விஷயத்தில் அடுத்த வினாடியே நாம் இறந்து விடுவோம் என்று நினைத்து செய்ய வேண்டும்” என ஸலஃபுகள் கூறுவார்கள்.

மறுமை வாழ்க்கைதான் சிறந்தது மற்றும் முடிவானது என்று தெரிந்தும், இவ்வுலக வாழ்க்கைக்காக மறுமையை விற்றுவிட்டால், துர்பாக்கியசாலி என்பது அடையாளம் ஆகும். எனினும் இவ்வுலகில் சொத்து சேர்ப்பது கூடாது என்பது பொருளல்ல. உதுமான் ரழியல்லாஹு அன்ஹு மற்றும் அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் ரழியல்லாஹு அன்ஹு போன்றோர் பெரிய பணக்காரர்களாக இருந்தார்கள். ஆனால் மறுமை வாழ்வுக்காக இவ்வுலகில் வாழ வேண்டும். இவ்வுலக வாழ்க்கைக்காக மறுமையை விலை பேசக்கூடாது. இவ்வுலக வாழ்கையை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவுக்கு பயந்து, அவன் அனுமதித்த வழியில் வாழ வேண்டும். மறுமை வாழ்கையை மறந்து, உலக வாழ்வின் மூழ்காமல் இருக்க வேண்டும். இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹுவுக்கு ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் உபதேசம் செய்த விதத்தில் நாம் இவ்வுலகில் வாழ அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நமக்கு உதவி செய்வானாக!

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 41

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

الحديث الحادي والأربعون

عَنْ أَبِي مُحَمَّدٍ عَبْدِ اللَّهِ بْنِ عَمْرِو بْنِ الْعَاصِ رَضِيَ اللَّهُ عَنْهُمَا، قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ ﷺ "لَا يُؤْمِنُ أَحَدُكُمْ حَتَّى يَكُونَ هَوَاهُ تَبَعًا لِمَا جِئْتُ بِهِ". حَدِيثٌ حَسَنٌ صَحِيحٌ، رَوَيْنَاهُ فِي كِتَابِ "الْحُجَّةِ" بِإِسْنَادٍ صَحِيحٍ .

ஹதீஸ்-41:

உங்களில்ஒருவர் நான் கொண்டு வந்ததை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளாதவரை விசுவாசம் கொண்டவராக மாட்டார் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் அறிவிப்பவர்: அம்ருப்னு ல் ஆஸ்(ரலி) நூல் :உஜ்ஜா

இந்த ஹதீதை அறிவித்தவர் அம்ரு இப்னு ஆஸ் ரழியல்லாஹு அன்ஹு ஆவார். இந்த ஹதீது அறிவிப்பாளர் தொடர் வரிசையின் காரணமாக பலவீனமானது. எனினும் ஹதீதின் கருத்து சரியானது. நமது மனோ இச்சை மார்க்கத்துக்குக் கட்டுப்பட்டதாக இருக்க வேண்டும். ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் உபதேசப்படி நடக்க வேண்டும். இந்த ஹதீதை அறிவித்தவர் அப்துல்லாஹ் இப்னு அம்ரு இப்னு ஆஸ் ரழியல்லாஹுவும், அம்ரு இப்னு ஆஸ் ரழியல்லாஹு அன்ஹுவும் ஸஹாபி ஆவார்கள். அப்துல்லாஹ் இப்னு அம்ரு இப்னு ஆஸ் ரழியல்லாஹு அதிகம் வணக்கம் புரிபவராக இருந்திருக்கிறார். தாம் எத்தனை நாட்களில் குர்ஆனை ஓதி முடிக்க வேண்டும் என அவர் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் கேட்க, ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் ஒரு மாதம் என்றார்கள். அதை விடக் குறைவாக எனக் கேட்டபோது, பதினைந்து நாட்களில் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள். அதை விடவும் குறைவாக என அவர் மீண்டும் கேட்க, எழு நாட்களில் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள். அதை விடவும் குறைவாக என அவர் மீண்டும் கேட்க, மூன்று நாட்களில் முடிக்கலாம் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள். எனவே அவர் மூன்று நாட்களுக்கு ஒன்று என ஒரு மாதத்தில் பத்து தடவை முடிப்பார். வயோதிகம் ஆன பிறகு அவர் ஒரு மாதத்திற்கு ஒரு தடவை முடிப்பார்கள். அவர் வணக்கங்களில் ஈடுபட்டு, மனையின் பொறுப்புகளைக் கூட கவனிக்கவில்லை என அவரது மனைவி ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் முறையிட்டார். நோன்பு மற்றும் தஹஜ்ஜுத் தொழுகை என அதிக நேரம் செலவு செய்கிறார் என்று முறையிட்டார்.

இந்த ஹதீதின்படி தனது சிந்தனை அனைத்தையும் குர்ஆன் மற்றும் ஹதீதுக்குத் தகுந்தவாறு அமைத்துக் கொள்ள வேண்டும். தமது மனோ இச்சை அவற்றிக்கு மாறாக இருந்தால், அதனை அவர் மாற்றிக் கொள்ள வேண்டும். ஒரு ஸஹாபி தங்க மோதிரம் அணிந்திருந்தார். ஆண்களுக்கு ஹராம் என்று அவரிடம் சொல்லப்பட்டபோது, அதனை அவர் கழற்றி எறிந்து விட்டார். அணிவதுதான் ஹராம், ஆனால் அதனைப் பயன்படுத்தலாமே என்று அவரிடம் சொல்லப்பட்டபோது, ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் ஹராம் என்று சொன்ன பிறகு அதனைத் தொட மாட்டேன் என்றார்.

இப்படித்தான் நம் இச்சையை மார்க்கத்திற்கு உகந்தவாறு அமைத்துக் கொள்ள வேண்டும். வணக்க விஷயத்திலும் மார்க்கத்திற்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். சொத்துரிமை

விஷயத்திலும், தம் விருப்பத்திற்குத் தகுந்தவாறே நடந்து கொள்ள வேண்டும். நமக்கு உரிமை இல்லாத பங்கை எதிர்பார்க்கக் கூடாது. எல்லா விஷயங்களையும் இவ்வாறே எடுத்துக் கொள்ள வேண்டும். பெரிய பாவம், சிறிய பாவம் என்ற பிரித்து யோசிக்காமல், அனைத்தும் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவுக்கு எதிரானவை என்ற கோணத்தில் எண்ணி நம்மை சீர் செய்து கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட நன்மக்களாக நாம் சிறக்க அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா அருள்புரிவானாக!

அர்பஊன் நவவீ 40 ஹதீஸ்கள் வகுப்பு - ஹதீஸ் 42

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி

الحديث الثاني والأربعون

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ ﷺ قَالَ: سَمِعْت رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: قَالَ اللَّهُ تَعَالَى: "يَا ابْنَ آدَمَ! إنَّك مَا دَعَوْتنِي وَرَجَوْتنِي غَفَرْتُ لَك عَلَى مَا كَانَ مِنْك وَلَا أُبَالِي، يَا ابْنَ آدَمَ! لَوْ بَلَغَتْ ذُنُوبُك عَنَانَ السَّمَاءِ ثُمَّ اسْتَغْفَرْتنِي غَفَرْتُ لَك، يَا ابْنَ آدَمَ! إنَّك لَوْ أَتَيْتنِي بِقُرَابِ الْأَرْضِ خَطَايَا ثُمَّ لَقِيتنِي لَا تُشْرِكُ بِي شَيْئًا لَأَتَيْتُك بِقُرَابِهَا مَغْفِرَةً "

رَوَاهُ التِّرْمِذِيُّ وَقَالَ: حَدِيثٌ حَسَنٌ صَحِيحٌ .

ஹதீஸ்-42:

ஆதமுடைய மகனே நீ என்னிடம் பிரார்த்தனை செய்து என் மீது ஆதரவு வைத்திருக்கும் வரை உன்னிடத்தில் உள்ளதை நான் மன்னித்து விட்டேன். பெரிதாக எடுத்துக் கொள்ளமாட்டேன். ஆதமுடைய மகனே உனது பாவங்கள் வானத்திலுள்ள மேகங்களை அடைந்தாலும் நீ என்னிடம் பாவமன்னிப்பு தேடினால் உன்னை மன்னித்து விடுவேன். பெரிதாக எடுத்துக் கொள்ள மாட்டேன். ஆதமு டைய மகனே எனக்கு எதையும் இணையாக் காத நிலையில் பூமி நிறைய பாவங்களுடன் என்னிடம் நீ வந்தால் அந்தளவுக்கு பாவ மன்னிப்பை உனக்கு நான் வழங்குவேன் என்று அல்லாஹ் கூறுவதாக நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் அறிவிப்பவர்:அனஸ் இப்னு மாலிக் (ரலி) நூல்: திர்மிதி

இந்த ஹதீதை அறிவித்தவர் அனஸ் இப்னு மாலிக் ரழியல்லாஹு அன்ஹு ஆவார். இதுவும் ஹதீத் குத்ஸி ஆகும். இந்த ஹதீது பாவ மன்னிப்பு கேட்பதின் சிறப்பைக் குறிக்கிறது. ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் மகன் தவறு செய்பவனாக இருக்கிறான். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவோ மன்னிக்கக்கூடியவனாக இருக்கிறான். ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்களை சுவனத்தில் இருக்க வைத்து, அவர்கள் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம் என அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா கூறி விட்டு, எனினும் ஒரு குறிப்பிட்ட மரத்தை மட்டும் நெருங்க வேண்டாம் என்று கூறினான். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவின் இந்த சோதனையில் ஷைத்தான் ஊசலாட்டம் ஏற்படுத்தி விட்டான். ஷைத்தானும் ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்களுக்கு ஸஜ்தா செய்ய வேண்டும் என்ற அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவின் கட்டளைக்கு மாறு செய்தான். ஆனால் ஆதம் அலைஹிஸ் ஸலாம் தங்களின் தவறை உணர்ந்து அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவிடம் பாவமன்னிப்பு கோரினார்கள். ஆனால் ஷைத்தான்தன தவறை ஏற்காமல், பாவ மன்னிப்பு கேட்பதிலும் ஈடுபடவில்லை. இதுதான் நல்லடியார்கள் மற்றும் கேட்டவர்களின் வழி முறைகளாகும். நாம் ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் வழிமுறையைப் பின்பற்ற வேண்டும். “ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் மக்கள் அனைவரும் தவறு செய்யக்கூடியவர்களே! எனினும் தவறு செய்பவர்களில் சிறந்தவர்கள் பாவமன்னிப்பு கேட்பவர்களே!” என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா பாவமன்னிப்பு செய்பவர்களை விரும்புகிறான். அவ்வாறு அடியான் கண்ணீர் விட்டுக் கதறி பாவமன்னிப்பு கேட்பவர்களை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா எந்த அளவுக்கு மன்னிக்கிறான் என்றால், ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அதற்கு ஒரு உதாரணம் கூறியுள்ளார்கள். ஒருவர் தமது பயணத்திற்கான பொருட்களை எல்லாம் எடுத்துக் கொண்டு, பயணம்

மேற்கொள்கிறார். பயணத்தின் நடுவில் பாலைவனத்தின் களைப்பில் ஒரு மரத்தடியில் உறங்கிவிட்டார். கண் திறந்து பார்த்தபோது, அவருடைய மூட்டை முடிச்சுகளுடன் ஒட்டகத்தைக் காணவில்லை. அவருடை இந்த நிராசையான நிலையில், ஒட்டகத்தை மீண்டும் கண்டபோது, அவர் கூறினார், 'யா அல்லாஹ்! நான் உனது எஜமான்! நீ எனது அடிமை!' என்று கூறினார். இவ்வாறு அவர் மிகுந்த மகிழ்ச்சியில் சொற்களை மாற்றி, இறைவை நீ ஏன் அடிமை என்று கூறிவிடுகிறார். இவ்வாறு அந்த நபர் மகிழ்வு கொள்வதை விட அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா மிக்க மகிழ்வு அடைகிறான் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள்.

நம் பாவங்களை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா மன்னிக்க மாட்டான் என்று நாம் நிராசை அடையக் கூடாது. இறை நம்பிக்கை அச்சத்துக்கும், ஆதரவுக்கும் இடையில் உள்ளதாகும். நாம் நடுநிலையாகச் செயல்பட வேண்டும். இறை நிராகரிப்பவர்கள் தாம் நிராசை அடைவார்கள். முஃமின்கள் நிராசை அடைய மாட்டார்கள். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவுடைய தண்டனையும், பிடியும் கடுமையானது என்றாலும், அவன் மன்னிப்பதில் மகிழ்ச்சி அடைபவன் என்பதையும் மறந்து விடக்கூடாது. பாவம் செய்யும்படி மனது கூறினால், அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவுடைய பயம் மனதில் வர வேண்டும். அதுபோல் பாவம் செய்து விட்டால், அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவின் மன்னிப்பில் ஆதரவு கொள்ள வேண்டும். வாழும்போது பயம் அதிகமாகவும், மரணிக்கும் வேளையில் ஆதரவு அதிகமாகவும் இருக்க வேண்டும் என அறிஞர்கள் கூறுவார்கள். தங்கள் ஒரு நாளின் நூறு தடவை பாவமன்னிப்பு கோருவதாக ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். பாவமன்னிப்பு கோருவது இம்மையிலும், மறுமையிலும் நன்மை பயக்கும். எந்த துன்பத்திற்கும் பாவமன்னிப்பு நல்ல தீர்வாகும். ஏனெனில் எல்லா துன்பத்திற்கும் பாவம்தான் காரணம். யார் தம் பதிவேட்டில் அதிகம் பாவமன்னிப்பைக் காண்பார்களோ, அவருக்கு நற்செய்தி என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள். இணை வைக்காத நிலையில் தன்னை சந்த்தித்தால், பாவங்கள் பூமியை நிரப்பும் அளவுக்கு இருந்தாலும், அந்த அளவுக்கு பாவமன்னிப்பு அளிப்பேன் என அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா இந்த ஹதீதில் கூறுகிறான். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா இணை வைப்பதைத் தவிர, மற்ற எல்லா பாவங்களையும் நாடினால் மன்னிபான் என அத்தியாயம் அந் நிஸாவில் கூறுகிறான்.

எனவே நம் அனைவரையும் உண்மையான முஃமீன்களாக ஆக்கி, அவன் காட்டிய வழியில் நடக்கும் பாக்கியத்தை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா அருள்பாலிப்பானாக! அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவின் கருணையினால் எல்லா காரியங்களும் நிறைவு பெறுகின்றன. நம் அனைவரையும் கேட்ட விஷங்களை அதன்படி அமல் செய்யும் பாக்கியத்தை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா அருள்பாலிப்பானாக!